உ

சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்.

சைவ - எல்லப்பநாவலர் செய்தருளியது.

இஃது,

சேலம் ஜில்லாவைச்சார்ந்த தருமபுரியிலிருக்கும்

ஜவுளிக்கடை - வீரபத்திரநாயகர்

ஷை தாலூக்காமுன்சீப்கோர்ட்டுவக்கீல் - தி - ஐபுலுநாயகர்

தீர்த்தகிரி தேவஸ்தானம் காரியகர்த்தர்

அரியூர் - சென்னிசெட்டியார்

இவர்களது வேண்டுகோளின்பேரில்

தஞ்சைமாநகரம் - அப்புக்குட்டி செட்டியாரவர்கள்

ஜேஷ்ட்ட குமாரரும்

சென்னை ஹிந்து வித்தியாநிலய அச்சுக்கூடத் தலைவரும் - ஆகிய

கன்னையசெட்டியார் கேட்டுக்கொண்டபடி

புதுவை. க - சுப்பராயமுதலியாரால்

சேலம் - ஊற்றங்கரை - அரியூர் - தருமபுரி முதலிய கொங்குதேயத்தில்

இதுகாறும் பயின்றுவந்த ஏட்டுப்பிரதிகடோறும் எழுத்துஞ் சொலலும்

அடியுஞ் செய்யுளும் - பலவாறு ஒன்றற்கொன் றொவ்வாமல்

வேறுபட்டும் - சிதைந்தும் - வழூஉக்களால் பொதிவுற்றிருந்ததால்அவற்றைக்

களைவதி லுழைப்புற்று அம்மிகைகளை ஒருவாற்றாற்களைந்து

சுத்தபாடமாகவழங்குவிக்கும்பொருட்டு

புரசை - அஷ்டாவதானம்

சபாபதிமுதலியார் முதலிய

வித்வான்கள் முன்னிலையிற் பரிசோதித்துத்

தாம் நூதனமாக இயற்றிய பொழிப்புரையுடன்

மேற்படி

த. அ - கன்னையசெட்டியாரால்

பு. ம - சபாபதிமுதலியாரது

கல்விவிளக்க அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு - காப்பி - ருOO.

சுக்கில ஹு தைமீ

அறிவிப்பு.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பதியாதெனில், ௧௮௬௭ ஞு ௨௫ - வது. ஆக்ட்டின் - ௨௦ - வது. பிரிவினில் - ௬ - வது. விதியின் பிரகாரம் காப்பிறைட் பெற்றிருக்கிறபடியால், இதை ஒருவரும் அச்சிடவுங்கூடாது, மற்றொருபாஷையிலு மொழி பெயர்க்கவுங்கூடாது, அப்படிக்குப் போடுவாராகில் மேற்கண்ட ஆக்ட்டில் செப்பியிருக்கிறபடி கோர்ட்டின்மூலமாய்த் தண்டனை விதிக்கப்படும்.

சேலத்துக்கடுத்த கொடிமாடச் செங்குன்றூரொன்னும் திருச்சங்கோட்டுத் தலபுராணம். அச்சிட எத்தனித் திருக்கிறோம்.

௧௮௭௦ ஞு பிப்ரவரிமீ ௬உ } இப்படிக்கு ,த - அ - கன்னையசெட்டியார்.

சிவமயம்.

புரசை அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாராலியற்றிய

சிறப்புப்பாயிரம்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

சீர்மலியிதழியந் தேமலர்ப்பொலன்றொடைத்...... *
தார்மலிசடிலத் தற்பரத்தனிமுத .... *
லருநூற்கிளைமறை யனைத்துந்தனையலா .... *
தொருவாற்றினும் முறையாப்பரம்பொரு......... *
ளொருமாமலமு மிருவேறுவினையு................. *
முப்பாற்குணனு நாற்பான்மறையு............... *
மைம்பெருந்தொழிலு மாறத்துவாவு............. *
மெழுவகைத்தோற்றமு மெண்வகையளவையு...... *
மொன்பானுருவு மொருபஃதங்கமு .... *
மின்னனவிலக்கத் தெவையுமெஞ்ஞான்றுந்........ *
தன்முனர்த்தத்தந் தனிவிலவுளுற்ற.............. *
வவற்றுளொன்றின் வயத்துமெய்திடாப்........... *
பேரருளிடத்த பிறங்குசெஞ்சோதி .... *
பெருமையுட்பெருமை சிறுமையுட்சிறுமை ...... *
யொருமையுளொருமை யருமையுளருமை............ *
யெனுமிப்பகுதிகட் கிடனாந்தொன்மை............ *
காண்குநர்க்குருவுங் காண்கிலார்க்கருவுங்........... *
காட்சிகாணுமையாங் கற்பினர்க்கிருமையு........... *
மாகிநிறைவுறூஉ மகண்டபூரணவெளி.............. *
யன்பருள்வன்பரு ளறிவறியாமையா .... *
யின்புமன்புமா விருந்தாங்காடல்செய் .... *
சிற்றணுப்பெருமலைத் திறத்தினிற்குலாவு........... *

யிருந்தருளொன்றை யெவருமெவையு................... *
நோக்கொணாதெனுமொருநோன்மைபுறஞ்செல... *
வாக்கினிற்பெரியர் மலையிலக்கெனப்பகர்.............. *
மொழிப்பொருள்விளங்க முந்நீர்ப்பரப்பி .... *
னெழிற்பெறுகொங்குதே யத்தினையடுத்துள ...... *
குறிஞ்சியஞ்சாரற் பெருஞ்சிறப்பமைதரு......... *
மூற்றங்கரையெனு மூர்க்கண்ணிவந்த................. *
பல்பெருவளனு நல்குமாட்சித்தாய்த்.................. *
தனதுமூவடிவுட் டானுமோர்தேவெனு............ *
வினிதிருந்துந்தன தியல்புதேர்தற்கொணா .... *
தேவருந்தேவருந் தாவருமுத்தியின் .... *
மெய்ந்நெறிகரும நன்னிலத்துதித்துப் .... *
பேற்றைத்தவத்தினா லன்றிப்பெறலரி................. *
தாமெனக்கருதிசொல் வாய்மைபுலப்படக்.......... *
ககனவட்டத்திற் கதிர்த்துத்திரிதரு.................... *
புகலுளகோன்முத லெவையுப்புறங்கொடு .... *
தன்னொளிப்பிழம்புட் டுன்னியாண்டொளிசெய ... *
மீக்கிளர்பரிதிதன் கோக்குலம்பெருகுவான்......... *
கடவுட்டன்மையான் மிடலுற்றெழீஇநெடும் ...... *
பொன்னெயிற்சனகை மன்னுளக்கவற்சி............... *
வில்லுடன்கடந்த பல்கமெல்லியலை .... *
மணந்துபற்றலர்வலன் றணந்தரிக்குழாத்தொடு ... *
மீட்சிகொளிராகவன் காட்சிகைமிக்குப் .... *
பூசனைவான்முறை புரிவான்றற்பெயர்த் .... *
தேசுறநிறீத்தஞ் செவ்விதிற்பணித்தது .... *
மாருதிபெயர்க்கயஞ் சிரியபெண்ணைத் .... *
திருநதிவடாது மருவும்வளத்தது .... *
வருணன்முதலிய வானவர்பணித்தது .... *
தமிழெனுஞ்சலதியு மிமிழ்திரையுததியு .... *
மூவலகயிற்பருகித் தவமுடிமிலைந்து .... *
தென்றலையுயிர்க்கு மன்றலந்தடவரை............... *
விரசுமுற்றத்து ளரசுவீற்றிருக்குங்................... *
கலசமுநிவனுங் கற்பினுக்குவமை..................... *

தொலைவிலாத்தளிரடித் துணைக்குத்துணைவனா...... *
மேனையமுதிருருங் கானிடைபுகுத்திய .... *
மாதவப்பயனை யாதியினவனூர்த் .... *
தம்பிரான்றோழனூர் செம்பொன்முத்தாற்றி ..... *
னிட்டாரூரின் முட்டாமலாக்குளத்...... *
தேற்றவாவொருங்கு போற்றிக்கிடைத்தது...... *
பன்னூற்புலவர் பயந்தசெய்யுட்டிரன் .... *
மன்னூற்பொருளின் வண்மைகடொக்கது .... *
தயரதன்கான்முளை தானைப்பெருங்கடற்.......... *
சயமுறீஇயிறுத்தபா சறைநிகழ்வண்மையான்..... *
மகிழ்வெனுமடந்தை திகழ்நடங்குயிற்றும்........ *
அரியூரெனத்திசை யகன்சீர்ப்பதியது .... *
பெரியோரோத்தும் பெயர்வேற்றுமையலா .... *
தருணையுந்தானும் பொருள்வேறுறாதது......... *
சிவமயமாகுந் தீர்த்தகிரிமான் .... *
மியம்வடமொழியின் விரிந்துளததனை........... *
மேனிலவிபுதரு மாநிலவமரரு .... *
மன்றிமற்றையோ ரறிவுறுதோன்மையாற் .... *
றென்றமிழ்மொழியிற் சீரியகாவிரி............ *
சூழ்நலங்கெழுமு சோழநன்னாட்டினன் .... *
சிவசமயிகட்கெலாம் பொதுவுறச்செப்பிடுந் ...... *
தவவபிதானந் தனக்கேசிறப்பெனா........... *
அறிஞர்சொற்றிடலா லியாண்டுமீக்கூறுஞ் .... *
சைவஎல்லப்ப நாவலனெனுந்தகை .... *
யுவகையெவரு முணர்சொற்பொருட்சுவை....... *
பராவப்புகன்றருள் புராணப்பநுவற்........... *
செய்யநிறையுநெல் வயல்செறிபுதுவை........... *
மாநகரிறைகொளுஉம் வண்டமிழ்ப்புலமையோன் *
சுரநதிமரபினன் வரியிசைமுரனுந்........... *
தேமலர்க்குவளை காமருமார்பினன்........... *
நேயமால்சுப்ப ராயக்கவிஞனாற்........... *
பொழிப்புரைநாவலர் வியப்புறவியற்றுவித் .... *
தளிக்கணமதுவுணக் களிப்புறஞ்சமோருக........ *

மாநநந்தோற்றத் தேனலர்குமுதமுங்................. *
குவளைசைவலந் திவளொளிதித்திலஞ்............ .. *
செஞ்சூட்டோதிம மஞ்சூற்சங்கினம்.............. *
வல்லிசேர்வள்ளை மெல்லிதழரும்பர்.............. *
செய்யவாய்விழியினை மையவாங்கருங்குழன் ...... *
முருந்திளமுறுவல் பொருந்துறுமென்னடை...... *
திருவநீள்கந்தர மிருசெவிபயோதர .... *
மிவைநனிகாட்டலால் துவைபுனன்மகளி............ *
ருட்புறத்திருக்கையின் பெட்புறுதோற்றம்......... *
புறம்வெளிப்பட்டெனக் கறங்குதெண்டிரைத்தடஞ் *
சலவமாதிதிக்குவை குலவுமாளிகைதவழ்............ *
மஞ்சுகொண்டெழுபொழிற் றஞ்சையம்பதியுறை *
அப்புக்குட்டி யருந்தவப்புத்திரன்.................. *
குருகுசேசனைக் கொள்கையிற்றிரியா .... *
திதயமலரிடை யிருத்தித்தொழுதிடும்.............. *
வீரசைவ விரதங்கைவிடாக் .... *
சூரியன்செழுந்தமிழ்க் கொற்றவர்க்கன்பு .... *
நண்பும்பிரியாப் பண்பினின்மிக்கோன் .... *
கன்னையசெட்டி யென்றுங்குரிசில்... .... *
சங்கிற்பொலிவயற் புங்கத்தூர்வளர் .... *
செம்மல்சிவபிரான் திருவடிக்கன்பினன்............ *
பெரியோர்ப்பணியும் பெற்றிமைமறவான்......... *
மேழிப்பதாகை வாழியவலத்தினன்.................. *
மெய்யடியவர்பாற் பொய்யில்பத்திமையான்...... *
மயிலைச்சபாபதி வியனதிகுலன்பயில்.............. *
கல்விவிளக்க வச்சுக்கூடத்........................ *
தொல்வகையச்சிட் டுவந்துதவினனே............... *

சிறப்புப்பாயிர முற்றிற்று.

சாற்றுக்கவிகள்.

புதுவை,
காளத்தீசுரர்கோயில்
அருணாசலகுருக்களால்
இயற்றியது.

மதிநதிதரித்த பரமனூர்தீர்த்த..................*
மலைமகிமைக்குனா தஞ்சைப்..................*
பதிநகருடையோன்கன்னையமகிபன் ....*
பகர்கெனப்பன்முறைவேண்ட..................*
நிதிவளர்புதுவைச்சுப்பராயப்பேர்..................*
நிகரினற்புலவனுய்ந் தந்நூல்..................*
கதிபெறவெவரு மதியுறப்புரிந்தான் ....*
கலைஞர்கள்வியக்கநல் லுரையே..................*

புரசை அஷ்டாவதானம் சபாபதிமுதலியாரவர்கள்
இயற்றமிழ் மாணாக்கரு ளொருவராகிய
கந்தாடை - துரைஸாமிஐயங்காரால்
இயற்றியது.

கொங்குநாட்டுப் பலர்வேண்டிக் கொள்ளத்தஞ்சைக் கன்னையன்*
எங்குந்துதிக்குந் தீர்த்தகிரிக் கியையுமான்மியஞ் சோணாட்டுப் *
பொங்குசைவ எல்லப்பன் புகன்றதற்குப் பொழிப்புரையை...*
எங்கள்சுப்ப ராயகவி யாற்செய்வித்தச் சிடுவித்தான்..........*

புதுவை,
வெள்ளமுத்துப்பொன்னையர்முதலியாரால்
இயற்றியது.


தீர்த்தமால்வரையின் புகழையெல்லப்ப..............*
தேசிகன்புராணமாயிசைத்தான்..............*
சீர்த்ததோர்தஞ்சைக் கன்னையவதிபன்..............*
சென்றுவேண்டிடப்புராணத்தைப்..............*
பார்த்துச்சொன்முடிபு பொருண்முடிபாதி ......*
பழுதுறுதுரைவிரித்தனன்பார்..............*
போர்த்தசீர்ப்புதுவை வளர்சுப்பராயப்..............*
புலவன்கற்றோர்புகழ்ந்திடவே ....*

சருக்கவகராதி.

சருக்கவகராதி - முற்றிற்று.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௫௭	௫	அகலாதவடிவுபோலும்	அகலாதவளிகள்போலும்
,,	௧௫	அகலாத அதனபுகு	அகலாத வளியினங்கள்போலும்



சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்.

மூலமும் - உரையும்.

கணபதிதுதி.

காப்பு.

சந்தநாசலத் தண்ணல் தமிழினு.................*
லிந்தநூலை யினிது முடித்திட ....*
ஐந்துமாகரத் தானைக் கனுதினஞ்............*
சிந்தையாகிய சேவக நல்குவாம்.................*

இதன்பொருள்.

இந்தத் தீர்த்தகிரி புராணமென்னும் முன் வடமொழியிலிருந்த புராணத்தைச் சந்தநாசலமென்னும் பொதியமலையிலெழுந்தருளிய - அகத்தியமுநிவர் - அருளிச்செய்த தமிழ்ப்பாஷையினுல் இடையூறின்றிப் பாடி முடிக்கும்படி - ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகராகிய யானைக்கு - எப்பொழுதும் - என்னுள்ளமாகிய இருப்பிடத்தைக் கொடுக்குதும் - என்றவாறு.

ஐந்துமாகரத்தானைக் கென்சிந்தையாகிய சேவகத்தை யனுதின நல்குவா மென்பதனுல் இந்நூலினிது முடியுமென்பது கருத்து.

எடுத்துக்கொண்டகாப்பிய மினிது முடிதற்பொருட்டுச் கடவுள்வாழ்த்துக் கூறுகின்றார். அஃதாவது - கவி தான் வழிபடு கடவுளையாதல் எடுத்துக்கொண்ட நூற்கு • ஏற்புடைக் கடவுளை யாதல் வாழ்த்துதல் - அவற்றுள் - இவ்வாழ்த்து வழிபடு கடவுளை யென வறிக.

பாயிரம்-கடவுள்வாழ்த்து.

பரமசிவன் துதி.

நீர்கொண்ட கடலுடுத்த வுலகமுதற் படைத்தோனு நெடி யமாலுந், தார்கொண்ட மணிமௌலிச் சதமகனுந் தெரிவரிய தன்மையானை, வார்கொண்ட தனத்துமைசேர் மலைமருந்தை ய லைமருந்தை வானோர்க்கீந்து, கார்கொண்ட மிடற்றிறையைத் தீர் த்தமலைப் பெருமானைக் கருத்துட்சேர்ப்பாம் .... *

(இ-ள்.) தண்ணீரை நிறைவாகக்கொண்ட கடலினாலுடுக்கப்ப ட்ட உலகங்களையும் - அவற்றிலுள்ள வுயிர்களையும் - படைத்தவனாகி ய பிரமனும் - நெடியவனாகிய திருமாலும் - மலர்மாலைகளையணி ந்த இரத்தினமுடியினையுடைய சதமகனாகிய இந்திரனும் - காணு தற்கரிய தன்மையையுடையவனை கச்சுகொண்டணிந்த தனங்களை யுடைய உமையானவள் இடதுபாகத்திற் சேர்ந்திருக்கப்பெற்ற மலைமருந்தை - திருப்பாற்கடலிலுண்டாகிய அமிர்தத்தை - தேவர் களுக்குக்கொடுத்துக கருமைநிறத்தையடைந்த கண்டத்தையுடை ய கடவுளை - தீர்த்தகிரியின் கண்ணெழுந்தருளிய எமதுபெருமா னை - யுள்ளத்தின்கண் வைப்பாம் - எ-று. (க)

உமையவள் துதி.

அன்னையென வுலகமெலா மளித்திருந்துங் கன்னிகையா ம சலமானை, யென்னையொரு பொருளாகத் தடுத்தாண்ட தீர்த்தம லை யிறையோன்பாகந், தன்னை யகலாமயிலை மயிலோனுக் கமு தூட்டுந் தனத்தினளைப், புன்னைநறுங் குழலிவடிவழகி நாயகியை யன்பாற் போற்றுவோமே .... *

(இ-ள்.) உலகங்களையெல்லாந்தான் தாயாகநின்று பெற்றிருந்துங் கன்னிகையாகவிருக்கின்ற பருவதராஜபுத்திரியை அடியேனையு மொருபொருளாக மதித்துத் தடுத்தாட்கொண்ட தீர்த்தகிரியின்கண் ணெழுந்தருளிய பரமசிவனது இடப்பாகத்தைவிட்டு நீங்காத மயில்போல்வாளை மயில்வாகனத்தையுடைய முருகக்கடவுள் திருவவதாரஞ்செய்த சம்பந்தசுவாமிகளுக்குப் பால்கொடுத்த திருமுலைகளையுடையாளை புன்னைமலர்களை முடிக்கப்பெற்ற வாசனைபொருந்திய கூந்தலையுடையளாகிய வடிவழகியென்னுந் திருநாமத்தையுடைய அம்மையை அன்போடுபோற்றுவாம். (௨)

விநாயகர் துதி.

வே று.

தீர்த்த வெற்புறை களிற்றினைத் திருந்தவே ழுலகும்............ *
பூத்த வெற்பருள் கொடிதருங் கனிதனைப் புயங்கங்.......... *
கோத்த வெற்பணிக் கடறரு மமுதினைக் குகற்கு.............. *
மூத்த வெற்பினைப் பணிந்துநா நினைத்தது முடிப்பாம்...... *

(இ-ள்.) தீர்த்தகிரியி லெழுந்தருளிய யானையை எழுலகத்தையுந் திருத்தமாகப்பெற்ற இமயமலையினால் பெறப் பட்டகொடிபோல் வாளாகிய வுமாதேவியருளிய கனியை பாம்பினாலேகோக்கப்பட்ட என்புமாலையாகிய ஆபரணத்தையுடைய கடல்போன்ற வருளையுடைய பரமசிவன்தந்த அமுதம்போல்வானை முருகக்கடவுளுக்கு மூத்தவனாகிய மலையையொத்த திருமேனியையுடைய விநாயகக்கடவுளை வணங்கி நாங்கருதியவற்றை நிறைவேற்றுவாம். என்றவாறு. (௩)

முருகக்கடவுள் துதி.

புள்ளி ணுயகன் மிசைவருங் குரிசிலும் பொகுட்டுக்.......... *
கள்ளி ணுயகன் றனதிதழ்ப் போதனுங் காண........................ *
வெள்ளி நாயக னகத்தவள் விருப்பின ளளித்த..................*
வள்ளி நாயகன் பதமலர் மநத்தினில் வளர்ப்பாம் .... *

(இ-ள்.) பறவைகளுக்கெல்லா நாயகனாகிய கருடன்மீது வருகி ன்ற திருமாலும் பூங்கொட்டையையுடைய தேனுக்கிருப்பிடமா க இருக்கின்ற அகன்றபொன்போலு மிதழினையுடைய தாமரைம லரிலிருக்கின்ற பிரமனும் அறியாத வெள்ளிமலையை யிடமாக வுடைய பரமசிவனதுள்ளத்தி லிருக்கின்றவளாகிய பார்வதி ஆசை யோடும்பெற்ற வள்ளிநாச்சியாருக்குத் தலைவனாகிய முருகக்கடவு ளுடைய திருவடித்தாமரையை என் னுள்ளத்தின்கண் வைத்து வளர்ப்பாம் - எ-று. (ச)

சம்பந்தசுவாமிகள் துதி.

இருகுடங்கொண் டொருகுடத்தில் வெண்பொடி பெண் கொடியாக வெழுவித்தோனைத், திருவருளாற் பாலருந்தி யேடத னை யாற்றிலிட்ட தெய்வக்கோனை, யருமறையின் றலைக்கொழுந் தை யாகமத்தின் றனிமுதலை யடியார்வாழ்வைப், பரசமயக் கோ ளரியைக் கவுணியர்சூ டாமணியைப் பரவுவாமே............*

(இ-ள்.) ஒரு குடத்திலிராநின்ற வெண் பொடியாகிய சாம்ப ராணது இரண்டு பொற்குடத்தையொத்த தனங்களைக்கொண்டு பெண்கொடியாக வெழும்படிச் செய்தவனை - அழகிய பார்வதியி னுலே முலைப்பாலுண்ணப்பட்டுத்தேவாரப்பதிக வேட்டினை வை யையாற்றின் கண்ணிட்ட தெய்வத் தன்மையை யுடைய இறைவ னை - வேதத்திற்கு முதலாகிய கொழுந்தை - சைவாகமங்களின் ஒப் பற்றமுதலை - அடியார்களின் வாழ்வை - இதரசமயமென்னும் யா னைகளுக்குச் சிங்கத்தை - கவுணியர் குலத்துக்குச் சூடாமணியாகி ய சம்பந்தசுவாமிகளை - வணங்குவாம்-எ-று. (ரு)

திருநாவுக்கரையர் துதி.

இற்றுணின் மரகதத்தி னொளிபகலு மிருள்காட்ட வெழுந் துகாமன், விற்றுணி மலரெடுத்து விளையாடுந் திருவாமூர் விளங் க வந்தோன், கற்றுணைப் பிடித்தவளை கடல்கடந்தோ னிருபாத கமலமான, பொற்றுணைப் பிடித்துநம திடராழி கடந்துகதி பு குதலாமே............................*

(இ-ள்.) வீட்டினிடத்து வைத்திருக்கின்ற தூணிற் பதித்திருக்கின்ற மரகத விரத்தினத்தி னொளியானது பகலினு மிருளைக்காட்ட மன்மதனெழுந்து தனது கருப்புவில்லில் தூணியிலுள்ள மலர்ப்பாணங்களை யெடுத்து வைத்துப் பிரயோகித்து விளையாடுகின்ற வளப்பத்தையுடைய திருவாமூரென்னு நகரமானது விளங்கும்படி அவதரித்தவரும் சமணர்கள் கட்டிவிட்ட கற்றூணைப் பிடித்துக்கொண்டு இவ்வுலகத்தைச் சூழ்ந்திருந்த கடலை நீந்திக் கடந்து வந்தவராகிய அப்பர் சுவாமிகளது இரண்டாகிய பாத கமலங்களென்னும் பொற்றூணைப் பற்றி நமது துக்கசாகரத்தினின்று நீங்கி மோக்ஷத்தையடையலாம்-எ-று. (௬)

சுந்தரமூர்த்திதுதி.

இருமுதலை யடைந்துநனை முடியசைய வாவணமொன் றேந்திப் போந்த, வொருமுதலை.நவநீத புரியானை வழக்கேற்றி யுணாத்த கோவை, வருமுதலைக் குழவிதர மறையொழுகுங் கனிவாயா லமுதப் பாடல், தருமுதலை யடிபணிந்து கருமுதலை வேரினுடன் றள்ளு வாமே...*

(இ-ள்.) இருமுதலைப் பொருந்தி நனைத்த திருமுடியானது கிழவுத்தன் மையாலசைய முறிச்சீட் டொன்று கரத்தி லேந்திவந்த ஒப்பற்ற முதல்வனை திருவெண்ணெய் நல்லூ ரென்னும் பதியினையுடையவனை வழக்கைச் சபையேறச் செய்து வலிமையாகப் பேசிய தலைவனை ஒன்பானாண்டின் பின்னர் நீரோடுவந்த முதலையானது முன்னருண்ட பிள்ளையை யுமிழந்துதர வேதமொழுகாநின்ற கனிபோன்ற திருவாயால் அமிர்தம் போன்ற தேவாரப் பாடலைப்பாடித் தந்த தலைவனாகிய சுந்தர சுவாமிகளை திருவடிகளை வணங்கிப் பிறவியாகிய முதலை வேரோடு நீக்குவாம்-எ-று. (எ)

மாணிக்கசுவாமிகண்முதலிய அடியவர்துதி.

வே று.

வாதவூரனைப் பணிந்து வான்மீகனை வணங்கி.........*
அதிபாரத்து வாசனை யகத்திய முனியைச்.........*

சூதனுடன் வியாசரா மிருடியைத் தொழுது......*
தாதை தாளறத் தடிந்தவ னிருபதந் தரிப்பாம் ...*

(இ-ள்.) திருவாதவூரி லெழுந்தருளிய மாணிக்கமூர்த்தியை வணங்கி வான்மீக னென்னு மிருடியைப் பணிந்து முதல்வனாகிய பாரத்துவாச மகா முநியையும் - அகத்திய முநிவனையும் சூதமகா முநிவனோடு வியாச முநிவனையும் தொழுது தன்பிதாவின் தாளானது அறும்படி வெட்டினவனாகிய சண்டியினுடைய இரண்டு திருவடிகளையும் என்றலைக் காபரணமாகத் தரித்துக் கொள்ளுவாம்.

சைவசமயர் துதி.

வேறு.

தெய்வமாக வோர் தேவரையுங் கொளேஞ்.........*
சைவ ரானவர் தாளிணை போற்றுவோம்............*
வைய மீதினில் வன்றொண்ட னுக்குமுன் ....*
னைய னேவல் புரிந்தன னாதலால்....................*

(இ-ள்.) இவ்வுலகத்தில் வன்றொண்டனாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஆதியில் என்னையனாகிய பரமசிவம் ஏவும்பணி புரிந்தன னாதலால் ஒருதேவரையும் தெய்வமென்று மனத்திற் கொள்ளேம் சைவ சமயத்தையுடைய அடியார்களுடைய இரண்டு திருவடிகளையும் துதிப்போம்-எ-று. (௧)

இதுவுமது.

குற்ற மற்ற திருத் தொண்டர் கூட்டமும் ....*
வெற்றியாகிய மேருவு மொக்குமே..................*
புற்றிடங் கொள் புராந்தகர்க் கல்லது ....*
மற் றெவர்க்கும் வணங்குவ தில்லையால் ....*

(இ-ள்.) யாதொரு குற்றமு மில்லாத திருத் தொண்டர்களாகிய அடியார்கள் கூட்டமும் வெற்றியினை யுடையதாகிய பொன் மலையும் ஒப்பாகும் அஃதேனெனில் புற்றை யிடமாகக் கொண்ட திரிபுராந்தகராகிய பரம சிவத்துக்கே யல்லது மற் றியாவர்க்கும் அவ்வடியாரும் மேருவும் வணங்குவ தில்லாமையால்-எ-று. (௨௦)

அவையடக்கம்.

வேறு.

உற்ற செய்யுளா லருணைமாநகர்ச் சிறப் புரைத் தேன் .... ✻
குற்ற மானவை குணத்தவர் பொறுத்துளங் கொண்டாரி ...... ✻
இற்றை நாளுமச் செருக்கினு லிதனையு மிசைத் தேன் .... ✻
கற்ற மாந்தர்க ளனைத்தையும் பொறுப்பது கடனே .... ✻

(இ-ள்.) பொருந்திய செய்யுள்களால் அருணைமா நகரினது புகழ்ச் சிறப்பை முன்னஞ் செப்பினேன் அதிலுள்ள குற்றங்களைக் குணத்தையுடைய புலவர்கள் பொறுத்துத் தங்களுள்ளத்தில் நன்றெனக் கொண்டார்கள் அதை நம்பியின்றும் அந்தக் களிப்பினுல் இந்தத் தீர்த்தகிரி புராணத்தையு முரைத்தேன் கற்றுவல்ல புலவர்கள் இதனிலுள்ள குற்ற மனைத்தையும் பொறுத்துக் கொள்வது அவர்களுக்குக் கடன்-எ-று. (கக)

வேறு.

செப்பரிய தமிழ்க ளெல்லா மரியயனே முதலான தேவர்க் கோதி, யொப்புவிக்க வறியாம லரனிடத்தே வளைத்து வளைத்து ளையாநின்றேன், மைப்பரவை தருவிடமு மாடரவு நீறு மென்பு மன்பாய்க் கொண்டா, ரப் பெருமை யுடையவ ரென் புன்கவியு ம் பொறுப்பரென வறிந்து தானே .... ✻

(இ-ள்.) சொல்லுதற் கரிய தமிழ்ப்பாக்களை யெல்லாம் திருமால்-பிரமன் முதலான தேவர்கள் காரணமாகச் சொல்லி யொப்புவிக்கத் தெரியாமல் பரமசிவத்தி னிடமாகவே சுற்றிச்சுற்றிவந்து சொல்லு கின்றேன் ஏனெனில் கரியகடல் தந்த ஆலகால விடத்தையும் ஆடுகின்ற பாம்பையும் திருநீற்றையும் எலும்பையும் ஆசையோடு தரித்துக் கொண்டா ராதலால் அந்தப் பெருமையை யுடைய பெருமான் என்னுற் சொல்லிய புல்லிய கவியையும் அங்கீகரிப்ப ரெனத் தெரிந்து-எ-று. (கஉ)

அலர்மதியு மென்கவியுங் களங்குறையுங் கலைகுறையு மானக் காணும், புலவரெலா மிகமகிழ்ந்தே யமுதெனவே பயனுகர்ந்து

புகழா நிற்பர், நிலவுமிழு மதிகரவு புரிபவர்க்கும் விரகியர்க்கு நெ ருப்பாத்தோன்று, முலகினி லென் கவியழுக்கா றுடையவர்க்கும் பேதையர்க்குமுவப்பெய்தாதே .... *


(இ-ள்.) பூரணச் சந்திரனையும் என்கவியையும் தூக்கிப் பார்க் குங்கால் களங்குறையும் - கலைகுறையும் - அப்படி யிருந்தாலும் என்கவியைப் புலவர்களெல்லா மிக மகிழ்ச்சியடைந்து அமுதமா கக்கொண்டு அதனது பொருட்பயனையுண்டு புகழுவார்கள் சந்தி ரிகையை வீசாநின்ற சந்திரனனது களவு செய்பவருக்கும் விரகிக ளுக்கும் நெருப்பாகத் தோன்றும் என் கவியானது இவ்வுலகத்தி ல் அழுக்கா றுடையார்க்கும் மூடருக்கும் வெறுப்பாகத் தோ ன்றும் - எ-று. (கரு)

பாயிர - முற்றிற்று.



சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.



முதலாவது
தண்டகவனச்சருக்கம்.

இனிமையாக வான் மீகமுனிராகவ சரித .... *
முனிவரான பாரத்து வாசர்க்கிவை மொழிந்தா...... *
ரனைய தாகிய வடகலைக் கடறரு மமுதைப் .... *
புனையுமாதமிழ்ச் செய்யுளாலியைந் திடப் புகல்வேன்

(இ-ள்.) மதுர முண்டாக வான்மீக முனிவர் இராகவனது சரித்திரத்தைப் பாரத்துவாச முனிவருக் குபதேசித்தார் அத்தன்மையதாகிய வடநூற் கடல்தரும் அமிர்தத்தைப் பெருமை பொருந்தியதமிழ்ச் செய்யுளா லலங்காரம் பொருந்தும்படி சொல்லத் தொடங்குவேன்—எ-று. (க)

மலையினாமமும் பெருமையு மலையது வடிவும்...... *
நிலையதாகிய சித்தியும் பெற்றபேர் நிலையும் ...... *
தலைவனார் செயும் யோகமு முமைய வடவமுஞ் ... *
சிலையி லேவருங் கங்கையு மவைகளின் சிறப்பும்...... *

(இ-ள்.) அந்தத் தீர்த்தகிரியினது பெயரும் அதனது பெருமையும் அம்மலையின துருவமும் அவ்விடத்திற் பெறத்தக்க வழிவில்லாத சித்தியும் அச்சித்திகளைப் பெற்றவரது நிலைமையும் அவ்

விடத்துப் பரமசிவம் தக்ஷிணமூர்த்த மாக வெழுந்தருளி யிருந்து செய்த யோகமும் உமையவள் ஆங்கு செய்ததவமும் அம்மலையினின்றும் வந்த தீர்த்தங்களாகிய கங்கையும் அத்தீர்த்தங்களின் சிறப்பும்—எ-று. (உ)

மற்று முள்ளவர் தீர்த்தமு மவைகளின் வரவுஞ்......*
செற்றலார் தொழுஞ் சுவேத கேதுவினது செயலு *
முற்றி ராகவன் கங்கைநீ ரழைத்தது மொருங்கே ...*
கற்ற மாந்தர்முன் றமிழினாற் புகலுவேன் கதையா...*

(இ-ள்.) மற்று முள்ளன வாகிய தேவர் முநிவரா லுண்டான தீர்த்தங்களின் சிறப்பும் அத்தீர்த்தங்களின் வரவும் சத்துருக்க ளெல்லாம் வணங்குகின்ற சுவேத கேதுவினது செயலும் இராகவ னவ்விடம்வந்து கங்கை நீரையழைத்ததும் முழுதுங்கற்ற புலவர்கள் முன் தமிழினாற் கதையாகச் சொல்லுவேன்—எ-று. (௩)

மறுவிலாத வான் மீகனு மந்தர மிராம..............*
னுறைகுலா வயிராவத னிராவண னஞ்சு............ *
செறிவதா மிராமாயணக் கடலினைத் திங்க .... *
ளறிவதாக் கடைந் தருளினு னரும்பொரு ளமுதை *

(இ-ள்.) குற்றமில்லாதவான்மீகமுநிவன் தனதுநாவாகிய மந்தரகிரியும் வாசனைபொருந்திய விராமக் கடவுளாகிய ஐராவதனும் இராவண னுகியநஞ்சும்-பொருந்தி யிருக்கிறதாகிய இராமாயணமென்னுங் கடலினை அறிவே திங்களாகக் கொண்டு கடைந்து அரிய பொருளாகிய அமிர்தத்தைக் கொடுத்தான்—எ-று. (௪)

திருந்து பாரத்து வாசமாமுநியிரு செவியா ...... *
லருந்தி மீளவும் வினவுவா னருமறை முநிவ...... *
மருந்து போனவ தீர்த்தமால் வரையது வளமும்...*
பொருந்த வோதி நீவிரித்திடு மெனமுநி புகல்வான் *

(இ-ள்.) திருத்தமாகிய பாரத்துவாச முனிவரானவர் தனதிரு செவிகளா லுண்டு பின்னும் வினவுவானுகி அரிய வேதங்கட்குத் தலைவராகிய முநிவனே அமிர்தம் போன்ற நவதீர்த்தத்தின் வளனும் உயர்ந்த தீர்த்த கிரியின்வளனும் என்மநதிற் பொருந்த விரித்துச் சொல்லு மென்று கேழ்க்க வான்மீக முநிவரன்சொல்லுவா னுயினுன்—எ-று. (௫)

உலவு சூரிய குலத்திராகவ னெனு முழவ .... *
னலைய தாகிய வனத்தை யம்பழலினு லடக்கிப் ... *
புலமதாக மேற் சேதுவாம் வரம்பையும் புணர்த்து*
நிலவி ராக்கதர் சோரியா மேரிநீர்நிறைத்து.........*

(இ-ள்.) தொன்று தொட்டு வளர்ந்து வாநின்ற சூரியகுலத்தி லவதரித்த இராகவனென்னு முழவன் அலையினையுடைய கடலாகிய வனத்தைப் பாணமாகிய வழலினுலே திருத்தி வயலுண்டாகவ தனிடத்துச் சேதுவாகிய வரம்பையும் பொருந்தக்கூட்டி விளங் காநின்ற விராக்கதர்களுடைய இரத்தமாகிய ஏரிநீரை நிறைவி த்து—எ-று. (சு)

இலங்கை யாகிய பெருவயல் செறித்திரா வணனு.............*
ரலங்கல் சேர்பல முடிகளைப் பறித்து வீடணனுற் .... *
றுலங்கு வான்பயிர் சமைத்துநல் லருட்புனல் சொரிந்து......*
விலங்கு றுதுபல் கதிருமுற் றிடும்படி விளைத்தான்............ *

(இ-ள்.) இலங்கையாகிய பெரியவயலைச்செறித்து இராவணனு டைய மலர்மாலைகளையணிந்த பலமுடிகளாகிய களைகளைப்பறித் து விபீஷணனென்னும் விளங்குகின்ற சிறப்பினையுடைய பயி ரையுண்டாக்கி அப்பயிர்க்கு நல்லவருளாகிய நீரைவிட்டு வில கிடாது சூரியன்முதலான பலகதிர்களு முற்றிடும்படி விளைவித் தான்—எ-று. (எ)

தரா தலந்தரு மடந்தையு மிளவலுந் தடமார்.................*
பரானா மேருவை வலஞ்செய்வான் புதல்வனும் பரவ.........*
விரா வணன்புகழ் முழுமதி விழுங்கியங் கியைந்த.................*
வராவை நேரெனக் கிடந்தசே துவின்கரை யடைந்தான்...... *

(இ-ள்.) உலகத்தைத்தந்த சீதாதேவியும் தம்பியாகிய லட்சும ணப்பெருமாளும் தடமார்ந்த பருத்தவடியினையுடைய மேரு பர்வதத்தை வலம்வருகின்ற சூரியகுமாரனுகிய சுக்கிரீவனும் வ ணங்க இராவணனது புகழாகிய பூரணச்சந்திரனை விழுங்கி யங்கு ப்பொருந்திய அரவினை யொப்பாகவிருந்த சேதுவினது கரை யையடைந்தான்—எ-று. (அ)

எரிந்த குஞ்சியு மகோரமாப் பிறங்கிய வெயிறும் .... *
விரிந்த வேழ்கட லொலிநிகர் முழக்கமும் விடம்போற் ...... *

கரிந்த மேனியுங் குழிவிழிக் கனலுமாய்க் கடிதிற்..............*
பரந் திராமனைத் தொடர்ந்தறி ராவணன் பழியே..............*

(இ-ள்.) எரிகின்ற தலைமயிரும் அகோரமாக விளங்காநின்ற பற்களும் எழுகடல்களு மொலித்தா லொத்துவிரிந்த முழக்கமும் விடத்தைப்போற்கறுத்த மேனியும் ஆழ்ந்த கண்களினின்று மெமாறின்ற அக்கினியுமாய் வேகமாகப்பரந்து இராமக்கடவுளைத் தொடர்ந்தது இராவணனைக் கொன்றபழியானது—எ-று. (கூ)

தீய தானது வருதலுந் தயரதன் சிறுவன்..............*
மாய மாமிது தவிர்த்திட நினைத்தலு மநத்தா..............*
காய மீதொரு மொழியிதன் கரையினிற் சிவன்பா ....*
லாய வர்ச்சனை புரிந்திடி லகலுமென் றறைந்த ....*

(இ-ள்.) கொடியதாகிய பிரமப்பாவமானது தனக் கெதிராகவருதலும் தயரதன்சிறுவனுகிய இராகவன் மாயமாகவந்த விப்பாவமானது நீங்கவேண்டுமென மநத்தினினினைத்தலும் அப்பொழுது ஆகாயமீது இந்தச் சேதுவின்கரையினில் சிவலிங்கமமைத்து அதனை யருச்சனைபுரிந்திடி லிப்பாவமகலுமென் றொருமொழியுண்டாக்கப்பட்டது—எ-று. (க0)

கனதை யாகிய மணியினு லாலயங் கட்டித்..............*
தனது பேரினுற் சிவனையவ் விடத்திலா தரிப்பித்..............*
தெனது பூசைகொண் டருளுகென் றிவையெலா மியற்றி.....*
மநதினுன் மகிழ்ந் தகன்றனன் வடகரை மருங்கில்..............*

(இ-ள்.) கனமான மாணிக்கங்களினு லோராலயங் கட்டுவித்து அதனிடமாகத் தனதுபெயரினுற் பரமசிவத்தைப் பிரதிட்டைசெய்து அக்கடவுளைநோக்கி எனதுபூசையைக் கைக்கொண் டருளல்வேண்டுமென் றிசைத்து இவை முதலியவெல்லா வுபசாரமுஞ்செய்து மநத்தினுன்மகிழ்ந் தவ்விடத்தினின்றும் வடகரைமருங்கிற் சென்றனன்—எ-று. (கக)

மேவு மவ்வினை யகன்றது விடணற் கரசு..............*
மாவிலங்கையு மளித்தவன் வடதிசை நோக்கிப் ....*
பூ விலங்கிய வித்திர விமானமேற் பொருத்திக்..............*
காவ தம்பல கடந்தன னிமையவர் களிக்க ....*

(இ-ள்.) தன்னைப்பற்றிய அந்தப் பிரமப்பாவம் நீங்கியவுட னே விபீஷணனுக்கு அரசும் பெரியவிலங்கைப் பட்டணமும் கொடுத்தவனாகிய இராமக்கடவுள் அழகுவிளங்காநின்ற இந்திரவி மான மீதேறி வடதிசைநோக்கி தேவர்கள் களிக்கும்படி பலகா தங்கடந்தனன்—எ-று. (கஉ)

அந்த வேளையி லிரவியம் பரநடு வணைந்தான்............ *
சந்தி பூசனை முடிக்கவுந் தானைதா னடந்து............ *
வந்த வேதனை யகற்றவுங் கருதியே மகவான்............ *
றந்த வூர்திவிட் டிழிந்தன னடுவொரு தலத்தில் .... *

இ-ள்.) அந்தக்காலத்தில் சூரியனானவன் ஆகாயமத்தியில் வந் துசேர்ந்தான் இராகவன் சந்தியாவந்தனமுஞ் சிவபூசையும் நி றைவேற்றவும் சேனைகள் நடந்துவந்த வருத்தமொழிக்கவும் சிந் தித்து இந்திரன்றந்த புஷ்பகவிமானத்தைவிட்டு ஒரு தலத்தினிட த் திறங்கினன்—எ-று. (கரு)

எண்டி சாமுக மளந்திடு நெடியகோட் டிலவு............ *
மண்ட கோளகை வெளியெலா மடைத்திடு மகிலும்............ *
புண்ட ரீகமு நெடியதா மரைகளும் பொருந்துந்............ *
தண்ட காவன மெனும்பெய ருடையதத் தலமே............ *

(இ-ள்.) எட்டுத்திக்கினையு மளந்திடுகின்ற நீண்ட கொம்புகளை யுடைய இலவமரங்களும் அண்ட கோளகையினது வெளிகளெல் லா மடைத்திடுகின்ற அகில்மரங்களும் வெண்டா மரைகளும் நெடியதாகிய செந்தாமரைகளும் பொருந்தியிருக்கின்ற தண்ட காவனமென்னும் பெயரினையுடைய தத்தலம்—எ-று. (கச)

வே று.

பல்லிலைத்தலை தோறும் பழுத் துயர்ந் .... *
தல்லெனக் கரிதா யவரும் பனை............ *
வில்லி யையப்ப சைமீளப் பஃறலை............ *
வல்லரக்கர் வளர்ந்தனர் போலு மே .... *

(இ-ள்.) பல வோலைகளை யுடைய தலைகடோறும் பழங்கள் ப ழுத்து உயர்ந்து இருளென்று சொல்லும் படியான கரிய நிறத் தை யுடையதாகிய - அரிய பனைமரங்கள் என்போன்றிருந்தனவெ

லினில் - பலதலைகளையுடையவலிய வரக்கர்கள் - வில்லினையுடைய விராகவனைப் பகைத்து - மறுபடியும்வந்து விளைத்தனர்போலும்.

முன்னிறைந்து மலர்ந்த முருக் கினிற்................*
றுன்னு கண்டகங் கண்டெழு தோகை கள்.........*
மன்னு மந்த வனத்திலும் வன்னியின்...............*
சென்னி மீதெழு சீதையை மானுமே.................*

(இ-ள்.) எதிராக நிறைந்து மலர்ந்ததாகிய - முருக்க மரங்களில் - பொருந்திய - முட்களைக் கண்டு - அவற்றி னின்று மேலெழா நின்ற மயில்க ளென்போலு மிருந்த தென்னில் - நிலை பெற்ற அந்தத் தண்டக வனத்திலும் - தீயின்றலை மீதினின்று மெழாநின்ற-சீதாதேவியை யொத்திருந்தது—எ-று. (கசு)

ஆடு கொம்பி னணி களவின்பனை ....*
மூடி யெங்கணு மொய்த்த மலர்க் குவை ....*
தேடி யேவன தேவதை கட்டிய.....................*
பாடி வீடு பலபல போன்றவே.......................*

(இ-ள்.) ஆடுகின்ற கொம்பு களினாலே அழகுபெற்ற களாச்செடிகளினாலே - பனைமரங்களை மூடிக் கொண்டு எவ்விடங் களினு நெருங்கிய மலர்க் குப்பைகள் - என்போன் றிருந்ததென்னில்-வனதேவதைகள் - ஆராய்ந்து கட்டிய - பலபல பாடிவீடுகள்போன்றிருந்தன—எ-று. (கஎ)

பண்டை யாமல கந்தொறும் பைங்கிளித் ....*
துண்டமீ தொளி காலத் துயி லுதல்..............*
விண்டிருந்த விலை தொறு மென்கனி..............*
கொண் டிருந்த குளிர்வட மொத்ததே.............*

(இ-ள்.) பூர்விகமாக வளர்ந் திருக்கும் - நெல்லி மரங்கடோறும் - பசுஞ் சிறகினையுடைய கிளிப் பிள்ளைகள் தமது மூக்கினிடத்து - ஒளி விசும்படித் துயிலுதல் - என்போன் றிருந்தவென்னில் விலகியிருந்த விலக டோறும் - மெல்லிய கனிகளைக் கொண்டிருந்த குளிர்ச்சியினை யுடைய ஆலமரத்தையொத் திருந்தது—எ-று.

விர னவ்விடை மேவலுங் கங்கையும்..............*
வார ளுசியும் போலும் விளைத்தன..................*

நீரவாறு நெடுங்கரை மீதரி........................*
பூர தானது மோகை விளக்கவே .... *

(இ-ள்.) வீரத்தையுடைய - இராகவன் - அந்தவிடத்தில் வருத லும் கங்கையும் - வாரணாசி யென்னுங் காசியும் போல - சூழ்ந்தி ருந்தன - பிரவாகத்தை யுடைய நதியினது நெடிய கரையின்மீ துள்ள அரிபுரமானது - மகிழ்ச்சியை யுண்டாக்க—எ-று. (கசா)

அங்குறிஞ்சி யகப்புறப் பாட்டி னாற் .... *
சங்க முத்த மிழுக்குந் தலைமை யாற் .... *
றுங்க மானசெய் யுட்டளை தோய்த லாற்............*
பொங்கு வாணிப் புலவரை யொத்ததே ....*

(இ-ள்.) அழகிய குறிஞ்சி நிலத்தினது - அகத்திணையின் பெரு மையினாலும் - புறத்திணையின் பெருமையினாலும் - சங்கங்களுமு த்தங்களும் - வழுக்குகின்ற தலைமையி னாலும் - பெருமையை யு டையதான - வயனிலத்தினுள் - தளைகள் - பொருந்தி யிருத்தலின லும் - அலைகள் பொங்கு கின்ற - வாணி நதியானது - புலவரை யொத் திருந்தது - எ-று. சிலேடை வகையால் - அழகிய குறிஞ்சி நிலத்தினது அகத்திணைப் பாட்டினாலும்-புறத்திணைப்பாட்டினாலு ம் - சங்கத்தின் கண்ணுள்ள இயலிசை நாடகமாகிய - முத்தமிழுக் குந் தலைமையா யிருத்தலினாலும் - பெருமையை யுடையதான செய்யுட்களில் தளைகள் பொருந்தி யிருத்தலி னாலும் - அலை கள்பொங்கு கின்ற வாணி நதியானது - அறிஞரை யொத் திருந் தது—எ-று. (உ0)

தீர மெங்கு நிறைந்தன செங்கர.......................*
வீரமுங் கனி காரமும் வேழமு....................... *
நாரமுஞ் சுரநாகமும் பூகமு.......................... *
மாரமுங் குயி லாவு மசோகுமே........................ *

(இ-ள்.) செவ்வலரியும் - கோங்குமரமும் - மூங்கிலும் - நாரத் தையும் - சுரபுன்னையும் - கமுகும் - சந்தனமும் - குயில்கள் கூவு கின்ற அசோகும் - அவ்வாற்றின் கரைகளெங்கும் நிறைந்திருக்கி ன்றன—எ-று. (உக)

மட்டில் புன்னை யரும்படர் மஞ்சரி .... *
தட்ட நன்கனி தந்திடு தாடிமஞ்.................... *

செட்டி மாக்கள் செழுந் தரளந்தர.....................*
கட்டி நீட்டுங் கநகங்க ளொக்குமே..................... *

(இ-ள்.) அளவற்ற புன்னை மரங்கள் அரும்புக ணெருங்கிய பூங்கொத்துகளினரும்புகளை உதிர்த்தலால் அதைக்கண்டு தாதுமாதுளை நல்ல கனிகளைத் தந்திடுகின்றது என்போன்றிருந்த தென்னில் வியாபாரஞ்செய்யுஞ் செட்டிமாக்கள் ஒருவர் செழுமை பொருந்திய முத்தங்களைக் கொடுக்க அதற்குப்பதிலாக பொன் கட்டிகளைக் கொடுப்பதை யொத்திருந்தது—எ-று. (உஉ)

தங்கு மாவன மேற்றலை ழேறத்.....................*
துங்க மாதுளை யின்கனி தூங்குதல்..................... *
மங்கை மார்முலை போல வனப்புறச்..................... *
செங்குடந் தவஞ் செய்வன போலுமே............ *

(இ-ள்.) இராமக்கடவுள் தங்கியிருக்கின்ற பெரியவனத்தினிடத்து தலையானது மேலேபொருந்த பெருமைபொருந்திய மாதுளையின்கனிகள் தொங்குதல் என்போன்றிருந்ததென்னில் மாதர்களுடைய முலைகளைப்போல அழகைப்பெறவேண்டி சிவந்த தங்கக்குடங்களானவை தவஞ்செய்வனபோலுமிருந்தன—எ-று.(உ௩)

மாத விக்கொடி மல்லிகை சுற்றிய .... *
சூத வன்பணைக் கன்னி தொடுத்தன.....................*
காதல் வல்லியர் கைத்தளிர் தீண்டலிற்.....................*
போத மேனி பொடித்தன போலுமே .... *

(இ-ள்.) மாதவிக்கொடிகளாலும் மல்லிகைக்கொடிகளாலும் சுற்றப்பட்ட மாமரத்தினது வலியகிளைகளில் பூங்கொத்துகள் நிறைந்திருக்கின்றது. என்போன்றிருந்ததென்னில் தன்னிடத்தாசையுள்ள மாதர்கள் கைகளாகிய தளிரினாலே தீண்டுதலினால் மிகுதியும் உடலமானது மயிர்க்கூச் செறிந்ததுபோலு மிருந்தது. (உச)

நாளி கேர நெருங்கிய நாப்பணிற்..................... *
பாளை பூடெழு பச்சிளநீரினம் .... *
வாளி போல்விழி மங்கையர் முத்தணி.....................*
தோளி னேறுந் துணைமுலை போலுமே.............. *

(இ-ள்.) தெங்கமரத்தினது நெருங்கிய ஓலைகளினடுவில் பாளைகளோடு தோன்றிய பசியவிளநீரினங்கள் என்போன்றிருந்ததென்னில் பாணத்தைப்போலுங் கண்களையுடைய மாதர்களது முத்தமாலைகளணிந்த தோளினிடத் தேறுதற்குக் காரணமாகிய இரண்டு முலைகளைப்போலு மிருந்தன—எ-று. (உரு)

காவின் மென்கொடி சுற்றுங் கதலிகள்............*
பூவின் மீது புதுமது சிந்துவ.............*
வோவி லாது பசுநரம் போங்கிய ....*
பாவை மார்முலைப் பாலை நிகர்க்குமே............*

(இ-ள்.) சோலைகளில் மெல்லிய பூங்கொடிகளாற் சுற்றப்பட்ட வாழைமரங்களின் பூவினிடத்தினின்றும் புதிய மலர்த்தேன்துளிப்பன என்போன் றிருந்ததென்னில் பிரதமையையொத்த மாதர்களது இடைவிடாது பசிய நரம்பினையுடைய வோங்கிய முலைகளினின்றுந் துளிக்காநின்ற பாலையொத்திருந்தது—எ-று. (உசு)

பெரு வயற்புனல் வாளை பெயர்ந்துபோய்.........*
சுர நதிப்புகு வந்த சுழற்சியான்...............*
மரு வுடுக்குல மண்ணுற மாநிலப் ....*
பரி வருத்தனை பண்ணுதல் போன்றவே........... *

(இ-ள்.) பெரிய வயல்களிலுள்ள நீரினிடத்துநின்றும் வாளைமீன்கள் எழும்பிப்போய் ஆகாயகங்கையிற் புகுந்துவந்த சுழற்சியால் அங்ஙனம்பொருந்திய நக்ஷத்திரக்கூட்டங்கள் பூமியிலுதிர்கின்றன என்போன்றிருந்ததென்னில் அவ்வானுலகமானது மாநிலப் பரிவருத்தனை செய்தல்போலு மிருந்தது—எ-று. (உஎ)

வே று.

அகழி சூழ்மதில் வானநா டணைந்திட வகழி......... *
புகரி லாப்பெரும் பாதலம் புகுதுவான் போந்து...*
ககன கேதுவு மனந்தனுங் குறுக்கிடக் கண்டு ...... *
சகுன மன்றென விடையிலே நின்றபோற் றயங்கும்*

(இ-ள்.) அகழியாற் சூழப்பட்ட மதிலானது தேவருலகத்திற்செல்லவும் அகழியானது குற்றமில்லாத பெரிய பாதலத்திற் செல்லவும் சென்று ஆகாயத்தின்கணுள்ள கேதுவென்னும்பாம்பும் - அநந்தனென்னும் - பாம்பும் - குறுக்கிட்டதைக் கண்

டு நற்சகுன மல்லவென்று மத்தியிலே நின்று விட்டதுபோல் விளங்கும்—எ-று. (உஅ)

வச்சிரத்தினு லடுக்கிய தனகவான் மதிலி........... *
னுச்சி யிற்செறி விளக்கின் மேன்முழுமதி யுலாவ... *
வச்சுடர்த் தலைமிசை யெழும்புகையினு லடைந்த...*
உச் சளத்தினைக் களங்கெனப் பகருவர் கலைஞர்...... *

(இ-ள்.) வச்சிரக் கல்லினுலடுக்கிய பெருமை பொருந்தியபொன்மதிலினது உச்சியில் நெருங்க வைத்திருக்கின்ற தீபத்தின் மேல் பூரணச்சந்திரன் உலாவுதலினுல் அந்தத் தீபத்தின் றலைமீது - எழாநின்ற புகையினுல் பொருந்திய இருளைப் புலவர்கள் - களங்கமென்று சொல்லுவார்கள்—எ-று. (உகூ)

தெரிவைமாதரார் பகற்பொழு தகற்றுவான்றெருவிற்
கருதியாழி யானிறைந்த தேரோடுதல் காண்பார் ... *
அர தனத்தினு லமைந்த மேலரமியத் தடைந்து ...*
பரிதி வானவன் குலவு தேரோடலும் பார்ப்பார்...*

(இ-ள்.) அந்தஅரி நகரத்தின் கண்ணுள்ள மாதர்கள் - பகற்காலத்தைக் கழிக்கும் பொருட்டுக் கருதி - தெருவி லோடாநின்ற சக்கரங்களா னிறைந்த தேரோடுதலைக் காண்பதுமன்றி இரத்தினங்களா லமைத்திருக்கின்ற - மேன் மாடங்களி லடைந்து - சூரியனுடைய பொருந்திய - தேரோடுதலையும் பார்ப்பார்கள்—எ-று. ()

வே று.

ஆன வப்பதி தன்னி லணைந்த வன்................ *
வானி யப்பர் மலரடி போற்றியே................ *
சான கித்திரு மாதொடு தாதொடு.............. *
தே னுகுத்த மலர்ப் பொழில் சேர்ந்தனன்.........*

(இ-ள்.) அவ்வாறு சிறப் புடையதான அந்த அரி நகரத்தை யடைந்தவனுகிய - இராமக் கடவுளானவன் - வானியப்ப ரென்னும் பரமசிவத்தின் தாமரை மலர்போன்ற - திருவடிகளைத் துதித்துச் சானகி யென்னுந் திருமாதோடு - மகரந்தப் பொடிகளையுந் தேனையுஞ் சிந்துகின்ற பூங்கா வனத்தை யடைந் தனன்—எ-று. (௩௧)

தூய மாதவிச் சூழலி னூடவன்.....................*
போ யிருந்தரன் பூசையைப் பண்ணி னுன்..........*

ஆய வானரத் தலைவரு மாங்குய..................*
ராய வானியா ருடி யியற்றினர்..................*

(இ-ள்.) பரிசுத்த மாகிய மாதவி வனத்தினிடத்து அந்த இராக வனானவன் போயிருந்து சிவ பூசை பண்ணினன் அப்பொழுது- அங்குடனாகிய வானரத் தலைவர்களும் அவ்விடத்து மேலாகிய வானியாற்றின் மூழ்கிச் சிவபூசை செய்தார்கள்—எ-று. (௫௨)

வே று.

அந்த வாற்றிடை மூழ்கின ரவரு முன் னருந்தக் ...*
கந்த மூலமா பலங்களுக் கெய்திய கவிக..........*
டந்த வோசையி னெழுச்சியாற்றய ரதன் சிறுவன் *
வந்த வாறினை யறிந்தனன் கடத்தினில் வந்தோன் ...*

(இ-ள்.) அந்த வானியாற் றினிடத்து மூழ்கின வர்களாகி அந்தச்சிராமன் முதலானவரும் - முன்னுதாகவுண்ண - கிழங்குகளும் வேருகளும் பழங்களுமாகிய இவைகளுக்குச் சென்ற குரங்குகள் செய்த வொலியினது தோற்றத்தால் தசரத குமாரனாகிய இராகவன் வந்ததைக் கும்பமுனிவ னறிந்தனன்—எ-று. (௫௩)

அவியி னோசை நீடன்ன தாசிரமத்தை யகன்று......*
செவியி னோசை சேர் மறையிளஞ் சிறுவருஞ் செறியப்
புவி யளந்த மாலிருந் தபாசறை யிடைப் புகுந்தான்*
கவியி னோசைக்கு வருவது தமிழ் வலோர் கடனால் *

(இ-ள்.) யாகஞ் செய்யு மோசை பெருகிய அத்தன்மை யதாகிய ஆசிரமத்தைவிட்டு நீங்கிச் சாஸ்த்திரக்கேள்விகளைப் பொருந்திய செவிகளையுடைய பார்ப்பனப் பிள்ளைகள் தன்னைச் சூழ்ந்து நெருங்க-உலகத்தை யோரடியாக வளந்த திருமாலாகிய விராகவ னெழுந்தருளியிருந்த ஆசிரமத்தி னிடத்து அகத்திய முனிவன் வந்தனன் கவிகளினோசைக்கு வருவது தமிழில் வல்லமையையுடையவர்க ளதுமுறைமை யாம்—எ-று. (௫௪)

வாயி லாளர் சென் றுணர்த்தின ரகத்தியன் வரவை *
நாயகன் மகிழ்ந் தணங்குட னெழுந்து முன்னடந்தே
யாய மாமுநி பதந்தொழு திறைஞ்சின னவனுந் ...*
தூய நீறளித் திருந்தன னிராகவன் சொல்லும்......*

(இ-ள்.) காவலாளிக ளுள்ளே சென்று அகத்திய முநிவன் வருதலைத் தெரிவித்தார் அதைக் கேட்ட இராமக் கடவுள் சந்தோஷித்து சீதாதேவியோடு மெழுந்து எதிர்கொண்டுபோய் அங்ஙனம் வருகின்றவராகிய முநிவருடைய திருவடிகளைத் தொழுது வணங்கினன் முநிவனும் பரிசுத்தமான திருநீறு கொடுத் தாசனத்தி லிருந்தனன் அப்பொழு திராகவன் சொல்லத் தொடங்கினான்—எ-று.

வே று.

தாதை தனை முதற் றுறந்து பரதனை தம்பியை விட் டுயிர்சுமந்து தாயரான, பேதை யரை யகன்றுமுயி ரெனக்கா யீந்த பெருங் கழுகின் றலைமகனைப் பிரிந்து போந்து, சீதை சிறையிருந்தனவே முதலா யிங்குச் செறிந்த விடரனைத்து முன்றன் சிவந்த கோலப், பாதமலர் தொழு தளவே யகன்ற தென்று பகர்ந்தனனங் கவற்கு முநி பகர்வதானான் .... *

(இ-ள்.) என்பிதாவை முன்னே விட்டு நீங்கி பரத னென்னும் பெயரை யுடையவ னான என் றம்பியை விட்டு யிரைத்தாங்கியும் தாய் மார்களான பேதையரை விட்டு நீங்கியும் தன்னுயிரை யென் பொருட்டாகக் கொடுத்த பெரிய கழுகின் றலைமகனாகிய சடாயுவைவிட்டுப் பிரிந்து வந்தும் சீதையானவள் சிறையிலே யிருந்தன முதலாக-இங்குச்சம்பவித்த நெருங்கிய துன்பம் யாவும் தம்முடைய சிவந்த அழகிய திருவடித்தாமரைகளை வணங்கின மாத்திரத்தில் நீங்கிவிட்ட தென்று சொன்னான் அப்பொழுது அவ்விராகவனுக்கு முநிவன் சொல்லத் தொடங்கினான்—எ-று. (௫௬)

உனக்கு வருந் துயருமில்லை யருக்கன் சோதி யொளிக்க வரு புயலு மிலலை புனதுபேரை, நினைக்கு மவர் கிளைக்கும் வருந் துயர்போ மீது நிற்கவினிப் புவி மடந்தை நெடுநா ளேந்திக், கனக்க முடிச் சுமையாறத் தரும மூர்த்திகளை யாறவமரரெலாங் கண்ணீர் மாற, மனித்தவுரு வெடுத்தனைகா ணெனவுங் கூறிமறைப் பொருளின் வான் பொருளை வழங்க லானான் .... *

(இ-ள்.) உனக்குண்டாகுந் துக்கமுமில்லை சூரிய னுடைய பிரகாசத்தை மறைக்கவருகின்ற மேகங்களுமில்லை உன்னுடைய திருநாமத்தைச் சிந்திக்கின்ற வர்க ளுடைய சுற்றத்திற்கும் உண்டாகின்ற துக்க நீங்கிப் போம் இதுநிற்க இப்பொழுது பூமிப்பிராட்டி

யானவள் நெடு நாளாகத் தனது முடியின் மீதுகனமாக ஏத்தியசு மை நீங்கி யிளைப்பாறவும் தருமதேவதை யானது களையாறவும்- தேவர்களெல்லாங் கண்ணீர்மாறி சந்தோஷிக்கவும் நீ மனிதவுருவ மெடுத்து வந்தனை இதனை நீயறிவாயாக வென்று சொல்லி வேதப் பொருளிலுள்ள மேலாகியபொருளைச் சொல்லத் தொடங்கினன்.

பதியுடனே பசுபாச மநாதி யாகும் பதிபரமா முயிர்பசு வாய் பாசமூன்று, மதி னுடைய வாணவமாய் வினைகளாகு மா யவிந்து மோகினியு மரனுமாகு, மதனி லொரு மலத்தர் விஞ் ஞா நகலராகு மவை யிரண்டோர் பிரளயத்தி லகலராகு, மிதர மலந் தானுமுள்ளோர் சகலராகு மிவை யொழிந்தார் பரமமுத் தி யெய்து வாரே,...................................... *

(இ-ள்.) பதியும் - பசுவும் - பாசமுமாகிய இம்மூன்றும் அநா திநித்தியமாம் - இவற்றுள் - பதியென்பது - பரமாகும் - பசுவெ ன்பது - உயிராகும் - பாசமென்பது - மூன்றுமலங்களாம் - அ ம்மூன்றிலொன்றாகிய ஆணவமென்றும் வினையென்றும் சொல்ல ப்படுகின்ற விந்துவினிடத்தில் மோகினியும் அரனும்உண்டாவா ர் - அப்பசுவில் - ஒருமலத்தையுடையவர் விஞ்ஞாநகலராவர்- இரண்டுமலத்தையுடையவர் - பிரளயாகலராவர் - மும்மலத்தையு டையவர்கள் - சகலராவர் - இம்மூன்றுமலமு மொழிந்தவர்கள்- மேலானமுத்தராவர்—எ-று. (ருஅ)

அர்ச்சனையா லகலுமல மகன்றுலீச னடியிணைக்கீ ழுயிரிரு க்கு மாதலாலே, பொற்சைல வடிவாகி யரனுர்தீர்த்தப் பொருப் பெனவே யிருப்பரந்தப் பொருப்பைப்போற்றி, முற்செய்வி னை யொழித்திடுவா யெனவேகும்ப முநியுரைக்க விராகவனு முநி வவந்த, நற்சைலந் தொழவெழுகென் றுரைத்துப்போற்ற நட வையிலே முநிவனிவை நவில்வதானுன் .... *

(இ-ள்.) சிவார்ச்சனைசெய்தலால் ஆணவாதிமலங்கள் விமோச னமாம் - அவை விமோசனமாகவே உயிர்க்கிழவன் பரமசிவத்தின் திருவடித்துணைக்க ணிராநிற்பன் ஆகையினுல் சிவபிரான் அழகுள் ள மலைவடிவாகி - தீர்த்தகிரியென் றெவருஞ்சொல்ல வீற்றிருப்ப ர் அம்மலையைப் போற்றுதல்செய்து பழையவினைகளை யொழித் திடக் கடவாயென்று அகத்தியமுநிவன் சொல்லக்கேட்டு ஸ்ரீராம

மூர்த்தி முநிவனே அந்த நன்மையுள்ள மலையைத்தொழுமாறு எழுந்தருள்வாயென்று பிரார்த்தித்துவணங்க அவ்வாறெழுந்து செல்லுநெறியில் முநிவனிவ்வாறு சொல்லத்தொடங்கினன்- எ-று.

வே று.

வாய்த்த ராகவ காதவெல்லை நடக்கிலிங்க வடிவமா ....*
தீர்த்த மால்வரை காணலாமது சித்திமுத்தி யளித்திடும் ....*
காத்து நிற்பவர் பூதநாத கணங்கள் சூலகபாலரா ....*
யேத்து கின்றவர் தேவர்சித்த ரியக்கர்சாரணர் முநிவரோ.........*

(இ-ள்.) மாட்சிமையையுடைய - இராகவ - இங்குநின்று - காத வழியளவு நடந்துசென்றால் - இலிங்கவடிவமாகவிருக்கும் பெரிய தீர்த்தகிரியைக்காணலாகும் - அக்கிரியானது தரிசித்தவர்களுக்கு அஷ்டமாசித்தியையும் - முத்தியையுந்தரும் - பூதநாதனாகிய பரமசிவனுடைய கணங்கள் சூலாயுதத்தையுங் கபாலத்தையுங் கைகளிலுடையவர்களாகிக் காத்துநிற்பவராவர் - தேவர்களும் - சித்தர்களும் - இயக்கர்களுஞ் சாரணர்களும் - முநிவர்களும் - அதைத் துதிக்கின்றவர்களாவர்—எ-று. (௩0)

ஆறு கால்கயம் வாவியோடை யளிக்குநீர்மல ரானவு..............*
மாறு கால்செறி தாருமாலதி யாதிநல்கிடு மலர்களு .... *
மாறு காலமு மொருவகைப்பட மலர்சொரிந்திடு மவையெலா *
மாறு காலமு முதவுநன்கனி யரியதாபத ரயிலவே..............*

(இ-ள்.) ஆறும் - வாய்க்காலும் - அகழும் - குளமும் - அருவியும் - ஆகிய விவைகள்தராநின்ற - நீர்மலர்களை மாலைமுதலிய வாறு காலங்களிலும் ஒருவகைப்படச்சொரிந்திடும் - இவைகளுமல்லாமல் சிறுசண்பகமுதலிய வண்டுகணெருங்கிய விருட்சங்களிலுண்டாகிய மலர்களையுங் கனிகளையுங் கார்காலமுதலிய ஆறுகாலங்களிலும் அரிய முநிவர்களுண்ணும்படி தராநிற்கும்—எ-று. ()

ஆரமற்றுள கற்பகத்திர ளமுதவல்லரி யரியகற்..............*
பூரதத்தெ லிக்குலம்பல போதிபாதிரி தாடிமங்.............*
காரகிற்குல முல்லைமல்லிகை கம்பி தும்பி களாவிளா ....*
வாரணத்திரள் சேந்துகந்த மதத்தினுலவை வளருமே............ *

(இ-ள்.) சந்தனமரங்களும் - மற்றுமுள்ள - கற்பகமரத் திரள்களும் - அமுதவல்லரியென்னு மரங்களும் - அருமையான - கற்பூர

மரங்களும் - நல்ல வாழைமரங்களும் - பலவாகிய - அரசமரங்களு ம் - பாதிரிமரங்களும் - தாதுமாதுளைமரங்களும் - கரியவகில்மர ங்களும் - முல்லையும் - மல்லிகையும் - கம்பியும் - தும்பியும் - களா வும் - விளாமரங்களுமாகிய இவைகளெல்லாம் யானைக்கூட்டங்கள் சிந்துகின்ற வாசனைபொருந்திய மதங்களினால் வளராநிற்கும். (சஉ)

வே று.

மானுடன் கலைசிவை மருவு நீர் மையா .... *
லான தத்துவங் களி னடைவு போல் வது .... *
கான மும் பாழியுஞ் சடையுங் காண லால் .... *
வானவ ரதுலனே மறைகள் போலு மே............ *

(இ-ள்.) மானும் கலையுஞ் சிவையும் பொருந்திய தன்மையால் உண்டாகிய தத்துவங்களி னடைவு போலு மிருக்கின்றது கானமு ம்பாழியும் - சடையும் தோன்றுகின்ற மையால் தேவர் களுக்குக் கடவு ளானவனே - வேதம் போலு மிருக்கின்றது—எ-று. (சங)

உத்தரந் திரிச்சடை யொளிரு நீர் மையால் .... *
அத்தனி யிலங்கைமா நகரம் போல் வது .... *
சித்திரச் சகுனியுஞ் சிகண்டியுஞ் செறிந் .... *
தத்தின புரியென வழகு காட்டு மால் .... *

(இ-ள்.) எதிர்மொழி சொல்லும் திரிச் சடை யென்பவள் விள ங்கு கின்ற தன்மையினால் - அந்த வொப்பற்ற விலங்கை மாநகர ம் போலு மிருக் கின்றது சித்திரமாகப் பேசுகின்ற சகுனியென் பவனும் - சிகண்டி யென்பவனும் அங்ஙன நெருங்கி அத்தின பு ரத்தைப் போல - அழகு காட்டு மென்றவாறு. உத்தரந் திரிச்ச டை யென்பது வடதிக்கில் - மூன்றுசடை யொளிரு மெனவும் சி த்திரச் சகுனியும் சிகண்டியு மென்பது - சித்திரம் போலும் பல நிறங் களையுடைய சகுனி யென்னும் பறவையும் மயிலும் மென ப் பொருள் கொள்க—எ-று. (சச)

வே று.

உச்சி மீதொரு கொடு முடிக்கிடை சிவமெனுங் குகையுள துகா *
ணிச்ச மானவ கண்ட பூரண னிரு மலன்சிவ நிர்க்குணன் ...... *
மெய்ச்சு கோததி யதி லிருந்து விரிந்த பாநு விளக்க மா...... *
யெச் சராசர முங் களிப்புற யோகமாகி யிருப்ப னே .... *

(இ-ள்.) இத்தத் தீர்த்தகிரியி னுச்சியி லுள்ள ஒரு கொடு முடியி னடுவில் சிவமென்னு மொரு குகையுண்டு அதில் நித்திய மான எல்லா வற்றினும் நிறைந் துள்ளவனும் நிரு மலனும் முத்தியைத் தருகின்றவனும் கடவுளும் ஆகிய - உண்மையான தருமக்கடலானவர் - எழுந்தருளி யிருந்து ஒளி விரிந்த சூரியப் பிரகாசமாகி எந்தச் சரா சரங்களுங் களிப்பைப் பொருந்த யோகமாகியிருப்பன்—எ-று. (சரு)

யோக மா யவனுறை கையா லதிலுள்ள தேவரு முநிவரும்... *
யேக மாகிய சித்தையா யநுபூதி யோக மிருப்பர்கா............*
ளுகையா லினி நீயும் வஞ்சியு மநுமனோடுன திளவலு ....*
மேகு மற்றுள தானை சேரி லிசைந்த யோக மெழுப்பு மே ... *

(இ-ள்.) அப்பரமசிவன் - யோகஞ்செய்திருக்கையால் - அத் தீர்த்தகிரியிலுள்ள - தேவர்களும் - முநிவர்களும் - அத்துவிதசிந்தையையுடையவர்களாய் அநுபூதியோகம் - இருப்பார்கள் - ஆகையால் - இப்பொழுது - நீயும் - சீதாதேவியும் - அநுமானும் - உன்றம்பியாகிய - இலக்குமணனும் - செல்லுங்கள் - மற்றுமுண்டானசேனைகள் - சென்று சேர்வார்களானால் பொருந்திய யோகத்தையெழுப்பும்—எ-று. (சகூ)

கந்த மூல பலங்கள் கண்டு கவிக் குலங்கள் கவர்ந் திடு ....*
மூந்து கின்ற மலாதி தன்னை யொழிக்கு மெச்சிலு குத்திடு......*
நிந்தை செய்திடு மறிவிலாமையி னினது பூசையு நியமமுஞ்...*
சிந்து நீரிடை மூழ்கு கின்றவர் சேறு பூசிய தாகுமே ....*

(இ-ள்.) குரங்குக்கூட்டங்கள் அறிவில்லாமையால் கந்தமூலப் பலாதிகளைக்கண்டு பறிக்கும் அபாநவாயுவினால் முற்படுகின்ற மலமுதலியவற்றை யவ்விடத்தொழிக்கும் எச்சிலைச்சொரிந்திடும் இகழ்ச்சிசெய்திடும் - அதனால் - நின்னுடையபூசையும் - நியமமும் - ஆற்றுநீரின் மூழ்குகின்றவர்கள் சேற்றைப் பூசிக்கொண்டதற் கொப்பாகக்கெடும்—எ-று. (சஎ)

சங்க ரற்கென வைத்தபாறயிர் தண்டுலாதிகள் சந்தனந்.........*
தொங்கல் பச்சிலை தயிலமன்னிய அப்புநன்புன லப்புநீள்.....*
செங்க னித்திரள் வவ்விநோது கண்டிருந்தவர் சேரவே.........*
யங்கி பற்றிய பங்கியோடமு தழுதிராக்கத ராகியே ....*

(இ-ள்.) சிவ பூசைக் கென்று வைத்த பால் - தயிர் - பச்சரிசி முதலிய சந்தநம் மலர்மாலை பத்திரம் எண்ணெய் பொருந்திய நெய் - நல்லதீர்த்தம் - நீண்ட சிவந்த கனித்திரள்கள் ஆகிய விவைக ளை வாரியெடுத்தவர்கள் அதனைப்பார்த் திருந்தவர்கள் ஒன்றுக நெ ருப்பினுலே பற்றப்பட்ட தலைமயிரோடு அழுதழுது இராக்கத ராகி—எ-று. (சஅ)

மேவி வெப்புறு பாலை புக்கு விரித்த சென்னி வெடிக்கவே......*
கோ வெனப்பல கூவியிப்படி கோடி கால.முழைப்பர்கா......*
ளுவு கைத்தவர் பூசனைக்கு முன் னமுது நன்கனி யள்ளியே ...*
நாவி லிட்டவர் ஞமலி யாகுவர் நகர சூகர மாவரோ ....*

(இ-ள்.) வெப்பம்பொருந்திய பாலைநிலத்திற்புகுந்து மயிரை விரித்திருக்கின்ற தலைவெடிக்கக்கோவென்று பலவாறுகூவி யிவ்வா று கோடிகாலம்வருந்துவார்கள். இடபவாகனத்தையூர்ந்த பரமசி வன்பூசைக்கு முன்னர் அமுதினையும் நல்ல கனிகளையும் எடுத்து நாவிலிட்டுண்டவர் நாயாகுவர் ஊர்ப்பன்றியாகுவர்—எ-று. ()

மாலயற்கரி யாரொழுத்திடு மாநியத்தொரு மாநில..............*
மேலழித்தவர் கும்பிபாக மலக்கிடங்கினில் வீழ்குவா .... *
ராலயத்தொரு சிலைபிடுங்கிய கற்றினோ ரளவற்றநாள்..........*
காலருத்திர சூலமுட்படு கழுவினுச்சியி லழிவரோ.............. *

(இ-ள்.) பிரமா விட்டுணுக் களாகிய இருவருக்கும் அரியவரா கவிருக்கும் பரமசிவனுக்கு அரசராலெழுதிக்கொடுத்த மானியநி லங்களில் ஒரு மாவளவையுடைய நிலத்தை மேலேறிவந்து அவரு க்குதவாமற் கெடுத்தவர் கும்பிபாகமென்னும் நரகக்குழியில் வீழ் வார்கள் அப்பரமசிவனது ஆலயங்களில் ஒருகல்லைப்பிடுங்கி யகற் றினோர் அளவற்றகாலம் உகாந்தகால வுருத்திரருடைய சூலத்தினு ம் முள்பொருந்திய கழுவினதுச்சியிலும் அழிவார்கள்—எ-று. ()

கோயில் சுற்று மலாதி விட்டவர் குஞ்சி கோதி முடித்தவர்......*
வாயி லெச்சிலு குத்த பேர்சில மாத ரோடு செருக்கி னோர்......*
பேயி னத்தொடு கூடிநத்திய பிணமெடுத்து நுகர்ந்துநூ...... *
ரூயிரத் தொருகற்ப காலமு மலகையா யலை வார்களே........ *

(இ-ள்.) கோயிலைச் சூழ மல மூத்திரங்களை விட்டவரும் - தலை மயிரைக் கோதி முடித்தவர்களும் வாயிலுள்ள எச்சிலை யுமிழ்ந்த வரும் சிலமாதர்க ளோடு மிகமகிழ்ச்சியோ டிருந்தவரும் கூட்ட மான பேய்க ளோடு கூடித் தாந்தாம் விரும்பிய பிணங்களை யெ டுத்துண்டு ஒரு நூறுயிர கற்பகாலம் பேய்களாகி யலைவார்கள்.

ஆத நாதிகண் மீதிருந்தவ ரங்கை யானட மாடுவார் .... *
சூத மாடுவர் பூதமாகுவர் கொடிய தீமொழி சொன்னபே ... *
ரேத மாகிய வூமராகுவ ரெண்ணெய் பூசியிருந்த பேர் ...... *
வாத மாகுவர் சீத வார்புனல் மன்னு கோசலை மன்னனே ... *

(இ-ள்.) குளிர்ச்சி பொருந்திய நீண்ட நதிப்புனல் நிலைபெற் றோடாநின்ற கோசல தேசத் தரசன் குமாரி கௌசலை யம்ம ன் குமார னாகிய ஸ்ரீராமனே - ஆலயத்தினுள் ஆதநாதிகண் மீ திருந்தவர்களும் அங்கையால்நடமாடு கின்றவர்களும் சூதமாடு கின்றவர்களும் பூதங்களாகப் பிறப்பார்கள் கொடுமை யான தீய மொழிகளைச் சொன்னவர்கள் துன்பத்தைத் தராநின்ற ஊமர்க ளாகப் பிறப்பார்கள் தலைக் கெண்ணெ யிட்டுக்கொண் டிருந்தவ ர் வாதநோய் கொள்ளுவர்—எ-று. (௩உ)

வாகனத் தொடு கோயில் புக்கு வணங்கி நின்றவர் காலிலா...... *
ராகி நிற்பர் கண் மேனியாடை யழுக்கி னோடு புகுந்த பேர் ... *
வேக முற்றிய நீச ராகுவர் வேளை யன்றிய வேளைசென்......... *
றேகை யுற்று வணங்கி னோர்விழி யூனமாகுவ ருலகிலே......... *

(இ-ள்.) ஆலயங்களில் வாகனங்க ளோடு புகுந்து வணங்கின வ ர்கள் காலிலாத வர்க ளாகுவர் - உடலும் ஆடையும் - அழுக்கோட சுத்தமாகப்புகுந்தவர் கொடுமை முதிர்ந்த சண்டாள ராகப் பிற ப்பர் - காலமல்லாத அகாலங்களிற்சென்று களித்து வணங்கினவர் கள் இவ்வுலகத்தில் கண்ணூன மாவார்கள்—எ-று. (௩௩)

ஆதலா லவர் நிற்க நால்வரு மாகவேகு மவத்திலே............... *
போது போக விடாமலேசிவ பூசை பண்ணென வோதினன்... *
ஓத வேலை குடித்த மாமுநி யோதவே தினா கட்டினன்......... *
நீதியாகிய கச்சி சீவின யரிபுரத்தி லிருத்தி னன் .... *

(இ-ள்.) ஆகையினாலே அவ்வானர சேனைகள் இவ்விடத்தி லிருக்க நீங்க ணால்வருமாகச் செல்லுங்கள் - வீணுகக் காலத்தைக் கழிக்காமல் சிவபூசை பண்ணென்று குளிர்ந்த கடலைக் குடித்த - அகத்தியமுநிவன் சொன்னான் - அவ்வாறு சொல்ல - கடலை யணைகட்டினவனாகிய ஸ்ரீராம னானவன் நீதியையுடையவனாகிய சுக்கிரீவனை அரி புரமென்னு நகரத்தி லிருக்கச்செய்தான்—எ-று. (ருச)

எழுப தாகிய வெள்ள வானர மியாவு நிற்க விராகவன்......... *
மொழிகு வான்வரை நாம மெத்தனை வடிவமெப்படி முநிவனே *
அழிவிலாதருள் சித்தி யெத்தனை தீர்த்த மெத்தனை யதனிலே *
விழு மிதாகிய காவலோ ரெவர் கூறு கென்ன விளம்புவான் ... *

(இ-ள்.) சுக்கிரீவனோடு எழுபது வெள்ள வானர சேனைகளும் அரி புரத்தினிற்க - இராகவன் சொல்லத்தொடங்கினான் ஓ அகத்திய முநிவனே இந்தத் தீர்த்தகிரிக்கு எத்தனை திருநாமம் - உருவம் எப்படி யிருக்கும் - அழிவில்லாம லிருக்க வருளிய சித்தி யெத்தனை - இதிலுள்ள தீர்த்தமெத்தனை - அதனில் சிறப்பை யுடையவராகிய காவ லாளிகள் யாவர் சொல்லுவா யென்று கேட்க - முநிவன் சொல்லத் தொடங்கினான்—எ-று. (ருரு)

வே று.

கருது பஞ்ச பூதகிரி சிவசைலந் தீர்த்தமலை சங்காகூடம், விரவு புனற்சடிலஞ் சித்தணிவாச நிரந்தரமே வியாதிநாசந், துரித ஹரந் தவசாரஞ் சோகஹரம் ராமேட்டஞ் சுவாமி சிங்க, மருவு மிந்தப் பதின் மூன்று பெயரு மந்த மலைக் கிமையோர் வகுத்த பேரோ.. *

(இ-ள்.) யாவருஞ் சிந்திக்கத்தக்க - பஞ்சபூதகிரியென்றும் - சிவசைலமென்றும் - தீர்த்தகிரியென்றும் - சங்கா கூடமென்றும் - விரவிய புனற்சடில மென்றும் - சித்தணி வாசமென்றும் - நிரந்தரமென்றும் - வியாதி நாசமென்றும் - துரிதஹரமென்றும் - தவசாரமென்றும் - சோக ஹரமென்றும் - இராமேட்ட மென்றும் - சுவாமி சிங்க மென்றும் - பொருந்திய இந்தப் பதின் மூன்று திருநாமமும் அந்தத் தீர்த்தகிரிக்குத் தேவர்கள் வகுத்த பெயராகும்—எ-று.

ஆறுசடை மிசை யணிந்த சிவ னதன்மே லேழுசடை யணியிற் ரேன்றும், வீறுவட திசை மூன்று சடையாகுந் தென்திசை

நால் வேணியாகு, மாறில் முழு மதி வடிவாய் நடுநிமிர்ந்து கோ
முகை போல் வடபாற் காட்டிக், கூறரிய பெரிய லிங்க வடிவாகி
யிருக்குமந்தக் குவடு தானே..*

(இ-ள்.) சடையின் மீது கங்கையை யணிந்த பரமசிவன் வடி
வாகிய அத் தீர்த்தகிரியின்மேல் எழு சடைகள் வரிசையாகத் தோ
ன்றும் விருதலையுடைய வடதிசையில் மூன்றுசடைகள்தோன்றும்
தென்திசையில் நாலுசடைகள் தோன்றும் - மாறு படுதலில்லாத-
நிறைமதி வடிவாகி நடுவே நிமிர்ந்து கோமுகம்போல - வடதுபு
றத்திற் காட்டிச் சொல்லு தற்கரிய பெரிய லிலிங்க வடிவாகி யிரு
க்கும் - அந்தத் தீர்த்தமலை—எ-று. (௩எ)

வே று.

மருந் தினையார் கரகமல மலர் குவிய முல்லை தரு *
மருந் ததியா ரருந் துணையா ரருந் தவத்திற் பெருந்தவரா ... *
யிருந் தருளும் வசிட்ட முநி யெமக் குரைத்த படி யுமக்குத்...*
திருந்த வினி மொழிந் திடுவேன் தீர்த்த மலைச் சிறப் பினையே *

(இ-ள்.) தேவா மிர்தத்தை யொத்த மாதர்கள் தங்கள் கைக ளா
கிய தாமரை மலரைக் குவித்து வணங்க - அவர்களுக்குக் கற்பை
த் தருகின்ற அருந்ததியாரென்னும் பத்தினிக்கு அரிய துணைவ
ராகிய அரிய தவங்களி லெல்லாம் பெரிய தவத்தினை யுடையவ ரா
க விருந் தருளுகின்ற வசிட்ட முநிவரானவர் எமக் குபதேசித்த
படி - உமக்குத் திருத்தமாக இப்பொழுது உப தேசிப்பன் அத்தீ
ர்த்தகிரிச் சிறப்பினை—எ-று. (௩அ)

அம்மலைபி னடிபுவியா மதன் மேலே புனலுருவாஞ் ....*
செம்மை பெறுங் கனலதன் மேற் செறிந் திடுங்கா லதன் மேலே*
கொம்மை நெடுங் கொடு முடியின் குகைக ளெல்லா மாகாய...*
மிம் முறையா லது சிவமென் றிரண்டறவிற் றிருந்திடுமே.....*

(இ-ள்.) அந்தத் தீர்த்த கிரியினது அடியானது பிரிதிவியாகும்
அதன் மேலிடமானது அப் புருவமாகும் - அதன் மேலிட மான
து - செம்மை நிறம் பெற்ற தேயு வுருவமாகும் அதன் மேலிட
மானது வாயு வுருவ மாகும் - அதன் மேலிடமாகிய வட்ட மான
நெடிய கொடு முடியின் கண்ணுள்ள குகைகளெல்லாம் ஆகாய

மாகும் - இந்த முறைமையினாலே அந்த மலையானது - சிவசொ ரூபமென்று சொல்ல இரண்டற்று வீற்றுமிருந்திடும்—எ-று.()

அடிவனா பொன் னிறஞ் சதுர மயன் கடவுணி விர்த்தி கலை ... *
படிக நிறம் பிறை வடிவம் பரந் தாமன் பிரதிட்டை கலை ...... *
நடுவ ருணந் திரிகோண முருத் திரனர் நவின்ற வித்தை........ *
வடிவறு கோணங் கருமை மயேசுர னர் சாந்தி கலை............ *

(இ-ள்.) அடி வனாயானது பொன்னிறம் - சதுர வடிவம் அதற்குக்கடவுள் பிரமா அது நிவிர்த்திகலையாகும் - அதற்குமேலிடம் படிக நிறம் பிறைவடிவம் அதற்குக் கடவுள் திருமால் அது பிரதிட்டை கலையாகும் - நடுவிடம் செம்மை நிறம் திரிகோணவடிவம் அதற்குக் கடவுள் உருத்திரனர் அது வித்தியா கலையாகும் - அதற்கு மேலிடம் கருமை நிறம் அறுகோண வடிவம் அதற்குக் கடவுள் மயேஸ்வரனர் அது சாந்தி கலையாகும்—எ-று. (சுo)

அத்திரியின் சிகை தவள மம்புலி போல் வடிவுசிவன்........... *
ஒத்துமுடிக் கலையாகு முருவமெழுத் தைந்தடைவே............ *
தத்துவமு மூர்த்திகளுந் தனித்தனியவ் வடைவாகும்............ *
பத்திசெயு மவர்களைந்து பாதகமும் பறித்திடுமே.............. *

(இ-ள்.) அந்தத் தீர்த்தகிரியின் முடியினிடம் - தவளநிறம்- சந்திரன்போலும் வடிவம் - அதற்குக்கடவுள் - சிவன் - அது சாந்தியா தீதகலையாகும் - உருவம் - பஞ்சாட்சரத்தின் முறையாகவேயிருக்கும் - தத்துவங்களு மூர்த்திகளுந் தனித்தனியாக வம்முறைமையாகவேயிருக்கும் - இதனைப் பத்திசெய்பவர்கள் செய்த பஞ்ச பாதகங்களையும் - அது - நீக்கிவிடும்—எ-று. (சுக)

அட்டசித்தி யுதவுமலை யநேகமுள வாஞலு.................. *
மிட்டசித்தி யுதவுமிட மிதுபோல விலையெவர்க்கும்........... *
கிட்டரிய காயசித்தி கிரியையுடன் யோகசித்தி.............. *
மட்டரிய ஞானசித்தி மற்றெவையும் பெறலாமே............... *

(இ-ள்.) அட்டசித்திகளையுங் கொடுக்கத்தக்க மலையநேகமிருக்கின்றன - ஆஞலும் - அவரவர்க ளெண்ணியபடி இஷ்டசித்திகளைக் கொடுக்கின்றவிடம் இந்தமலையைப்போல வில்லை - யாவருக்

ருங் கிடைத்தற்கரிய காயசித்தியையும் - கிரியாபலத்தோடு யோகசித்தியையும் அளவற்ற ஞானசித்தியையும் - மற்றும் வேண்டிய வெல்லாவற்றையும் பெறலாம்—எ-று. (௬௨)

மேருவினிற் கைலையினின் மிக்ககந்த மாதனத்திற் .... *
சீரிமயத் தனிற்பொதியிற் றேவர்சித்தர் கணநாதர் .... *
பேருரகர் கந்தருவர் முநிவர்சித்தி பெறுவரித்தப் .... *
பாருலகி லிதுபோல வினைத்தினையும் பலியாதே .... *

(இ-ள்.) மேருமலையிலும் - கைலமலையிலும் - பெருமை பொருந்திய - கந்த மாதனமென்னும் - மலையிலும் சிறப்புப் பொருந்திய - இமயமலையிலும் - பொதியமலையிலும் - தேவர்களும் சித்தர்களும் - கணநாதர்களும் - பெரிய நாகலோகத்தாரும் - கந்தருவர்களும் - முநிவர்களும் - அவரவர்கள்கருதிய ஒவ்வொருசித்திகளையே பெறுவார்கள் - இந்த நிலவுலகத்தில் - இது போல விரும்பிய எல்லாசித்திகளையுந் தரமாட்டாது—எ-று. ()

துப்புரவு பகிர்ந் துண்பான் பெறும் பேறுஞ் சுடர்முடிமே... *
லப் பணிவார் சடையவரை யாதரிப்பான் பெறுங் கதியும்...... *
யிப் புவிமேற் கற்புடையா ளிருங் கணவன் பெறுங் கதியுஞ் ... *
செப்பு மிதற் கெளிதி தனிற் சித்தி யென்ன வரிதாமே......... *

(இ-ள்.) தமக்குக் கிடைத்த வுணவுகளை விருந் தினர்க்குப் பகுத்திட் டுண்பவன் பெறுங் கதியும் பிரகாசம் பொருந்திய முடியின் மீது கங்கையை யணிந்த நீண்ட சடையினை யுடைய பரமசிவத்தை பூசிப்பவன் அடையுங் கதியும் இந்நில வுலகத்தில் - கற்பினை யுடைய மாதினது - பெருமை பொருந்திய கணவன் பெறுங் கதியும் சொலலா நின்ற இத்தீர்த்த கிரியிற் பெறுங் கதிக்கு எளிதாகும் இதனிற் பெறுஞ் சித்தியை யெண்ணுதற் கரிதாம்—எ-று. ()

அனைய மலை யடைந்து சித்தி யடைந்தவ ரிவ்வள வுரைக்க...... *
மனு குல நாயக மணியே மலரவற்கு முடியா தால்............ *
முனி வசுடும் வசிட்ட ருக்கு மோக மற்ற யோக சித்தி......... *
கனவு தர வாதையற்ற காயசித்தி யெனக் கதிலே .... *

(இ-ள்.) மநுவினது குலத்திற் பிறந்த தலைமையான மாணிக்கமே அத்தன்மை யதான தீர்த்த கிரியை யடைந்து தவஞ்செய்து சித்தி பெற்றவர்களே இவ்வளவின ரென்றுசொல்ல பிரமனாலு முடியாது கோபநீங்கிய வசிட்ட முநிவனுக்கு ஆசை யறுதற்குக் காரணமான யோக சித்தியும் எனக்குக் கனமான வுதர வாதையற்ற காயசித்தியும் கிடைத்தது அந்தத் தீர்த்த கிரியில்—எ-று. (௬௫)

முதலாவது

தண்டகவனச்சருக்கம்

முற்றிற்று.

ஆக செய்யுள் - பாயிரமுள்பட - ௭௮.



சிவமயம்.

திர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.

இரண்டாவது
வசிட்டதீர்த்தச்சருக்கம்.

ஆறு சூடு சடையவற் களித்த பூசை வலியினால்..... *
விறகாதி மைந்தன் முன்னம் வேள்வி மந்திரங்க ளான்
மாறு கூறியே வசிட்டர் மைந்த ராகு நெறி யினார் *
நூறு பேரும் வேறதாக் நொடியில் வீழ நூறினான் *

(இ-ள்.) கங்கையைத் தரித்த சடை முடியினை யுடைய பரமசிவனைப் பூசித்த வல்லமையி னாலே பெருமை பெற்ற விசுவாமித்திர முநிவன் முன்னர் யாகஞ் செய்யுங் காலத்தில் உச்சரிக்கும் மந்திரங்களி னாலே மாறுகொளச் சொல்லி வசிட்டர் புத்திரர்களாகிய நன்னெறியை யுடைய நூறு பேரையும் ஒருநொடியில் வேறுபட்டுச் சாம்பராகி வீழ அழித்தனன்—எ-று. (க)

வசிட்டர் தம்மை மீளவுந் தன் மந்திரக் கயிற் றினை .... *
வசிட்ட மா யிறுக்கி வெய்ய வாபி சார வங்கி யைப் .... *
பெறிட்டடை செய்த தற்குளே பிடித் திறுக்கி யிவ னுடற்.......... *
குசட்டி மென் றருந்து கென்று கோசிகன் கொடுத்தனன்...... *

(இ-ள்.) விசுவா மித்திர முநிவன் பின்னும் வதிட்ட முநிவனைத் தன்னுடைய மந்திர மாகிய கயிற்றினல் அதிட்ட மாக விறுக்கிக் கட்டி வெப்பம் பொருந்திய வாபிசார மென்னும் அக்கினியைப் பிரதிட்டைசெய்து அவ் வக்கினிகுள்ளே வதிட்டரைப் பிடித்திறுக்கி இவன துடலை யுன்பல்லினுற் குதட்டி மென்று உண்ணக்கடவாயென்று கொடுத்தனன்—எ-று. (உ)

தேவரோடு முநிவர் கண்டு சிந்தை நொந் திரங்கினர் .... *
காவு மாவு மியாவு நொந்து கண்ணி னீரு குத்துவான்......... *
மூவர் கூடி யொரு வனை முநியு மொன்று மொழி கிலா ... *
தோவி யங்கள் போல வெம்மை யுள்ளமற் றிருந்தனன் ...... *

(இ-ள்.) இதனைத் தேவர்களு முநிவர்களுங் கண்டு மநம் நொந்து இரங்கினர்கள் சோலைகளும் மிருகங்களும் மற்று முள்ள எல்லாமும் வருந்திக் கண்களி னின்றும் நீரைச் சிந்தினர் மேலான திரி மூர்த்திகளுங் கூடி யொருவனுக வந்த வதிட்ட முநிவனும் இதைக்குறித் தொன்றுஞ் சொல்லாத வனுகிப் பிரதமைகள் போல உள்ளத்திற் கோப மில்லா திருந்தனன்—எ-று. (௩)

கோசி கற்கு வெம்மையே கொடுக்க வல்ல ராயினும் .... *
பாச மற்ற சாபவேர் பறிக்க வல்லராயினு......................... *
நாச மற்ற பொறுமை கொண்டு நண்ணினர் வதிட்டனர் ... *
காசினிக்கு ளில்லையே கொல் பொறுமை யொத்த கவசமே... *

(இ-ள்.) வதிட்ட முநிவ ரானவர் விசுவா மித்திர னுக்குக் கொடுமையைச்செய்ய வல்லவராயினும் அன்பற்ற சாபத்தின் மூலத்தைப் பறித்துவிட வல்லவ ராயினும் அழிவில்லாத பொறுமையை மேற்கொண் டிருந்தனர் நில வுலகத்தில் பொறுமைக் கொப்பாகிய கவசம் ஒருவருக்கு மில்லை—எ-று. (௪)

அறிவு பெற்ற பயனுரைக்கி லறிவிலார்க ளெதிரிலாச் .... *
சிறுமை யுற்ற கொடுமை செய்த செயலினைப்!பொறுப்பதே *
மறுவில் கொற்ற நிலமகட்கு மலை கட்கள் பாரமோ .... *
பொறுமை யற்ற சிறியரே பொறுப் பிலாத பாரமே .... *

(இ-ள்.) ஒருவருக்கு அறிவினலே பெற்ற பிரயோசனத்தைச் சொல்லுங்கால் அறிவில்லாத மூடர்கள் - எதிரில்லாத சிறுமை

பொருந்திய பொல்லாங்கு செய்த செயலினை - பொறுத்துக் கொள்வதேயாம். குற்ற மில்லாத வெற்றி யினையுடைய பூமிதே விக்கு மலைகளும் - கடல்களும் ஒருபார மாகுமோ - பொறுமை யில்லாத சிறியவரே பொறுக்கத் தகாத பாரம்—எ-று. (௫)

என்று கொண்டு தன் றவத்தை யினிய மைந்தர் சோகமுந் ... *
துன்று காதி மைந்த னிட்ட துயரு முள்ளழிக் கையா .... *
லின்று போன தென்று கூடு மென்று தீர்த்த கிரியிலே......... *
சென்று மேவி நம்பர் பூசை செய்து சோக மாறினர்......... *

(இ-ள்.) இவ் விதமாகக் கருதித் தவத்தைக் கைக்கொண்டு தன்னுடைய - இனிய புத்திரர்களா லுண்டாகிய சோகமும் நெருங்கி விசுவா மித்திரன் செய்த துன்பமும் தன் னுள்ளத்தை வருத்துகையால் இன்று நம்மை விட்டுப் போன வைகளெல்லாம் - என்றைக்குக் கைகூடு மென்று தீர்த்த கிரியி னிடத்துச் சென்றிருந்து பரம சிவனைப் பூசித்துச் சோக மாறினர்—எ-று. (௬)

வே று.

தவ தீர்த்தப் பணி வதிட்டர் தமக் கரனர் வரை யுள்ளே......... *
சிவ தீர்த்த மெனுங் கங்கை யுதவுதலு மதின் மூழ்கி .... *
நவ தீர்த்தப் பல னடைந்து நாதாந்தத் துச்சியின் மேற்...... *
பவ தீர்த்த மருந்துதவும் பராபரனைக் கண் டிருந்தார்......... *


(இ-ள்.) பரிசுத்தமான தவப்பணி செய்கின்ற வதிட்ட முநிவருக்குப் பரமசிவம் தீர்த்த கிரியினிடத்துச் சிவ தீர்த்தமென்று சொல்லுகின்ற கங்கையை யுதவுதலும் அத்தீர்த்தத்தின் மூழ்கி நவதீர்த்தங்களின் மூழ்கின பலனை யடைந்து நாதாந்தத் துச்சியிலிருந்து பிறவித் துன்பத்தை நீக்கிய மருந்தை யுதவுகின்ற பராபரனைத் தரிசித்துக் கொண் டிருந்தார்—எ-று. (௭)

இரண்டாவது

வசிட்டதீர்த்தச்சருக்கம்.

முற்றிற்று.

ஆ சருக்கம் - ௨ - க்கு - செய்யுள் - அ௰.



சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.

மூன்றாவது

அகத்தியதீர்த்தச்சருக்கம்.

அருந் ததிக்கிறை பெறுங்கதி யுரைத்தன மவர்தா... *
மிருந்த திக்குநா மடைந்ததும் வில்வல னமக்கு... *
விருந் தளித்தது முதரநோ யாக்கிய வினைக்கு...... *
மருந்து பெற்றது முரைக்குதுங் கோசலை மன்னா. *

(இ-ள்.) அருந்ததியென்னு பத்தினிக்கு நாயகனாகிய வசிட்டமுனிவர்பெற்ற கதியை இப்பொழுது சொன்னோம் அவ்வசிட்டமுனிவர் தவஞ்செய்திருந்த திக்கினை நாமடைந்ததும் அவ்வழியில் வில்வலனென்னு மரக்கன் நமக்கு விருந்துசெய்ததும் அதனால் வயிற்றுநோயுண்டாகியதும் அவ்வினைக்கு மருந்துபெற்றதும் கௌசலாதேவி புத்திரனாகிய அரசனே சொல்லுவோம் கேட்பாயாக.()

மருவு தண்டக வனமெனு மதனிடை வாழ்வோர்............. *
பிரமகத்திசெய் தல துணை வருந்திடாப் பெரியோர் .... *
முரணி ராவணன் மூசியென் றுரைத்திடு மூவ............... *
ரொருவ ராயினா னெனத்தனித் தறுவலி யுடையோர்............ *

(இ-ள்.) பொருந்திய தண்டகவனமென்கிற அந்த வாரணியத்தில் வாழ்கின்றவர்களாவார். நாடோறு மவர்கள் பிரமகத்திசெய்த ல்ல நினைவுகளையுள்ளுத பெரியோர்களாவார் முரணியென்றும் இராவணனென்றும் மூசியென்றுஞ் சொல்லுகின்ற மூன்றரக்கர்களும் ஒருவராக வந்தாரென்று சொல்லும்படியான ஒப்பற்ற விற்போரில் வல்லமையையுடையோராவர்—எ-று. (உ)

இல் வலப்பெயர்க் கொடியன் வாதாவியென் றிருவர்...........*
பல் வனப்புன லெனக்கடல் கடந்திடும் பதத்தார்...............*
கொல்வ மிக்கணத் தமரரை யெனப்பல கூவி...............*
வில் வலித்துவெஞ் சமர்த்தொழி லவருடன் விளைத்தார்.........*

(இ-ள்.) கொடியவ னாகிய இல்வல னென்னும் பெயரினை யுடைய வனும் வாதாவி யென்னும் பெயரினை யுடையவனு மாகிய இருவரும் பலவாகிய வழகிய புனல் செல்வது போல கடலைத் தாண்டுகின்ற காலையுடையார் தேவர்களை இக்கணத்தில் கொல்லுவோ மென்று பலதர மவர்களைக் கூவி அவர்க ளோடு வில்லை வளைத்துக் கொடிய போர்த் தொழிலைச் செய்தனர்—எ-று. வில்வல னென்பது இல்வலனென்மரியிஇற்று. (௩)

பாவ மேலிடத் தரும மேலிடு மெனும் பரிசே...............*
மேவு தானவ ரிறந்தன ரந்த நாள் வெருவி...............*
யாவி யானது கழிந்து வாதாவியு மழிந்தான்...............*
தேவ ரானவர் களித்தனர் தமதிடஞ் சேர்ந்தார்...............*

(இ-ள்.) பாவ மானது மேலிட்டு வருமாயின் தரும மானது சகியாது அதற்கு மேலிட்டு வருமென்னுந் தன்மையைப் போல யுத்தத்திற்கு வலிய வந்த அரக்கர் யாவரு மிறந்தனர் அந்நாளில் வாதாவி யென்பவனும் பயந்து தன்னுயி ரிழந்து இறந்தனன் அதுகண்டு தேவர்கள் களித்தனராகித் தமதுலகத்திற் சேர்ந்தார் கள்—எ-று. (௪)

இளவல் மாண்ட பின் றனித்து வீழ்ந் தழுதவ னிரங்கி.........*
யள விலாப் பெருந் துயர்க் கடற் புகுந்து நெஞ்சழுங்கித்......*
தளரும் வில்வலன் மற்றை நாட் கவிமகன் சாண...............*
முளரி மேற் பனித் தொருவனே நின்றனன் முன்னர் ......*

(இ-ள்.) தம்பி யாகிய வாதாபி யிறந்த பின் வில்வலன் றனியா கிப் பூமியில்வீழ்ந்து அழுதிரக்க முற்று அளவில்லாத பெரிய து ன்பக் கடலில் வீழ்ந்து மநம் வருந்தித் தளர்ந்து மற்றைநாள் சு க்கிரனது தாமரை மலர் போன்ற திருவடியிற் பணிந்து எதிராக த்தா னொருவனாக நின்றனன்—எ-று. (௫)

கட் டவிழ்ந்த தார் வில்வலா கனகவான் கதிரும் .... *
வட்ட வெண்மதி யாமென வேயுடன் மன்னி............... *
யிட்ட மான வுன் னிளவலை நம தவைக் கின்று............... *
விட்டு வந்ததென் பகரென விளம்பி னான் வெள்ளி............... *

(இ-ள்.) முறுக் குடைந்த மலர் மாலைகளைத் தரித்த வில்வல னே பொன்போன்ற பெருமை பொருந்திய கிரணங்களும் வட் டமான வெள்ளிய சந்திரனு மாமென்று சொல்லும் படியாகவே யுடலமானவை பொருந்திப் பிரிய மானவுன் தம்பி யாகிய வாதா பியைவிட்டு இன்று நஞ் சபைக்கு வந்த காரண மென்ன சொல் லக்கடவாயென்று சுக்கிரன் கேட்டான்—எ-று. (௬)

அண்ணலே யென திளவலு நானுமா யமர............... *
ரெண்ணி லாப் பெருஞ் சமர்க் களம் புகுதலு மிளவ............... *
லுண்ணிலாவு தன்னுயிர் விடுத்தன னென வுரைத்துக் .... *
கண்ணி னீரினாற் கழுவி னான் கவிமகன் காலை .... *

(இ-ள்.) ஐயனே என் றம்பியாகிய வாதாபியும் நானுமாகி அ மரர்களுடைய அளவற்ற சேனைக ளோடு யுத்தகளத்திற் புகுந்த போது - என்தம்பி உள்ளே விளங்காநின்ற தன்னுயிரை விட்டன னென் றுரைத்துத் தன்கண்களினின்று மோடி வாராநின்ற நீரினால் சுக்கிரனது காலைக்கழுவினான்—எ-று. (௭)

அன்பு கண்டுவந் திளவலைத் தருகுது மவன்றன்............... *
னென்பு கொண்டுவந் திடு கெனக் கவிமக னியம்பப்............... *
பின்பு கண்டு வந் தில்வல னதனிடைப் போந்து .... *
துன்பு கொண்டு செங்கள மெலாந் தேடினான் றூற்றி............... *

(இ-ள்.) வில்வலனது அன்பைக் கண்டு சந்தோஷித்து உன் த ம்பியை யெழுப்பித் தருகிறோம் அவனுடைய எலும்பைக் கொ ண்டுவந்து தரக்கடவாயென்று சுக்கிராச்சாரி சொல்லப்பின்பு அ

வாதவியினைக்கண்டு வில்வலன் திரும்பிவந்து போர்க் களத்தில் தயரமுற்றுச் சிவந்த போர்க்களமெல்லாம் பிணங்களையெடுத்துத் துற்றித் தேடினான்—எ-று. (அ)

கண்டி லாமையா லெவை யருந்தின வெனக் கனைத் தான்.....*
உண்ட தோ நரியென வதன் பின்னெலா முழன் ருன்........*
பண்டை ஞாளியின் குட ரெலாம் போரெனப் படுத்தான் ... *
மண்டு சேனத்தின் வயி றெலாங் கிழித் தனன் வாரி..........*

(இ-ள்.) வாதாபியி னுடலினைக் காணு மையா லிக்களத்தில்வாதாபியை யெந்த மிருகங்க ளுண்டனவோ வென்று அழுதான் நரிக ளுண்டனவோவென்று அதன் பின்னெலாமோடித் திரிந்தான் பண்டைய தாகிய நாய்களின் குட ரெலாம் பிடுங்கிப் போர் போலப் போட்டான் அங்ஙன நெருங்கிய பருந்து கனைவாரிய தன் வயிறெலாம் கிழித்துப்பார்த்தனன்—எ-று. (கூ)

வறிதின் வில்வலன் மீண்டுதன் குரவனை வணங்கி ....*
யறிவு நூனெறி யறம் பொருள் பெருக்கிய வரசர்க்...........*
கிறுதி காண்கினுந் தந்தை தாய் குரவரை யிகழ்ந் தோர்க் ... *
குறுதி காண்கினு மென்பு கண்டில மென வுரைத் தான் ...... *

(இ-ள்.) வில்வல னனவன் போர்க் களத்தி னின்றுந் திரும்பி யன் பின்றி தனது ஆசா னுகிய சுக்கிரனை வணங்கி - அறிவைத்தரு நூலின் வழியாக அறத் தினையும் பொருளினையும் வளர்த்த அரசர்களுக்குத் தீமை யுண்டாயினும் தந்தையையுந் தாயையும் ஆசாரியரையும் இகழ்ந்தவர்களுக்கு நன்மை யுண்டாயினும் எலும்பினைக் காண மாட்டோ மென்று சொன்னான்—எ-று. (௰)

வெள்ளி திங்க ணேர் முகத்தின னகை நிலா விரியக்...........*
கொள்ளு மன்பின னுயிர்தரு மந்திரங் கூறி ....*
யுள்ள மன்புறு தம்பி மட்டுதவு மிவ் வுறுதி...................*
யென் னிடாது செவி திருமொழித் தழைக் கென விசைத் தான்*

(இ-ள்.) அப்பொழுது சுக்கிரனனவன் பூரணச்சந்திரன்போலு முகத்தினனுவிப் புன்முறுவலுடனே அன்புகொண்டு வில்வலனுக்கு உயிரைக்கொடுக்கு மந்திரத்தை யுபதேசித்து உன்னிடத்தன்பு

ள்ள தம்பிமட்டு மிம்மந்திரமுதவுறும் இதனையிகழாது கொண்டு சென்று மந்திரத்தையுச்சரித் தழைக்கக்கடவாயென்றுசொன்னான்.

அந்தமந்திர மிகமொழிந் தவன்களத் தணுகி........................ *
கந்தவேளினும் விஜயனே யிமையவர் கடுவே........................ *
வுய்ந்திடேனுனைப் பிரிந்துநா னுயிர்சுமந் துழல்கேன்........... *
மைந்தனேயென திளவலேகடிதுநீ வாராய்........................... *

(இ-ள்.) வில்வல னனவன் போர்க்களத்தை யடைந்து சுக்கிரனு பதேசிக்கப்பெற்ற அந்த மந்திரத்தை மிகுதியாக வுச்சரித்து முருகக் கடவுளினும் விஜயனே தேவர் களுக்கு விடமே உன்னை விட்டுப் பிரிந்து நானுயிர்பிழையேன் உயிரைச்சுமந் தினியுழலேன் என்மகனுக் கொப் பானவனே என் றம்பியே விரைவில் நீவரக்கடவா யென்று சொன்னான்—எ-று. (௧௨)

என்று கூறலும் வில்வல னிளவறன் னுடலைக் .... *
குன்று கூறுசெய் தருந்திய வலகையின் குலமு .... *
மன்ற வேதனைப் படுத்தியுண் கழுகின வயிறுந்..................... *
தின்ற ஞாளியி னுதரமும் வெடிபடச் சிதைத் தான்................... *

(இ-ள்.) வில்வல னனவன் இவ்விதமாகச் சொல்லி யழைக்கவும் தன்னுடலைச் சிறிய கூறாகச் செய்துண்ட பேய்க் குலங்களின் வயிறும் அக்காலத்தில் அவனை வேதனைப் படுத்தியுண்ட கழுகினங் களின் வயிறும் அவ்வுடலைத்தின்ற நாய்களின் வயிறுகளும் கிழிய வாதாபி யானவன் அழித்தனன்—எ-று. (௧௩)

கண்ட கண்டமாக் கண்டமுங் காலுமாக் கையுந் .... *
துண்ட துண்ட மாத் துணிபடு தோள்களு முடம்பு..................... *
விண்ட சோரியும் விழிகளு நென்ன லேவிரும்பி........................ *
யுண்டிருந்த தன் குடரெலாங் கிழித்தன னெருங்கே.................. *

(இ-ள்.) கண்ட கண்டமாகக் கண்டித்த கண்டங்களும் காலு களும் பெரிய கைகளும் துண்டந் துண்டமாகத் துணிக்கப்பட்ட தோள்களும் முதுகு பிளந்து வெளிப்பட்ட இரத்தமும் கண்களும் ஆகிய விவற்றை நெருநலே யிச்சித் துண்டிருந்த வத்ன் குடர்களெல்லாம் வாதாபி யொருமிக்கக் கிழித்தனன்—எ-று. (௧௪)

கூடி யங்கமாய்க் கொடியவா தாவியுங் குறுகி .... *
வாடும் வில்வலன் றனையவ னணைந்தனன் மகிழ்ந்தான் .... *
சாடி யெங்கணுங் கறிகளாச் சமைத்துமோர் தநுவா.................. *
வோடி வந்தசி ராளனுந் தனையனை யொத்தான்......................*

(இ-ள்.) பல கண்டங்களு மொன்ருகக்கூடித் தேகமாகிக் கொடியவனுகிய வாதாவி யென்பவனுங் குறுகி வாடாநின்ற வில்வலனுகிய தமயனைவந் தணைந்தனன், அவனுங் களித்தனன், அநேக பாத்திரங்களில் கறிகளாகச் சமைத்துவைத்திருந்தும் அவைகளெல்லாங்கூடி யோருடலாகி யோடிவந்த சிராளனுகிய பிள்ளையை யொத்தான்—எ-று. (கரு)

தனக்கு முன்னவன் றன்னைவந் தடைந்த வாதாவி................ *
யனக்கு நேரொனும் வெள்ளியைத் தொழுதவ னருளான் ......*
மனக்க ணெய்தியே வில்வலன் றன்னுடன் மகிழ்வா............ *
யெனக்கு நன்மதி யுதித்ததென் றிவையிவை யிசைப்பான் ......*

(இ-ள்.) தனக்கு முன்னவனுகிய வில்வலனைவந் தடைந்தவாதாவியென்பவன் அக்னிக்கொப்பாகிய சுக்கிரனைவணங்கி அவனருளால் தங்கள் வீட்டில்வந்து வில்வலனேடு சந்தோஷமா யெனக்கிப்பொழுது ஓர் நல்லறிவு தோன்றியதென்று இக்காரியங்களைச் சொல்லத்தொடங்கினன்—எ-று. (கசு)

சாவி லாதவ னொருவனே சதமகன் முதலாந் ....*
தேவ ராயினு மிறந்தவர் பிழைத்துடன் திரும்பா............... *
ராவி போகினும் பிழைத்துநான் திரும்புவ னன்றே .... *
பூவி லாரணர்க் களித்திடென் னுடற்றசை புசிக்க................ *

(இ-ள்.) ஒப்பற்றவனுகிய பரமசிவனே இறப்பில்லாதவன் இந்திரன்முதலான தேவர்களாயினும் இறந்தவர் உயிர்பெற்றுப் பிழைத்துவாரார் நான் இறந்தும் பிழைத்துத் திரும்பிவருவனன்றே ஆதலால் இப்பூமியில் அந்தணர்களுக்கு என் னுடற்றசையைப் புசிக்கவருளுவாய்—எ-று. (கஎ)

ஓகை யந்தணர்க் களித்திடி லருந்துவ ருடனே ....*
யாக முண்டபே ராவியுண் டகலவனி யழைத்தாற் .... *

சோக மாறநா மவருடற் றசை யெலாந் துய்ப்போ .... *
மேகு மென்றனன் றமைய னு மிதுநல னென்றான் .... *

(இ-ள்.) உவகையினை யுடைய அந்தணர் களுக்கு அமு தளித்தி டில் அவர்களுடனே யுண்பார்கள் உண்டபின்பு நீயென்னை யம்ம ந்திரத்தால் அழைத்தால் பாகமான என்னுடலினை யுண்டவரதுயி ரை யானுண்டு வெளிப்பட்டுவருவன் - பின்பு நாமிளைப்பாற அவ ர்களுடைய உடற் றசைகளையெல்லாம் புசிப்போம் - நடத்துமெ ன்றுசொன்னான் - தமயனுமிஃது நல்லகாரியமென்றான்—எ-று.()

இந்த வஞ்சனை புரிவமென் றிருவரு மெழுந்து .... *
முந்து புண்ணிய தலந்தொறு முநிவர் போனண்ணி .... *
யந்த ணாளரை வசிப்ப வாதாவி மேடமதாய் .... *
வந்து தோன்றுவ னவனுடற் சமைப்பன் முன் வந்தோன் ...... *

(இ-ள்.) அவ்வாறே இந்த வஞ்சனையை யாஞ்செய்வோ மெ ன்று வில்வலனும் வாதாவியு மாகிய இருவரு மெழுந்து முதன் மையான புண்ணிய தலங்க டோறும் முநிவர்போ லிருந்து முநி வர்களை யன்போடழைத்து விருந்துண்ணுதற் கிருக்கச்செய்தபி ன் வாதாவியென்பவன் ஆடாகிவந்து தோன்றுவன் - அப்பொழு து முன் வந்தவனாகிய வில்வலனென்பவன் அந்த வாதாவியாகிய ஆட்டினுடலைப் பாகஞ்செய்து உண்பிப்பான்—எ-று. (கக)

மார்க்க மீதிலந் தணரையிவ் வகையினால் வாட்டித் .... *
தீர்க்க நாளவர் திரிதரும் வனத்திடைச் சென்றோந் .... *
தார்க் குலாவிய மலர் கொடு சொரிந்து நந்தாளின் .... *
மூர்க்க ரானவர் சமைக்குதும் விருந்தென மொழிந்தார் ...... *

(இ-ள்.) வழியினிடத்து அந்தணர்களை இவ்வகையினால் மெலிவி த்துநெடுநாளாக அவர் திரிதருகின்ற அவ்வாரணியத்தில் யாஞ்செ ன்றோம் அப்பொழுது அம்மூர்க்கரானவர்கள் நம்முடைய தாள் களில் மாலைகளாகக் கட்டிய மலர்களைக்கொண்டு அருச்சித் துபச ரித்துத் தங்களுக்கு விருந்துசமைக்கிறோ முண்டுபோகலாமென் று சொன்னார்கள்—எ-று. (உ0)

கனக்கவாடுநம் பசிக்கனற் குதவிடக் கணத்தே............ *
யினித் தவத்தினிர் சமைத்திடும் விருந்தெமக் கென்ன......... *

வனத்து லாவுவா தாவியின் மேடமாய் வந்தான் .... *
அனத்தி னேடவனுடற் சமைத் தளித்திட வயின்றேம் .... *

(இ-ள்.) மிகுதியாக விளைப்புற் றிருக்கின்ற நம்முடைய பசிக் கனலுக் குதவும்படி ஒருதிமிஷத்தில் இப்பொழுதே தவத்தையுடையவர்களே பாகஞ்செய்து எமக்கு விருந்திடுமென்று சொன்னேம் பின்பு வாதாவியானவன் வனத்தி லுலாவுகின்ற ஆடாக வந்தான் அன்னத்தோ டவனுடலினைப் பாகஞ்செய்து எனக்குப்பரிமாறயாமயின்றேம்—எ-று. (உக)

செங்கை பூசிநா மிருந்தனம் வில்வலன் சென்று.............. *
தங்கள் மந்திர மொழித் தழைத் திடலும் வாதாவி .... *
மங்கிடாத தன் வேடமா யெழுந்து நம் வயிற்றி............... *
லங்கி வாகன மெனச்சுழன் றடைந் தெமை யடர்த்தான் ...... *

(இ-ள்.) யாமுண்டு கைகால் சுத்திசெய்துகொண்டு அங்ஙன மிருந்தனம் அப்பொழுது வில்வலனானவன் புறத்திற் சென்று தமது மந்திரத்தையுச்சரித்து அழைத்தவளவில் வாதாவியென்பவன் ஒளிமழுங்காத தன்னுருவமாக வயிற்றினின்று மெழுந்து தீக்கடவுளினது வாகனமென்று சொல்லும்படி சுழன்றுவந்து எம்மை உபத்திரவப்படுத்தினன்—எ-று. (உஉ)

அச்சமாகி நம் முதரத்தி லங்குலி யதுக்கி .... *
யிச்சையான சித்தாமணி மந்திர மிசைத்தோம் .... *
வச்சிராயுதம் படுமலை யெனும்படி மாய்ந்து .... *
கொச்சை யாயினுன் முன்னமுங் கொச்சையா னவனே ...... *

(இ-ள்.) அவன் வயிற்றிற் போர் செய்யுங் காலத்தில் அச்சமாகி நம்முடைய வயிற்றிற் கையை வைத்தமுக்கி எமக்கிச்சையான சித்தாமணி மந்திரத்தை யுச்சரித்தோம் இந்திரன்கை வச்சிராயுதம் பட்ட மலையென்று சொல்லும்படி வலிகெட்டு இளைத்தனன் முன்னரும் ஆடானவனுகிய வாதாவி—எ-று. (உங)

வே று.

வாதாவியே தேவர்குல காலனே முன்னைவடி வாகவே .... *
யாதாவியே யென்றில்வல னேதிரு னந்த வடிவாகவே .... *

வாதாவியே கொண் டெழுதரத்தி னுருவாகி வலிசெய்தனன் [னே.
வாதாவி சேர்வண்டு பொழில் விண்டு புரிதொங்கன் மணி மார்ப

(இ-ள்.) தடாகங்களில்வந்து சேராநின்ற வண்டுகள் பொழிலிலே மலர்த்திய மலர்களாற்கட்டிய மாலைகளையணிந்த அழகிய மார்பையுடைய ஸ்ரீராமனே - வில்வலனனவன் வாதாவியென்னும் பெயரையுடையவனே தேவர்கள்குலத்துக்கு யமனே முன்னையதாகிய ஆட்டின்வடிவாகவே தாவியேவாவென்று மொழிந்தனன் அவன்சொன்னவந்த வடிவாகவே உயிர்கொண்டுருவாகியெழுந்து எமதுவயிற்றில் வாதுகொண்டு நோய்செய்தனன்—எ-று. (௨௪)

வே று.

அவ னழைத்தபோ துதயமா யுதரத்தை யடர்ப்பன்............*
சிவ னுருத்திரஞ் செபித்திடிற் கொடுமை போய்த் திரிவன் ... *
தவ முயற்சியா லவனை நீ றாக்குவோஞ் சமித்தோம்............*
பவ மெவற்றினுங் கொடியதாங் கொலையெனப் பயந்தே...... *

(இ-ள்.) அந்த வில்வலனழைத்தபோது வாதாவி யுருவங்கொண்டு வயிற்றினை நோய்செய்யத் தொடங்குவன் - அப்பொழுது நான்சிவனது உருத்திர மந்திரத்தைச்செபித்திடில் கொடுமை செய்தலைவிட்டுத் திரிவன் ஆனல் எமதுதவமுயற்சியால் அவனைச் சாம்பராக்குவோம் பாவமெல்லாவற்றினும் கொலைசெய்வது கொடுமையை யுடையதென்று பயந்துபொறுத்தோம்—எ-று. ()

அம்பு ராசிநேர் கிருமிவன் குழியினி லழுந்தி ....*
கும்பி பாகமாம் பெரும்படுங் குழியினுங் கூடி .... *
செம்பு ராசியா யுருக்கிய நரகினுஞ் செறிவ.......................*
ரும்ப ராகிலுங் கொலைசெய நினைத்திடு மொருவர்...............*

(இ-ள்.) கூர்மையான அம்புக் கூட்டங் களுக் கொப்பாகிய புழுக்களையுடைய வலியநரகக்குழியினிலழுந்திப் பின்னர் கும்பிபாகமென்னும் பெரிய படுகுழியினுஞ் சேர்ந்திருந்து கூட்டமான செம்புகளை யுருக்கிவார்த்த நரகக்குழியினுஞ் சேர்ந்து வருந்துவர் - தேவர்க ளானலு மொருவனைக் கொலைசெய்ய நினைத்த வொருவர்—எ-று. (௨௬)

பல்லுயிர்க் குபகரிப்பதே யறமெனப் படுவ .... *
நல்லலைக் கொடுத் திடுவதே வினையெனு மதனாற் .... *
கொல்லுதற் கரிதானது கொல்லரும் படைதான்........................ *
வெல்லுதற் கரிதாமென் னுரைப்பரோ வீரர்................................ *

(இ-ள்.) பல வுயிர்களுக்கும் உபகாரஞ்செய்வதே தருமமென்று சொல்லப்படும் - அவ்வுயிர்களுக்குத் துன்பத்தைக் கொடுத்திடுவதே பாவமென்று சொல்லப்படும் - அதனால் ஒருயிரையுங் கொல்லுதற்கு விரும்பாதது கொல்லாத வாயுதந்தான் அவ்வாயுதத்தை யொருவராலு வெல்லுதற் கரிதாகுமென்று வீரர்கள்சொல்லுவார்கள்—எ-று. (உஎ)

விருந்து நல்கியே பகைசெயு மவுணர்தம் வினையா............ *
லருந்தி யாண்டுறா நகன்றபின் றீர்த்தமால் வரையி............ *
னருந்ததிக் கிறை முநிவரை யடைந்தன மவரும்............... *
பரிந்த வன்பினு னுயிருற வணைத்திவை புகல்வார்............... *

(இ-ள்.) நமக்கு விருந்திட்டுப் பகையைச்செய்த அரக்கர்களுடைய செய்கையால் அவ்விருந்தினையுண்டு வருத்தமடைந்து நூறவருடஞ் சென்றபின்பு தீர்த்தகிரியில் அருந்ததிக் கிறைவராகிய வசிட்டமுநிவரை வந்துசேர்ந்தோம் - அம்முநிவரும் விரும்பிய அன்பினால் உயிரும் பொருந்தவணைத்து மேற்சொல்லுங் காரியத்தைச் சொல்லத்தொடங்கினார்—எ-று. (உஅ)

மங்கலத்தின மானதின் றுமது நல்வரவா............................ *
லிங் குரைப்பதோ மகிழ்ச்சியி னளவிவை யிருக்க............ *
வங்கமுற்று நீர்மெலித்த தென்புகலு மென் றறைத்தான் ...... *
சங்கு சக்கரத் துணைவராய்த் தொடர்ந்திடுந் தனையா............ *

(இ-ள்.) உம்முடைய நல்லவரவினாலே இத்தினம் மங்கலமான தினமானது இதனாலுண்டாகிய மகிழ்ச்சியினளவை இங்கு சொல்லக் கூடுமோ இவையிருக்க நீர்தேக முழுதும் மிளைத்திருப்பதென்ன சொல்லுமென்றுசொன்னார் - சங்குஞ் சக்கரமும் பரத சத்துருக்க னென்னுந் துணைவராகவரவந்த தசரதபுத்திரனே—எ-று.

வெம்மை யாகிய வுதரநோ யனைத்தையும் விரித்தோ .... ※
மும்மை மீதுவந் தடையுமோ பிறரருத் துணவா .... ※
லிம்மையே துயர் கொடுத்த தீவினைகளு மிந்த .... ※
மம்ம ரானதுந் தவிர்க்கு மிம்மலை மருந் தென்றான் .... ※

(இ-ள்.) வெம்மையைத் தருவதாகிய வயிற்றுநோய்வந்த வரலா றனைத்தையும் யாமவருக்கு விரித்துச் சொன்னோம் - அதைக் கேட்ட அவர் பிறருண்பித்த வுணவினாலே யிந்தத் துன்பமும்மை வந்தடையலாமோ இப்பிறப்பிற்றானே யுமக்குத் துன்பந்தந்த தீவினைகளும் இந்தத்துன்பமு நீக்கிவிடு மிம்மலை மருந் தென்றார்- என்றவாறு. (௩௦)

அத்தனுமுநி யுரைத்தலு மன்றுதொட் டசலத் .... ※
துற்றொரா சனத் தொருகுகை யிடத்திலே யுலோப .... ※
முத்திராக் கொடியுட னிருந் தருந்தவ முடித்தேன் .... ※
புத்தி மாழ்குமவ் வுதரநோ யகன்றதப் பொழுதே .... ※

(இ-ள்.) தந்தைக்கொப்பானவனாகிய வசிட்டமுநிவன் சொன்ன மாத்திரத்தில் அன்றுமுதல் அந்தத் தீர்த்தகிரியைப் பொருந்தி யொரு குகையின்கண் ணோராசனத்தில் உலோபா முத்திராயென்னும் பத்தினியுடனேயிருந்து செய்தற்கரிய தவத்தினைநிறைவேற்றினேன் என்புத்தியை மயங்கச்செய்த வயிறுநோயானது அப் பொழுதே நீங்கியது—எ-று. (௩௧)

சிவ னருச்சனை புரிந்தனந் தீர்த்தமொன் றளித்தார் .... ※
பவ மகன்றிட வநேகநா ளதனிடைப் படிந் தோந் .... ※
தவ முயற்சியா லெம்மிடத் திருந்த வாதாவி .... ※
யவனி யிற்செறிந் தெமைத்தொழு தரும்பத மடைந்தான் ... ※

(இ-ள்.) பரம சிவத்தைப் பூசித்தோம் அவர் அதிலொரு தீர்த்தத்தை யெனக்கு அருளினர் - அந்தத் தீர்த்தத்தில் எம் பவநீங்க அநேகநாள் மூழ்கினோம் எம்முடைய தவத்தினது முயலுகையால் என்னிடத்திருந்த வாதாவியானவன் பூமியில்வந்து யெம்மைவணங்கி அரிய மோட்சபதவியை யடைந்தனன்—எ-று. (௩௨)

அந்த மால்வரைக் கொருபெயர் கதாபகமான ....*
திந்தவான்கதை படித்தவர் செவிகளி லேற்ரோ................*
ரெந்த நாளுமே யுடற்பிணி யுறுரென விசைத்தான்............*
மந்தமாருதத் தமிழுடன் வளர்த்திடு மலையான் .... *


(இ-ள்.) அந்தத் தீர்த்தகிரிக்குக் கதாபதமென வொரு பெயருண்டானது இந்த மேலானகதையைப் படித்தவர்கள் செவிகளிற் கேட்டோர் எந்தநாளினும் உடலிலே நோயுறார் என்று மந்தமாருதத்தையும் தமிழையு மொன்றாக வளர்த்திடும் பொதியமலையையுடைய அகத்தியமுநிவர் சொன்னார்—எ-று. (௫௫)

மூன்றாவது

அகத்தியதீர்த்தச்சருக்கம்

முற்றிற்று.

ஆக சருக்கம் - ௫ - க்கு - செய்யுள் - ௧௧௮.



சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.

நான்காவது

பருப்பதச்சருக்கம்.

சித்தியா னவையெலாந் தெளியக் கூறினீர்........ *
நித்தனார் சைலமா யிருந்த நீர்மையு .... *
மத்திலே யுதயமா மரிய தீர்த்தமு .... *
முத்தனே மொழியென முநிவன் கூறுவான்......... *

(இ-ள்.) அவரவர்களுக்குச் சித்தி யானவையெலாம் யான் றெளியும்படியாகக்கூறினீர் - பரமசிவன் மலையுருவமாக விருந்த தன்மையையும் அந்தக்கிரியிலே யுதயமாகிய கிடைத்தற்கரிய தீர்த்தங்களையும் முத்தனே யெனக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்க அகத்தியமுநிவர் சொல்லத்தொடங்கினார்—எ-று. (க)

சைவரா யரும் பெருந் தவஞ்செய் வார்களும்...... *
வையக முழுவதும் வலஞ்செய் வார்களும்........ *
பையநீர்க் கங்கையிற் படிகு வாருமித் .... *
தெய்வ மால்வரை யிடைத் தீர்த்த மெய்துவார்..... *

(இ-ள்.) சைவ சமயத்தராய் செய்தற்கரிய பெரிய தவங்களைச் செய்பவர்களும் உலகமுழுதும் வலமாகவந்து சிவதரிசனஞ் செய்கின்றவர்களும் நெடுநாள்நடந்துசென்று கங்கைமுதலிய நதிகளில் மூழ்குவாரும் இந்தத் தெய்வத் தன்மையை யுடைய பெரிய கிரியினிடத்துள்ள தீர்த்தங்களில்வந்து ஸ்நாநஞ்செய்வார்கள். (உ)

சரியையி னெறிவளர் தகைமை யாளருங் ....*
கிரியையும் யோகமுங் கிடைத்த வீரரும்............*
பொருவரும் வடக்குமீன் போலுங் கற்புடைத் ... *
தெரிவையர் களுமிதிற் தீர்த்த மாடுவார் .... *

(இ-ள்.) சரியையின்வழியிலே நடந்துவருகின்ற தகைமையை யுடையவர்களும் - கிரியையும் யோகமுங் கைவந்தவீரர்களும்- ஒப்பற்ற அருந்ததிபோலுங் கற்பினையுடைய மாதர்களும் - இந்தக்கிரியினிடத்துள்ள தீர்த்தங்களில்வந்து ஸ்நானஞ்செய்வார்கள். என்றவாறு. (ங)

அச்சுதா முன்னமே யகில மீன்றவ................... *
ளிச்சையா யிமயமீ தேவல் செய்திடச் .... *
சச்சிதா நந்தமா மிறைவன் றண்கிரி .... *
யுச்சிமீ திருந்தனன் யோக மாகவே .... *

(இ-ள்.) அச்சுதனுகிய ஸ்ரீராமனே - ஆதியில் இவ்வுலகத்தை யீன்றவளாகிய வுமையானவள் இமயமலையினிடத்து அன்போடு ஏவல் செய்ய சத்துச்சித்தாநந்தமாகிய பரமசிவம் குளிர்ச்சிபொருந்திய அக்கிரியின துச்சியி லெழுந்தருளியிருந்து யோகஞ்செய்திருந்தனர்—எ-று. (ச)

யோகம தழித்திட வும்ப ரேவலான்..................*
மாகமைச் சிலையினன் வாளி பூட்டினன்............... *
நாகமு மாகவா னதியுஞ் சூடினர்.....................*
வேகம துறநுதல் விழியைக் காட்டினர் .... *

(இ-ள்.) பரமசிவனது யோகமானதுநீங்க தேவர்களினது ஏவலால் பெருமைபொருந்திய கருப்புவில்லினையுடைய மன்மதனானவன் மலர்க்கணைகளைப் பிரயோகித்தான் - அப்பொழுது அரவத்தினையும் ஆகாயகங்கையையுந் தரித்தவராகிய பரமசிவம் வேகம் பொருந்த நெற்றிக்கண்ணைத் திறந்தனர்—எ-று. (ரு)

விழிக்கனல் புகுந்துவேள் வெந்து போயினன்...... *
உழைக்கரத் திறைவனு மொருவ ராலும்வந்......... *
தழிக்கரு மொருதலத் தடைகு வோமெனத்........ *
தழைத்தவண் பூமியைத் தணந்து நீங்கியே........ *

(இ-ள்.) திறந்தவுடனே நெற்றிக்கண்ணினின்றும் வெளிப்பட்ட அக்கினியானது உடலிற்புகுந்து மன்மதன்வெந்து சாம்பராகிப்போயினன் - பின்பு மானைக் கையிலேயுடைய பரமசிவனும் தம்மிடத்துவந்து ஒருவராலும் தமதுதவத்தை அழிக்கக்கூடாத ஒரு தலத்தினிடத்துச் செல்லுவோமென்று தழைத்த வளப்பம்பொருந்திய பூதலத்தை விட்டுநீங்கி—எ-று. (கூ)

தென்றிசை முடிவிடஞ் செறிந்த பெண்ணைநீர்...... *
துன்றிய கரையிலோர் சூழல் வைகினன்............ *
சென்றனர் கடவுளர் சிவனை நாடியே............. *
மன்றுறை பவனவர் வரவு கண்டனன்............. *

(இ-ள்.) தென்றிசைக்கு முடிவான விடங்களெல்லா நிறைந்த பெண்ணைநதியி னீர்பொருந்திய கரையில் ஓர் இடத்தில் தங்கியிருந்தார் - அப் பரமசிவனைத் தேடிக்கொண்டு தேவர்கள்சென்றனர் - திருச்சிற்றம்பலத்தில் வாசம் பண்ணுகின்றவராகிய பரமசிவம் அவர்களது வருதலைக்கண்டனர்—எ-று. (எ)

வெருவரும் கணங்களை யழைத்து விண்ணவ......... *
ரொருவரு மிவணுறு தொழிக்க வென்றனன்......... *
கருவரு முகினிகர் கணங்கள் வானவர்............. *
பருவர லுறும்படி பரிந்து காத்தனர்.............. *

(இ-ள்.) பரமசிவம் தம்மாட்டச்சங்கொண்ட சிவகணங்களையழைத்து தேவர்களில் ஒருவரேனும் இவ்விடத்திலிராமல் நீக்கக்கடவீரென்று சொன்னார் - அதைக்கேட்ட கருமைநிறங்கொண்ட மேகத்துக்கொப்பான நிறத்தினையுடைய சிவகணங்கள் தேவர்கள் துன்பமுறும்படி அன்போடு காத்திருந்தனர்—எ-று. (அ)

அண்டரும் வனத்தினை யண்டர் நீங்கியே........... *
யெண்டிசை தனிலிருந் திருகரங் குவித்............ *

அண்டநஞ் சமுதமா முரக கங்கணு.................*
புண்டரி கணிச்சியாய் போற்றி போற்றியே.........*

(இ-ள்.) தேவர்கள் அண்டுதற்கரிய வத்தலண்டக வனத்தினைவிட்டு நீங்கி அதிஷ்டிக்கினு மிருந்துகொண்டு இரண்டு கரங்களையுங் குவித்து ஆலகாலவிஷத்தை அமுதமாகவுண்ட சர்ப்பமாகிய கங்கணங்களையுடையவனே மாம்சந்தங்கிய மழுவாயுதத்தையுடையவனே உனக்கு வந்தனம் வந்தனம்—எ-று. (கூ)

களித்த தாரு களிறுங் காரணத்தினு..................*
லிளைத்துமான் மைந்தனை யேவி னேமவ............*
ளுளத்தினின் முளரியை யூன்ற நாட்டினன்.........*
குளத்தினர் முளரியாற் கொன்று விட்டினை.........*

(இ-ள்.) மதத்த தாருகா சூரனுலிளைத்து அவனிறக்கவேண்டுங் காரணத்தினுல் திருமால் குமாரனாகிய மன்மதனை நின்பாலனுப்பினும் அவன் நினதுமார்பில் தாமரையாகிய பாணமழுத்தப் பிரயோகித்தான் அவனை நினதுநெற்றியிற் பொருந்திய கண்ணிலுண்டாகிய அக்கினியால் கொன்று சாம்பராக்கினுய்—எ-று. (க0)

எம்பிழை பொறுத்தரு ளிமய வான்மலைக் ....*
கொம்பனை யாடனக் குவட்டை நண்ணியே.........*
நம்பி யெம் முருகனை நல்கித் தாருகன் ....*
செம்புனற் பருந்துணச் செய்க வென்றனர் ......*

(இ-ள்.) யாஞ்செய்த குற்றங்களையெலாம் பொறுத்தருளி இமய மென்னுஞ் சிறந்தமலையி லவதரித்த பூங்கொம்பினையொப்பாளாகிய உமையினது தனமாகிய மலையைப்பொருந்தி நம்பியாகிய வெம்முடைய முருகக்கடவுளைத் தந்து தாருகாசூரனுடைய உதிரமாகிய புனலைப் பருந்தினங்கள் உண்ணச்செய்கவென்றனர்-என்றவாறு. (கக)

வானகத் தொருமொழி மதனை நல்குவோம்.........*
வானகத் திருவையு மாலை சூட்டுவோந்.............*
தானவர்க் கிறைவனைத் தடிய வேலனைத் ....*
தானளித் தருளுவோ மென்று சாற்றினர் ....*

(இ-ள்.) அக்காலத்தில் ஆகாயத்தினிடத் துண்டாகிய வொருமொழியால் மன்மதனையு முயிர்பிழைத்து வரும்படிச்செய்வோ

ம் ஆகாயமளாவிய பர்வதரராஜ புத்திரியையும் மணமாலைசூட்டு வோம் அரக்கருக் கிறைவனாகிய சூரன் முதலானவர்களைக்கொல்ல வேலாயுதத்தையுடைய முருகனையு மீன்றருளுவோமென்று சொன்னார் - என்றவாறு. (கஉ)

கேட்டன ரிமையவர் கிலேச நீங்கினர்..............*
வாட்டமி னறுமலர் மழையைத் தூவினர் .... *
காட்டினை வலமதாக் கடந்து காஞ்சன .... *
நாட்டினி லிருந்தர னாமம் வாழ்த்தியே .... *

(இ-ள்) தேவர்கள் அந்த வார்த்தையைக்கேட்டுத் துன்பநீங்கினவர்களாகி தண்டகாரணியத்தை வலமாகவந்து அதனைக்கடந்து பொன்னுலகத்தின்கண்ணிருந்து பரமசிவத்தினது திருநாமங்களை த்துதித்து வாட்டமில்லாத மணம்பொருந்திய மலர்மாரியைப் பெய்தார்கள்—எ-று. (கந)

வானவ ரகன்றபின் மலையின் வேடமாய் ....*
ஞானமுத் திரையுடன் யோக நண்ணினார் .... *
மோனநற் சுழிமுனை முனைக்கு ளேகட ....*
லானதின் முழக்கென வரவஞ் செய்ததே .... *

(இ-ள்.) தேவர்கள் அவ்வனத்தைவிட்டு நீங்கிப்போனபின்பு பரமசிவம் மலையுருவாகி ஞானமுத்திரையோடு யோகத்தைப் பொருந்தியிருந்தார் மௌனமாகிய நல்ல சுழிமுனை நாடியின்முனைக்குண்ணின்று கடலினது முழக்கென்று சொல்லும்படி ஓரொலி யுண்டாயிற்று—எ-று. (கச)

சுடுமுனை வெளியெலாஞ் சோதி லிங்கமாப்.........*
படரு நூறாயிரம் பானு வென்னவே................ *
யடருமவ் வழலின்வெந் தமுது சிந்திடு .... *
முடியிளம் பிறையதோ முகம தாகவே .... *

(இ-ள்.) சுழிமுனையின் வெளியெல்லாம் லட்சஞ் சூரியனுதயமானதுபோலச் சோதியினையுடைய இலிங்க வுருவமாகப் பரவியிருந்தது - நெருங்கிய அவ் வக்கினியால்வெந்து அமுதத்தைச்சிந்தாநின்ற முடியின்கண் தரித்திராநின்ற இளம்பிறையானது கீழ்முகமாகும்படி—எ-று. எதுகைநோக்கிச் சுழிமுனை சுடுமுனையென மரீஇயிற்று. (கரு)

அன்னதின் பெயர்சொலி னமுத கங்கையா......... *
மன்னிய வசிட்டனத் நதியின் மூழ்குவான் .... *
உன்னுவ தொருகணத் துதிக்கு மாங்கது............ *
தன்னிடை மூழ்குவார் சாவு நீங்குமே............... *

(இ-ள்.) அந்த நதியினது பெயரைச் சொல்லுங்கால் அமுதக ங்கையென்று சொல்லப்படும் - அந்தநதியில் நிலைபெற்ற வசிட்ட முநிவன் ஸ்நாநஞ்செய்வான் அந்நதியானது பெரியோர்கள் நி னைத்த வொரு கணத்தினுள் வந்துதோன்றும் அப்பருப்பதத்தி லுள்ள அந்தத் தீர்த்தத்தில் மூழ்குகின்றவர்கள் மரணத்தினின்று நீங்குவார்கள்—எ-று. (௧௬)

இருதிசை யினுஞ்சடை யேழுண் டாங்கதி......... *
லொருசடை யிலிங்கமொத் துயர்ந்து தோன்றிடு... *
மருமறை நான்முக னந்த வுச்சிமே .... *
லிரைமணிக் கமண்டல நீரா யாட்டினன் .... *

(இ-ள்.) அந்தத் தீர்த்தகிரியி னிரண்டுதிக்குகளினும் ஏழுசடை களுண்டாயிருக்கின்றது - அவ்வேழுசடைகளில் ஒரு சடையான து இலிங்கத்துக்கொப்பாக உயர்ந்து காணப்படும் - எழுதற்கரிய நான்கு வேதங்களையுடைய பிரமதேவன் அந்த விலிங்கத்தி னுச்சி மீது வரிசையாக மணிகளைப் பதித்திருக்கின்ற தனது கமண்டல த்திலுள்ள சலத்தினால் அபிஷேகஞ்செய்தான்—எ-று. (௧௭)

ஆட்டிய கங்கைநீ ரருவி யாயெழில் .... *
காட்டிய ததனையா காச கங்கையென்............... *
றீட்டிய மாதவ ரியம்பி யேத்தினர்.................. *
சூட்டிய கங்கைபோற் றுளிக்க லுற்றதே........... *

(இ-ள்.) பிரமாவினாலே அபிஷேகஞ்செய்யப்பட்ட அக் கங் கைநீரானது அருவியாகி அம்மலைக்கு அழகைக் காட்டியது அத னை யவ்விடத்திற் கூடியிருந்த மிகுந்த தவத்தினையுடைய முநிவர் கள் ஆகாசகங்கையென்று சொல்லித் துதித்தார்கள் - அப்பொழு து பரமசிவன் தலையிற்சூடிய கங்கைபோலத் துளிக்கத் தொடங் கியது—எ-று. (௧௮)

பிரமரத் தரச்சடை பெருகுங் கங்கைபோ .... *
லருவியா யிதயமா மம் புயத்திலே.................... *

மருவிய நாபியின் வழியின் வைகுறுந் .... *
தருப்பெய ரினிய பாதாள கங்கையே............. *

(இ-ள்) பிரமரந்தர மென்னுஞ் சடையின்கண்ணின்று பெருகிவராநின்ற கங்கையானது கீழே யருவியாகிவந்து இருதயமாகிய தாமரையிற்பொருந்திய நாபியின்வழியிற் றங்கிவரும் - அதற்குப் பெரியோர்களாற் றந்தபெயர் இனிமையைத் தராநின்ற பாதாள கங்கையாம்—எ-று. (கசு)

சென்னி கீழிடைதருந் தீர்த்த மூன்றினான் .... *
மன்னிய தீர்த்தமால் வரையென் றோதுவா......... *
ரன்னதி தனைநினைந் தாடி யெம்பிரான் .... *
சந்நிதி யடைந்தபேர் சம்பு வாவரோ .... *

(இ-ள்.) அம்மலையினது முடி யடி நடுவென்னு மூன்றிடத்தினின்றும் வருகின்றமூன்று தீர்த்தத்தினால் அதற்கு நிலைபெற்ற பெரிய தீர்த்தகிரியென்று பெரியோர்கள் சொல்லுவார்கள் - அத்தன்மையவானநதிகளில் கடவுளைச் சிந்தித்துமூழ்கி எமது பிரானாகிய தீர்த்தகிரீசன் சந்நிதானத்தையடைந்து தரிசித்தவர் உருத்திராவார்கள்—எ-று. (உ0)

போர்கரியின்மதம் போலக் காணுமொன்......... *
றோதவர் ரிதியினு மோதை காட்டுமொன் .... *
றீதலாற் கூவலோ டெழுந்து தோன்றுமொன்...... *
றாதலால் வரையெலா மரிய தீர்த்தமே .... *

(இ-ள்.) அத்தீர்த்தங்களில் ஒருதீர்த்தம் யானைமுதலிய மிருகங்களின் மதம்போலத் தோன்றும் - ஒருதீர்த்தம் வெள்ளமாகிய கடலைப்பார்க்கிலும் ஒலியைக்காட்டும் - இதுவுமல்லாமல் கிணறுகளோடு மேலெழுந்து தோன்றுமொன்று - ஆதலால் அம்மலையெல்லாம் கிடைத்தற்கரிய தீர்த்தங்கள்—எ-று. (உக)

பாடினு ரதன்புகழ் பருப்பதத்தின் மேற் .... *
கூடினு ரதிலொரு துளியுட் கொண்டபே .... *
ரோடினர் பரகதிக் கென்னி லூர்புன........... *
லாடினு ருடலொடு தரணி யாள்வரோ.............. *

(இ-ள்.) அத்தீர்த்த கிரியின்மேல் முநிவர்கள் பலருங் கூடினவர்களாகி அக்கிரியினது புகழைப்பாடினார்கள் - அந்தத் தீர்த்தங்களிலுள்ள நீரில் ஒருதுளி நீரை யுட்கொண்டவர்கள் மேலான மோட்சகதிக்குச் சென்றார்க ளென்றால் அக்கிரியினின்று மூநிவராதின்ற நீரில் ஸ்நாநஞ் செய்தவர்கள் இத்தேகத்தோடு பூவுலக முழுதும் ஆள்வார்களென்று சொல்லவேண்டுமோ—எ-று. (உஉ)

ஆசையா லம்மலைக் கங்கை யாடுவார்............... *
காசிப னாரதன் கவுர்ச்சசன் கண்ணுவன்.............*
கோசிக னாண முநிவன் கோதமன்.................*
தேசிகன் பராசரன் றிங்கண் மைந்தனே............ *

(இ-ள்.) அந்தத் தீர்த்தகிரியிலுள்ள தீர்த்தத்தில் விருப்பத்தோடு ஸ்நாநஞ் செய்கின்றவர்கள் யாரெனில் - காசிபமுநிவர் - நாரதமுநிவர் - கவுர்ச்சமுநிவர் - கண்ணுவமுநிவர் - கோசிகமுநிவர்-ஆரணமுநிவர் - கௌதம முநிவர் - தேசிகமுநிவர் - பராசர முநிவர் - புதன் - இவர்கள்முதலியோர்—எ-று. (உ௩)

உமையவ டவஞ்செய வுருகி யெம்பிரான்......... *
சிமையமா மதிலொரு தீர்த்த நல்கினார்............ *
கமல முண்டகநிறை கந்த தீர்த்தமொன்...........*
றமரரெண் குமாருக் கருளினா ரதில்............... *

(இ-ள்) பார்வதியானவள் பரமசிவத்தை நோக்கித் தவஞ்செய்ய அதற்குப் பரமசிவ முருகி அத்தீர்த்தகிரியி லொருதீர்த்தந் தந்தனர் - அக்கிரியில் அட்டதிக்குப்பாலகர்களாகிய தேவர்களுக்கு தாமரைக்கமலங்க ணிறைந்த மணத்தையுடைய வொரு தீர்த்த மருளினார்—எ-று. (உ௪)

அம்மலை யடைந்தரி யரிய தீர்த்த மொன் .... *
றிம்மலை யிடத்தரு ளென்று போற்றுக .... *
செம்மலு முனக்கொரு தீர்த்த நல்குவார் .... *
மும்மலத் தவிர்த்திட மூழ்கு கென்றனன் .... *

(இ-ள்.) ஆதலால் நீயும் அந்தத் தீர்த்தகிரியை யடைந்து பரமசிவத்தை இந்தத் தீர்த்தகிரியில் ஒரு அருமையுள்ள தீர்த்தம் எனக்

குத் தருவாயென்று துதிக்கக் கடவாய் - அப்பொழுது பரமசிவமும் உனக்கு ஒருதீர்த்தந் தருவார் அத்தீர்த்தத்தில் ஆணவமுதலிய மூன்றுமலங்களுநீங்க ஸ்நானஞ்செய்யென்று அகத்தியமுநிவர் சொன்னார்—எ-று. (உரு)

அரக்கனை யழித்தது மரக்க ரூர்புகத் .... *
திரைக்கனை சமைத்ததுந் தீரு மென்றனன் .... *
உரைத்தது புரிவன்யா னுமை தவத்தினை .... *
விரித்திடு மெனமுநி விளம்ப லுற்றனன்............ *


(இ-ள்) இராவணன் முதலிய வரக்கர்களைக் கொன்ற பாவமும் அவ்வரக்க ரூராகிய இலங்கைக்குப்போகக் கடலுக்கு அணைகட்டிய பாவமும் நீங்குமென்று அகத்தியமுநிவர்சொன்னார் - அதற்குத் தாங்கள் சொல்லியபடியே யான் செய்வேன் உமையவள் தவஞ் செய்தகாரணத்தை விரித்துச் சொல்ல வேண்டுமென அகத்திய முநிவர் சொல்லத்தொடங்கினார்—எ-று. (உசா)

நான்காவது

பருப்பதச்சருக்கம்

முற்றிற்று.

ஆ சருக்கம் - ச - க்கு - செய்யுள் - கசசச.



சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.

ஐந்தாவது
உமைதீர்த்தச்சருக்கம்.

இரணிய கர்ப்பனை யளித்த விண்டுவெனும் பெயர் படை
த்தோ யிமவான் றன்னைச், சரணமிசைப் பணிந்துமையா ளெடுத்
துரைப்பா ளரியபெருந் தவத்தா லீசன், கருணைபெற வெனக்
கு விடை கொடுத்தருள்வா யெனவுரைத்தாள் கருத்துவாடித், த
ரணியினிற் கியன்றதவந் தொடங்குகென வுரைத்தனனச் சைல
மீதே.. *

(இ-ள்.) பிரமனைப்பெற்ற திருமாலென்னும் பெயரைப்பெற்
ற ஸ்ரீராமனே - உமையவ ளானவள் இமோர்ப் பருவதராசனைப்
பார்த்து அவனது திருவடிகளின்வணங்கிச் சொல்லுவாளாயினள்-
என்னெனில், அருமையான பெரிய தவத்தினல் பரமசிவத்தினது
அருளைப்பெற எனக்கு விடைகொடுத் தருள்வாயென்று தனதுள்
ளத்தளர்ந்து உரைத்தனள் - இவ்வுலகத்தின்கண் அந்த இமோர்ப்
பர்வதத்தில் உனக்குக் கூடுமானதவத்தைத் தொடங்கிச் செய்வா
யென வுரைத்தனன்—எ-று. (க)

தங்காந்தன் மநமகிழ வலப்பாத மலரூசித் தலையி லூன்றிக், கொங்கார்ந்த முடியிலிரு கரங்குவித்துச் செபவடங் கைக்கொண் டுநின்றாள், செங்காந்தட் பசுங்கொடியுஞ் செங்காந்தட் பசுங் கொடியுஞ் சிரத்தே தோன்றல், அங்காந்தட் கொழுமுகையுங் கொ ழுமுகைவிட் டகலாத வடிவுபோலும்............................ *

(இ-ள்.) தன்னாயகனாகிய பரமசிவம் உள்ளங்களிகூரத் தனதுவல து பாதமாகிய தாமரைமலரை ஊசியின் றலையிலூன்றி வாசனையி னையுடைய மலர்களணிந்த திருமுடியில் இரண்டு கைகளையுங் கூப் பிச் செபமாலையைக் கரத்திற்கொண்டுநின்றனள் - அஃதென்போ ல விருந்ததென்னில், கரங்களாகிய பசிய கொடியினையுடைய செ ங்காந்தண் மலரும் செங்காந்தண்மலரும் முடியின்மீது தோன் றுதல் அழகிய காந்தளினது கொழுமையாகிய அரும்பும் அக் கொழுவிய வரும்பைவிட்டகலாத அதனதழகும் போலுமிருந் தது—எ-று. (உ)

பகலவன்று னகன்றதற்பின் கார்காலத் தனிற்படிகப் பா றைமேவிச், சகலபுவனமு மளித்த பசுங்கொடி நாண்மழைசொ ரியத் தவமேசெய்தாள், தொகையளக முகங் கழுத்துத் தோண் முலைமேற் சொரிந்த புயற் றுளியின் றோற்ற, முகிலுடன் றாமரை பணிலங் கழை மருப்பத் தினும்பிறந்த முத்தம் போலும்......*

(இ-ள்.) சகலபுவனங்களையுந் தந்த பசுங்கொடிபோன்ற பார்வ தியானவள் சூரியன் அஸ்தமன மானபின்பு கார்காலத்தில் படிக ப்பாறையின் மீதிருந்து காலமழை பெய்யத் தவஞ்செய்தனள்- அப்பொழுது கூட்டமான கூந்தலும் முகமும் கழுத்தும் தோ ளும் முலைகளும் ஆகிய விவற்றின்மேல் பெய்த மழைத் துளிகளி ன் தோற்ற மென்போன் றிருந்ததென்னில் - மேகமும் தாமரையு ம் சங்கமும் பசியமூங்கிலும் யானைத் தந்தமுமாகிய இவற்றினின் றும் பிறந்த முத்தங்களைப்போலு மிருந்தன—எ-று. (௩)

மீனிறைவ னெனுமகர வுருவமுத்தன்னா ளசல மிசையிற்சே ர்ந்து, வானுலவு மழையருவி யுடலமுழு தையுமறைப்ப மறைந் துநின்றாள், எனமன மறிவரிய விறைவர்திரு முடிமிசையி லிருக் கவேண்டித், தானுமந்தச் சானுவியாம் பகீரதிதன் வடிவுகொண் ட தன்மைபோலும்.. *

(இ-ள்.) மீனங்களுக்கெல்லா மிறைவனென்று சொல்லுகின்ற மகரத்தினது உருவத்தினையுடைய முத்தையொத்த பார்வதியான வள் இமயமலையின் முடியிற்சேர்ந்து ஆகாயத்திற்பொருந்துகின் ற மழை யருவியானது உடலமுழுதையு மறைப்பத்தானதனுள் மறைந்ததிலுள் - அஃதெங்ஙன்போன் றிருந்ததென்னில், வராகமு ம் அன்னமுமாகிய இருவருக் அறிதற்கரிதாகவிருந்த பரமசிவத் தினது திருமுடியின்மீது தானுமிருக்க விரும்பி அந்தச் சானுவி யாகிய கங்கையினது வுருவத்தைக்கொண்ட தன்மைபோலு மிரு ந்தது—எ-று. (எ)

அக்காலந்தனி லிமயமலைமகளை யிமையவர்க ளணுகிப்போ ற்றி, மைக்காலு மழைத்துளியுங் கடுங்காலும் பொறுத் தொருகா லின் மலைமாபூன்றி, முக்காலந் தொறுமுமையே தவமியற்ற வுமக் கெளிதோ மொழியக்கேளு, மெய்க்காமன் றனையெரித்துப் பர னகலும் போதவர்பின் மேவினேமே..........................*

(இ-ள்.) தவஞ்செய்கின்ற வந்தக்காலத்தில் இமோர்ப்பர்வத ராஜபுத்திரியைத் தேவர்கள் வந்துகண்டுதுதித்து உமாதேவியே க ருமைநிறத்தை வீசாநின்ற மேகங்களாற்பெய்கின்ற மழையினையு ம் பெருங்காற்றையும் பொறுத்து ஒருகாலினை பூமிமுனையி லூன் றித் திரிகாலத்திலுந் தவஞ்செய்துகொண் டிருத்தல் தமக்கெளிய தோ எளியதன்று ஆதலால் யாஞ் சொல்லுதலைக்கேளுமம்மா சிவ பிரானுனவர் மன்மத னுடலையெரித்து அவ்விடத்தினின்று நீங்கிப் போகும்போது அவர் பின்னர் யாஞ்சென்றனம்—எ-று. (அ)

எங்களிடர் தவிர்த்தருள வுமையைமணஞ் செய்தருளு மெ ன்றேமீச, னங்ஙனவே புரிந்தினிமே லறுமுகனை யுமக்களிப்போ மகலுமென்றார், சங்கரியே நிருமந்தப் பெண்ணைசுற்றுந் தபசா ரச் சைலஞ்சாரு, மங்கலநான் டரிப்பனென மொழிந்து மலர் பொழிந்து மறமகிழ்ந்து போனார்.........................*

(இ-ள்.) சென்று ஐயனே எங்கள் துன்பத்தைநீக்கும் பொரு ட்டுப் பார்வதிதேவியைக் கலியாணஞ் செய்தருள வேண்டுமென் றோம் அதற்குப் பரமசிவம் அவ்வாறே கலியாணஞ் செய்து பி ன்பு ஆறுமுகத்தையுடைய குமாரக் கடவுளையும் உமக்கு ஈன்றரு ளுவோம் நீங்கள் செல்லுங்களென்றார் - ஆனதால் சங்கரியே

நீரும் அந்தப் பெண்ணைநதியாற் சூழப்பட்ட தபசாரசைலத்தை ச்சேரும் சிவபிரான் உமக்கு மாங்கலியசூத்திரந் தரிப்பனென்று சொல்லிமலர்மழைகளைச் சொரிந்து மநமகிழ்ந்து சென்றார்கள் என்றவாறு. (சு)

வானவர்க ளகன்றதற்பி னுமையவளுந் தவமொழிந்து வருத் தமாற்றிக், கானகமு நெடுவரையும் புறம்பனைத்துங் கடந்து பெ ண்ணைக் கரையின்மேவித், தேனமருந் தபசாரக் கிரியிலொரு தல த்திருந்து சிகரநாம, மான வொரு பதின்மூன்று முரைத்திறை யை நினைத்திருந்தா ளந்தவேலை .... *

(இ-ள்.) அத்தேவர்கள் தன்னைவிட்டு அகன்றுபோனபின்பு பா ர்வதிதேவியுந் தான்செய்யுந் தவமொழிந்து அதனாலுண்டாகிய வருத்தத்தை யாற்றிக்கொண்டு காடுகளும் மலைகளும் மற்றப் புற ம்புகளனைத்தையுங் கடந்து பெண்ணைநதியின் கரையின்கண்வந்து தேன்கூடுகள்பொருந்திய தபசாரக் கிரியின்கண் ஓரிடத்திலிருந்து அம்மலையினது நாமமாகிய பதின்மூன்றையும் சொல்லிச் சிவபி ரானைச்சிந்தித்துக்கொண்டு இருந்தனள் அந்தச்சமயத்தில்—எ-று.

பழமறையு மறிவரிய பதயுகமு மதளுடையும் பவளமேனி முழுதுமிள நிலவெறிக்கும் வெண்ணீறும் புயநான்கு முன்னூன் மார்பு, முழைமருவுந் திருக்கரமுஞ் சடைமுடியும் விழிமூன்று முமையாள்காண, மழவிடையின் மிசைத்தோன்றி மலைமயிலே யுனக் களிக்கும் வரமேதென்றான் .... *

(இ-ள்.) சிவபிரான் பழய வேதங்களினாலு மறிதற்கரிய இரண் டு திருவடிகளும் புலித்தோலாகிய வஸ்திரமும் பவளம் போன்ற திருமேனி முழுதும் இளஞ்சந்திரிகையை வீசாநின்ற திருவெண் ணீறும் சதுர்ப்புயமும் பூணுநூல் விளங்குகின்ற திருமார்பும் மா ன்றங்கிய திருக்கரமும் சடாமகுடமும் முக்கண்ணும் உமையவ ள் தரிசிக்கும்படி இளமையினையுடைய இடப வாகனத்தின்மீது தோன்றிப் பர்வதராசபுத்திரியே உனக்குத் தரத்தக்கவரம் யாது சொல்லுகவென்றார்—எ-று. (அ)

ஆரமுத மருந்திமையோ ரழிந்தாலு மொருக்காலு மழியா ய் போற்றி, வாரணமன் றுரித்தாலும் வாரணத்தை யளித்தருளு மருந்தே போற்றி, நாரணர் ஆரணரிறந்த விறுதியிலைந் தொழி

லொழித்து நடந்தாய்போற்றி, பூரணமாய் நிறைந்திருந் துமறை
க்குமறைந் திருக்குமொரு பொருளே போற்றி .... *

(இ-ள்.) இறப்பில்லாத கிடைத்தற்கரிய அமிர்தத்தையுண்ணுமின்
ற தேவர்கள் அழிந்து போனகாலத்தும் ஒருகாலத்திலேனு மழி
யாதவனேபோற்றி - அக்காலத்தில் தாருகாவனத்திருடிகள் செய்த
யாகத்திலுண்டாகி வந்தயானையைக் கொன்றுரித்துப் போர்த்தா
லும் ஒருயானையைப் பெற்றருளிய மருந்தேபோற்றி - நாராயண
னும் பிரமனு மிறந்துபோகுஞ் சர்வசம்மாரகாலத்தில் பஞ்சகி
ர்த்தியத்தையொழித்து நர்த்தனத் தொழிலைச்செய்ய நடந்தாய்
போற்றி - எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருந்தும் நான்குவேத
ங்களுக்குத் தெரியாது மறைந்திருக்கும் ஒப்பற்ற பொருளே
போற்றி—எ-று. (சு)

என்பணிந்து தோல்புனைந்து விடமருந்தி யெருதேறி யிரு
ப்பாய் போற்றி, யன்பினருக் கரம்பையருங் கற்பக நீழலுமுழு
து மளிப்பாய் போற்றி, வன்பினரு ரெரித்தாலு மூவருக்கன்றரு
ள்புரிந்த மணியே போற்றி, பொன்புனையுஞ் சடையானே தீர்த்
தமலை யுடையானே போற்றி போற்றி .... *

(இ-ள்.) எலும்பாபரணத்தை யணிந்து புலித்தோல் முதலிய
தோல்களை யுடையாகவுடுத்து ஆலகாலவிஷத்தையுண்டருளி இட
பவாகனத்தையூர்ந்து நிலை பெற்றிருப்பாய் போற்றி - அடியார்க
ளுக்கு அரம்பையர்களையும் கற்பக முதலிய பஞ்சதாருவி னிழ
ல் முதலிய இந்திரபோகமுழுதையுந் தந்தருளுவாய் போற்றி - ப
கைவரது திரிபுரத்தை யெரித்தாலும் அம்மூவருக்கும் அக்காலத்
தக் கிருபைசெய்த மாணிக்கமே போற்றி - பசும் பொன்னையொ
த்த சடைமுடியை யுடையவனே தீர்த்தகிரியை யுடையவனே
போற்றி போற்றி—எ-று. (௭0)

எற்றுயருங் கொடியானே யடியவருக் கேளியானே யிறை
யே போற்றி, கூற்றுவனை யுதைத்தருளுங் கொடியானே யருமறை
யின் கொழுந்தே போற்றி, போற்றியெனப் புகழ்ந்துமனக்
கருத்தை யெல்லா முரைத்தன ளிப்புவியை யீன்றுள், சாற்றுத
லுங் கொன்றையின னுனக்குமணந் தருவமென்று தழுவிக்கொ
ண்டான் .... *

(இ-ள்.) உயர்ந்த வேற்றுக் கொடியை யுடையவனே அடியவர்களுக் கெளியவனே கடவுளே போற்றி - இயமனை யுதைத்தருளிய கொடியவனே எழுதற்கரிய வேதக்கொழுந்தே போற்றி போற்றி யென்று புகழ்ந்து தன்மனத்தினுள்ள கருத்துகளையெல்லாஞ் சொல்லியருளினள் இவ்வுலகத்தை யெல்லா மீன்றவளாகிய வுமையானவள் - இவ்வா றுரைத்தருளலுங் கொன்றைமாலையையணிந்த பரமசிவம் உனக்குத் திருக்கலியாணத்தைத் தந்தருளுவோ மென்று சொல்லி யருளி யுமையைத் தழுவிக்கொண்டார்—எ-று. (கக)

மங்கை நெடுநாள்பிரிந்து கொங்கையினுற் றழுவுதலு மகிழ்ச்சியாகி, யங்கமெலா முருகிவழிந் திடுமதுபோற் கலந்துமுன்னை யாகஞ்சேர்ந்த, கங்கைமகன் மலைமகளைக் கண்டுபொறு தெதிரொழுந்த காட்சிபோலத், திங்களணி மணிமுடியா னிடத்தினில்வந் துதித்ததொரு தீர்த்தந்தானே .... *

(இ-ள்.) உமையானவள் நெடுநாளாகப் பரமசிவத்தை விட்டுப் பிரிந்து தனது திருமுலையினுற் றழுவிக் கொள்ளலும் சிவபிரான் மகிழ்ச்சியாகி தேகமெல்லா முருகி வழிந்திடுவதுபோலக் கலந்து ஆதியில் தன்னுகத்திற்கலந்து சேர்ந்த கங்கையென்னும் பெண்ணானவள் இமோர்ப்பர்வத புத்திரியைக்கண்டு மனம்பொறுது எதிராகவெழுந்துவந்த தோற்றத்தைப்போலத் திங்களையணிந்த வழகிய திருமுடியினை யுடையானிடத்தினில் வந்துதோன்றிய தொருதீர்த்தம்—எ-று. (கஉ)

இத்தீர்த்த முனக்களித்தோ மிதின்மூழ்குவார் நினைத்த வெல்லாங்கூடு, மெய்த்தீர்த்தந் தனக்கு முன்றன் பெயராகவுரைக்கவென்று விளம்பி வான்மே, லத்தீர்த்த கிரியானு மறைந்தனனப் பொழுதுமையா ளரனைவாழ்த்தி, யெத்தீர்த்தங் களும்புகழு மதின்மூழ்கி யிறைவிமண மெய்தினளே .... *

(இ-ள்.) உமையே யிந்தத்தீர்த்தத்தை யுமக்குக் கொடுத்தோம்- இந்தத்தீர்த்தத்தின் மூழ்குகின்றவர்கள் நினைத்த காரியங்களெல்லாங் கைகூடிவரும்- இந்த வுண்மையான தீர்த்தத்திற்கும் உன்னுடைய பெயரிட்டுரைக்கவென்று சொல்லி அத்தத் தீர்த்தகிரி யீசனு மாகாயத்தில் மறைந்துபோயினன் அக்காலத்தில் உமையவள்

சிவபிரானைத் துதித்து எந்தத் தீர்த்தங்களும் புகழாநின்ற அந்தத் தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்து பார்வதியானவள் திருக்கலியாணஞ் செய்துகொண்டனள்—எ-று. (கரு)

எண்ணரிய விறன்முருக னுதித்தனனன் றொருவேலை யீந்தா லின்னும், விண்ணவர்நா டழியாமல் காத்தருள்செய் வாயென வே விடையு மீந்தான், கண்ணுதலை யடிவணங்கி யறுமுகனு ம மருலகங் காவல்பூண்டான், மண்ணுலகிற் தீர்த்தகிரி பதின்மூன்று பெயருடனும் வழங்கிற்றன்றே............................ ✻


(இ-ள்.) நினைத்தற்கரிய வெற்றியினையுடைய முருகக்கடவுளுதித்தனன் - அக்காலத்தில் பரமசிவம் அவருக்கு ஒப்பற்ற வேலாயுதத்தை யீந்தனன் பின்னும் அவனைநோக்கி தேவர்களது நாடழிந்து போகாமல் காத்திரக்ஷிப்பாயென்று விடையுங்கொடுத்தான் - அம்முருகக்கடவுளும் சிவபிரானது திருவடிகளை வணங்கிச் சென்று சூரபதுமன் முதலிய அசுரர்களைச் சங்கரித்து தேவருலகத்தையாண்டருளினன் - இந்திவ்வுலகத்தில் தீர்த்தகிரியானது பதின்மூன்று திருநாமத்துடனும் வழங்கியது—எ-று. (கச)

ஐந்தாவது

உமைதீர்த்தச்சருக்கம்

முற்றிற்று.

ஆ. சருக்கம் - ௫ - க்கு - செய்யுள் - க௫அ.



சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.

ஆறாவது
திருநாமச்சருக்கம்.

மங்கலமாம் பதின்மூன்றுங் காரணப்பே ரைம்பூத வடிவினா
லே, தங்கியவைம் பூதமலைப் பெருமையினாற் பெருந்தீர்த்தச் சை
லமாகுந், திங்களணி சதாசிவனார் வடிவமென விளங்குதலாற் சிவ
வேதண்டங், கங்கைநதி வடபாலி லொருசடையிற் பெருகுதலாற்
கங்காகூடம்.. *

(இ-ள்.) தீர்த்தகிரிக்குவந்த மங்கலகரமாகிய பதின்மூன்றுபெயருங் காரணப்பெயராகும் - அஃதெவ்வாறெனில், ஐம்பூதவடிவினாலே பொருந்திய பஞ்சபூதமலையென்றும் - பெருமையினால் பெருந்தீர்த்த சைலமென்றும் - மூன்றாம்பிறையையணிந்த சதாசிவத்தினுருவமாகப் பிரகாசித்தலால் சிவவேதண்டமென்றும் - ஒரு சடையினின்றுங் கங்காநதியானது பெருகிவருதலாற் கங்காகூடமென்றும் பெயர்—எ-று. (க)

உத்தரத்தக் கணஞ்செறிந்த வெழுசடையாற் செடிலெனும்
பே ருடையதாகுஞ், சித்தரெல்லா முறைகையினாற் சித்தனிவா ச
ப்பேருஞ் சிறந்ததாகுஞ், சத்தமலை கடலெனவே முழங்குதலா ல
றிரந்தா பரவெற்பாகும், இத்தலத்திற் பிணியறுக்குஞ் செய்கை
யினாற் கதாபகமென் றிசைக்கும்பேரோ.................................. *

(இ-ள்.) உத்தரதிசையிலும் - தக்ஷிணதிசையிலும் - நெருங்கிய வேழுசடையினால் செடிலென்றுசொல்லாநின்ற பெயரையுடைய தாகும் - சித்தர்களெல்லா மங்கு வாசம்பண்ணுகின்றமையால் சி த்தநிவாசமென்னும் பெயரும் சிறப்பையுடையதாகும் - அலைக ளையுடைய கடலெனவே சத்தமுழங்குதலால் நிரந்தாபரமலையெ ன்றும் - இந்தப் பூமியின்கண் வியாதிகளைப்போக்குஞ் செய்கை யினால் கதாபகமென்றும் - சொல்லப்படும் பெயர்—எ-று. (உ)

சாடரிய துரிதமெல்லா மகற்றுதலாற் றுரிதஹரந் தவந்தா னென்று, கோடிபலன் கொடுப்பதினாற் றபசாரஞ் சோகமெல்லா ங் குலேக்கையாலே, காடமருஞ் சோகஹர முமைக்குறவா லிரா மேட்டங் கந்தனிநிமை, வோடவிதிற் றவப்புரிந்த கொடுமுடியாற் சுவாமிசிங்க முனாக்கும்பேரே..............................*

(இ-ள்.) நீக்குதற்கரிய பாவங்களையெல்லாம் போக்குதலால் து ரிதஹரமென்றும் - செய்த வொருதவமானது கோடிதவப்பல னைக் கொடுப்பதனால் தபசாரமென்றும் - சோகங்களையெல்லாங் கெடுக்கையால் சோகஹரமென்றும் - உமாதேவிக் குறவாயிருத் தலினால் இராமேட்டமென்றும் - குமாரக்கடவுள் பாவம்நீங்க இ ம்மலையில் தவஞ்செய்த வுச்சியினையுடையதாதலால் சுவாமிசிங்க மென்றும் - பெயர் சொல்லப்படும்—எ-று. (௩)

இப்பெயர்கள் பதின்மூன்றுந் தனித்தனியே நமவெனுஞ் சொல் லிசைத்துக்கூறி, லப்பொழுதே யதித்துசெய்த பவந்தீரு மரசருக்கு மரசராவர், முப்பொழுது மவைகளெலா நினைந்துமடி க் கூவிலே மூழ்குவார்க்குச், செப்பரியகங்கையிலே மூழ்குமதி ற் பதின்மடங்கு சித்திதானே .... *

(இ-ள்.) இந்தப் பதின்மூன்றுபெயர்களையுந் தனித்தனியாக ந மவென்னுஞ் சொல்லைப்பொருத்தி யுச்சரித்தால் அந்தக் காலத்தி லேயே யொருவ னதித்துசெய்த பாவங்களெல்லாநீங்கும் - அரச ர்க்கரசராகிய சக்கிரவர்த்தியுமாவார் - அத் திருநாமங்களையெல்லா ம் திரிகாலங்களிலும் உச்சரித்து மடுவிலாவது சுனையிலாவது மூ ழ்குவார்க்குச் சொல்லுதற்கரிய கங்காநதியிலே மூழ்குகின்றவர்க ளடையும் பலனைக்காட்டிலும் பத்துப்பங்கு அதிகமானபலன் சி த்திக்கும்—எ-று. (௪)

சோகமறுந் துயரகலும் வினைநீங்கும் பிறப்பொழியுந் துரி தநீங்கு, மாகமுறும் பிணிபோகுங் கல்விவரு நிலையுண்டா மழகு சேரும், ஏகமநத் தில்லாளு மறிவுடைய புதல்வருநல் லிசையுமா மெண், போகமுண்டாம் வீடுண்டாந் தீர்த்தமலைத் திருநாமம் பு கலுவோர்க்கே .... *

(இ-ள்.) சோம்பல்நீங்கும் - துன்பம்போம் - இருவினையுமகலு ம் - பிறப்பொழியும் - பாவங்களெல்லாமோடும் - சரீரத்திற்பொ ருந்திய வியாதிவிலகும் - கல்வி விருத்தியாகும் - நிலைமையுண் டாகும் - அழகுவரும் - மநதொத்தவில்லாளும் - அறிவுடையபுத் திரரும் - நல்லகீர்த்தியும் - உண்டாகும் - அஷ்ட்டபோகங்களும் வளரும் - மோக்ஷங்கிடைக்கும் - தீர்த்தகிரியின் பதின்மூன்று தி ருநாமங்களையுஞ்சொல்லித் துதிப்போர்க்கு—எ-று. (௫)


அகத்தியனு மணிவரைமேற் குதிக்குமிந்தக் கதைபசுந்தே னருவியாடி, மிகுத்தகளிப் புடன்விரும்பி யிராகவ குஞ்சரமுரை ப்பான் விரிஞ்சன்பாலா, நகத்திலுள்ள தீர்த்தமெல்லா மொருவ கையோ பிறிதுமுண்டோ நவில்வாயென்றான், பகுத்திரண்டு வ கையாமென் றிவைகளெல்லாம் விரித்துமுநி பகர்வதானான்...... *

(இ-ள்.) அகத்தியமாமுநியினது நாவாகிய வழகிய மலையினிட த்துநின்று குதித்துவராநின்ற இந்தச் சரித்திரமாகிய பசியதேன ருவியிலேமூழ்கி மிகுந்த பேராநந்தத்துட னாசைகொண்டு இராக வனென்னும் யானையானது சொல்லத்தொடங்கியது - ஓபிரமபு த்திரனே, இந்தத் தீர்த்தமலையிலுள்ள தீர்த்தங்களெல்லாம் ஒருவித மோ - அன்றி வேறுவிதமுண்டோ சொல்லி யருள்வாயென்றான்- இரண்டுவகையாமென்று பிரித்து மேற்சொல்லுஞ் சரித்திரங்களை யெல்லாம் விஸ்திரித்து அகத்தியமுநிவன் சொல்வானாயினான்- என்றவாறு. (சா)

ஆறுவது - திருநாமச்சருக்கம்

முற்றிற்று.

ஆ சருக்கம் - சா - க்கு - செய்யுள் - கசாச.



சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.

ஏழாவது

தீர்த்தச்சருக்கம்.

தாழ்வரையிற் கொடுமுடியின் மருங்கிலுள்ள தீர்த்தமெல்லா
ஞ் சாற்றும்போதி, லேழ்கடலும் வானகத்தி லுளமீனை யளவிடி
னு மெண்ணலாகா, சூழவத்து குரோசவெல்லை சிவனுருவா யி
ருக்குமந்தத் தூய்மையாலே, யாழிகுளங் கிணறேரி மடுவனைத்
துஞ் சிவதீர்த்த மாகுந்தானே.................................. *

(இ-ள்.) மலையினது அடிவாரத்திலும் சிகரத்திலும் அதன் பக்கங்களிலுமுள்ள தீர்த்தங்களையெல்லாஞ் சொல்லுங்காலத்தில் ஏழு சமுத்திரத்திலும் ஆகாயத்திலுமுள்ள மீனங்களை அளவிட்டுச் சொன்றாலும் அளவுசொல்லப்படாது அக்கிரியினைச்சூழ ஓர் யோசனை யளவினையுடைய வெல்லைவரையில் பரமசிவத்தின துருவமாகவிருக்கும் அந்தப் பரிசுத்தத்தினாலே அந்த வெல்லையிலுள்ள ஆறினையொத்த - குளம் - கிணறு - ஏரி - மடு - இவையனைத்துஞ் சிவதீர்த்தமாகும்—எ-று. (க)

நாளும்வளர் சடையில்வரு மொருதீர்த்த மதுவசிட்டர் நாமமாகு, நீளும்வட சடைக்கீழிற் கிழக்காக கௌரிகங்கை நிகழ்வதாஞ்செவ், வேளரிய வினைதொலைத்த தொருதீர்த்தந் தெற்குளதாம் விளம்பிற்கந்த, மாளுடையான் திருவருளாற் றென்புறத்தே வன்னிபெற்ற வரியதீர்த்தம்.......................*

(இ-ள்.) சதாகாலமுஞ் சடையினிடத்து நின்றும் வருமொருதீர்த்தம் அதுவசிட்ட தீர்த்தமென்னும் பெயரை யுடையதாகும் நீண்ட வடதுபக்கத்திலுள்ள சடையினின்றுங் கீழிறங்கிக் கிழக்காக வருமொரு தீர்த்தம் அதுகௌரி தீர்த்தமென்று பெயருடையதாகும் முருகக்கடவுளினது நீங்குதற்கரிய பாவங்களைத்தீர்த்த தாகுமொருதீர்த்தம் அதுதெற்கின் கண்ணுள்ளது அதற்குக் கந்த தீர்த்தமென்று பெயர் சொல்லப்படும் எம்மை யாளுடையானாகிய பரமசிவனது திருவருளினால் தென்புறத்திலே அக்கினிதேவன் பெற்றது ஒருதீர்த்தம் அது வன்னிதீர்த்தமென்று பெயருடையதாகும்—எ-று. (உ)

என்பெயரா மொருதீர்த்த மவைகளின்றென் புறமாக யினிமைகாட்டும், அன்புடனென் பெயரதனை லருச்சனை செய்யிலிங்கதாபரமதாகும், துன்பமற வதிலொருக்கான் மூழ்கிநினைத்தவர்க்குமனத் துயரந்தீரு, முன்பரிதாந் தமிழ்க்கடலும் வடகலையுந் தெளிந்தறிவின் முத்தியாவார்.......................*

(இ-ள்.) அத்தீர்த்தங்களின் தென்புறமாக என்பெயரா லொரு தீர்த்தமுண்டாயிருக்கின்றது அதனை யுண்பவர்களுக்கு இனிமையைத்தரும் அத்தீர்த்தக்கரையில் என்பெயரா லன்புடனே யருச்சனைசெய்த இலிங்கதாபர மொன்றுண்டு துன்பநீங்க வத்தீர்த்தத்தின் மூழ்கி யிலிங்கமூர்த்தியைத் தரிசிக்க நினைத்தவர்கட்கு மனத்தின் கண்ணுளவாகிய துயரங்களெல்லாந்தீரும் முன்பு தமக்குக் கற்றலரிதாக விருந்த தமிழ்க்கடலும் வடமொழிக் கடலுந் தெளிந்து அவ்வறிவினால் முத்தியை யடைவார்கள்—எ-று. (ஙு)

இந்தவகை தீர்த்தமெல்லா நினைத்திடினு முரைத்திடினு மிறப்புநீங்கு, மந்தமலை யடித்தருமண் ணிலைதீண்டி யகன்றவையுந் தீர்த்தமாகுங், கந்தமிகு மவையிலொன்றின் மூழ்கி வந்தோர்

வலப்பாதங் கழுவுந்தண்ணீர், சிந்துவிலும் யமுனையிலுங் கன்னியிலும் பெருமை பெற்ற தீர்த்தமாகும்.................... *

(இ-ள்.) இந்த வகைப்பட்ட தீர்த்தங்களையெல்லாம் மநத்தினுல் நினைத்திடினும் வாயினுற் சொன்னுலும் மரணயாதனை யவர்களைவிட்டு நீங்கும் - அந்தத் தீர்த்தகிரியினது அடிவாரத்திலுள்ள விருட்சங்களையும் மண்ணையும் இலைகளையும் தீண்டி நீங்கிப்போன நீர்களும் தீர்த்தங்களாகும் மணமிகுந்த அத்தீர்த்தங்களி லொரு தீர்த்தத்தின் மூழ்கிவந்தோரது வலதுபாதத்தைக் கழுவியதண்ணீரானது சிந்துநதியிலும் யமுநாநதியிலும் கன்னியாகுமரியிலும் பெருமைபெற்ற தீர்த்தமாகும்—எ-று. (ச)

பொருப்பினது மருங்காமங் கீழ்த்திசையி லிந்திரன்றன் பொய்கை தோன்றும், விருப்புடைய பெண்ணையில்வந் துதித்த தொரு தீர்த்தமதில் வினைகணீங்கும், உருப்பசியே முதலான வரம்பையரு மூழ்குவரவ் வுலகநாதன், குருப்பழியு நம்பினவனுடனுணித்த பவந் தீர்ந்தான் குளித்துத்தானே.................. *


(இ-ள்.) அந்தத் தீர்த்தகிரியினது பக்கமாகிய அழகிய கீழ்த்திசையிலிந்திர தீர்த்தமொன்று காணப்படும் யாவரும் விரும்புகின்ற பெண்ணையில் வந்துதோன்றிய தொருதீர்த்தம் இவைகளில் மூழ்குவோர்களது இருவினைகளு நீங்கும் உருப்பசிமுதலான அரம்பையர்கள் வந்து மூழ்குவர் அவ்வுலக நாதனுகிய இந்திரன் ஆசாரியனை மதியாததனு லுண்டானபாவமும் தன்னைநம்பிய விச்சுருவனைக் கொன்றபாவமும் அந்தத்தீர்த்தங்களில் மூழ்கி நீங்கினுன்-என்றவாறு. (ரு)

ஏழாவது

தீர்த்தச்சருக்கம்

முற்றிற்று.

ஆ. சருக்கம் - எ - க்கு - செய்யுள் - கூகூ.



சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.

எட்டாவது

இந்திரதீர்த்தச்சருக்கம்.

முற்காலந் தனிலொருநாள் பொன்னுடன் வெள்ளி பத்தனு
க்கு முனிவுண்டாகிச், சொற்காதி போகமெல்லாந் துறந்திடுவான்
பொருட்டவனுந் துறந்தான் பின்னர், நற்காம தேனுவும்பால்
மறுத்தது சிந்தாமணியு நலமும்போன, தெற்காளு நமன்போ
லு மவுணர்களா லமரரெல்லாஞ் சிதைவுற்றாரே .... *

(இ-ள்.) முந்நாளி லொருநாள் வியாழபகவானுக்கும் வெள்ளை யானையை யுடையவனாகிய இந்திரனுக்கும் வெறுப்புண்டாகி சுவர்க்கமுதலிய போகங்களையெல்லா நீங்கிவிடும் பொருட்டு அந்த வியாழபகவானும் மறைந்துபோனான் அவனை நீங்கிநின்றதால் நல்லகாமதேனுவும் பால்மறுத்தது சிந்தாமணி முதலிய செல்வமும் அவற்றால்வளரும் நன்மையும்போயின தென்றிசையை யாளுகின்ற நமனையொத்த அவுணர்களால் அமரரெல்லாம் அழிந்தனர்—எ-று. (க)

மந்திரியும் புரோகிதனுந் தூதனுஞ் சேனாபதியும் வருமொ
ற்றாளு, மைந்துபெருங் குழவியையு மந்தணர்நன் பினருடை

யா ரலகுறாலோர், தந்திரமா மருத்துவரொண் வசுக்களையு மாயம
ட்டுத் தணவாவேந்த, னிந்திரன்போ லிருப்பனிதிற் குறையிலந்த
விந்திரனு மிழிந்துபோமே .... *

(இ-ள்.) மந்திரியும் புரோகிதனும் தூதனும் சேனுபதியும் செ
ய்தியறிந்துவந்து சொல்லுகின்ற ஒற்றரும் ஆகிய ஐந்து பெரிய
பிள்ளைகளையும் அந்தணரும் நண்பினரும் சோதிட நூலுடையவர்
களும் தந்திரங்களையுடைய மருத்துவர்களும் அஷ்திட்ட வசுக்களு
மாகிய இவர்களையும் கூடுமானமட்டும் உபசரித்து கைவிடாத அ
ரசன் தேவேந்திரனைப்போல மகிமையோடு மிருப்பன் இந்த
விதிக்கு மாறுபடுவார்களாயின் தேவேந்திரனுயினும் குறைந்து
போவன்—எ-று. (உ)

அமரருல கவுணர்தங்க ளமருலகா யழிவதுகண்டமரர் கூடித்
தமரொனவே துவட்டாவின் மகனுன விச்சுருபன் றன்னைக் கூவி
யிமையவர்கோன் புரோகிதனென் றொருபெயரிட் டழைத்தனர்
பின் னிமையோர் கோமான், சமரமெலாங் கடக்கவொரு வச்சி
ரமாத் ததீசியென்பு சமைப்பித்தானே .... *

(இ-ள்.) தேவருலகம் அவுணரிருக்கு முலகமாக அழிவதைத்
தேவர்கள்கண்டு யாவருங்கூடி துவட்டாவென்னும் அவுணகுருவி
ன் மகனுன விச்சுருபன் றன்னையழைத்து தமராகக்கருதி இந்திர
னுடைய புரோகிதனென்று பெயரிட் டழைத்துவைத்துக் கொ
ண்டனர் பின்பு இந்திரன் யுத்தங்களிலெல்லாஞ் ஜெயிக்க வச்சிரா
யுதமாகத் ததீசிமுநிவனது என்பைச் சமைத்துக் கொண்டான்
என்றவாறு. (௩)

ஆயிர வோரம்படைத்த வச்சிரத்தை நூறுமகத் தரசனேந்
தித், தீயனவாம் பகைகடிந்து கற்பகநீழலி லிருந்து செருக்கு நா
வித், தூயனவா மவியுணவை யவுணருக்கு மளித்தனனத் துவட்
டாமைந்தன், நாயகனு மவற்தெயம் புலர்ந்ததிதழ் துடித்ததுமெ
ய் நடுங்கிற்றன்றே.......................................*

(இ-ள்.) அநேகங் கூர்மைபொருந்திய வோரங்களையுடைய வ
ச்சிராயுதத்தை நூறு அசுவமேதயாகங்களைச்செய்து இந்திரப்பட்
டத்தைப்பெற்ற வரசன் கையிற்றாங்கி கொடியனவாகிய பகைக

ளைக் கடிந்து கற்பகவிருக்ஷ நீழலிலிருந்து செருக்கோ டிருக்கு நாளில் விச்சுவரூபனைக்கொண்டு யாகஞ்செய்ய அந்த விச்சுவரூபன் அந்தயாகத்தில் பரிசுத்தமாகிய அவிப்பாகமாகிய வுணவை தேவர்களோடு அவுணர்களுக்கு மளித்தனன் அதைக்கண்ட அந்த யாகத்துக்கு நாயகனாகிய இந்திரனுக்கு இதயம்புலர்ந்து இதழ்கன் துடித்து மெய்நடுங்கிற்று—எ-று. (ச)

அங்கமெல்லா நெருங்கியகண் ணுயிரமுஞ் சிவந்தனதன் னுகத்துள்ளே, பொங்குகின்ற வெகுளியழ லடங்கா துள்ளினும் புறம்பிற் பொடித்தாலென்ன, செங்கையொடு கரமறைந்து புருவமெங்கும் நடம்புரியச் சிரித்துக்கூறுந் தங்கமணிச் சிவிகையொரு ஞாளிபெற்ற தனையதுநின் றலைமைதானே .... *

(இ-ள்,) பின்னுந்தன் தேகமெல்லா நெருங்கிய ஆயிரங் கண்களுஞ் சிவந்தன தன்றேகத்துள்ளே பொங்குகின்ற கோபாக்கினியான துள்ளேயடங்காது புறத்திலே முளைத்துவந்ததுபோலச் சிவந்த கைகளோடு கைகளையறைந்து புருவங்களெல்லாந் தேகமெங்கு நடனஞ்செய்யச் சிரித்து தங்கத்தினாலு மணியினாலு மியற்றிய சிவிகையை ஒருநாயானது பெற்றதுபோலு நின்னுடைய ஆசிரியத்தலைமையென்று சொன்னான்—எ-று. (ரு)

அச்சிரத்தை யதனாலே புரோகிதமா யிருந்ததினி ... மையுங் காணேன், வச்சிரத்தா லழிகவென வெறிந்தனனக் ... சமவன் வயிரத்தோளை, மெய்ச்சிரத்தை யரிந்துளத்தில் வெகுளிநெடுங் கனல்தாக்கி வெதும்பினாற்போற், பச்சிரத்தம் படச்சிவந்த தவன்றுதை யதுகேட்டுப் பதைத்துக்கூறும் .... *

(இ-ள்.) அவ்வாறுசொல்லி சிரத்தையில்லாமல் எனக்குப் புரோகிதனாக விருந்தது இப்பொழுது போதுமானது எ...வச்சிராயுதத்தா னீயழியக்கடவாயென்று எறிந்தனன் அந்தவச்சிராயுதமானது அந்த விச்சுவரூபனது வயிரம்பொருந்திய தோளையும் அவன் றலையையும் அரிந்து அவனதுள்ளத்தின் கண்ணுள்ள கோபமாகிய நெடிய அக்கினிதாக்கி வெப்பங் கொண்டதுபோல அவனது பச்சைரத்தப்படச் சிவந்தது அந்தச் செய்தியை அவன்பிதாவாகிய துவட்டாவென்பவன் கேள்விப்பட்டுப் பதைபதைத்துக் கூறுவன்—எ-று. (சு)

பாகசா தனற் கினிய புரோகிதமா யிருந்துநல்ல பலன் பெ
ற்றுயே, யேகனே யுனைக்குரவ னெனவறிந்தாற் குலிசமெடுத்
தெறிகு வானே, சோகவாரிதியி லெமைக் கிடத்தினவர் தமக்கு
மிந்தத் துயரெய்தாதோ, மேகவாகனற்கு முனை யெளிதாக விதி
த்தனரோ விதியினுரே .... *

(இ-ள்.) தேவேந்திரனுக் கினிமையான புரோகிதமாயிருந்து
நல்ல பிரயோசனத்தை யடைந்தாயே ஒப்பற்றவென்புதல்வனே
உன்னை யாசாரிய னென்றறிந்தால் வச்சிராயுதத்தை யெடுத் துன்
மே லெறிவானே என்னையிந்தச் சோகக்கடலில் வீழ்த்தினவர்க்கு
ம் இந்தத் துக்கஞ் சம்பவிக்காதோ மேகவாகனத்தை யுடையவ
னுகிய இந்திரனுக்கும் உன்னை எளியவனுகப் பிரமனுர் விதித்தா
ரோ—எ-று. (எ)

கோசமதா யிரங்களுக்குங் கோசமதாகிய வுடலைக் குறித்தி
லானே, நாசமதா யலைபுகுந்து பொன்னுட்டை யிழந்ததுமுன்
னுடிலானே, வீசரந்தான் முனிகுதலு மென்புதிரன் டிரங்கிய
வா றெண்ணிலானே, வாசவனுர் மறந்த தென்ன வரம்பையர்வா
யமுதநுகர் மறதிதானே .... *

(இ-ள்.) ஆயிரங் கோசங்களுக்கும் ஆயிரம் உறையாக விருக்கி
ன்ற தனுடலைக்குறித்து யோசித்தானில்லையோ தன்செல்வமெ
லாம் [illegible]விலே புகுந்தொளிக்கப் பொன்னுட்டை முன்னிழந்த
தையும் எண்ணினு னில்லையோ பரமசிவம் அந்நாளில் கோபி
க்கவும் எலும்புகளெல்லாந் திரண்டுபோனதால் துயருற்றதை நி
னைத்தானில்லையோ இவைகளையெல்லா மிந்திரன் மறந்துபோய
து யாதுகாரணம் அரம்பைமாதர்களது வாயமிர்தமாகிய கள்ளை
யுண்ட மறதிதானே—எ-று. (அ)

அறிவுடையோர் தமையடைந்தோர் பிழைசெயினும் பொ
றுத்தினிதே, யளிப்பார்மற்றைச், சிறியர்தமைச் சரணடைந்தோர்
நலஞ்செயினு மவற்கிறுதி செய்யாநிற்பர், நறைகமழும் பாலழ
வி லெரித்திடினு மடங்கியின்ப நல்கும் வேம்பு, குறைவறநீர் மிக
ச்சொரிந்து வளர்த்தாலு மிரதமன்றிக் கொடுத்திடாதே........*

(இ-ள்.) அறிவின யுடையோர் தம்மைவந் தடைந்தோர்கள்
குற்றஞ் செய்தாலும் அதனைப்பொறுத்து அவர்களுக்கு நன்மை

யேசெய்வார்கள் சிற்றறிவுடையோரைச் சரணகவந் தடைந்தவர் கள் நன்மைசெய்தாலும் அவரைக் கொலைசெய்வார்கள் அஃதெ ன்போலவென்னில் மணம் பரிமளிக்கின்ற பாலை நெருப்பின்கண் வைத்து எரித்தாலும் பால்குறைந்து இனிய மதுரத்தையே தரு ம்வேம்பானது குறைவற்ற நீரைச்சொரிந்து வளர்த்தாலுங் கைப் பான விரதத்தைத் தருதலன்றி மதுரமான விரதத்தைக் கொடாத துபோல—எ-று. (கூ)

வே று.

மிக்கசோகமா யிவையிவை விளம்பியோர் வினையாற் *
றக்க விந்திரற் கிறுதிசெய்திட வொரு தலத்திற்...... *
றெக்க ணக்கினி முதற்கனன் மூன்றையுஞ் செறித்து *
முக்கணன்முதற் றலைவரை யழைத்தனன் முறையால் *

(இ-ள்.) புத்திரசோக மிகுதியால் இவையிவைகளைத் தன்வாயா ற்சொல்லி ஒப்பற்ற வேள்விச்செயலால் தகுதியான விந்திரனுக் கு முடிவைச்செய்ய ஒருதக்கவிடத்தில் தெக்கணக்கினி முதலிய மூன்றக்கினியையும் சேர்த்து திரிநேத்திர தாரியாகிய உருத்திரன் முதலிய யாகத்தலைவரைக் கிரமமாக அழைத்தனன்—எ-று. (க0)

வஞ்சகத் தவிமகத்திலே நெடுங்கனல் வளர்த்திட் ... *
டஞ்சிடத்தினு மாகுதிபலகொடுத் தழலோன்...... *
நெஞ்சகத்திலும் விழியினு மிரண்டவி நிறைத்தான் *
நஞ்செனக்கொதி கொதித்தது புகைந்தது நவமாய் *

(இ-ள்.) அந்தயாகத்திலே வஞ்சகமாக நெடிய அக்கினியை வ ளர்வித்து நெய்யைச் சொரிந்து ஐந்திடத்திலும் பலவாகுதிகளை க் கொடுத்து அக்கினிதேவனது நெஞ்சினிடத்திலும் கண்ணினு ம் இரண்டாகுதிகளைக் கொடுத்தான் அவைகள் விஷத்தைப்போல ப் புதுமையாகக் கொதித்துப் புகைந்தது—எ-று. (கக)

இறுதிநாளிடிக் கோடிமே லெழுந்ததா மென்னக்... *
கறுவு கொண்டநா ருயிர மந்தகர் கடுப்பப்......... *
பொறிய ராவர சாயிரங் கோடிபேர் புனைந்து...... *
வறவி ருண்டமெய் யவுணன்வந் தெழுந்தன னதனில்

(இ-ள்.) அந்தயாகத்தில் உகாந்தகாலத்தி லிடிக்கும் கோடியிடி க்கு மேற்பட வெழுந்ததாமென்று யாவருஞ்சொல்ல கோபங்,

கொண்ட இலக்ஷம் எமனிவந்தாற்போல படப்பொறிகளையுடைய ஆயிரங் கோடியாரா வரசுகளைத்தரித்து மிகுதியுமிருண்ட வுடலையு டைய அவுணன் வந்தெழுந்தனன்—எ-று. (கஉ)

ஆரகுண்டலம் அரவினம் விருச்சிக வலங்கல்........*
வீரசங்கிலி புலித்தொடை யிவைகண்மேல் விளங்க *
வாரணங்களை யடுக்கிவாய்ப் புழைகளின் மடுத்துச் *
சேரவந்துவான் கங்கைநீர் பருகினன் றேக்க ......*

(இ-ள்.) அநேக வாபரணங்களும் குண்டலங்களும் சர்ப்பமாலைகளும் தேள்மாலைகளும் வீரசங்கிலியும் புலிமாலைகளும் ஆகியவிவைகளெல்லாந் தன்மேல்விளங்க யானைகளையெடுத்தடுக்கிவாயாகிய புழைகளிலிட்டுண்டு நெருங்கிவந்து ஆகாய கங்கையாகிய நீரைத் தேக்கிட வுண்டனன்—எ-று. (கங)

நித்த நித்தமோ ரம்படி தூரமெய்த் திமிர்ந்து......*
சுற்றுமிப்படி வளர்த்தனன் விருத்திரா சுரனென்...*
அற்ற நாமமும் விருத்தியாத் தரித்தன னுலகிற்......*
பெற்றதிண்கிரி யனையதோர் நெடுங்கதை பிடித்தான்*

(இ-ள்) நித்த நித்த மோரம்புசெல்லுந் தூரமுடலுயர்ந்து உடற்சுற்றும் இப்படியே பருமனாக வளர்ந்தனனாகி விருத்திரா சுரனென்று நாமமும் விருத்தியாகத் தரித்து உலகிற் பெயர்பெற்ற திண்ணிய மலைக்கொப்பாகிய வோர் நெடியகதையைக் கையிற் பிடித்தனன்—எ-று. (கச)

விளக்கு நீளெயி றிரண்டுமா மேருவில் வளைத்தா...*
னளக்க ரேழுமொன் றெனபோற் சுடர்விழி யகல...*
விளக்கு வானக மடைத்திட வளர்த்தனன் மெய்யைத்*
துளக்கி வானவர் சதமகற் கிவன்செயல் சொன்னார் *

(இ-ள்.) விளைவாகவிருக்கின்ற நீண்ட விரண்டுகோரைப் பற்களோடு மகமேருவையொத்த வில்லை வளைத்து எழுசமுத்திரமு மொன்றானதுபோல காந்தியினையுடைய விழியானது அகன்று ஆகாயத்திலிட்ட விளக்குப்போலப் பொருந்தியிருக்க வளர்த்தனன் அவனைக்கண்டு தேவர்கள் சரீரநடுக்குற்று இந்திரனுக்கு இவனது செயலைச்சொன்னார்கள்—எ-று. (கரு)

கண் டெதிர்ந்தனன் சுழற்றினன் கதையினைக் கையால்
சண்ட வாயுவாம் விசையினுற் கிரியெலாஞ் சாய்ந்த*
வெண்டி சாமுகத் திபங்களுங் குருதிநீ ரொடுத்த......*
தண்ட கூடமுஞ் சிதறின வமரர்பின் னிடைந்தார்...*

(இ-ள்.) இந்திரன் விருத்திராசுரனைக்கண்டு எதிர்த்தனன் அவன் கதாயுதத்தைக் கையினுலெடுத்துச் சுழற்றினன் - அதனது சண்ட மாருதத்தையொத்த விசையினுல் மலைகளெல்லாஞ் சாய்ந்தன- அட்டதிசையினுமுள்ள யானைகளும் - இரத்தநீராக்கக்கின அண்டகூடங்களுஞ் சிதறிப்போயின தேவர்கண் முதுகிட்டோடினுர்கள்—என்றவாறு. (கரு)

வே று.

விண்ணின ரோடினுர் விரைந்து பின்னுள ....*
கண்ணினு னிந்திரன் கண்டு வெம்பக ....*
டண்ணன்மே லுகைத்துவந் தவுணன் கைக்கதை... *
தண்ணுலா வச்சிரப் படையிற் றள்ளினுன் ....*

(இ-ள்.) அப்பொழுது தேவர்க்கள் முதுகுகொடுத்து வேகமாகவோடினுர்கள் - பின்னுலிருந்த ஆயிரங்கண்ணையுடைய இந்திரன் கண்டு தனது வெள்ளையானையை விருத்திராசுரன்மேற் செலுத்தி வந்து அவ்வவுணன்கைக் கதாயுதத்தைக் குளிர்ச்சிபொருந்திய வச்சிராயுதத்தாற் றள்ளினுன்—எ-று. (கள)

புரந்தரன் மீளவுங் குலிசம் பொற்புறும்............*
இருந்தடம் புயத்தினி லெறிந்து வாட்டினு.........*
னரிந்திடு மொருபுற மதற்கு முன்னமே...........*
விரிந்திடுந் தினந்தின மேரு வென்னவே ....*

(இ-ள்.) இந்திரன்பின்னும் வச்சிராயுதத்தையெடுத்து விருத்திராசுரனுடைய அழகோடு மிகவும் பருத்தபுயத்தில்வீசி யதனையறுத்தான் - அரிந்தபுயம் ஒருபுறத்தில்வீழ அதற்குமுன்னமே மேரு பருவதத்தைப்போல அப்போதைக்கப்போது முளைத்திடும்- என்றவாறு. (கஅ)

ஆண்டு நூ றுயிர மமர்விளைத் தலுங்..................*
காண்டகும் விருத்திரன் கழுத்து வீழ்ந்தில ....*

மீண்டவன் வளர்ந்திடு மெழுச்சி யாதென .... *
மாண்டபல் மகத்தினன் மநத்தி லெண்ணினன்...... *

(இ-ள்.) இந்திரன் விருத்திராசுரனோடு நூறுயிரவருஷம் யுத்த ஞ்செய்தும் காணத்தக்க விருத்திராசுரனது சிரசு வீழ்ந்ததில்லை பின்னும் பின்னும் அவன்முளைத்து யெழுவது யாதுகாரணமெ ன்று மாட்சிமைபொருந்திய பலயாகத்தையுடையவனாகிய விந்தி ரன் தன்மனத்தினு லாராய்ந்தான்—எ-று. (கக)

வெவ்விய யாகமுன் செய்த வேலையில்.................. *
வவ்வின ராகுதி மதியு மங்கியும்..................... *
அவ்விரு வருமவ னுகத் தாகியே...................... *
யிவ்வுரு வளர்த்தன ரென்று தேறினன்.................. *

(இ-ள்.) துவட்டா வென்பவன் முன்கொடிய யாகஞ்செய்த சமயத்தில் சந்திரனும் அக்கினிதேவனும் அவ்விடத்துநின்று அவி யாகுதி வாங்கினராதலால் அவ்விருவரும் அவன் சரீரத்திலிருந்து இவன்தேகத்தை வளர்வித்தனரென்று தெளிந்தான்—எ-று. (உ0)

தேறிய விந்திரன் திங்க ளங்கியை .... *
வீறுற வழைத்திவன் மெய்யை விடடுநீ ,............ *
ரேருக புறம்பென வேத்தினு னவன்................ *
கூறவும் வழியில குதிக்க வென்றனரி .... *

(இ-ள்.) இவ்வாறு தெளிந்தவிந்திரன் சந்திரனையும் அக்கினியை யும் பெருமை பொருந்த வழைத்து இந்தவிருத்திரனது தேகத் தைவிட்டு நீங்கள்புறத்திற் செல்லுங்களென்று துதித்தான் அவன் இவ்வாறுசொல்லித் துதிக்கவும் அதனைக்கேட்டு அவ்விருவரும் புற த்திற்குதித்து வரவழியில்லையென்று சொன்னர்கள்—எ-று. (உக)

வழியது திறத்திடில் வருகுவோ மெனு .... *
மொழியையும் விரித்தனர் முனியு மிந்திரன் ...... *
பழிதரு விருத்திரன் பாழி வாயிரு.................. *
கெழிபட வஞ்சகக் கிரியை செய்தனன்................ *

(இ-ள்.) அவ்விருவரும் நாங்கள்வருதற்கு வழியைத் திறந்துவி ட்டால் வருவோமென்னும்வார்த்தையை விரித்துச்சொன்னர்கள்

விருத்திரன்மீது கோபங் கொண்டிருக்கிற இந்திரனுனவனைப் பொல்லாங்குசெய்கின்ற அவனது குகைபோன்ற வாயை யிரண்டுபிளவுபட வஞ்சகமாக வொருகிரியை செய்தான்—எ-று. (உஉ)

விருத்திரன் பாழிவாய் விரித்து விண்ணின்மேற் ... *
கரத்தையு மெடுத்தனன் கணக் கிலாதநாள் .... *
வருத்திய வன்னியு மதியு மங்கவன் .... *
புரத்தினின் றகன்றுதம் புரத்தி லெய்தினுர்......... *

(இ-ள்) விருத்திரா சுரனுனவன் தனதுகுகை போன்ற வாயை விரித்து ஆகாயத்தினிடத்துக் கைகளையுந் தூக்கினுன் அளவற்றநாள் அவனுக்குள்ளிருந்து தேவர்களை வருத்திய அக்கினியுஞ் சந்திரனும் அவ்விடத்து அவன் தேகத்தினின்று நீங்கி தங்கடங்களுனையடைந்தனர்—எ-று. (உரு)

அன்றவ ரகன்றபி னவுணர் கோமகன் .... *
றன்னெரு வளர்ச்சியும் வலியுந் தாழ்ந்தது .... *
முன்னமே யெறிந்திடு மூரி வச்சிரஞ்.................. *
சென்னியை யரிந்துகீட் டிசையி லிட்டதே......... *

(இ-ள்·) அவரன்று தன்னுடலைவிட்டு நீங்கிப்போனபின்பு அவுணர்களுக்குக் கோமானுகிய விருத்திராசுரனது ஒப்பற்ற வளர்ச்சியும் அவனது வல்லமையுங் குறைந்துபோயிற்று - அந்தருணத்தில் இந்திரன் எறிந்த வலியினையுடைய வ்ச்சிராயுதமானது அவன் சிரத்தையரிந்து கீழ்த்திசையிலிட்டது—எ-று. (உச)

வரமதா சலத்திறை மகிழ்ந்து போயினுன் .... *
திரமதா யிமையவர் திரண்டு வாழ்த்தினர்............ *
முரணிய சூரனை முன்பு செற்றிடும்................. *
பிரமபா தகமவன் பின் பிடித்ததே.................. *

(இ-ள்.) மேன்மைபொருந்திய வெள்ளையானைக் கிறைவனுகிய விந்திரன் மகிழ்ந்து தன்னிடத்திற்போயினுன் இமையவர் திரமதாகக்கூடி இந்திரனைத்துதித்தார்கள் - அப்பொழுது தன்னுேடுமாறுபட்ட விருத்திராசுரனை முன்புகொன்ற பிரமபாதகமானது பின்னேவந்து இந்திரனைப் பிடித்துக்கொண்டது—எ-று. (உரு)

அஞ்சியே யத்தடத் தணுகி யிந்திரன்............... *
தஞ்சமாய் மூழ்கினன் வினையைத் தள்ளினன்...... *
கஞ்சமார் மலர்த்தடக் கரையில் மேவினர் .... *
பஞ்சபா தகமும்வேர் பறிந்து போகுமே......... *

(இ-ள்.) இந்திரனப் பிரமபாதகத்துக்கஞ்சி அந்தத் தீர்த்தகிரியிலுள்ள தீர்த்தத்தையடைந்து அதில்மூழ்கித் தன்னைப்பிடித்த பிரமபாதகத்தை நீக்கினன் தாமரைமலர்களையுடைய அத்தடாகத்தினது கரையை யடைந்தவர்களது பஞ்ச பாதகங்களும் வேர்பறிந்து போகும்—எ-று. (உக)


எட்டாவது

இந்திரதீர்த்தச்சருக்கம்

முற்றிற்று.

ஆ சருக்கம் - அ - க்கு - செய்யுள் - ககரு.





சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.

ஒன்பதாவது

எமதீர்த்தச்சருக்கம்.

இத்தடத்தின் சிறப் பிருக்கத் தெற்கிலே............ *
யத்தியம் பள்ளமீ தமரர் தொட்டது............*
முத்தியுஞ் சித்தியு மளிக்கு மூழ்கினர் ....*
சத்திய மதன்பெயர் தரும தீர்த்தமே............*

(இ-ள்) இந்திர தீர்த்தமென்னும் இந்தத் தடத்தினது சிறப்பு இப்பொழுது சொல்லி வந்தமட்டு மிருக்க இதன்மேல் தென்றிசையில் அத்தியம் பள்ளமென்று சொல்லாநின்ற இடத்தில் தேவர்களாலே தோண்டப்பட்டது அத்தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்தவர்கட்கு அஷ்ட சித்தியும் மோக்ஷமும் தரும் இதுசத்தியம் அதன்பெயர் எம தருமதீர்த்தமென்று சொல்லப்படும்—எ-று. (க)

சன்ம மானவைக் கெலாங் கரிக ளெண்ணிரண்......*
டன்னிய மன்றுதிக் கைந்து பூதங்கள் ....*
மன்னுயிர் பகலிரா மதியு மாதவன்............*
உன்னிய காலமோ டுபய சந்தியே ....*

(இ-ள்.) கர்மங்களுக் கெல்லாஞ் சாக்ஷியாயுள்ளது பதினொன்று சொல்லப்படும் - அவைகளன்னியமன்று - திக்கைந்து - பூதங்களைந்து - உயிரொன்று - பகல் இராவொன்று - மதியொன்று - ஆதவனொன்று - நினைக்கின்ற காலமொன்று - காலை மாலையொன்று - ஆகிய பதினொறும்—எ-று. (உ)

இனத்திறுங் கரிகளென் னிரண்டுங் காணவே...... *
மனத்தினு னுரையினல் வடிவினல் வந்த............ *
கனத்த தீவினையெலாங் காலன் பொய்கையி ...... *
னினைத் துரைத் தாடினர் நீங்குவார்களே............ *

(இ-ள்.) இவ்வினத்தினல் சாக்ஷிகளாகிய இப்பதினொறுங் காணும்படி மனத்தினலும் வாக்கினலும் காயத்தினலும் சம்பவித்த பெரிய தீவினைகளெல்லாம் எமதீர்த்தத்தில் தான்செய்த தீவினையை நினைத்து அவைகணிங்க வேண்டுமென்று வாயாலுரைத்து ஸ்நாநஞ் செய்தவர்கள் அத்தீவினையினின்று நீங்குவார்கள்—எ-று. (ங)

வல்வினை யகற்சியு மறவிப் பொய்கையி .... *
னல்வினை வளர்ச்சியு நவிற்றிப் பின்னருந்............ *
தொல்வினைப் பயன்களுந் தொலைக்கு மாற்றலு ... *
வில்வினை யவனுடன் விளம்ப லுற்றனன்............ *

(இ-ள்.) எமதீர்த்தத்தில் மூழ்கினவர்களது தீவினைப்பய னீங்குதலையும் நல்வினைப்பயன் மிகுதலையும்சொல்லி பின்னும் பழமையாகவந்த தீவினைப்.பயன்களும் நீக்குகின்ற அதனது வல்லமையையும் வித்தொழிலில் வல்லவனுகிய இராகவனேடு சொல்லத் தொடங்கினன்—எ-று. (ச)

புண்ணிய பலன்களைப் புகலி லாயிரக்............... *
கண்ணின னிவனெனக் கனக நாட்டினிற்............ *
றண்ணிய கற்பகத் தருவி னிழலில் .... *
விண்ணவர் தொழுமணி விமானத் தெய்தியே...... *

(இ-ள்.) அந்த எமதீர்த்தத்தில் மூழ்கினவர்களது புண்ணியப்பலன்களைச் சொல்லுங்காலையில் ஆயிரங்கண்களையுடைய இந்திரனிவனெனப் பொன்னுலகத்தில் குளிர்ச்சி பொருந்திய கற்பகத்தருவினது நிழலின்கண் தேவரியாவருந்தொழ இரத்தின சிம்மாதனத்திலிருந்து—எ-று. (ரு)

அரம்பையர் நிரந்தர மாட வாங்கவர்............... *
குரம்பையி னிளவெயில் கொழிக்குஞ் செம்மணி... *
கரும்பமு தொழுகிய கவிரின் செவ்விதழ்......... *
திரும்பிய விடந்தொறுஞ் செக்கர் வீசவே........ *

(இ-ள்.) அரம்பைமாதர்கள் நாள்தோறுமெதிர்நின்று நர்த்தனஞ்செய்ய அவ்விடத்தில் அவ்வரம்பையர்களுடைய சரீரத்திலணிந்திருக்கின்ற சிவந்தமாணிக்கவாபரணங்கள் இளவெயிலைவீசக் கரும்பினது இரதமும் அமிர்தத்தினினிமையும் போன்ற முருக்கம்பூவையொத்த சிவந்த அதரமானது அவர்கள் திரும்பியவிடங்கடோறுஞ் செய்யவொளியைவீச—எ-று. (௬)

வீங்கிய தனத்தியர் விரித்து வீசிட..........*
வோங்கிய கவரிக ளுதவு காலினாற் .... *
றூங்கிய கற்பகச் சாதி மாலையிற்........... *
றேங்கிய புதுமதுத் திவலை சிந்தவே.........*

(இ-ள்.) பூரித்த தனத்தையுடைய் தேவமாதர்கள் சாமரையை விரித்து வீச மேலோங்கியவச்சாமரையானவைகள் உதவிய காற்றினால் இந்திரன் மார்பிற்றூங்கிய கற்பகவிருக்ஷத்தினதுயர்ந்தமலர் மாலையினிறைந்த புதியதேன்றிவலைசிந்த—எ-று. (௭)

இருப்பது தொலைந்தபி னிந்த மண்ணின்மேல் ... *
விருப்புடை யாக்கையும் புகழும் வீரமும்......... *
பொருப்பென வுயரிய குலமும் போகமும்...... *
வரப்பறு கல்வியும் வாழ்வு நல்குமே.......... *

(இ-ள்.) இந்திரனுதற்குக் காரணமான புண்ணிய மிருப்பதுக்ழிந்தபின்பு இந்த மண்ணுலகத்தினிடத்துத் தான்விரும்பிய தேகமுங் கீர்த்தியும் வீரமும் மலையைப்போலு முயர்வானகுலமும் இராஜபோகமும் அளவில்லாத கல்வியும் நல்லவாழ்வும் தரும் —என்றவாறு. (௮)

கூடசான் மலியுடன் கும்பி பாகமு .... *
நாடருங் கால சூத்திரத்தி னண்ணலும் .... *
வாடுற ரௌரவ மிரண்டு வைகலுங் ....*
கீடவன் குழியினிற் கிருமி யுண்ணுமே..........*

(இ-ள்.) இந்நல்வினைப்பயனுங் கழிந்து தீவினைப்பயன் அனுபவிக்கவந்தகாலத்துக் கூடசான்மலியென்னு நரகத்தோடு கும்பிபாகமென்னு நரகமும் நாடுதற்கரிய காலசூத்திரமென்னு நரகத்திலும் பொருந்தியிருத்தலும் இஃதன்றி வாட்டமுற இரௌரவத்தில் இரண்டு வகையும் புழுக்கணிறைந்த கொடியநரகக்குழியினிற் கிடந்து புழுக்களினாலே யுண்ணப்படுவர்—எ-று. (௯)

கொடிய வல்வினைப் பயன்குறைந்த வாயுளும் ......*
மிடியது திரட்சியும் வெய்ய யாக்கையு .... *
மடிமையு மிழிகுல மரபும் வஞ்சமு .... *
முடலுறு பிணிகளு முழைக்குத் துன்பமும் ...... *

(இ-ள்.) கொடுமையான தீவினைப்பயனால் குறைந்தவாயுளும் தரித்திரத்தினது மிகுதியும் வெப்பத்தாற்புழுங்கிய தேகமும் சோம்பன்மிகுதியும் இழிந்தகுலமரபும் வஞ்சமும் தேகத்திற்பொருந்திய நோய்களும் இவைகளால் வருத்தப்படுகின்ற துன்பமுமாக—என்றவாறு. (௧௦)

நாலெழு கோடிகா லரக மிப்படி ....*
மேலதி லழுந்துவார் வினையிழைத்த பேர் .... *
காலருந் தூதரு மவர்கள் கண்முனே .... *
சூலமுங் கயிறுமாத் தோன்று வார்களே .... *

(இ-ள்.) இவ்வாறு இருபத்தெட்டு கோடிகாலம் இந்தப்பூமியிலிடத்து நரகத்திலழுந்திக் கிடப்பார்கள் தீவினையைச்செய்த பேர்கள் அவர்கள் கண்களின்முன்னே காலரும் தூதர்களும் சூலாயுதமும் பாசக்கயிறுங்கொண்டு காணப்பட்டுப் பற்றப்படுவார்கள்—என்றவாறு. (௧௧)

வாளியின் முனையடர் வழியின் மாசுணத் ....*
தேளிடை விடாநெறி சேணிற் செங்கன .... *
லாளி வெம்புலி யடரத்தி ஞாளியுங்..............*
கூளியும் விருத்துணக் கொண்டு போவரால்..........*

(இ-ள்.) இவ்வாறு எமதூதர்கள்பற்றிப்பூமியில் நட்டிருக்கும் அம்புராசியின்முனை நெருங்கியிருக்கின்ற வழியில் பாம்புகளும் தேளுகளும் இடைவிடாது தங்கியிருக்கின்ற நெறியில் நெடுந்தூ

ரமளவும் சிவந்தவக்கினியும் ஆளிகளும் கொடியபுலிகளும் நெருங்கியயானைகளும் நாய்களும் பேய்களும் ஆகியவிவைகளெல்லாம் விருந்துசெய்யக் கொண்டுபோவார்கள்—எ-று. (௧௨)

ஒழுகிய மூளை சீயுதிர வூற்றிலே .... *
முழுகிட விடுவர்தீ முகத்தில் வீசுவர் .... *
விழிகளை நீக்குவ ருடலை வீக்குவ .... *
ரழலுறக் கூட்டுவர் செக்கி லாட்டுவர் .... *

(இ-ள்.) கைக்கொண்டு போய் ஒழுகாநின்ற மூளையும் சீயும் உதிரமுமாகிய வூறலிலே மூழ்கும்படி விடுவார்கள் நெருப்பையெடுத்து அவர்கண்முகத்தில் வீசுவார்கள் கண்களைப் பிடுங்குவார்கள் அவர்களுடலைக் கயிற்றாலிறுக்கிக் கட்டுவார்கள் அக்கினிக்குழியிற் போடுவார்கள் செக்கிலிட்டாட்டுவார்கள்—எ-று. (௧௩)

கற்பறு மகளிர்கண் கழுகிற் கூட்டுவர் .... *
வெற்பினின் றுருட்டுவர் கதையில் வீட்டுவ .... *
ரொற்புட வுரலில்வைத் திடிப்ப ரொண்ணெயி ...... *
லற்பக லெரியில்வைத் தலைக்கி வேரோ............. *

(இ-ள்.) கற்பில்லாதமாதர்களுடைய கண்களைப்பிடுங்கிக்கழுக்களையுண்பிப்பர்-மலைகளின்மீதுநிறுத்தி அதினின்று முருட்டுவர்-கைக்கதைகளினாலடித்துக் கொல்லுவர்-என்போடு கூடியவுடலையுரலிலிட்டு உலக்கையாலிடிப்பர் - இராவும் பகலும் எண்ணெய்க் கொப்பரையிலிட்டு அக்கினியின்மீதுவைத்து எரித்துப் பைசாசங்களுக்கு விருந்திடுவார்கள்—எ-று. (௧௪)

குரம்பையின் பசிக்கவர் குடரை நல்குவார்......... *
உரம்பெறு நீர்நசைக் குதிரமீகுவார்... .... *
நரம்பினை நிகழ்த்துவர் நடனங் காணுவ............ *
ரிரும்பினை விரலுறு மேற்றி வைப்பரோ............*

(இ-ள்.) அவரதுடற்பசிக்கு அவர்களதுகுடலையே கொடுப்பர் மிகுதியானநீர் வேண்டுதலுக்கு அவர்களதுதிரத்தைக் கொடுப்பார்கள் அப்பாபிகளது நரம்பினைத் தளர்த்துவார்கள் அவர்கள் ஆடுநடனத்தைக் காணுவார்கள் இரும்பூசியை யவர்கள் விரல்கடோறு மேற்றிவைப்பார்கள்—எ-று. (௧௫)

மற்றுள வாதையும் வகுத்துக் கூறினுற்............... *
சொற்றிடு நாவையுஞ் சுடுமேதன்றியே.................. *
செற்றிடும் வினவினர் செவியு மாதலாற்............. *
குற்றமா னவைகடீர் நெறியைக கூறுவேன்.......... *

(இ-ள்.) மற்றுமுளவாகிய எமதண்டனையை விரித்து யான் சொல்லுவேனுயின் சொல்லுகின்ற என்னுவையுஞ்சுடும்அதுவுமல்லாமல் கேட்பவர்களுடைய செவிகளையும் உபத்திரவப்படுத்தும் ஆகையால் அக்குற்றமானசெய்கை நீங்குகின்றவழியைச் சொல்லுகின்றேன்—எ-று. (கசு)

முந்திய யுகத்தினின் முருகன்றாதையார்............ *
சுந்தரப்பணிவிடைசெய்யுந் தொன்மையான்...... *
புந்தியிலருள்பொழி புட்பதந்தனிவ்............... *
வந்தகனிருந்தபே ரவைக்கு நண்ணினுன்............ *

(இ-ள்.) முந்தியயுகமாகிய திரேதாயுகத்தில் முருகக்கடவுளினது பிதாவாகிய பரமசிவத்தின் அழகான பணிவிடைகளைச் செய்துவந்த ஓர்பெரியவனுகிய தனதுள்ளத்தில் கிருபையைப்பொழியாநின்ற புட்பதந்தமுநிவனென்பவன் இந்த யமதருமராஜனிருந்த பெரியசபையினிடத்து அடைந்தான்—எ-று. (கஎ)

புட்பவந்தனை செய்துபுட்பதந்தனை .... *
பெட்புறுஞ்சமனெரு பீடத்தேற்றியே .... *
நட்புடனினியன நவிற்றினுன் பல................... *
சட்பத முறங்கிய தாமமார்பனே..................... *

(இ-ள்.) தன்னைவந்தடைந்த புட்பதந்தமுநிவனது பாதங்களில் மலர்களாலருச்சனைசெய்து வணங்கிப் பெருமைபொருந்திய யமனுனவன் அவனை யோராசனத்தி லிருக்கச்செய்து மிகுந்த நண்புடனே அப்பெரியவனேடு இனியனவாகப் பேசினுன் அநேக வண்டுகள் கண்ணுறங்குகின்ற மலர்மாலைகளைத்தரித்த மார்பினையுடைய ஸ்ரீராகவனே—எ-று. (கஅ)

கூற்றன தவைக்குமுன் னெருவன் கோளுடன்...... *
மேற்றிகழ் தெய்க்கடத் தமிழ்ந்தி வெந்திடத்...... *
தோற்றிய செவி விழி துண்டம் வாய்தொறு....... *
மேற்றிய விருப்புல கெரியைச் சிந்தவே............. *

(இ-ள்.) யமனது சபைக்குமுன்பாக வொருவன் துன்பத்தோடு தீயின்மீதுவிளங்காநின்ற நெய்க்கொப்பரையி லமிழ்ந்திவேவ அவனதுதோன்றுகின்ற செவிகள் - கண்கள் - மூக்கு - வாய் - ஆகிய விவ்விடங்கடோறும் - ஏற்றிய - இருப்பலகானது - எரியைச் சிந்த—எ-று. (௧௯)

பொரிவது கண்டனன் புட்பதந்தனு............... *
மரகர விவனெவ னறைக வென்றனன்............. *
மருவிய கொடும்படை மறலி யையனே............ *
தெரிகில திவன்செயல் திசை முகற்குமே......... *

(இ-ள்.) அவ்வாறு பொரிகின்றதை புட்பதந்தமுநிவன் பார்த்து அரகர இவன்யாவன் சொல்லவேண்டு மென்றனன் அதைக் கேட்டுஅங்ஙனமருவியிருந்த கொடிய படையினையுடைய யமனானவன்ஐயனே யிவனதுசெயல் பிரமனுக்குந் தெரிந்ததில்லை-எ-று.

யானறிவ தற்குமுன் னெரிகின்றுனிவ............... *
னூனழல் விடுத்திடு முறுதி கண்டிலேன்............ *
ஆனமர் கொடியின னருளி னல்லதிம்............. *
மானுடன் படுந்துயர் மாற்றலாகுமோ............ *

(இ-ள்.) இவன் யானறிவதற்குமுன் னிந்தவெண்ணெய்க் கொப்பரையி லெரிகின்றான் இவன்தசை இவ்வழன்மயமாகிய கொப்பரையில் விடுத்தவுறுதியை யறிந்தேனில்லை இடபக்கொடியையுடைய பரமசிவத்தின் கிருபையாலல்லது இந்தமானுடன் படுந்துயரத்தை நீக்குதற்குக் கூடுமோ—எ-று. (௨௧)

என்றலு மெழுந்திவ னிடுக்கண் மாற்றுவான்......... *
சென்றனன் கையிலையிற் செறிந்து போற்றியே ... *
யன்றவன் படுந்துய ரனைத்துங் கூறினன்............ *
பொன்றரும் புகழினன் புட்ப தந்தனே............. *

(இ-ள்.) யமதருமராஜன் இவ்வாறு சொல்லலும் அழியாதபுகழினை யுடையவனாகிய புட்பதந்தனென்னு முநிவன் அவ்விடத்தினின்றுமெழுந்து இவனதுதுன்பத்தை நீக்கும்பொருட்டுக் கைலாயத்திற்குச் சென்றவனாகிப் பரமசிவத்தின் முன்னின்று அவனைத்துதித்து அப்பொழுது அவன்படுகின்ற துன்பமனைத்தையும் அவரோடுகூறினன்.—எ-று. (௨௨)

அடியவ னுரைசெய வமலன் கூறுவான்............ *
படியினம் பூசனைக் குரியபல் பொருள்............ *
திடமுட னுகர்ந்திடுந் திமை யாலவன்............*
கொடியசெந் தழலிடைக் குளிக்கின் றானரோ...... *

(இ-ள்.) புட்பதந்தனென்னு முனிவரனிவ்வா றுரைசெய்யப் பரமசிவன் சொல்வானாயினான் அவன் பூமியினிடத்து நமது பூசனைக்குரியதாகிய பலபொருள்களை யஞ்சாம லனுபவித்த குற்றத் தாற்கொடுமையான சிவந்ததீயிலே மூழ்குகின்றான்—எ-று.(உங)

அன்னவன் பேருரைத் தவரு மத்துயர் .... *
மன்னுவ ரிதுதனை மறக்க வென்றனன் .... *
பின்னரு மிறைவனைப் பெரிது போற்றியே.........*
பொன்னிகர் வடமொழி மாலை பூட்டினன் ... . *

(இ-ள்.) ஆதலால் அத்தன்மையானவனது நாமத்தை வாயினாற் சொன்னவரும் அவனனுபவிக்குந் துன்பத்தையே பொருந்துவர் ஆதலால் இதனைமறந்துவிடக் கடவாயென்று பரமசிவன் சொன்னான் அதன்பின்னரும் புட்பதந்தமகாமுனிவன் பரமசிவத்தை மிகுதிபுகழ்ந்துதித்துப் பொன்னைப்போலும் அருமையான வடமொழிமாலைசூட்டினான்—எ-று. (உச)

புரகரன் மகிழ்ந்துபின் புட்பதந் தனை...............*
வரமினி யருளுவே மகிழ்ந்து கேளென .... *
முருகலர் தொடையாய் முன்னஞ் சொன்னவ .... *
னெரியழற் கடாரம்விட் டேற வேண்டுமே ....*

(இ-ள்.) அதனைக்கேட்ட திரிபுரதகனனாகிய பரமசிவஞ்சந்தோஷித்துப்பின்பு புட்பதந்தமகாமுனிவனைப்பார்த்து நீகேட்கும்வரங்களை யிப்பொழுதருளுவேம்மகிழ்ச்சியோடு கேட்பாயென்று சொல்ல வாசனைபொருந்திய கொன்றைமலர்மாலையை யுடையாய் யான்முன்னஞ்சொல்லிய அவன் எரிகின்ற அழற்கொப்பரையைவிட்டு முத்தியடையவேண்டுமென்றனன்—எ-று. (உரு)

தந்தனம் வரமவன் றன்குலத்தி லோர்..............*
மைந்தர்க ளாயினு மகளி ராயினுஞ் .... *
சிந்தையின் மகிழ்ச்சியாய்த் தீர்த்த வெற்பிலே...... *
யந்தமி றடம்புகுந் தாடத் தீருமே.............. ....*

(இ-ள்.) அவ்வாறே யுமக்கு வரந்தந்தனம் அந்தப்பாபியின் குலத்திலே ஒருமைந்தர்களாயினும் ஒருபெண்களாயினும் மநமகிழ்ச்சியோடு தீர்த்தகிரிக்குச்சென்று அதிலுள்ள எமதீர்த்தத்திலிறங்கி ஸ்நாநஞ்செய்ய அப்பாபந்தீர்ந்து முத்தியடைவன்—எ-று.

அவ்வகை புரிந்தவ னகத்தை தீமொன .... ✻
வெவ்விட மருந்தினன் விடை கொடுத்தனன் ... ... ✻
செவ்விதிற் புவியிடஞ் சேர்ந்தரன் பொருள் ...... ✻
வவ்விய பாதகன் மரபிற் றோன்றியே............. ✻

(இ-ள்.) அப்பிரகாரம் நீயேசெய்து அவன்பாவத்தை நீக்குவாயென்று கொடியவிஷத்தை யுண்டவனாகிய பரமசிவன் உத்திரவு கொடுத்தனன் அவ்வாறேபுட்பதந்தமகாமுநிவன் அழகாகப்பூமியினிடத்தில்வந்து பரமசிவத்தினது பொருளையபகரித்த பாதகனுடைய குலத்திலே பிறந்து—எ-று. (உள)

பூரண வறிவினாற் புட்பதந் தனு ....✻
மேரணி யந்தகன் றடத்தி லெய்தியே ....✻
நீரிடை மூழ்கின னவனு நென்னலி .... ✻
னூழல் மூழ்கின னதுவிட் டேறினான் .... ✻

(இ-ள்.) புட்பதந்தமகாமுநிவன் தனது பூரணவறிவினால் அந்தகனது அழகுபொருந்திய தீர்த்தத்திற்சென்று அந்த நீரினிடத்து மூழ்கினான் அந்தப்பாவியும் முன்ன மூழ்கியிருந்த நிறைந்த தீயினின்று நீங்கிக்கைலாய மலையிலேறினான்—எ-று. (உஅ)

ஏறிய வளவிலங் கிடப மெய்தியே .... ✻
தேறினன் கையிலைபுக் கிறையை யேத்திட .... ✻
வாறணி கடவுளு மவற்கு ருத்திரப் .... ✻
பேறது கொடுத்தனன் பெருமை யெய்தினான்...... ✻

(இ-ள்.) கைலாய வரையிலேறிய வளவில் அவ்விடத்திலுள்ள அதிகார நந்தியையடைந்து வணங்கித் தெளிந்தனனாகி கைலாயத்துண்ணுழைந்து பரமசிவத்தைத் துதிக்க அந்தக்கங்கையைத்தரித்த பரமசிவமும் அவனுக்கு உருத்திரனாகிய பேற்றைத் தந்தனன் அவனும் பெருமையை யடைந்தான்—எ-று. (உகூ)

பொய்கையின் மூழ்கிய புட்ப தந்தனும்............*
வையக மகன்றுபோய் மறலி மேவிய.............*
சைம்மினி யெனும்பதி யடைந்து தண்டமாய் ... *
நெய்யழற் பொருந்தினன் றன்னை நேடினன் ... *

(இ-ள்.) யமதீர்த்தத்தின் மூழ்கிய புட்பதந்த மகாமுநிவனும் நிலவுலகத்தினின்று நீங்கிச்சென்று யமன்வீற்றிருக்கின்ற சைம்மினியென்று சொல்லாநின்ற நகரத்தையடைந்து தண்டம்போல எரிகின்ற நெய்க் கொப்பரையிற்கிடந்து வேகின்றவனைத் தேடினன்—என்றவாறு. (௩0)

வேறு.

காணுமையினகன் றேயவன்கைலைக் கிரியடைந்தான்...........*
வாணுகரன்முழவத்தொலி மகிழ்வானடிபணிந்தே..............*
நாணுமழவிடையாய் முனநமனுட்டழ லிடத்தே..............*
வீணுறவெரிபாதகன் மெய்கண்டிலனென்றான்.................*

(இ-ள்.) யமனுலகத்தில் கொப்பரையில் வேகின்றவனைக்காணுமையால் அவ்விடத்தினின்றுநீங்கி யந்தப் புட்பதந்த மகாமுனிவன் கைலாயமலையை யடைந்தவனுகி வாணுரானது முழவத்தொலிக்கு மகிழ்கின்றவனுகிய பரமசிவத்தினது திருவடியை வணங்கி நாணுதலில்லாத விளமைபொருந்திய இடபவாகனத்தை யுடையாய் முன்னம் எமலோகத்தில் நெய்க்கொப்பரையில் தன்னுள்வீழாக எரிகின்ற பாதகனதுடலை அங்குகண்டே னில்லையென்றான்—என்றவாறு. (௩௧)

அன்றேயவ னமைவந் தடைந்தடியார் கணத்துடனே......... *
சென்றேகதி யடைந்தானது செயலென்றருள் செய்தான்..... *
குன்றேயெனுஞ் சிலையாய்நெடுங் குன்றேயெனுங் குணத்தாய் *
நன்றேயெனத் தொழுதானது நமனு ரறிந்தனரால்............ *

(இ-ள்.) புட்பதந்த னவ்வண் ணறியேனென்றுசொல்ல அதற்கு ப்பரமசிவன் அந்தப்பாதகன் நீயமதீர்த்தத்தின் மூழ்கின அன்றே நம்மைவந்தடைந்து அடியார்களாகிய சிவகணங்களுடனேசென்று முத்தியடைந்தான் அவன்செய லஃதென்று அருள்செய்தன ன் அதைக்கேட்ட புட்பதந்தமுநிவன் மகமேருவென்னுஞ் சிலையினையுடையாய் பெரிய மலையையொத்த குணத்தினையுடையா

ய் இல்து மிகுதியும் நலனென்று வணங்கினன் இதனை நமனறிந்தனர்—எ-று. (௬௨)

வேறு.

புட்பதந்தனை மகிழ்ந்தனன் வியந்தனன் புகழ்ந்தான்........ *
கொட்புறும்படி யெத்தனை யுயிர்க்கிடர் கொடுத்தேம்........ *
எட்பகுந்திடு மளவுமன் பெமக்கிலை யென்றே................ *
யுட்கமைந்துதன் சித்திர குத்தனுக் குரைத்தான் .... *

(இ-ள்.) எமனனவன் இதனையறிந்து புட்பதந்த முநிவனது அருளினைக்குறித்து மகிழ்ந்தவனாகி அதிசயித்துப் புகழ்ந்தனன் யாம் எவ்வளவு ஆத்துமகோடிகள் சுழலுறும்படிஇடருண்டாக்கினேம் எட்கூறளவேனு மெமக்கன்பில்லையேயென்று மனங்கமைந்து தன்னுடையகணக்கனாகிய சித்திரகுத்தனுக்குச் சொன்னன்-எ-று.

மருவுசித்திர குத்தனும் வணங்கிநின் றுரைப்பான்............*
அருளிருப்பதுன் னிடத்தலா தெவர்க்குள தறிந்தாற்..........*
றரும மென்றிடும் பெயரெவர் படைத்தனர் தலைவா .... *
வருளினிற்பவ மறுப்பவ ருனையலா தியாரோ .... *

(இ-ள்.) யமன்பக்கத்திற் பொருந்திய சித்திரகுத்தனனவன்யமனை வணங்கிநின்று சொல்லத் தொடங்கினன் தலைவனே அருள் குடியாயிருப்ப துன்னிடத்தன்றி ஆராயுங்காலத்தில் மற்றியாவரிடத்துள்ளது அன்றியும் தருமனென்று சொல்லும்பெயர் யாவர் படைத்திருக்கின்றார்கள் அருளோடு உயிர்களது பவத்தை யறுக்கின்றவர்க ளுன்னையல்லாது யாவ ரிருக்கின்றார்கள்—எ-று (௬௪)

தந்தை தாயர்தம் புதல்வர் கோதிழைத்தவர் தம்மைப் .... *
பந்தமானதி லிடுகுவர் பகைமையோ பரிவோ.................*
நொந்து வாடுமெய்ப் பிணியரை வாகட நூலோர்...............*
வெந்த கோலினால் வெதுப்பலு மறுத்தலும் வினையோ ...... *

(இ-ள்.) தந்தையும் தாயரும் தம்புதல்வர்கள் குற்றஞ்செய்வாராயின் அவர்களைப் பந்தத்திலிட்டுத் தண்டிப்பர் அது பகைமையினாலோ பரிவினாலோ அன்றியும் வருந்திவாடுகின்ற வுடலினையுடையவரை வயித்தியர் காய்ச்சிய விருப்புக்கோலினால் சுடுவதும் அறுப்பதும் தீவினையோ—எ-று. (௬௫)

மணிகளிற்களங் கறுப்பவர் செய்கைநீ வகுத்தல்................ *
தணிக சித்தனையெனச் சொலித் தொழுதனன் சமனும்..........*
பிணியுழன்றவர் தமையினு நரகினும் பிறிதோ.................*
ரணிபெறுங்கதி புகும்படி புரிதுமென் றறைந்தான்...........*

(இ-ள்.) ஐயனே நீசெய்தல் மணிகளிலுள்ள குற்றத்தைச் சாணையிற்றேய்த்து நீக்குகின்றவர் செய்கைபோலாம் நீயுள்ள மகிழ வேண்டுமெனச் சொல்லிச் சித்திரகுத்தன் வணங்கினான் பின்புசமனும் இன்னு நரகத்திலிருந்து துன்பத்தி லுழலுகின்றவர்களை வேருகியவோரழகுபெற்ற கதியிலே புகும்படிச்செய்வோமென் றுசொன்னான்—எ-று. (ருசு)

மேதியிற் கடிதேறியங் கெழுந்துபின் வினையால்..............*
வாதை பட்டிடுந் தலத்திடைக் குறுகியவ் வரைப்பில்............*
யாதனைப்படு மவர்களைக் கொணர்மி னென் றறைந்தான்......*
தூதரக்கணத் தவர்களைக் கொணர்ந்தனர் தொகையாய்.........*

(இ-ள்.) அவ்வாறுசொல்லித் தன்வாகனமாகிய எருமைக் கடாவின் மீதேறி யவ்விடத்தினின்றுஞ் சென்று பின்பு தீவினைப்பயத்தால் உபத்திரவப்படுகின்ற இடத்திற் குறுகி அவ்வெல்லையில் யாதனைப்படுகின்றவர்களைக்கொண்டுவாருங்களென்று தூதர்களுக்குத் தாஞ்சொன்னான் அவர்க ளக்கணத்தவர்களையெல்லாங் கொண்டுவந்தார்கள் கூட்டமாக—எ-று. (ருஎ)

மிக்கவாதனை யுடல்கொடு வருந்திய வினையீர்..................*
துக்கசாகரத் தழுந்தியே நரகிடைத் துளைவீர்..................*
தக்கபாலரு ளுரிபு மிலாத பாதகரோ........................*
நக்கனார்புக ழமுதுநாச் செவித்துளை நடுவீர்.................*

(இ-ள்.) சூட்சும தேகத்தைக்கொண்டு மிருந்தவாதனையை யடைந்து வருந்துகின்ற தீவினையை யுடையவர்களே துக்கசமுத்திரத்திலே மூழ்கி நரகத்திலே வருந்துகின்றீர் தகுதியான புத்திரரும் ஞாதிகளு மில்லாதபாதகரோ நீங்கள் பரமசிவத்தினது புகழாகிய வமுதினைநாவினுலும் செவிகளினுலும் பருகுமின்கள்—எ-று. ()

வந்துசேண்மினிர் வையமேற் றிர்த்தமால் வரையுண்............*
டந்தமால்வரைத் தெக்கணத் தெமதுபே ரதுவாத்............*

சிந்துவாமென விளங்குமச் செழுந்தட மூழ்கி..................*
லெந்த மானுடர் கிளைகளு நரகுவிட் டேறும்..................*

(இ-ள்.) நீவிர் எம்மிடத்துவந்து கேளுங்கள் பூமியினிடத்துப் பெரிய தீர்த்தகிரியென வொன்றுண்டுஅந்தப் பெரியமலையின்தெக்ஷண திசையில் எம்முடைய பெயரினல் சமுத்திரத்தைப்போல வொருதீர்த்தமிருந்து பிரகாசிக்கும் அந்தச் செழிபதீர்த்தத்தில் மூழ்கினல் எவ்விதப்பாவஞ் செய்தமானுடர்களும் அவர்பந்துக் களும் நரகினைவிட் டேறுவார்கள்—எ-று. (௩௯)

உங்கடங்குலத் தெவர்களே மூழ்கினு முமக்குத்.......... ....*
துங்கமாகிய பலமுள நரகமுந் தொலையும்..........*
கங்கையாடிய பலத்தினு மதிகமக் கரைமேற் ....*
பொங்குமெள்ளுநீ ரிறைத்திடிற் பெறுவர்தென் புலத்தோர்...*

(இ-ள்) அன்றியும் உங்கள்குலத்திலே யாவரோனு மூழ்கினும் உங்களுக்குப் பெருமையாகிய பலத்தையுடைய நரகங்களுந் தொலைந்துபோகும் கங்காநதியின்மூழ்கின பலத்தினு மதிகமாகும் அன்றியும் அத்தீர்த்தக்கரையில் மிகுதியாகியஎள்ளுந் தண்ணீருமிறைத்திடில் தென்புலத்தோர் அங்கேரிப்பர்—எ-று. (௪0)

ஓதனம்பல மாதனம் வாகனமுடுக்கைப் ....*
போதுசந்தனங் கொடுத்திடிற், கொண்டுதம் புதல்வர்..........*
மாதனங்களுங் கற்புடைமடந்தையு மகவும்..........*
பேதமின்றியே பெறுகவென் றிசைப்பர்தம் பிதுர்க்கள் ... ... *

(இ-ள்.) அன்னமும் பலவிதமான பெருமைபொருந்திய தனங்களும் வாகனங்களும் வஸ்திரங்களும் மலர்களும் சந்தனமும் தானங்கொடுத்திடில் அவைகளை பிதுர்க்கள்கைக்கொண்டு தம்புதல்வர்கள் மிகுந்த திரவியங்களையும் கற்புடைய மடந்தையர்களையும்நல்லபுத்திரர்களையும் பேதமின்றிப்பெறக் கடவர்களென்று வாழ்த்துவார்கள்—எ-று. (௪௧)

களித்ததங்குலத் தொருவர்தங் கன்னியை யிரந்தோர்க்... ......*
களிப்பரோ விடைகொடுப்பரோ வந்தகன்றடத்திற்..........*
குளிப்பரோவதிற் குளித்தபேர்ப்பாதநீர் கொண்டு.......... *
தெளிப்பரோவென வேண்டுவரெனச்சொலிச் சென்றான் ...... *

(இ-ள்.) பிதிர்தேவர்கள் களித்திருக்கின்ற தங்குலத்திலுள்ள வொருவர் தம்முடைய கன்னியைத் தம்மிடத்தில்வந்து இரந்தவர்க்குக் கொடுப்பரோ இடபதானங்கொடுப்பார்களோ தீர்த்தகிரியிலுள்ள எமதீர்த்தத்தில் மூழ்குவரோ அத்தீர்த்தத்தில் மூழ்கினவருடையபாத தீர்த்தத்தைக் கைக்கொண்டு சிரசிற் றெளித்துக்கொள்வரோவென வேண்டிக் கொள்வார்களென்று எமனப்பாவிகளுக்குச்சொல்லி அவனிருப்பிடத்திற் சென்றான்—எ-று. (சஉ)

வாய்த்தவந்தக னகன்றபின் னரகிடை வதிந்தோர்...............*
தீர்த்தவெற்பென வுரைக்கையால் வினையெலாந் தீர்ந்தார் ...... *
பார்த்திபர்க்கெலா மிறைவனே நீயதிற்படிந்தால்...............*
கோத்திரத்தின்மூ வெழுவரும் பரகதிகொள்வார் .... *


(இ-ள்.) தமக்கு நன்மைசெய்யக்கிடைத்த எமனானவன் அவ்விடத்தைவிட்டுச் சென்றபின் நரகத்திலே கிடந்துழன்றவர்கள் தீர்த்தகிரியென்று எமன்சொல்லக் கேட்டபலத்தினால் தாங்கள் செய்த தீவினைகளெல்லா நீங்கினார்கள் ஆதலால் அரசர்க்கரசனாகிய ஸ்ரீராமனே நீயதின் மூழ்கினால் உன்கோத்திரத்தில் இருபத்தொரு தலைமுறையிலுள்ளோரும் தீவினையொழிந்து மேலாகிய மோக்ஷகதியையடைவார்கள்—எ-று. (சரு)

ஒன்பதாவது

எமதீர்த்தச்சருக்கம்

முற்றிற்று.

ஆ சருக்கம் - கூ - க்கு - செய்யுள் - உருஅ.



சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.

பத்தாவது

வருணதீர்த்தச்சருக்கம்.

இரணியப் பெருஞ்சிங்கவென் றிரந்தபேர்க் கருளும் ... *
வருண னத்தட மூழ்கினன் மூழ்கிய வலியா...............*
லருணினைத்துவந் தாடினன் வினையெலா மடர்த்தான்... *
தரணியிற் பெரும்புன லெலாந்தீர்த்தமாச் சமைத்தான் *

(இ-ள்.) *இரணியனைச் சங்கரித்த நரசிங்க மூர்த்தியேயென்று இரந்தவர்களுக்குக் கிருபைசெய்யத்தக்க வருணராஜனென்பவன் அந்த யமதீர்த்தத்தில் மூழ்கினன் அதின்மூழ்கிய பலத்தினால் கடவுளது கருணையை நினைத்துச் சந்தோஷித்துக் கூத்தாடினன் தனது தீவினைகளையெல்லாங் கெடுத்தான் பூவுலகத்திலுள்ள மிகுந்தபுனலெல்லாந் தீர்த்தமாகச்சமைத்தான்—எ-று. (க)

மேற்றிசைக்கண் வானீரமென் றொருநதி விளங்கு...............*
மாற்றினுக்கெலா மரசென வுரைப்பர்க ளதன்பா...............*
லேற்றவாருண தீர்த்தமென்றொருதட மிலங்கு......... .... *
நாற்றிசைக்கணு மதனை வந்தனைசெயு நதிகள்........ .... *

---

* வருணதீர்த்தத்தில் - மூழ்குகின்றவர் - இரணியசிங்கவெனத் தியானித்துமூழ்கவேண்டுமெனல் - சாஸ்திரமுறைமை.

(இ-ள்.) அத்தீர்த்தகிரியின் மேற்றிசையினிடத்து வானீரமே ன்று சொல்லப்படுகின்ற ஒருநதியானது பிரகாசிக்கின்றது அது ஆற்றுகளுக்கெல்லா மரசென்று யாவருஞ்சொல்லுவர் அந்நதியி னிடத்துப் பொருந்திய வாருணதீர்த்தமென்று ஒருதடாகம்விள ங்கும் அதனை நாற்றிசைகளிலுமுள்ள நதிகளெல்லாந் துதித்துவ ணங்கும்—எ-று. (உ)

உணர்விஞல்வரும் வினைகளு மநத்திஞ லுரையாற்...... *
புணருமின்னலு மதனிடை மூழ்கினுற் போகு...... *
மணமிலாதவர் மூழ்கி லெண்ணியபடி வசிப்பர்...... *
பிணையனுரதின் மூழ்கினு லுமைபதம் பெறுவார்...... *


(இ-ள்.) ஒருவ ரறிந்துசெய்த வினைகளும் மநத்திஞ லினைத்த லும் வாக்கினுற் சொல்லுதலுமாகிய இவற்ருல் சம்பவித்ததுன்ப மும் அந்தவருணதீர்த்தத்தில் மூழ்கினுல் நீங்கும் கலியாண மில் லாதவர்கள் அத்தீர்த்தத்தின் மூழ்கினுல் அவரவர்க ளினைத்தபடி யே பெற்று வசித்திருப்பர் பெண்மானையொத்த மாதர்கள் அத் தீர்த்தத்தின் மூழ்கினுல் உமாதேவியின் திருவடிகளைப் பெறுவார் கள்-என்றவாறு. (ங)

முநிவ னிப்படி மொழிந்தனன் முநிவனை வணங்கி...... *
யினிய கந்தனுர் தீர்த்தமொன் றுளதி லென்றீர்...... *
அினைய தீர்த்தமும் விரித் துரைத்திடுகவென் றறைந்தான்...... *
கனி மொழிச்சியாக் கல்லையுந் திருத்திய கழலான்...... *

(இ-ள்.) அகத்தியமுநிவ னிவ்வாறு மொழிந்தனன் அதனைக்கே ட்டு அம்முநிவனைவணங்கி அத்தீர்த்தகிரியில் யாவருக்கு மினிமை யைத் தராநின்ற கந்தனுர் தீர்த்த மொன்றுளதென்றீர் அந்தத் தீர் த்தத்தின் பெருமையையும் விரித்துரைத்திட வேண்டுமென்று க னிபோன்ற மொழியினையுடைய பெண்ணுகக் கற்பாறையையுந் தி ருத்திய திருவடிகளையுடைய ஸ்ரீராமன் சொன்னுன்—எ-று, (ச)

பத்தாவது
வருணதீர்த்தச்சருக்கம்
முற்றிற்று.

ஆ சருக்கம் - கo - க்கு - செய்யுள் - உசஉ.



சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.

பதினோராவது

கந்ததீர்த்தச்சருக்கம்.

வள்ளலாரடிதொழ வருமிருடிகள் வானோ .... *
ரள்ளிமேனியிற் றரித்தநீ றுதிர்ந்திட வதனைத் ...... *
தள்ளியோடுநீ ரருவியாற் கைலைவான் சைலம் ...... *
வெள்ளிதாகவே விளங்கிய தெனும்படி விளங்கும்...*

(இ-ள்.) பரமசிவத்தினது திருவடிகளை வணங்கவரும் இருடிகளும் தேவர்களும் கரத்தினாலள்ளித் தங்களுடைய திருமேனியிற் றரித்துக்கொண்டவிபூதி அம்மலையின்மீதுதிர அவ்விபூதியைத் தள்ளிக்கொண்டு ஓடாநின்றநீரருவியால் சிறந்த கைலாய மலையானது வெள்ளிமலையென்று சொல்லும்படியாகப் பிரகாசிக்கும்—எ-று.

அலங்கல்சேர் குழலம்பிகைப் பணிவிடைக்காகத்...*
துலங்குதாழ்வரை யிடத்தினிற் சோலையிற் சுனையிற் *
கலந்தமங்கையர்காலினுங் கழன்றசெங் கனகச்......*
சிலம்பினானிறைந் திடுமது வெள்ளியஞ்சிலம்பு......*

(இ-ள்.) மலர்மாலைகள் பொருந்திய அளகபாரத்தை யுடைய பார்வதியினது திருப்பணிசெய்வதற்காக விளங்காநின்ற கைலாய

த்தின் அடிவாரத்தில் உள்ள சோலைகளினிடத்தும் சுனைகளினிடத்தும் கலந்திருக்கின்ற மாதர்களுடைய கால்களினின்றுங் கழன்று விழ்ந்த செம்பொன்னாற் செய்தசிலம்புகளென்னும் ஆபரணங்களால் அந்தவெள்ளியங் கிரியானது நிறைந்திருக்கும்—எ-று. (உ)

உத்தியானமொன் றம்மலைபுச்சிமீ தோங்கு......... *
மத்திலேயொரு படிகமண்டப முளதநிலே......... *
பத்தியாமணிக் கனகபீடிகையதிற் பரனுஞ்......... *
சத்தியாகிய விறைவியு மிருந்தனர் தலைநாள் ...... *

(இ-ள்.) அந்தக் கைலயங்கிரியி னுச்சியினிடத்து ஓங்கிய ஒருசிங்காரவனமுளது அந்தவனத்திலே ஒருபடிகக்கலலினாலியற்றிய மண்டபமுண்டு அம்மண்டபத்தினிடத்து வரிசையாக மாணிக்கங்களினாலும் பொன்னினாலுமியற்றிய ஒருசிங்காசனமுண்டு அச்சிங்காதனத்தில் பரமசிவனும் சத்தியாகிய பார்வதியும் முன்னாளில் வீற்றிருந்தனர்—எ-று. (௩)

ஆயிரங்கொடு முடிப்பெரு வாயினான் கமைந்த......*
கோயிலானதிற் புகுதவ ரடியவர் கூட்டம்......... *
வாயில் காவலர் முனிந்திடி லகலுவர் மகவான்...... *
பாயுமால்விடைப் பதிநெரு கடவுளர் பலரும்......*

(இ-ள்.) ஆயிரங் கொடுமுடியினையும் நான்குபெரிய வாயிலினையும்பொருந்திய ஆலயத்தில் அடியார் கூட்டங்கள் புகுந்து செல்லுவரிகள் அக்காலத்தில் வாயில்காப்போர் அடித்து விலக்குவாரில் இந்திரன் முதலிய தேவர்களும் பாயுகின்ற பெரிய விடபவாகனத்தையுடைய பதினொருருத்திரர்முதலானவரும் விலகுவார்கள்—எ-று. (௪)

வெண்முகிற்கரு முகிலென வரனுமை விளங்கச் ... *
சண்முகத்தவன் மயூரமுஞ் சதுமுகனனமு......... *
முண்மயக்கமா யொருதரம் பயத்திடு மொளிக்குஞ் *
கண்மகிழ்ச்சியா யொருதரம் வியத்திடுங் களிக்கும் *

(இ-ள்.) அச்சிங்காதனத்தில் பரமசிவமும் உமாதேவியும் வெள்ளிமேகமுங் கரியமேகமும் போலப் பிரகாசிக்க அப்பொழுது அங்கமைந்த ஆறுமுகத்தையுடைய குமாரக்கடவுளது வாகன

மாகிய மயிலும் பிரமனேறிவந்த அன்னமும் உள்ளத்தில் மயக்க மாகி - ஒருதரம் - பயந்திடும் - ஒளிக்கும் - ஒருதரம் - கண்களா ன் மகிழ்ச்சியாய்க்கண்டு அதிசயிக்கும் களிக்கும்—எ-று. (ரு)

ஐயனேக்கிய திசைதொறு மிறைஞ்சுவ ரமரர்............ *
செய்யவாய்மலர்ந் திடுதொறுந் திசைமுகன் றிருமால் .... *
கையில்வாய்புதைத் தணுகியே வருகுவர் கமலத் .... *
துய்யதாளசைத் திடுதொறுங் கூற்றுவன் றுளங்கும் .... *

(இ-ள்.) ஐயனாகிய பரமசிவ னேக்கிய திசைகள்தோறும் அத்தி சையிலுள்ள தேவர்கள் வணங்கிநிற்பார்கள் அவர்தமது சிவந்ததி ருவாய் மலர்ந்திடுதோறும் பிரமனும் திருமாலும் தமதுகைகளா ல் வாயைமூடிக்கொண்டு சமீபித்து வருவார்கள் அவரது தாம ரைக்கமலம்போன்ற பரிசுத்தமான திருவடியை யசைக்குந்தோ றும் யமனுனவன் உள்ளநடுங்குவன்—எ-று. (சு)

நாரதாதியர் வீணையின் மந்தரநயத்தை .... *
வாராருமுலை யரம்பையர் நடத்தொலி மறைக்குந்............ *
தூரமீதினி லிறைஞ்சிடு மிருடியர் தொகுதி................... *
யாரவாரமா நந்திசெங்கைப்பிரம் பசைத்தால்................ *

(இ-ள்.) நாரதர் முதலாகிய விருடியர்களது வீணையிற் பூட்டி ய தந்தியாகிய மந்தரநாதத்தினயத்தைக் கச்சுநீங்காத முலைகளையு டைய அரம்பைமாதர்களது நர்த்தனத்தி னெலியானது மறைக் கும் தூரமாகநின்று வணங்குகின்ற இருடிகளதுகூட்டம் நந்தி தேவரது கையின்கணுள்ள பிரம்பசைத்தால் ஆரவாரிப்பர்கள்-என்றவாறு. (எ)

கந்தவேள்விழி நாலுமூன் றைந்தெனக் கரத்தாற்............ *
றந்திமாமுக னெண்ணலுந் தந்திமேற் கடத்தைச்............ *
சிந்திவேலவன் பரப்புவ னிருவருஞ் சினந்து .... *
வந்துகூறுவ ரிகலினை யாற்றுவன் வள்ளல்.................. *

(இ-ள்.) யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுள் தன்கையினு ல் முருகக்கடவுளினுடைய கண்களைத்தொட்டு - நான்கு - மூன்று - ஐந்து - என்று - எண்ண - அவர் - விநாயகரது மத்தகத்திலுள்ள மதத்தைத் தன்கைகளால்வழித்து அவருடலிற்பூச இவ்விருவர்களு

ம் பகைகொண்டு பிதாவினிடத்துவந்து சொல்லிக் கொள்ள அவ் வழக்கினை வள்ளலானவர் தீர்ப்பர்—எ-று. (அ)

உளறுமன்பிறு விப்படிமகிழ்வதி லொருநா .... *
ளேறுயர்த்தவன் குமரனை முகங்கண்மூவிரண்டா .... *
லாறெழுத்தினை வேறுவேறுனாயென வறைந்தான் .... *
வேறெழுத்தற ஓமெனு மெழுத்தையே விரித்தான் .... *

(இ-ள்.) மிகுந்த அன்பினாலே பிள்ளைகள் செய்காரியங்களில் இவ்வாறு மகிழ்ச்சி கொண்டிருக்கு நாள்களில் ஒருநாள் இடபக் கொடியையுயர்த்த வராகிய பரமசிவம் முருகக் கடவுளைப் பார்த் து உனதாறுமுகங்களிலும் ஆறெழுத்தினை வேறுவேறுகச் சொ ல்லக் கடவாயென்று சொல்லினுர் அப்போது முருகக்கடவுள் ம ற்றையெழுத்தையும்விட்டுப்பிரணவமாகிய ஓமென்னும் அ க்கரமொன்றையே யுச்சரித்தார்—எ-று. (கூ)

வேறு.

எடுத்தொரு மொழிபயு வியம்புங்கந்தனே .... *
றொடுத்தவோ ரக்கரஞ் சொல்லு மென்னவு .... *
மடுத்ததோரக்கர மறைத்த தென்விடை .... *
கொடுத்தருளென விளங்குமரன் கூறுவான் .... *

(இ-ள்.) அப்போது சமீபத்திலிருந்த பிரமன் ஒருவார்த்தை சொல்லுவான் குமாரக்கடவுளே பிரணவ பூருவமாக விருக்கின்ற அக்ஷரங்களைச் சொல்லென்று பரமசிவம் திருவாய் மலர்ந்தருள வும் பிரணவ மொன்றையே மொழிந்து மற்றைய வக்கரங்களை ம றைத்தது யாதுநிமித்தம் இதற்கு ப்ரத்யுத்தரஞ் சொல்லக் கட வியென்றுசொல்ல முருகக்கடவுள் சொல்லத் தொடங்கினுர்- என்றவாறு. (௬0)

நிறைதருமக்கர மைந்து நீர்மையாற் .... *
பிறரரிதாய்விரித் துரைக்கப் பெற்றியே .... *
லறைபறை யன்னவர் யாவர்கேட்டது .... *
மறைமொழி தன்னைவைத் துரைக்க வல்லதோ ..... *

(இ-ள்.) நிறைந்த தன்மையினையுடைய ஐந்தக்கரங்களையும் மா ஹிமையத்தால் பிறர்பகுத்துச்சொல்ல அரிதாக விருக்கின்றது அத னது மாஹிமையத்தைச் சொல்லப்புகுந்தால் பறையறை பவர்க்

கொப்பாகும் அப்படிக்கொத்தவர்யாவர் இப்போது வினவியது வேதபதமாகும் அதனைவிட்டு மற்றொன்றை யெவரோனுமுனாப் பாரோ—எ-று. (கச)

சொல்வதன் றென்றபின் சொல்லுவானயன்.........*
கல்விபுஞானமுங் கருத்துங் காட்சியும்...............*
நல்வினைப்பலன்களு நமக்கு நல்கிய ....*
செல்வனை மறைத்திடுஞ் செப்பமுள்ளதோ.........*

(இ-ள்.) ஆதலால் உரைக்கத்தக்க தன்றென்று முருகக்கடவுள் சொல்லியபின் பிரமன்சொல்லுவான் நமக்குக் கல்வியையும் ஞானத்தையும் கருத்தையும் காட்சிப்பொருளையும் நல்வினைகளு க் கேடானபயன்களையும் கொடுத்த செல்வனை கடவுளை மறைப்ப தழகல்லவே—எ-று. (கஉ)

அறிவினிலறிவுமா யத்த னன்னையாய்...............*
குறைவறு முலகெனுங் குடும்பியாயெழி............ *
னிறைதரு மின்பமாய் நித்தமாகிய ....*
விறைவனைமறைப்ப தென்னியம்பு கென்றனன் ... *

(இ-ள்.) அறிவுக்கறிவாகி அன்னையும்பிதாவுமாகிய குறைவற்ற வு லகமென்னுஞ் சமுசாரத்தை யுடையவராய் அழகிய நிறைந்தவி ன்பமாய் நித்தியமாகியு மிருக்கின்ற கடவுளை மறைப்பது யாது காரணம் இதற்குத்தரம் புகலுவீரொன்றான்—எ-று. (கரு)

பண்ணுடனல்லிசை பழத்திற் றீஞ்சுவை............ *
கண்ணுடன் மணியொளி கலந்தவாறென...........*
வெண்ணறு முயிர்தொறு மிரண்டறத் தோன்றிய......*
வண்ணலை மறைப்பதென் னறைக வென்றனன்......*

(இ-ள்.) பண்ணு மதனிசையும் பழமும் அதனினியசுவையும்க ண்ணும் அதன் மணியினொளியுங் கலந்திருப்பதுபோல அளவற் ற வுயிர்கடோறும் அபேதமாகப் பொருந்திய கடவுளை மறைப் பது யாதுகாரணம் சொல்லுமென்றனன்—எ-று. (கசு)

ஈசனுமன்னதை யியம்பு கென்றனன்............... *
மாசறு மறுமுக வள்ளல் கூறுவான்...............*
தேசிகனுமெனச் சிறப்புச் செய்தெனைப்... ....*
பூசனைபுரிந்திடில் புகல்வ தென்றனன்............ *

(இ-ள்.) அப்போது பரமசிவமும் முருகக்கடவுளைப்பார்த்துநீ யெடுத்துச்சொல்லியவதனை எம்மிடத்துப் புகல்வாயாக வென்றுர் அப்போது குற்றமற்றமுருகக்கடவுளுஞ் சொல்லத் தொடங்கினுர் என்னையவ்விடயத்தைப்புகலும்படி கட்டளையிடுவீராஞல் எம்மைத்தேசிகனை வணங்குவதுபோலச் சிறப்புச்செய்து பூசனை செய்வீராஞல் புகலுவேனென்றுர்—எ-று. (கரு)

வேற்றடங் கரத்தினை நோக்கி வெண்ணகை .... *
நீற்றினதொளியினு திலவு சிந்திடக்........... ...... *
காற்றினுங் கனலினுங் கலந்தவெங்கணை .... *
யேற்றிய சிலையினு னிழிந்து கேட்டனன்........... *

(இ-ள்.) வேலாயுதத்தை யேந்திய கையையுடைய முருகக்கடவுளைநோக்கிப் புன்முறுவலின் பிரகாசமானது திருநீற்றினுெளியைப் பார்க்கிலும் அதிகபிரகாசத்தை வீசும்படிக் காற்றைப் பார்க்கிலும் நெருப்பைப்பார்க்கிலுங் கொடுமையாகச் சென்ற வெவ்விய திருமாலாகிய பாணத்தை எறிட்ட மேருகோதண்டத்தை யுடையபரமசிவம் வணங்கிக்கேட்டார்—எ-று. (கசு)

தாமரை மலர்திகர் சண்முகத்திறைன் .... *
மாமணிக் கனக பீடிகையின் மன்னியே............ *
காமனை யுருக்கிய கண்ணினுனுடன் .... *
ஓமெனு மொருத்திய துரைப்ப தாயினன்......... *

(இ-ள்.) தாமரை மலர்போன்ற ஆறு திருமுகங்களையுடைய முருகக்கடவுள் மாணிக்க மணிகளழுத்தியபொற்பீடத்திலெழுந்தருளியிருந்து மன்மதனையெரித்த நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனுடனே ஓமென்னும் பிரணவத்தின் பொருளைச் சொல்லத்தொடங்கினுர்—எ-று. (கஎ)

உகைதரு மறமுத லுள்ள மீறதாய்.................*
அகரமு முகரமு மகர மாவது .... *
நகைதரு விந்துவு நாதமாவதும்........................*
பகர்தரு பிரணவம் பஞ்ச பேதமே .... *

(இ-ள்.) செல்லுகின்ற மறமுதலாக வுள்ளமீறுகப் பொருந்தியஅகார உகார மகார விந்துநாதம் ஆகிய இவ்வைந்தும் பெரியவ

ர்களாற்சொல்லப்படுகின்ற பிரணவத்தின் பஞ்ச பேதங்களாகும்-என்றவாறு. (கஅ)

மெய்தரு கலைகளின் விருத்தி யாகிய .... *
வைகரி யோடுபை சந்தி மத்திமை................... *
யெய்திய சூக்கும மென்ற வாக்குகள்.................. *
பெய்திய வக்கரம் பேதமாகவே........................*

(இ-ள்.) சரீர சம்பந்தமுள்ள நிவிர்த்திமுதலிய கலைகளின்விகாரமாகிய வைகரி - பைசந்தி - மத்திமை - சூக்குமை - என்றுசொல்லப்பட்ட வாக்குகள் பொருந்திய அக்கர பேதங்களாகும்-எ-று.

ஐம்பதோ டொன்றதா மக்கரங்களு.....................*
மொன்பதோ டொன்பதா முயர் பதங்களு.........*
மின்புறு மந்திர மேழு கோடியு.......................*
நன்பல மளித்திடு நாலு வேதமே .... *

(இ-ள்.) ஐம்பத்தோ ரக்கரங்களும் உயர்வாகிய எண்பத்தொரு பதங்களும் இன்பத்தைத் தரத்தக்க சத்தகோடி மஹாமந்திரங்களும் நல்லபயன்களைத்தரும் நாலுவேதங்களும்—எ-று. (உ0)

இருபது மெட்டுமா மிறைவ னூல்களும்..............*
ஒருபது மெட்டுமா முயர் புராணமும் ....*
மருவுறு மறையுள வனைத்தும் ஓமெனும் .... *
பொருளினி லடங்குமெய்ப் பொருளி தென்றனன் *

(இ-ள்.) இருபத் தெட்டெனுஞ் சிவாகமங்களும் பதினெண்புராணங்களும் நான்குமறைகளுமாகிய இவற்றுளடங்கிய எல்லாத்துப்பொருள்களும் ஓமென்றுசொல்லும் பிரணவத்து ளடங்கிய பொருள்களாகும் உண்மைப்பொருள் இதுவேயாகும்—எ-று.()

உவகைதன் மகவிடத் துள்ள தாயினு ....*
மிவனம தைத்தெழுத் திகழ்ந்து கூறலாற் .... *
புவனமு மிகழ்ந்திடு மென்று பொம்மலாற்..........*
றவமுத லவற்கொரு சாப நல்கினர்................*

(இ-ள்.) தவத்துக்கு முதல்வராகிய பரமசிவமானவர் தன்புத்திரனாகிய முருகக்கடவுளிடத்துச் சந்தோஷ முடையவராயினும் இவன் நம்முடைய பஞ்சாக்கரத்தை அவமதித்துக்கூறுதலால் உலக

ருமதனை யவமதித்திடுமென்று பொலிவோடு அம்முருகக் கடவு
ளுக்கு ஒருசாபத்தைக் கொடுத்தனர்—எ-று. (௨௨)

அஞ்சலித் திடுகவென் றுறைத்த கந்தனே............*
வஞ்சகத் தால்வெறு மனிதனுருவாய் ....*
அஞ்செழுத் திகழ்ந்தனை யாதலை யான்முக ....*
மஞ்சொழித் தொருமுக மாக வென்றனன் ....*

(இ-ள்.) பிரணவத்தின் பொருள்சொல்ல என்னைவணங்கிக் கே
ழ்க்கக்கடவாயென்று சொல்லிய கந்தனே நீசொல்லியவவ்வஞ்சக
த்தினாலே மனிதனுக்குப் பிறப்பாய் நமதுபஞ்சாக்கரத்தை யவமதி
த்தனையாகையால் உனதுமுகமாறில் ஐந்தொழிய ஒருமுகத்தோடு
வரக்கடவாயென்று பரமசிவம் சாபங்கொடுத்தனர்—எ-று. (௨௩)

மைவிட்டந் தலையுற மயங்கு வாரென.................*
வெவ்வுரை யழலுறக் குமர னஞ்சினன் ....*
இவ்வுல கத்திலஞ் செழுத்தி கழ்ந்தபேர் ....*
வெவ்விடர்ப் படுவது விளம்பவேண்டுமோ.........*

(இ-ள்.) கரிய விடமானது தலைக்கேற மயக்கங் கொண்டவர்
போல அச்சாபமாகிய வுரையென்னு நெருப்புத் தன்னைப்பொ
ருந்த குமாரக்கடவுள் பயந்து நடுங்கினர் ஆதலால் இந்தவுலகத்
தின்கண் பஞ்சாக்கரத்தை யவமதித்தவர் வெவ்விய துன்பத்திலக
ப்படுவதொன்பது சொல்ல வேண்டுமோ—எ-று. (௨௪)

இமையவ ரிருடிய ரிரியல் போயினர்..................*
தமைமறந் தரியயன்றுமு நீங்கினர்....................*
சிமையமண்டப மிசையுறையுஞ் செம்மலை.........*
புமையவள் பணிந்திவை புரைப்பதாயினள்.........*

(இ-ள்.) இதைக்கேட்ட தேவர்களும் இருடியர்களும் ஓடிப்
போயினர்கள் விண்டுவும் பிரமனும் தங்களைமறந்து நீங்கிப்போ
யினர்கள் அந்தக் காலத்தில் உமையவள் கொடுமுடியினை யுடைய
சபாமண்டபத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவத்தைப் பணிந்து இ
வைசொல்லத் தொடங்கினள்—எ-று. (௨௫)

புவைபடிச் சருகெழும்பதிய மென்றனிர்...........*
சிவையழற் பெறிற்றிறஞ் செவ்விகாணுமோ........*

நகைமுக மொழியினு நலங்குநம்பியிப்............*
பகைமொழியுரைசெயிற் பரிக்கப்பாலனே.........*

(இ-ள்.) புதிதாகிய மெல்லிய தளிர்கள் புகைபடுமாயினும் சருகாகியெழும் அத்தளிர்கள் சிகையோடுங் கூடியெரிகின்ற அழலைப் பெறுமாயின் குணமான செவ்வியைக்காணக் கூடுமோ அதுபோல நம்முடைய நகையோடுங்கூடியமுகம் சற்றுமாறினும் வாடுகின்ற நம்பியானவன் இப்பகைமை யாகிய சாபமொழியை யுரைசெய்யில் தாங்கற்பாலனே—எ-று. (உசு)

குழலினும் யாழினுங் குழைந்த செவ்வியாய் ......*
மழலையுஞ் சிறுவர்சொன் மருந்தி னின்பமாம்.....*
பிழைசெயு மிவன்மொழி பெருந் தகைப்பிராற்...*
கழலினும் விடத்தினு மதிகமானதே...............*

(இ-ள்) வேய்ங்குழலின திசையினும் யாழினதிசையினும் மநங்கரைந்த செவ்வியை யுடையோய் மழலைச்சொல்லைப் பேசுகின்ற அழகியசிறுவரது சொல்லானது அமுதத்தைக் காட்டிலுமின்பமாகுமே அப்படியிருக்கக்குற்றம்போலுஞ்செய்த இக்குழந்தையின் சொல்லானது பெரிய தகைமையை யுடைய பிரானுக்கு அழலைப்பார்க்கினும் விடத்தைப் பார்க்கினும் அதிகக்கொடுமையாக விருந்ததோ விஃதென்னை—எ-று. (உஎ)

பொறுத்தரு ளெனச்சொலிப் புண்டரீகமுங் ......*
கறுத்திடச் சிவந்திடுங் கழலிற் றாழ்ந்தனள் ....*
அறத்திறநால்வருக் கருளு மண்ணலு.............*
மறுத்தில னுமையுடன் மகிழ்ந்து கூறுவான் ......*

(இ-ள்.) பார்வதி பரமசிவனது தாமரைமலருங் கறுத்திடும்படி சிவந்திருக்குந் திருவடிகளில் இக்குற்றத்தைப் பொறுத்தருளவேண்டுமென்று வணங்கினள் - அறத்தினது கூறுபாட்டை நால்வருக்கநுக்கிரகஞ்செய்த பரமசிவமும் அதைமறுக்காதவராகி யுமையுடன் சந்தோஷித்துச் சொல்லுவா ருயினர்—எ-று. (உஅ)

சரவணக் குமரனின் றனத்தில் பாலுண.........*
மருவியுன் மடிமிசை வருமந்நாளிலே.............*
பிரணவ மொழியெலாம் பிரித்துக்கூறினே.........*
மருமறை களின்விதி யன்று கேட்டனன்...........*

(இ-ள்.) சரவணப் பொய்கையிலுதித்த நின்புத்திரனாகிய முருகன் உனது திருமுலைப்பாலுண்ண நின்மடியின்மீதமருவி இருந்தவற்றாளில் பிரணவ மொழியினது பொருளெல்லாம் வகுத்தனக்குபதேசித்தோம் அன்று அரியவதனது விதிகளைக் கேட்டிருந்தனன்—எ-று. (உகூ)

ஆதலின் குரவரா லறிந்ததவ்வுரை.............................*
நீதிலைத் தாதையைச் சிறுவர்செய்திடிற்...........*
பேதைமைத் தொழில்களும் பிழையன்றுமினிக்....*
காதினைக் கயவினைக் கடந்த கன்னியே ....*

(இ-ள்.) காதினையும் சேற்கெண்டையினையுஞ்செயித்த கண்களையுமுடையாய் அவ்வா றறிந்ததால் அந்தப்பிரணவத்தின் பொருள் ஆசாரியரா லறிந்ததாகும் அன்றியும் பிதாவைச் சிறுவர்குற்றஞ் செய்திடில் அதுகுற்றமல்ல அறிவில்லாமையாற் செய்தசெய்கையும் இப்போது பிழையாக நினைக்கத் தக்கதன்று—எ-று. (௩0)

வே று.

உபசாரவுரைகேளு முமையேநம் முருவாகி யொளியாகிநீள்...*
தபசார கிரிசேரு மெவரேனும் வினைராசி தணிவாகுவர ......*
ரபசார மொருகோடி யபராத மொருகோடி யவைதீருமோர் *
செபமான தொருகோடி பலமாநம் மடியார்கள்திருவாணையே *

(இ-ள்.) பார்வதியே நாமுபசாரமாகச் சொல்லுஞ்சொல்லை நீ கேழ்ப்பாயாக நம்முடைய வுருவமாகி ஒளியோடு கூடினதாகி யுயர்ந்த தபசாரகிரியைச்சேரும் யாவரேனும் அவர்களது தீவினைக்கூட்டங்கள் நீங்குவார்கள் யாவரேனுஞ் செய்த கோடியபசார தோஷமும் கோடியபராத தோஷமும் அவ்விடத்திநீங்கும் அவ்விடத்திற்செய்த ஒருசெபமானது கோடிசெபஞ்செய்த பலனைக் கொடுக்கும் நமதடியார்கள் பேரிலாணையின்படி—எ-று. (௩க)

கணியார மலர்வீச வலர்வீசு மதன்மீது கனசாரமே..........*
புணர்வான முதிவோர்கள் புரிவார்கள் சிவயோக வுபசாரமே...*
யணுவாகு மதசேர வருவார்கண் மலைபோலு மபசாரமே......*
தணியாத மலைமாதர் மலர்மாதர் விளையாடு தபசாரமே.........*

(இ-ள்.) வேங்கைமரங்களுஞ் சந்தனமரங்களும் மலர்களையிறைக்க அதன்மீது கற்பூரமரங்கள் அலர்களைவீசும் அவ்விடத்தில்

அறிவையுடையவரான முநிவர்கள் உபசாரமாகச் சிவயோகத்தை ச் செய்வார்கள் அத்தீர்த்தகிரியிற் சேரவருவார்கள் செய்தமலை யையொத்தபாவங்கள் அணுவாகும் நிறைந்தமலையரமகளீரும் ம லர்மாதனையொத்த அரமகளீரும் விளையாடுகின்ற தபசாரகிரி- என்றவாறு. (ருஉ)

நினைவான பொருள்யாவு மடியார்கள் பெறவீசு நிதிராசியே ...*
கனமான பவமான வெயிலாற வுறவீசு கனிராசியே ....*
தினமான மனுமான மறுதேவர் புனலாடு ஜெலராசியே ......*
சனகாதி முநிவோர்கள் தபசாரபலமான தபசாரமே ....*

(இ-ள்.) அடியவர்கள் தாங்கணினைத்த பொருள்க ளெல்லாவற் றையும் அடைய திரவியக்குப்பையை வீசாநிற்கும் மிகுதியான பிறவியாகிய வெயிலானதுதணிய பழங்களாகிய ராசியை மிகுதி யாகத் தராநிற்கும் நாடோறு மனுமானமற்ற தேவர்கள் நீராடுத ற்குச் சலராசியை வுதவாநிற்கும் சனகன்முதலிய முநிவர்கள் செ ய்கின்ற தவத்திற்குச் சாரமானபலத்தைத் தருதற்கிடமாகிய தப சாரகிரி—எ-று. (ருங)

இடர்தீரு மதுசேர விவனேகவிடையீக வெனவோதினன் ......*
வடிவேலன் விழிமாரி புனல்சோர விறையோனை வலமாகியே...*
கடிதான மயிலேறி நொடிபோதி லதிதூர கதியேகியே ....*
செடியாய விரியேழு சடையூடு நடுவாய சிலையேகியே ....*

(இ-ள்.) ஆனதால் இம்முருகனுக்குச் சம்பவித்த இடரானது நீங்கிப்போகும் அந்தத்தீர்த்தகிரியில் இவன்சேருதற்குச் செல்ல விடைகொடுவென்று பரமசிவம் அருளிச்செய்தார் அதைக்கேட் ட வடித்தவேலாயுதத்தையுடையமுருகக்கடவுள் கண்களினின்றும் புனல்மாரிசொரிய இறைவனை வலம்வந்து வேகமாகச் செல்லுகி ன்ற மயிலின்மீதேறி நொடியளவில் அதிதூரம் வேகமாகச்சென் று காடுநெருங்கிய விரிந்த ஏழுசடைக்குள் நடுவாகவிருக்கின்ற தீ ர்த்தகிரியிற்சென்று—எ-று. (ருச)

வே று.

தாதைதான் முனிந் துரைத்த சாபமெலாங்கங்கையெனுந் தாயார்க் கோதப், போதுவானெனவதனுட் பகீரதியிற்புகுந்தாடிப் புனித மாகி, நீதியா மஞ்செழுத்தா லங்கநியாசங் கரநியாசம்பண்ணி, யாதியான்வடிவமெலா மஞ்செழுத்தாற் பாவித்தா னகத்தின்மீதில்

(இ-ள்.) தனது பிதாவாகிய பரமசிவம் கோபித்துச்சொல்லிய சாபங்களெல்லாங் கங்கையென்று சொல்லாநின்ற தன்றாயாருக்குச்சொல்லப் போகிறவனைப்போல அந்தத்திர்த்தகிரியிலுள்ள கங்காநதியிலிறங்கி ஸ்நாநஞ்செய்து புனிதனாகி முறைமையையுடைய பஞ்சாக்ஷரத்தால் அங்கநியாசம் கரநியாசஞ்செய்து எவற்றிற்கு முதல்வனாகிய பரமசிவத்தின திருவமெல்லாம் பஞ்சாக்ஷரத்தால் உள்ளத்தில் பாவனைசெய்தான்—எ-று. (ரு௫)

நகதியெனுங்குண்டலியி லழலோம்பி நகரதிரோ தானத்தோடே
மகரமலம் யகரமுயிர்சிகரமிசை சத்திமற்றை வகரமாகு ...... *
நகரமகரங்களந்த யகரமுற வகையினடு வணையதாகுஞ் ...... [வீ
சிகரவகரங்கடமை முதலாயஞ் செழுத்துரைத்தான் செங்கைவேலா

(இ-ள்.) இச்செய்யுளுக்குப் பொருள் ஆசாரியனை யன்போடடுத்துவழிபட்டு அவர் சந்நிதானத்தில் அவரது திருவாக்கினால் உபதேசமுறைமையாகப் பெறவேண்டுவதேயன்றி மற்றைச்செய்யுள்போல உரைவிரித்தெழுதத்தக்கதன்று—எ-று. (ரு௬)

அறுமுகமா யுபதேசங்கொடுக்கவல்ல தலைமையும்பெற்றதிகனானான், இறையவனு முமையுடனே விடைமேல்வந் தெடுத்தவனையிறுகப்புல்லி, முறைமையினொ லொருதிர்த்த முனக்களித்தோமெனவளித்தார் முநிவர்வானோர், நிறைவுடனங் கணைந்துமலர்மழை பொழிந்து வரைகளெல்லா நிரப்பினரோ...................... *

(இ-ள்.) முருகக்கடவுள் முன்போல ஆறுமுகத்தையுடையவராய் அடியார்களுக்கு உபதேசங்கொடுக்க வல்லமுதன்மையையும் பெற்று மேலானவரானார் அப்பொழுது பரமசிவமும் உமாதேவியுடன் இடபவாகனத்தின்மே லெழுந்தருளிவந்து தனதுகைகளால்வரை யெடுத்து மார்போடிறுகத்தழுவி முறைமையோடு ஒருதீர்த்த முனக்குத் தந்தோமென்றுசொன்னார் அப்பொழுது முநிவர்களும் - தேவர்களும் - நிறைவாக அவ்விடத்துவந்து மலர்மாரிபொழிந்து திர்த்தகிரியெங்கு நிரப்பினார்கள்—எ-று. (ரு௭)

வேறு.

சக்ர பாணியன் வருகதா மனையினுள் வருக...................... *
மெய்க்கனுயிரம் படைத்தவன் வருகென விளம்பி .... *

முக்கணுயகன் மொழிப்படி முடிவிலீ சான.......................*
திக்கிலேயுயர் சிகரமேற் பீடிகை செறித்து ....*

(இ-ள்.) திரிநேத்திரங்களையுடைய பரமசிவம் - சக்கராயுதத்தை க்கையிலேயுடைய திருமால்வருக - தாமரைமலராயிடமாகவுடைய பிரமன்வருக - உடலில் ஆயிரங்கண்களைப்படைத்த இந்திரன்வருக-என்று அழைத்துச்சொல்ல அவர் ஆக்கினைப்படி அம்மலையினது அழிவில்லாத ஈசானதிசையில் உயர்ந்த சிகரத்தின்மேற் பீடிகையமைத்து—எ-று. (ருஅ)

பீடிகைக்குள் வைத்தமரர் சேனு பதிப்பெயரிட் ....*
டாடலுற்ற வேலவற் கவன்றீர்த்த நீராட்டி ....*
வாடலுற்ற வாசவன் திருமக ளருமணமுங்.........................*
கூடுவித்திடு மெனச்சொலி மறைந்தனன் குன்றில் .... *

(இ-ள்.) மேற்சொல்லிய சிங்காதனத்தில் குமாரசுவாமியையெழுந்தருளப்பண்ணி அவருக்குத் தேவர்சேனுபதியென்னும் திருநாமத்தைத்தந்து திருவிளையாடல் செய்கின்ற அவ்வேலவனுக்குக் குமாரதீர்த்தத்திலுள்ள நீராலபிடேகஞ்செய்து சூரபதுமனுலே வாட்டமுற்ற இந்திரனுடைய குமாரியாகிய தெய்வானை நாச்சியாரைத் திருமணஞ்செய்வித்திடுங்க ளென்றுசொல்லி அத்தீர்த்தகிரியில் மறைந்தனன்—எ-று. (ருக)

ஆவிலேறினுன் மொழிப்படிக் குகற்குநீ ராட்டிப் ....*
பாவநீங்கிடத் தாங்களு மந்தநீர் படிந்து .... *
மூவர்தேவர்கள் முநிவர்கள் மகிழ்ந்திட முருகன் ....*
தேவர் சேனையைத் திருக்கலியாணமுஞ் செய்தான் ....*

(இ-ள்.) திருமால்முதலிய யாவரும் இடபவாகனத்தை வாகனமாக வேறினவனுகிய பரமசிவத்தின் கட்டளைப்படி முருகக்கடவுளுக்கு அவரது தீர்த்தத்தா லபிடேகஞ்செய்வித்துத் தாங்களுந் தங்கள்பாவமொழிய அத்தீர்த்தத்தின்மூழ்கித்திரிமூர்த்திகளும் தேவர்களும் - முநிவர்களும் - மகிழ்ந்திட முருகக்கடவுள் தேவர்சேனையென்னும் நாச்சியாரைத் திருமணஞ் செய்தனர்—எ-று. (சo)

வீறுதேவர் சேனுபதிக் காட்டிய வெள்ள.......................*
மாறுமாமுகத் தண்ணலா லீனவரு மதன்பாற் ....*

பேறுகொண்டு வானவர்களும் விடைகொடு பெயர்ந்தார் ......*
கூறுகந்தன்முன் னொருசெபங் கோடியே கொடுக்கும் ....*

(இ-ள்.) பெருமை பொருந்திய தேவர்சேனாதிபதியாகிய குமாரக்கடவுளுக்கு அபிடேகஞ்செய்த குமாரதீர்த்தத்தை ஆறுதிருமுகங்களையுடைய அண்ணலாற்பெற்று யாவரும் அத்தீர்த்தத்தின் மூழ்கித்தாங்கள் பெறவிரும்பிய பேறுகளையெல்லாங் கைக்கொண்டு திருமான்முதலிய தேவர்யாவரும் அக்கடவுளினிடத்து விடைபெற்றுக்கொண்டு தங்கள் தங்களிடத்திற்குப் போயினர் மேற்சொல்லிய கந்ததீர்த்தத்தினிடத்துச்செய்யு மொருசெபம் கோடிசெபஞ்செய்து பெறும்பலனைக் கொடுக்கும்—எ-று. (சக)

மின்றும்வேலினன் றடத்தினை யுரைத்தனம் விரித்துப் ....*
பின்னரோதுநாம் விளம்புவ தெனச்சொன்னான் பெரியோன்......*
வன்னிதீர்த்தமும் புகலுமென் றிராகவன் வணங்கிச் ....*
சென்னிமேற்கரங் குவித்தன னகத்தியன் செப்பும்...........*


(இ-ள்.) பெரியவராகிய கும்பமுநியானவர் பிரகாசம்பொருந்திய வேலாயுதத்தையுடைய குமாரக்கடவுளது தீர்த்தத்தின் பெருமையை விரித்துச்சொன்னோம் இதற்குமேல் நாஞ்சொல்லவேண்டியதியாதென்று கேழ்க்க அப்பொழுது ஸ்ரீராமமூர்த்திவணங்கி அக்கினிதீர்த்தத்தின் பெருமையையும் சொல்லவேண்டுமென்று தனதுசிரத்தின்மேல் இரண்டுகைகளையுங் குவித்துக்கேழ்க்க அகத்தியமுநிவர் சொல்லத்தொடங்கினர்—எ-று. (சஉ)

பதினோராவது

கந்ததீர்த்தச்சருக்கம்

முற்றிற்று.

ஆ சருக்கம் - ௧௧ - க்கு - செய்யுள் - உ௱சு.



சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.

பனிரெண்டாவது

அக்கினிதீர்த்தச்சருக்கம்.

முன்னமேபல மகமெலா முடித்தெழு முநிவர் .... *
பன்னிமார்களை யழைத்துநம் மனைகளிற் பயின்ற............*
வன்னியோம்புமி னவிந்திடா தெனச்சொலி வனத்திற்........ *
பொன்னுறு மலர்த்தருப்பை கொண்டணைகு வான்போனார் ... *

(இ-ள்.) வசிட்டர்முதலிய சப்த்தவிருடிகளும்முன்னதாகப்பலயாகங்களையெல்லாஞ்செய்து நிறைவேற்றித் தத்தம்பத்தினிமார்களையழைத்து நம்முடைய ஆசிரமத்தில் வசித்திருக்கின்ற அக்கினியை அவியாது வளர்த்துக்கொண்டிருங்கள் என்றுசொல்லி ஆரணியத்தில் அழகினையுந் தேனையுமுடையமலர்களையுந் தருப்பையையும் பறித்துக்கொண்டு வரும்பொருட்டுப்போனார்கள்--எ-று.

விருத்தர்வாலரா மழல்களின் விருத்தியை வேண்டி .... *
மருத்தினார்சில சமித்தினான் மடந்தையர் வளர்த்தா .... *
ரருத்தியாலது வளர்ந்ததே யன்றியு மவன்றன்.............. *
கருத்தின்மீதினும் வளர்த்தன ராசையாங் கனலை............. *

(இ-ள்.) அருந்ததிமுதலிய சப்த்தமாதர்களும் தத்தங்கணவர்கள் கட்டளைப்படி விருத்தர்கள் பாலராகும் அக்கினிவிருத்தியைவி

ரும்பி சஞ்சீவி முதலிய மருந்துவிருட்சங்களிற் பொருந்திய சில சமித்துகளால அவ்வக்கினியை வளர்த்தார்கள் அவ்வக்கினியும் ஆசையோடு வளர்ந்தது அன்றியும் அவனது உள்ளத்தின்மீதும் ஆசையாகிய அக்கினியையும் வளர்த்தனர்—எ-று. (உ)

அரும்புகைக்குமென் முலையினர் சொரிந்தநெய் யாசை...... *
பரும்புகைக்குமே லெரிவிடுஞ் செயலை நேராகக்.............*
கரும்புகைக்கொடு வருத்தினன் பாவகன் கண்டு .... *
கரும்புகைக்கொடு நடந்தன னன்பொடு காமன் .... *

(இ-ள்.) தாமரையரும்பையும் கசப்பிக்கும் மெல்லிய முலைகளையுடைய சப்தமாதர்களும் ஆசையை யுண்டாக்கும்படி நெய்யைச்சொரிந்த கைகளுக்குமேல் அக்கினியெழுந் தெரிகின்ற செய்கைக்கொப்பாகக் கரியபுகையைக்கொண்டு அக்கினிதேவன் வருத்தினன் அதனை மன்மதன்கண்டுகருப்புவில்லைக் கையிலெடுத்துக் கொண்டு அன்புடன் நடந்தனன்—எ-று. (ங)

அடைந்து நம்பனார் நயனமாய் மதனையன்றழித்தா..........*
லிடைந்தகாமனும் பழம்பகை முடிக்குமா றெண்ணி........*
யுடைந்தவன்னியைக் கணைகளால் வருத்தினு னொருவன்.........*
முடிந்தபோதினி லல்லவோ பெரும்பகை முடித்தல் .... *

(இ-ள்.) அன்று பரமசிவத்தினது நெற்றிக்கண்ணினிடமாய யடைந்து மன்மதனையழித்தனனாதலால் அப்பொழுது தோல்வியடைந் தொழிந்த மன்மதனுந் தன்னுடைய பழைய பகையை முடிக்கும்படிக்கருதிச் சப்தமாதர்களால் வருந்திய அக்கினிதேவனைத் தனதுபாணங்களால் வருத்தினன் ஒருவன்தனக்குவேண்டியகருவிகளெல்லா நிறைவேறிய பின்னரன்றோதனது பெரியபகையை முடிக்கவேண்டும்—எ-று. (ச)

இருப்புவாளியு முருக்கி நீரெனப்பனு மெரியோன்..........*
கருப்புவில்லி யான்கணைகளா னீரெனக் கரைந்தான்............ *
பொருப்புலாவினன் காத்திரம் புழுங்கினன் காற்று .... *
நெருப்புமாகின லாற்றுவா ரில்லையே நிலத்தில்.................*

(இ-ள்.) இரும்பினாற்செய்த வாளிகளையும் உருக்கி நீராகச்செய்கின்ற அக்கினிதேவன் கருப்புவில்லினையுடைய மன்மதனது புட்

பபாணங்களா னீனைப்போல் கனைந்தனன் அன்றியும் பொதியமலையிலுலாவுகின்ற தென்றற்காற்றினல் உடலம்புழுங்கினன் காற்றுநெருப்புங்கூடினல் பூமியினிடத்துச் சகிக்கின்றவர்க ளில்லையே-என்றவாறு. (ரு)

படுக்கைமீதினிற் சொரிந்திடும் பல்லவம் பலவும்.......... *
அடுக்குநாண்மலர்த் தொகுதியு மழற்றிட வயர்ந்தான்......... *
நடுக்கும்வீரமும் பெருமையும் படைத்த னன்றுகு.......... *
மிடுக்கணெய்தினர் சிறியரன் றோதுய ரிழைப்பார் ..:........ *

(இ-ள்.) சயனத்தின்மீது சொரிந்திடும் பலதளிர்களும் அடுக்கிய புதுமலர்க்கூட்டங்களும் கொளுத்த அக்கினிதேவன் தளர்ந்தனன் இந்தமன்மதன் காமுகனை நடுக்கத்தைச் செய்யத்தக்க வீரத்தையும் பெருமையையும் பெற்றிருத்தல் நன்றாகும் துன்பமுற்று வருந்தினவர்களைப் பின்னுந்துன்பத்தைச் செய்கின்றவர் சிறியரல்லவோ—எ-று. (சா)

ஓமவங்கியாங் கடவுடன்னுள மெலா முருகிச்.......... *
சோமவங்கியான் மெலிந்தனன் பிறையினைச் சுடர்வே......... *
ளேமவங்கியா மெனச்சொலி நடுங்கின னெரிக்குட்........... *
காமவங்கிபோற் கொடியதே துளதெனக் கவன்றான்............ *

(இ-ள்.) யாகாக்கினியாகியதீக்கடவுள் தன்னுள்ளமெல்லாமுருகிச் சந்திரனுகிய அக்கினியால் தளர்ந்தனனுகிப் பிறையைக்கண்டு பிரகாசம்பொருந்திய மன்மதனது காவலாகிய அக்கினியாமென்றுசொல்லி நடுக்கத்தைப்பொருந்தினன் அக்கினிகளுக்குள் காமாக்கினியைப்போல கொடுமையானது யாதிருக்கின்றதென்று வருந்தினன்—எ-று. (எ)

வட்டவாழியைக் கடைந்தநாள் விடத்தொடுவந்தோன்......... *
கிட்டிநாடொறும் வடவைவான் கனலுடன் கிளர்ந்தோன் ...... *
விட்டமாதரா லழிந்தவென்னைரசெலா மிதல்பாற் .... *
கட்டினர்களோ சுடுமதி யெனக்கனல் கனைந்தான்.......... *

(இ-ள்.) சந்திரனனவன் வட்டமானகடலைத் தேவர்கள் கடைந்தகாலத்தில் அதிற்பிறந்த ஆலகால விஷத்தோடு வந்தான் அன்றியும் அக்கடலி லிடைவிடாதிருக்கின்ற வடவாமுகாக்கினியை நாடோறுஞ் சேர்ந்து நிறைந்தான் ஆனதால் எல்லேனக்கைவிட்ட மாதர்க

ளால் அழிந்துபோன வென்னரசெல்லாம் இந்தச் சந்திரனிடத்து க் கட்டிவைத்தார்களோ இவ்வாறு சுடுகின்றதே யென்றுசொல்லி அக்கினிதேவ னுருகினான்—எ-று. (அ)

ஆசுகங்க ளென்னிடத்திலே விசிறு னனங்கன் .... *
வீசுமம்பெலா மெரிந்தவென் விரகவேதனையாற் .... *
பூசலம் பினியவற்குவேறில்லை யென்பொருட்டாற் .... *
றேசமெங்கணும் பிழைத்ததேயெனச் சொலித்தெளியும் ...... *

(இ-ள்.) மன்மதனானவன் அவனிடத்துள்ள பாணங்களெல்லா ம் என்மீதிலே பிரயோகித்தான் அவன்விசிய பாணங்களெல்லாம் எனக்குத் துன்பத்தைத்தந்த விரகாக்கினியால் பற்றியெரிந்தன ஆதலால் அம்மன்மதனுக்குக் காமுகரோடு சண்டைசெய்வதற்கு வேறேபாணங்களினி யில்லாமையால் என்பொருட்டாகத் தேச மெல்லாம் உயிர்பிழைத் திருப்பார்களென்று சொல்லித் தெளிந் தான்—எ-று. (கூ)

எனதழற்சுடுமுயி ரிலாதவை களையிசைவேள் .... *
தனதழற் சுடுமுயிர்களானவையை யென்றனது .... *
கனலவித்திடக்குடத்து நீரமையு மேழ்கடலின் .... *
புனலவிக்கிலு மவியுமோ விதுவெனப்புகன்றான் .... *

(இ-ள்.) உயிரில்லாத பொருள்களை எனதுதீயானது சுட்டெரிக் கும் புகழினையுடைய மன்மதனது தீயானது உயிருள்ள பொரு ள்களையெல்லாஞ் சுட்டெரிக்கும் அதுவன்றி என்னுடைய தீயை அவிக்கவேண்டின் ஒருகுடத்துநீர் போதுமானதாக விருக்கும் ம ன்மதபாணத்தா லுண்டாகும் இந்தத்தீ சத்தசாகரத்தி னீரினாலவி த்தாலும் அவியாதெனச்சொன்னான்—எ-று. (கய)

கிளைக்குமென்னெழு நாவினும் புகையெழக் கிடத்தித் .... *
துளைக்கும்வேய்க்குடம் பிசையினு லென்னையுந் துளைத்த ...... *
வுளைக்குமுற்பக லொருவருக் கிறுதி தாமுதவி .... *
விளைத்தபிற்பகற் றமக்குமஃ திழைப்பபோ யென்னும் .... *

(இ-ள்.) மேன்மேற் றிக்கிளைத்திருக்கின்ற என்னுடையவேழுநா வினும் புகையெழும்படியாகத் துளைத்த மூங்கிலாலாகிய பிள் ளாங்குழல்கள் தம்மிசையினால் என்னையுந்துளைத்தன முன்னாளி

லொருவனை வருத்தும்படி தீமையைநாஞ்செய்வோமாகில் நமக்கு இளைப்புவந்த பின்னாளில் அவரந்தத்தீமையைச் செய்வாரல்லவோ—எ-று. (கக)

எழுமாதவ ரறிகிலோ முனிவரோ யென்னு ……………… *
மேழுவாரிதி யதிகமோ விரகநோய்க் கென்னு ……………… *
மேழுதாபதர் மடந்தைமா ரதரத்தி லெழுதே… …………… *
னேழுநாவினும் பருகுநா ளெந்தநா ளென்னும்……………… *

(இ-ள்.) இதுகாரியத்தைச் சத்த முநிவர்களு மறிவாராயின் கோவிப்பரோயென்று நினைப்பன் இந்தக்காமநோய்க்கு எழுசமுத்திரங்களும் அதிகமாமோவென்று நினைப்பன் சத்த முநிவர்களதுபத்தினிகளாகிய மாதர்களது அதரத்திலுண்டாகுந் தேனை நம்முடைய வேழுநாவினாலும் பருகுகின்றநா ளெந்தநாளோவென்று நினைப்பன்—எ-று. (கஉ)

நவ்வியங்கணார் விருப்பி லிப்படியெழு நாவோன் ……………… *
அவ்வியஞ்சுமந் தமரருக்களித்திடா தயர்ந்தான் ……………… *
செவ்வியங்கிபோ லிருத்தல் கண்டவன் பெருந்தேவி ……… *
பவ்வியங்களே தெனச்சொல வவனெலாம் பகர்வான் ……… *

(இ-ள்.) எழுநாவினையுடைய தீக்கடவுளானவன் மான்கண்களைப்போலுங் கண்களையுடைய சத்தமாதர்களுடைய விருப்பத்தால்இவ்வாறு அவிபாகங்களைத் தான் றாங்கிக்கொண்டிருந்தும் அவைகளைத் தேவர்களுக்குக் கொடாமல் தளர்ந்திருந்தான் அவனுடைய பெருமைபொருந்திய மனைவியாகிய சுவாகாதேவியானவள்தன்கணவனுடலின் செவ்வி வெறுமையான அங்கிபோலிருத்தலைக்கண்டு சம்பவித்ததேதென்றுகேழ்க்க - அவன் - தனக்குச் சம்பவித்தவெல்லாஞ் சொல்வானாயினான்—எ-று. (கங)

முநித்தபோதனர் மகத்தினி னிருத்தலு முநிவோ………… *
ரனத்தைநேரொணுந் தேவிமாரவி யினால் வளர்த்தார் ……… *
தனித்தபோதவர் தனத்திலே தழுவுவான் சமைந்தே………… *
னினைத்தபேதையுஞ் சபிப்பரோ யெனமத நிறுத்தேன் ……… *

(இ-ள்.) தபோதனர்களாகிய சத்தமுநிவர்களது வேள்வியின்கண் யானிருத்தலும் அம்முநிவர்களது அன்னத்தை யொப்பென்று

சொல்லுகின்ற மனைவியர்கள் நெய்ம்முதலிய சமித்தினுல்வளர்த் தார்கள் அப்பொழுது அவர்கள் தனித்திருந்ததால் அவர்களுடைய தனத்தைத் தழுவும்படி யத்தனித்தேன் அவர் நினைத்தபேர்களையுஞ் சபிப்பார்களேயென்று அம்மதத்தை யடக்கினேன்---எ-று.

வேறு.

சொல்லுதன் மறுத்திடல் பொறுத்திடுக தோகாய் ❋
முல்லையின் மிருத்தவர் முலைக்குளொரு சற்றும் ... ❋
புல்லுதல் கிடைக்குமெனி லங்கவர் பொருட்டா ... ❋
னல்லுயிர் துறந்திடினு நன்றென வுரைத்தான்...... ❋

(இ-ள்.) மயிலையொத்த பெண்ணே நான்சொல்லுங் காரியத்தை நீதடுத்துச்சொல்லாதே பொறுக்கக்கடவாய் கற்பிலேமிகுந்தவராகிய அம்மாதர்களது முலைகளினிடத்து ஒருசற்றுத்தழுவுதல் கிடைக்குமெனில் - நன்று - அல்லது - அம்மாதர்கள் பொருட்டால் என்னுடைய நல்லவுயிர் நீங்கிப்போனாலும் நன்றென்றுசொன்னான்—எ-று. (கரு)

வாள்படு விழிச்சியர்கள் வாயமிர்து பெற்றால்...... ❋
வேள்படை தடுப்பனென் விழிக்கமல மீதே........❋
தாள்படினு மெய்த்துயிர் தழைக்குமவர் தாளித்... ❋
தூள்படினு மித்துயர் துடைக்குமுள தென்றான்... ❋

(இ-ள்.) வாளைப்போலும் பொருந்திய கண்களையுடைய வம்மாதர்களது வாயிலுளவாகிய அமிர்தத்தை யுண்ணப்பெற்றால் மன்மதபாணங்களைத் தடுப்பேன் அன்றியும் தாமரைக் கமலம்போன்ற வென்கண்களின்மேல் அவர்கள் தாள்பட்டாலும் உண்மையாக என்றுயிர்தழைத்திருக்கும் அவர்களது தாளின்கண் பொருந்திய தூள்பட்டாலும் இத்தத்துன்பத்தைத் துடைத்துவிடும் இஃது உண்டான காரியமென்று சொன்னான்—எ-று. (கசா)

கற்புடை மடந்தையர்கள் காதல் குறைத்தா........ ❋
லற்பமு மருள்களிவை யானதிமை போல........ ❋
விற்படர் மணிக்கரு விழிக்குதவி யுண்டோ........ ❋
வெற்குதவி நீயென விளங்கொடி யுரைப்பாள்...... ❋

(இ-ள்.) கற்பினையுடைய மாதர்கள் - தத்தம் - நாயகர்கள் - ஒருகாரியத்தைச் சொல்லுவாராயின் அதைச்சிறிதேனு மறுத்துச் சொல்லார்கள் இவை யுலகத்திலுண்டானகாரியம் பிரகாசம்பொருந்திய கருமணியையுடைய கண்களுக்கு இமையைப்போல வுதவியுண்டோ அவ்வாறே எனக்குதவி நீயென்றுசொல்ல இளங்கொடிபோன்ற சுவாகாதேவியானவள் சொல்லத்தொடங்கினாள்- என்றவாறு. (கள)

சோபமிகினும் முனைதுணிந்து முயல் வுற்றூற் ... *
பாபமிகு மன்றிமுநி பன்னியர்க ளாலே............*
சாபமிகு மல்லதெழு தாபத ரறிந்தாற் ....*
கோபவெறி கொள்வரது கொள்ளினெளி தாமோ...*

(இ-ள்.) உமக்குக் காமசோப மிகுதியாயினும் உமதுனையைக் கொண்டு துணிந்து நானதற்காக முயற்சிசெய்தால் பாபமிகுதியாகவுண்டாகும் - அன்றியும் - முநிவர்களுடைய பத்தினியர்களாலே சாபமிகுதியாகவரும் அல்லாமலும் சத்தமுநிவர்களு மறிந்தால் கோபவெறிகொள்வர் அக்கோபத்தைக் கொள்வார்களாயினஃதெளிதாகமுடியுமோ—எ-று. (கஅ)

இந்நிலை மறந்திடுக வேழுமுநி வோர்தம்............*
பன்னியர்கள் கற்பியல் பழுத்தகொடி யன்னார்......*
ரன்னியமா மைந்தர்தம தையனென வுன்னு ......*
நன்னிலையர் காமனையு ஞாளியின் மதிப்பார் ......*

(இ-ள்.) நீர்சொல்லுமிந்த நிலைமையை மறந்துவிடக்கடவீர் சத்தமுநிவர்களது பத்தினிமார்கள் கற்பிலக்கணமுதிர்ந்த பூங்கொடியையொத்தவர்கள் பிறபுருடனை தன்புத்திரர்களாகவும் தமதுபிதாவாகவும் நினைக்கின்ற நல்ல நிலைமையை யுடையவர்கள் மன்மதனையும் நாயைப்போல மதிப்பார்கள்—எ-று. (ககூ)

சிற்பரனிலும் பெரிய தெய்வமென வேதம் ...... *
பொற்புடைய கொண்கரிசை போற்றிநிறை பெற்றூர்
சொற்பன சுழுப்த்தி துரியத்தினிலு மற்றுங் ...... *
கற்பெனு மணிப்பணி கழற்றியறி யார்காண் ...... *

(இ-ள்.) பரமசிவத்தினும் பெரியதெய்வமென்றே தமதழகை யுடையநாயகரது புகழைத்துதித்துக் கற்பினைப்பெற்றவர்களாவர் சொப்பனத்திலும் சுழுத்தியிலும் துரியத்திலும் துரியாதீதத்தி லும் தங்களுடைய கற்பென்கிற மாணிக்கவாபரணங்களைக்கழற்றி யறியார்கள்—எ-று. (உ௦)

அரம்பையெனு மோர்கணிகை யையிரு சிரத்தோன் *
றரங்கெட விதித்தமொழி தப்பவிலை யென்றால் ... *
வரம்புற நிரம்புமெழு மாமுநிவர் மின்னார்......... *
திரும்பிமுனி வாகவிதி செய்யிலெளி தாமோ...... *

(இ-ள்.) தேவமாதர்களுக்குள் அரம்பையென்னும் பெயரினை யுடைய ஒருகணிகையானவள் பத்துத்தலையை யுடையவனாகிய இ ராவணனதுவலிகெடக் கொடுத்தசாபந் தப்பாதுகிடைத்த தாத லால் கற்பென்னு மெல்லைகடவாது நிரம்பிய பெருமைபொரு ந்திய சத்தமுநிவர்களுடைய பத்தினிமார்கள் எதிர்த்துக் கோ பமாகச் சாபங்கொடுப்பாராயின் அஃதெளிதாக முடியுமோ- என்றவாறு. (உக)

காணுமவ ருக்குணிறை கற்புதவு தீராள் .... *
வாணுதல ருந்ததி வசிட்டமுநி பின்னே .... *
நாணொ டகலாதுலவு நவ்வியவள் பாலும் .... *
பூணுற விருப்பினை புகழ்க்கிறுதி யன்றே............ *

(இ-ள்.) உன்னுலேகாணப்பட்ட அப்பத்தினிமார்களுக்குள் நி றைந்த கற்பினை யவளைத்தரிசிப்பவர்களுக்குங் கொடுக்கத்தக்க த ன்மையையுடையவளாகிய விளக்கமான நெற்றியையுடைய அரு ந்ததியென்பவள் வசிட்டமுநிவரது பிறகேநாணத்துடன் அவரை விட்டு நீங்காதுலவுகின்ற மான்போன்ற கண்ணையுடையவள் அந்த ப்பத்தினியிடத்திலுஞ் சேரும்படி யிச்சைகொண்டா யிஃதுன் புகழ்க் கழிவன்றே—எ-று. (உஉ)

பொன்பொரு ளினைப்பலவர் போலவு மதிப்பா *
ரின்பமுறு மத்திர மியத்திலவை யெய்தா .... *
வன்பொடு கொளத்கரியர் மற்றுநெறி காணேர் ... *
துன்புற நினைத்திவை துணித்தனை கொலென்றான்...*

(இ-ள்.) பொன்னையாயினும் பொருளையாயினுங் கொடுத்து வசப்படுத்துவோமானால் அவர்கள்வைகளைச் சத்துருவைப்போல மதிப்பர் அன்றி இன்பத்தைத் தருகின்ற மந்திரங்களால் வசப்படுத்துவோமானால் அம்மந்திரங்கள் அவர்களை வசப்படுத்தா அல்லது பலாத்காரமாக அவர்களைக் கைக்கொள்ளுவோமானால் அதற்குக் கூடாதவர்கள் அவர்களை நீரனுபவிப்பதற்கு வேறுவழிகாணேம் ஆதலால் நீர் துன்பமடையும்படியாகத் துணிந்து இக்காரியங்களை நினைத்தீராகும்—எ-று. (உ௩)

மாறுகொடு மாலுலகை வாயினில் விதித்தார் ...... *
சீறியது கண்டுயர் ததீசிமுநி யென்பா.............*
ரீறில் புவனத்திர ளெவற்றையு மயிர்க்கால் .... *
தோறுநிறை வித்தனர் சொலற்கரிய ரன்றோ ...... *

(இ-ள்.) அம்மாதவர்கள் மாறுபட்டுத் திருமாலுலகைத் தமது வாயினால் சிருட்டித்தார்கள் அதற்கவர் கோபித்ததுகண்டு மேலானததீசி முநியென்பவர் முடிவில்லாதபுவனங்களினது கூட்டமெல்லாவற்றையுந் தனதுடலிலுள்ள மயிர்க்கால்கடோறு நிறைவாகக் காட்டினர் ஆதலால் முநிவர்களது செய்கை சொல்லுதற் கரியதன்றோ—எ-று. (உச)

மச்சறு முயர்ப்பிருகு மாமுநிவ னாலே .... *
யச்சுதர் பிறக்குமுறை யாருமறி யாரோ ....*
வச்சிர தரன்கௌத மன்கொடுமை யாலே .... *
யெச்சுருவ முற்றன னிதற்குரிமை யன்றே .... *

(இ-ள்.) குற்றமற்ற மேலான பிருகுமாமுநிவராலே திருமாலானவர் பத்துப்பிறப்புப்பிறக்கு முறைமை யாருமறிய மாட்டாரீகளோ கௌதம மகாமுநிவர் சாபத்தினாலே வச்சிராயுதத்தையுடைய இத்திரனானவன் யாவருமிகழத்தக்க ஆயிரம்யோனி யுருவத்தைப்பெற்றனன் ஆதலால் நீ நினைக்குங்காரிய முரிமையுள்ளதன்று—என்றவாறு. (உரு)

தன்னுரிமை யானவ டடுத்தெதிரி னின்றாள் .... *
நன்றுமொழி யென்றவ னகைத்துமொழி கின்றான் *
பொன்றழுவு தானாயிரு பூண்முலை யணைந்தா ...... *
என்றுமழி யென்பவ னவற்குவினை புண்டோ ... ... *

(இ-ள்.) தனக்குரிமையான சுவாகாதேவி நாயகனதெண்ணத் தைத்தடுத்து எதிராகநின்றனள் அவளைப்பார்த்து நீ சொல்லும் வார்த்தை நன்றாக விருக்கின்றதென்றுசொல்லி நகைத்துச்சொல் லத் தொடங்கினன் பிரகற்பதியென்னுந் தேவர் குருவினாலே தழு வப்படுகின்ற தாரையினுடைய ஆபரணங்கடங்கிய இரண்டுமுலைக ளையும் அன்று சந்திரனானவன் தழுவினன் அவனுக்கு யாதுபொ ல்லாங்கு சம்பவித்தது சொல்லென்றாள்—எ-று. (உசா)

இட்டமுநி பன்னிய ரெவர்க்குநிறை போகக் ...... *
கட்டுரக கங்கணர் கபாலியென வந்தார் .... *
மட்டரிய மாமுநிவர் வஞ்சனை யிழைத்தே .... *
விட்டன ரவர்க்கதனில் மேவியது முண்டோ ...... *

(இ-ள்.) தாருகாவன முநிவரது இட்டமான பத்தினியர்யாவரு க்கும் கற்பழிய கட்டிய நாககங்கணராகிய பரமசிவமானவர் பி ட்சாடனராகவந்தனர் அப்பொழுது அளவிட்டுச் சொல்லுதற் கரிய புகழையுடைய அம்முநிவர்கள் வஞ்சனையான யாகங்களைச் செய்து அதினின்றுமுண்டாகிய யானைமுதலியவற்றை அவர்மீது விட்டனர் அதனாலவர்க்குத் துன்பமேவியதுமுண்டோ—எ-று.()

முற்றைமறை நாலினுடன் மூவுல களித்தோன் ... *
மைத்திலொரு மங்கையை வகுத்தவ ளிடத்தே...... *
சந்தத முயங்கினர் நடுத்தவரு முண்டோ .... *
வித்தமதி யெத்தமதி யேழைமதி யென்றான் .... *

(இ-ள்.) முன்னாலே நான்குவேதங்களையுந் திரிலோகங்களையுந் தந்தவனாகிய பிரமனானவன் தனது தவவலியினால் ஒருபெண்ணையுண் டுபண்ணி அந்தப்பெண்ணை நாள்தோறுந் தழுவியனுபவித்தான் அதனை நிந்தித்தவர்களுமுண்டோ அப்படியிருக்க நீ சொல்லுமிந் தப் புத்தியானது எந்தப்புத்திப் பெண்புத்தி யென்றான்—எ-று.

இப்படி யுரைத்தன னிடர்ப்படுதல் கண்டாள் ...... *
ஒப்பொருவ ரற்ற வுளத்தைமுலை யாகுந் ...... *
செப்பினி லடக்கினவர் சேரும்வகை யெவ்வா...... *
தப்படி புணர்ப்பவினி யச்சமற வென்றாள்........ *

(இ-ள்.) அக்கினிதேவனிவ்வாறு சொன்னுனுகித் துன்பமுறுத லச் சுவாகாதேவி பார்த்து ஒப்புசொல்லுதற் கொருவருமில்லா தவுன்னுள்ளத்தைத்தங்கள்முலைகளாகிய செப்புகளிலேயடக்கினவ ர்களாகிய ருஷிபத்தினிகளை நீயனுபவிக்கும்வகை யெந்தவழியோ அந்தவழியாகச் சேர்ப்பிக்கின்றேன் இனிபயப்படாதே யென்று சொன்னுள்—எ-று. (உகூ)

பள்ளியி லகன்றனள் பணைத்த முலையார்பால் ...... *
விள்ளுமொழி யன்றுசெயல் வேறுமிலை யென்னு ... *
வுள்ளமெனு மூசலை யுகைத்தவர்கள் போலே ...... *
கள்ளவடி வாகவொரு காரண நினைந்தாள்........... *

(இ-ள்.) இவ்வாறுசொல்லிச் சயனத்தினின்றுமெழுந்து பெருத்தமுலைகளையுடைய பத்தினிமார்களிடத்து இதுசொல்லத் தக்க வாக்கியமன்று இதற்குவேறே யொருசெயலுமில்லையென்று தம துள்ளமென்று சொல்லுகின்ற ஊசலைத் செலுத்தினவர்கள்போலத் திருட்டுவேடமாக வொருகாரணத்தை நினைந்தனள்—எ-று.()

அற்றமறு கற்புடை யருந்ததியின் வேட .... *
முற்றனள் படிந்ததிலை யொன்றையு மொழித்தாண் *
மற்றையரு சூயைமுதன் மாதின்வடி வெய்தி ...... *
வெற்றுடல் கிடந்தழலு மெல்லணை புகுந்தாள் ... *

(இ-ள்.) சோர்வில்லாத கற்பினையுடைய அருந்ததியின துருவங்கொண்டனள் அவ்வுருவந் தனக்கமைந்ததில்லை யாதலால் அஃது ஒன்றினையும் விட்டவளாகி மற்றையனராகிய அநசூயைமுதலான மாதின துருவத்தையடைந்து உயிர்நீங்கியவுடலங்கிடந்து புரளுகின்ற சயனத்தலத்தின் வந்தாள்—எ-று. (ருக)

அற்பொலி கடைக்கண்விளை யாடுமிட மெல்லா ... *
முற்பல மலர்ந்தபல வோடைநிக ராகக் .... *
கற்பக நறுந்தொடை கலந்தகுழல் சோர............ *
வெற்பிணை சுமந்துவரு மின்னென நடந்தாள் ...... *

(இ-ள்.) கருமையாற் பொலிவுபெற்ற கடைக்கண்கள் விளையாடுகின்ற இடங்களெல்லாம் நீலோற்பல மலர்ந்தபலவோடைகளுக்கொப்பாகவும் கற்பகத்தினது வாசனை பொருந்திய மலர்மாலை

கள் பொருந்திய அளகஞ்சோரவும் இரண்டுமலைகளைச் சுமந்து கொண்டு வராநின்ற மின்னலைப்போல நடந்துவந்தனள்—எ-று.

புண்டரிக மாளிகை புரிந்தகுயி லோகோ .... *
தண்டதுயி ரோவவை தனித்துவர லின்றே .... *
அண்டாமு தோபழைய தானதறு வென்றே ...... *
தெண்டிரை கடைந்துதவு தெள்ளமுத மென்றான்...*

(இ-ள்.) அந்தப்பெண்ணை யக்கினிதேவன் கண்டு வெண்டாமரையாகிய வீட்டில்விரும்பி வீற்றிருக்கின்ற குயிலோ கோதண்டத்தையுடைய திருமாலினதுயிரோ அவை தனித்து வருதலின்று தேவாமுதமோ அது பழமையானதென்று திருப்பாற்கடலைக்கடைந்து புதிதாகவுதவிய தெள்ளிய அமுதமோவென்றான்—எ-று.

ஓவிய நடந்ததெனி லுண்மையல வில்வேள் .... *
தேவியெனி லன்றுகுல தேவதையு மென்றான் ...... *
பாவியை மறந்து முநிபன்னியர்கள் பின்போ ...... *
மாவிவரு கின்றதென வாதரவு கொண்டான் .... *

(இ-ள்.) இவ்வுருவம்பிரதமைநடந்துவருகின்றதென்றால் அஃது உண்மையன்று கருப்புவில்லினையுடைய மன்மதன் தேவியோவென்றால் அஃதுமன்றுநமதுகுலதெய்வமோவென்றால் அஃதுமன்று பாவியாகிய வென்னைமறந்து முநிவர்பத்தினிகளின்பின் செல்ற எனதுயிர்வருகின்றதென்று ஆசைகொண்டான்—எ-று.(௬௪)

பற்றினள் புயத்தினிசை பாணி மலராலே .... *
சுற்றினன் மதன்கணை துளைத்தவிட மெல்லா ...... *
மொற்றின டனத்தை யழலொத்த நிலவாலே ...... *
வற்றின வுடற்குளிர வாயமுது தளித்தாள் .... *

(இ-ள்.) அவ்வாறுவந்த மனைவியானவள் அக்கினிதேவனது புயத்தினைப் பற்றினவளாகி அவரதுடலைத் தனதுகைகளாகிய மலர்களினாலே தடவிச்சுற்றினள் மன்மதனது கணைகளாலே துளைத்த விடமெல்லாந் தனது தனத்தையொற்றினள் அக்கினியையொத்த நிலவினாலே வற்றிப்போன வுடலமானதுகுளிர அதரத்தினின்று முண்டாகாநின்ற அமிர்தத்தைத் தந்தாள்—எ-று. (௬௫)

வாருருவ வீறுமுலை மார்புருவ நேரோ..............*
யீருடலு மொன்றென விசைக்க விருபாலும் ......*
காருருவ மானகுழல் கட்டவிழ நித்த ....*
மோருருவ மாயிவ னுளத்துய ரொழித்தாள் ......*

(இ-ள்.) கச்சானது கிழிய வீறியமுலைகள் அக்கினிதேவனதுமார்பைத்துளைத்துருவ நேராக இருவருடலு மொன்றென்று சொல்லும்படி இரண்டுபக்கங்களினுங் கரியமேகத்தி னுருவமான அளகங் கட்டவிழ்ந்துதொங்க அன்றுமுதல் தினந்தினம் ஒவ்வோருருவங்கொண்டுவந்து இவனுடைய வுள்ளத்திலுள்ள காமத்துயரையொழித்தாள்—எ-று. (௫௬)

ஆசை தணிவித்தபி னிறங்கி யுயிரன்னாள் ....*
வீசியொளி சுற்றியதன் வேடமொடு வந்தாள்......*
மாசக லருந்ததியை வைத்துவரு வானேன்.........*
பேசுகென வங்கியொடு பெண்கொடி யுரைப்பாள் *

(இ-ள்.) தன்னுயிரையொத்த சுவாகா தேவியானவள் அக்கினிதேவனது ஆசையைத் தணிவித்தபின்பு சயனத்தினின்று மிறங்கிப்போய் சுற்றிலும் ஒளியைவீசிய தனதுருவத்தோடும்வந்தாள் அவளைக்கண்டு குற்றமில்லாத அருந்ததியைவிட்டு நீவந்ததற்குக்காரணமென்ன சொல்லுவாயென்றுகேட்கச் சுவாகாதேவியானவள் அக்கினிதேவனோடு சொல்லத்தொடங்கினாள்—எ-று. (௫௭)

விஞ்சிய வருந்ததியின் மெய்யுருவு கொள்ள.........*
நெஞ்சினி னினைத்திடினு நீறுசெயு மென்றே ......*
யஞ்சியறு சூயைமுத லாறுபெயர் போலே..........*
வஞ்சனை யுடற்கொடு மருட்டி மகிழ்வித்தேன்......*

(இ-ள்.) பெருமையின்மிகுந்த அருந்ததியினுடைய மெய்யுருவத்தை யான்கொள்ள மநதினினினைத்தாலும் நீறுக்குமெனக் கருதிப் பயந்து அநசூயைமுதலியஆறுபெயரையும்போலக்கபடவுருவத்தைக்கொண்டு உன்னைமருளச்செய்து மகிழும்படிசெய்தேன்—எ-று. (௫௮)

ஈதுசெய லென்றிவ ளியம்ப வெழுநாவோ.........*
னீதிநெறி பேணினை நினக்குரிமை யன்றோ..........*
காதலி யெனப்புதிய கட்டுரை யுரைத்தே............*
மாதவ முடிக்க விமவானிடை புகுந்தான்...........*

(இ-ள்.) இந்தச் சுவாகாதேவி யான்செய்த செயலிஃதென்று சொல்ல எழுநாவினையுடைய அக்கினிதேவன் நீ நியாயமான நெறியினை விரும்பிச்செய்தாய் அறிவுனக்குரிமையான செய்கையன்றோ என் காதலியேயென்று நூதனமான சிலகட்டுரைகளைச் சொல்லி இப்பாவங்களொழிய பெரியதவங்களைச்செய்ய இமோர்ப்பருவதச்சாரலுக்குப் போயினான்—எ-று. (௩௯)

ஆறுமுநி வோரு முயிரன்ன மனையாரைச்.........*
சீறினர்கள் வேறொருவர் சிந்தையு ளாகநீர்.........*
வேறகலு நீரென விடுத்தனர்கள் பின்னு ....*
மேறி யிமவானிடை யிருந்துதவ முற்றார் ....*

(இ-ள்.) ஆறுமுநிவர்களுந் தங்களுயிருக் கொப்பாகிய மனைவியரைகோபித்தவர்களாகி எம்மையன்றிவேறொருவருடையமனத்தின் விரும்பப்பட்டீர் ஆதலால் நீவிர் எம்மைவிட்டு வேறாகநீங்கிப் போவீர்களென்று விடுத்தனர் பின்னரப் பத்தினிமார்கள்இமோர்ப்பருவதத்திலேறி அதனிடத்திலிருந்து தவத்தைச்செய்தார்கள்.()

வேறு.

அருநெறி யிறையவன் கரவிலா நெறித்.............*
தெருவைய ரொடுதவஞ் செய்யும் வேலையி ....*
லருநெறி தீர்த்தமால் வரையி லேகுமென் ....*
றொருமொழி யந்தரத் துரைப்பக் கேட்டனர்......*

(இ-ள்.) அக்கினிதேவன் கரவில்லாத நெறியினையுடைய ஆறு பத்தினிமார்களோடு இமயமலையிற் றவஞ்செய்யுங்காலத்தில் அரியநெறியினையுடைய பெரியதீர்த்தகிரியிற் சென்று தவஞ்செய்யுங்களென்று ஆகாயத்தி லொருமொழி யுரைப்ப இவ்வெழுவருங் கேட்டனர்—எ-று. (௪௧)

பனிவரை தன்னிலுஞ் பாவ நீங்கிடுந் ....*
தனிவரை தீர்த்தமால் சைல மாதலா ....*
லனையதின் முளரியு மாறு மாதரு ....*
மினிதினி லெய்தியே யியற்றினர் தவம் ....*

(இ-ள்.) பாவங்களையெல்லாம்போக்கும் இமயமலையைக்காட்டிலும் ஒப்பற்றமலையாகிய பெரியதீர்த்தகிரியானது பாவங்களை நீக்குமாதலால்அந்தத் தபசாரகிரியில் அக்கினிதேவனும் ஆறுருஷி பத்தினி மார்களும் மதக்களிப்போடுசென்று தவஞ்செய்தார்கள்.

அன்றிறை தீர்த்தமொன் றவர்க்கு நல்கினர் .... *
குன்றினிற் சிலையிடைக் கூவலோ டெழுந் .... *
சென்றதின் மூழ்கியே தேவ மாதர்க .... *
ளொன்றிய கார்த்திகை யுடுக்க ளாயினர் .... *

(இ-ள்.) அக்காலத்தில் பரமசிவமானவர் அவ்வெழுவருக்கும் ஒருதீர்த்தத்தைத் தந்தார் அத்தீர்த்தகிரியில் பாறையினிடத்து ஆழத்தோடுமுண்டான அத்தீர்த்தத்திற்சென்று மூழ்கித் தேவமாதர்களாகப் பொருந்திய கார்த்திகையாகிய நக்ஷத்திரங்களாயினர்கள்.

கணைப்பத மிளவராற் கவின தாகவு .... *
மணித்தொடை யழகுடை யரம்பையாகவு .... *
மிணைக்கரு விழிக்கய லினம தாகவுந் .... *
துணைத்தக வாரன்மீ னுகத் தோன்றினர் .... *

(இ-ள்.) அம்மாதர்கள் கணைக்கால்களானவை இளவரான் மச்சத்தின் அழகினையுடைய தாகவும் பெருமைபொருந்திய தொடைகளானவை அழகினையுடைய வாழையாகவும் இரண்டாகிய கரிய கண்களானவை சேற்கெண்டையி னினமாகவும் தகுதியான துணையோடு கார்த்திகை நக்ஷத்திரமாகத் தோன்றினர்கள்—எ-று. (சச)


பாவகன் படிந்துதன் பாவ நீங்கினன் .... *
தேவரொண் சுனையவர் தீர்த்த மானது .... *
காவல வெனச் சொலிக் கரியமாலுடன் .... *
மாவளர் தீர்த்தமால் வரையை நண்ணினர் .... *

(இ-ள்.) அக்கினிதேவன் அத்தீர்த்தத்தில் மூழ்கித் தன்பாவத்தினின்று நீங்கினன் அந்தவக்கினிதேவன் தீர்த்தமானதுதேவர்களால் மதிக்கத்தக்கதாகும் காவலனாகிய ஸ்ரீராமனேயெனச்சொல்லி அக்கரியநிறத்தையுடைய திருமாலோடு இலக்குமிவாசம்பண்ணுகின்ற பெரியதீர்த்தகிரியைச் சேர்ந்தார்கள்—எ-று. (சரு)

பன்னிரண்டாவது

அக்கினிதீர்த்தச்சருக்கம்-முற்றிற்று.

ஆக சருக்கம் - கஉ - க்கு - செய்யுள் - ௩உசு.



சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.

பதின்மூன்றாவது

சுவேதகேதுச்சருக்கம்.

அப்பொழு திளவர சானு மித்திர .... *
னிப்புவி தனிலிழிந் தேறு வானெனத்................*
துப்பிதழ் மடந்தையர் சூழ மேருவை............ *
யொப்பெனு விமானமே லொருவன் றோன்றினன் *

(இ-ள்.) ஸ்ரீராமனும் அகத்தியமுநிவருந் தீர்த்தகிரியிற் போருப்போது இளவரசாகவிருக்கு மித்திரனானவன் இந்தப் பூமியிலிறங்கி ஏறுகின்றான்போல பவளம்போலுஞ் சிவந்த வதரத்தையுடையமாதர்கள்சூழ மகமேருவுக் கொப்பென்றுசொல்லுகின்ற விமானத்தின்மீது ஒருவன் வந்தனன்—எ-று. (க)

பொழிந்திடும் விடவராப் புழை யெயிற்றினா...... *
லழுந்திடுந் துயரற வவனி மீதிலே.................. *
யிழிந்திடு முழுமதி யென்ன நித்திலக்................*
கொழுந்தொளி விடுமொரு குடை நிழற்றவே......*

(இ-ள்.) விடத்தைப் பொழியாநின்ற வராவினது துளையையுடைய பற்களினால்அழுந்திடுகின்ற துன்பநீங்கப் பூமியினிடத்து இறங்கிவருகின்ற பூரணச்சந்திரனைப்போல முத்துச்சரங்களினது கிரணக்கொழுந் தொளிவிடுகின்ற ஒருகுடையானது நிழலைச்செய்ய,

மங்கையர் முகத்தினை மறுவிலா முழுத் .... *
திங்களென் றணுகிய சிலவராவெனக் .... *
கங்கண மணிவெயில் கலந்த தாமரை............ *
யங்கையி லசைத்திட வால வட்டமே............ *

(இ-ள்.) மாதர்களுடைய முகத்தைக் குற்றமில்லாத முழுமதியென்று கருதியுண்ணவந்த சிலவராவைப்போல மாணிக்கங்களாற் செய்த பிரகாசத்தைவீசாநின்ற கங்கணம்பொருந்திய தாமரைமலர்போன்ற அழகிய கையின்கணிருந்து ஆலவட்டமான தசைந்திட—எ-று. (௩)

அருவைய ரிருபுறத் தணைந்து வால்வளைக்............*
கரமலர் நீட்டிவெண் கவரி வீசிடத்..............*
திருவொடு நவமணி சிறந்த புட்பக...............*
மிருசிறை யடித்துவந் திழிவ போலுமே............*

(இ-ள்.) தேவர்மாதர்க ளிருபுறத்தினின்று வெள்ளிய வளைகளையுடைய கைகளாகிய மலர்களைநீட்டி வெண்சாமரைகளை வீசுதல் அலங்காரத்தோடு நவரத்திநங்களாலுஞ் சிறப்புற்ற புட்பகவிமானமானது தனது இரண்டுசிறைகளையு மடித்துக்கொண்டுவந்து இழிகின்றதுபோலு மிருந்தது—எ-று. (௪)

வந்தினி திழிந்தனன் வரையின் சாரலி............ *
விந்திர வூர்தியு மேவன் மாதரு .... *
மந்தர மிசையினின் றவனி நோக்கிடச் .... *
செந்தமிழ் முநிவருந் திசையிற் சென்றனன் ...... *

(இ-ள்.) அவ்வாறுவந்து தீர்த்தகிரியி னடிவாரத்தில் இறங்கினனுகிப் புட்பகவிமானமும் ஏவல்செய்யு மாதர்களும் ஆகாயத்தின்கணின்று பூமியைப்பார்க்கக் குற்றநீங்கிய தமிழையுடைய அகத்தியமுநிவன் வருகின்றதிசையினிலே சென்றனன்—எ-று. (௫)

இருந்தவ னொருவனோ டிருவர் நிற்றலும் .... *
பொருந்தியங் கவர்களைப் போற்றி யேகியே ...... *
வரைந்தொரு தலத்திடை வளரும் வெற்றுட ...... *
லரிந்தரித் தருந்தின னருவருத்தசே ...., *

(இ-ள்.) அவ்வாறு செல்லும்போது பெரியதவத்தினையுடைய வொருவரோடு இருவர் எதிரினின்றபோது அங்குநின்று அவர்களை த்துதித்து அப்பாற்சென்று ஓரிடத்தில் உயிர்நீங்கிவளருகின்ற வெ றியவுடலைக் கத்தியாலரிந்தரிந்து புசித்தனன் அப்பொழு தந்த சையின்மீது வெறுப்புண்டாயிற்று—எ-று. (சு)

வருத்தவன் வருத்ததே யன்றி மண்ணின்மேற்...... *
றெருத்தன யாவையுந் துய்த்த லின்மையான்......*
மிகத்தசை வெறுத்தது விதியு நீங்கிய............... *
தகத்திய முநியிவ னுமென் றெண்ணினன் .... *

(இ-ள்.) தெய்வம் வருத்தவகையானல்லது நிலவுலகத்தில் முய ன்று தொகுத்தனவாகிய எல்லாப்பொருள்களையும் அனுபவித்தல் கூடாமையால் மிகுதியாக நமக்குத் தசையின்மேலுள்ள விருப்ப ம்வெறுப்புண்டாயிற்று நமக்கு விதியுநீங்கியது ஆதலால் இவடத்தி ல்நிற்கின்ற விவர் அகத்தியமுநிவராகுமென்று மநதினினைத்தான்.

அயலுற மருவிய வரசர் கோவையுந் .... *
தயரதன் மகனிவன் சங்கை யின்றென............... *
மயலுற மரியுடன் படுத்தி வாள்விழிப் .... *
பயனுற மகிழ்ந் தவர்பாங்கர் நண்ணினன் .... *

(இ-ள்.) அகத்தியமுநிவரது பக்கத்தில் இருக்கின்ற அரசர்க்கர சனும் தயரதச் சக்கரவர்த்தியின் குமாரனுகும் இதற்குச் சந்தே கமில்லையென்று மயக்கங்கொண்ட தன்மனதை யுடன்படுத்தி ஒளி யினையுடைய தன்னிரண்டுகண்களும் பிரயோசனத்தைப்பெறச் சந்தோஷித்து அவர்கள் பக்கத்திற்சார்ந்தான்—எ-று. (அ)

பூதர வுயரமும் புணரி யாழமு....................... *
மேதமு மகத்திய முநியை யேத்தினன்............ *
கோதம முநிவனைக் குடும்பி யாக்கிய .... *
பாதனை முடியுறப் பணித்து போற்றினன் .... *

(இ-ள்.) விந்தகிரியி னுயரத்தையும் கடலினதாழத்தையும் அ வைகளின்குற்றத்தால் ஒழித்த அகத்தியமுநிவனைவணங்கித் துதித் தான் கௌதமமுநிவனைக் குடும்பத்தைபுடையவனுக்கிய திருவடி யையுடைய ஸ்ரீராமனைத் தன்முடி யவர்பாதத்திற்பொருந்த வண ங்கித்துதித்தான்—எ-று. (கூ)

பூமிசை முடியுறப் பணிந்து போற்றிய............ *
கோமகற் கியல்றநல் லாசி கூறியே........... *
மாமலை யருந்தவ முநிவன் மன்னநின் .... *
நாமமும் வரவையு நவிலு கென்றனன் .... *

(இ-ள்.) பூமியின்மீது தனதுமுடிபொருந்த வணங்கித்துதித்த அரசனுக்குப்பொருந்தியநல்ல ஆசீர்வாதஞ்சொல்லிப்பெருமை பொருந்திய பொதியமலையை யிடமாகவுடைய செய்தற்கரிய தவத்தையுடைய அகத்தியமுநிவர் அரசனே உன்னுடைய பெயரையும் உமதுவரவையும் சொல்லுவாயென்று சொன்னார்—எ-று.

மெய்த்தசை யருந்திய வினையை வீட்டினீர்......... *
கைத்தல நெல்லிபோற் கதியைக் காட்டினீர் ...... *
சத்திய மடைந்தபேர் தம்மை யோம்புத .... *
லுத்தம குணத்தினோர்க் குரிமை யல்லவோ ...... *

(இ-ள்.) எனதுமெய்யி லுள்ள மாம்சத்தை யானேயுண்ட தீவினையையொழித்தீர் உள்ளங்கை நெல்லிக்கனிபோல நற்கதியையுங்காட்டினீர் சத்தியத்தையும் தம்மைவந்தடைந்தவர்களை இரக்ஷித்தலும் உத்தமகுணத்தை யுடையவர்களுக்கு உரிமையல்லவோ.()

எண்ணிய சுவேதகே தென்ப தென்பெயர்......... *
மண்ணிடை யோதனம் வழங்கிடாமையால்......... *
விண்ணினு மிழிந்து கீழ்விரைந்தென் மேனியின்... *
புண்ணுடை யுடற்றசை புசித்து வாழ்ந்தனன் ...... *

(இ-ள்.) குறிக்கப்பட்ட சுவேதகேதென்பது என்பெயராகும்- இப்பூமியினிடத்து ஒருவருக்கும் யான் அன்னங்கொடாமையால் ஆகாயத்தினின்று மிப்பூமியில்கண்ணிறங்கி என்மேனியிலுள்ள புண்ணையுடைய வுடலின் மாமிசத்தை ஆசையோடுபுசித்து வாழ்ந்திருந்தேன்—எ-று. (கஉ)

பொங்கிய நகுடனைப் புயங்க னாக்கிய............... *
அங்குறு முநிவனே யயோத்தி மன்னனே .... *
யுங்கடன் வரவினு லொழிந்த தென்விதி .... *
யெங்கட னினியுமக் கேவல் செய்வதே .... *

(இ-ள்.) அழகுமிகுந்த நகுடனென்னு மரசனைப் பாம்பாக்கிய அழகிய அகத்தியமுநிவனே அயோத்திநகரத்தை யாளுகின்ற

அரசனுகிய ஸ்ரீராமனே உங்களிருவருடையவரவினு லெனதாழ்வினை நீங்கிற்று இனிமேல் உங்களிருவருக்கும் ஏவற்பணிவிடைகளைச் செய்வதே எமதுகடன்—எ-று. (கங)

என்றொரு தரணியு மினிது நல்கிய................*
மன்றநம் பெயரினை மறந்து வாழ்வனேன்..........*
மன்றினி லிருந்தழி வழக்கு ரைத்துளோ.............*
னன்றியை மறந்துளோ னரக மென்னதே ....*

(இ-ள்.) இவ்வாறுசொல்லி ஒப்பற்ற மேனிலத்தையு மெனக்கிவியவாகத்தந்த தேற்றமாகிய நமதுபெயரை யான்மறந்து வாழ்ந்திருப்பேனுனல் ஒரு சபையினிடத்திருந்து வழக்கழிவுசொன்னவனும் செய்ந்நன்றிமறந்தவனும் போகின்றநரகம் என்னுடையதாகும்—எ-று. (கச)

புறமொழி பகர்ந்தவன் கொடாது பொய்த்தவன்...*
சிறுபிழைக் குறுபெருந் தண்டஞ் செய்தவன்...... *
நிறைதரு கற்பினு டன்னை நீத்தவ....................*
னறைமது வருந்தினே னரக மென்னதே............*

(இ-ள்.) ஒருவர்மேற்காணுத வழிப்புறங் கூறினவனுங் கொடுக்குது மென்றுரைத்துக் கொடாதுபொய்த்தவனுஞ் சிறியகுற்றத்திற்கு மிகவும் பெரியதண்டஞ்செய்தவனும் நிறைந்த கற்பினையுடையவளைக் கெடுத்தவனும் மணத்தையுடைய மதுவை யுண்டவனுஞ் செல்லுகின்ற நரகம் என்னதாகும்—எ-று. (கரு)

குருவினை விருந்தினைக் குழவி தன்னைவிட்............*
டொருவனே தனியிருந் துதரம் போற்றினே...... *
னரனிசை பழித்தவ னழுந்துந் தீநர.................. *
கிரவியுள் ளளவினு மென்ன தாகவே.......... ....*

(இ-ள்.) ஆசாரியனும் விருந்தினனும் குழந்தையும் ஆகியவிவர்களைவிட்டுத் தானொருவனே தனியாகவிருந்து வயிற்றைவளர்த்தவனும் பரமசிவனதிசையைப் பழித்தவனும் மூழ்குகின்றபொல்லாத நரகம் சூரியசந்திர னுள்ளவரையிலும் என்னுடையதாகும்-என்றவாறு. (கசு)

மறைமொழி யிகந்தவன் கநகம் வவ்வினேன்.........*
பிறர்மனை புகுந்தவன் பொய்ம்மை பேசினேன்... *
குறைவறக் கண்ணினீர் குடிக்கு நல்கிடு .... *
மிறைமகன் புகுநர கென்ன தாகுமே... ....*

(இ-ள்.) வேதமொழியைக்கடந்தவன் பொன்னைத் திருடினவன் பிறர்மனையாளிடத்துச் சென்றவன் பொய்பேசினவன் குடிகளுக்குக் கண்களினின்று குறைவற்ற நீரொழுகும்படி செய்வித்த அரசன் ஆகிய விவர்கள்புகுகின்ற நரகம் என்னுடையதாகும்—எ-று.

அன்னமுங் கன்னியு மயமும் விற்பவன் .... *
மன்னனைக் களத்தினில் வைத்து மீண்டவன்......... *
றன்னைவந் தடைந்தபேர்க் கிறுதி தந்தவ.......... *
னின்னவர் புகுநர கென்ன தாகுமே .... *

(இ-ள்.) அன்னத்தையுங் கன்னியரையும் நீரையும் விலைக்குவிற்கின்றவனும் அரசனைப் போர்க்களத்தில்விட்டுத் திரும்பிவந்தவனுந் தன்னையபயமென்றுவந்தடைந்தவர்களுக்கு மரணத்தைத்தந்தவனும் ஆகிய வித்தன்மையையுடையவர்கள் புகுகின்றநரகம் என்னுடையதாகும்—எ-று.　　　(கஅ)

என்றுரை பலபகர்ந் திருவர் தாளினுங்.............*
குன்றென வணங்கிநின் றினிமை கூறியே............*
மின்றிகழ் விமானமேல் விண்ணி லேகினு............*
னன்றவ னகன்றபின் னண்ணல் கூறுவான் .... *

(இ-ள்.) இவ்வாறான பலவுரைகளைச்சொல்லி அவ்விருவருடைய தாளினுங் குன்றெனவீழ்ந்து வணங்கிநின்று இனிமையான வுபசார வார்த்தைகளைச்சொல்லி மின்னலைப்போலும் பிரகாசிக்கின்ற விமானத்தின்மேலேறி யாகாயமார்க்கமாகச் சென்றனன் அன்று அவன்போயின்பின்பு ஸ்ரீராமன் சொல்லத்தொடங்கினுன்-என்றவாறு.　　　(கசு)

சாடுற வளர்க்கும் வாதாவி யாகிய.................... *
வாடறு படுத்துநோ யகடு விட்டெழ ....*
கூடவே பரகதி கொடுத்த மாதவ .... *
தேடியிங் கிவன்வரல் தெளியக் கூறென்றான்.........*

(இ-ள்.) பெரியோர்களைச் சாடுதல்செய்ய வளர்க்கின்ற வாதா வியாகிய வாடானது பத்திரவப்படுத்துகின்ற நோயானது வயிற்றைவிட்டுநீங்கவும் அவனுக்குடனே மேலான மோட்சகதியைத்தத்த மிருந்த தவத்தையுடையவனோ இந்தச்சுவேதகேதென்னு மரசன் நம்மைத்தேடி யிவ்விடத்தில் வருதலையான் தெளியும்படிச் சொல்லவேண்டும்—எ-று. (உ0)

வே று.

விரதமா முநிவன்கூறும் விதர்ப்பநா டென்னுநாட்டில்......... *
சுரதனே டிவனைத்தந்த மன்னவன் சுதன்மனென்பான்......... *
தரும தேவதைபோலிந்தப் புவியெலாந் தனிக்கோலோச்சிப் *
பருதிபோல் விளங்கிப்பின்னர் விருத்தனும் பருவஞ்சார்த்தான் *

(இ-ள்.) ஸ்ரீராமர்கேட்கத் தவத்தினையுடைய பெருமைபொருந்திய அகத்தியமுநிவர் சொல்லத்தொடங்கினர். விதர்ப்பதேசமென்னு மோர் தேசமுண்டு அத்தேசத்தையாளுகின்ற வரசன் சுரதனென்பவனோடு இந்தச் சுவேதகேதுவையுந்தந்த சுதன்மனென்பவன் தரும தேவதையைப்போல இந்தவுலகமெல்லாம் ஒப்பற்ற செங்கோல்செலுத்திச் சூரியனைப்போல வெங்கும்விளங்கிப் பின்னர் விருத்தனுகின்ற பருவத்தை யடைந்தான்—எ-று. (உக)

வெற்றியை வளாத்ததூய்மை வேள்வியை வளர்த்ததூய்மை... *
சுற்றன புவியின்பாரச் சுமையது கனத்தினலே............... *
முற்றிய வேள்வித்தண்ணீர் மூழ்கிய மகிழ்ச்சியாலே............ *
மற்றடம் புயத்தினுற்கு வளர்ந்தது வயிரமேனி .... *

(இ-ள்.) வெற்றியைக் கைக்கொண்ட தூய்மையாலும் வேள்வியைச்செய்த பரிசுத்தத்தினலும் நிறைந்தனவாகிய புவியினது பாரமானசுமையின் பளுவினலும் நிறைவேற்றிய யாகமாகிய தண்ணீரிலே ஸ்நாநஞ்செய்த மகிழ்ச்சியினலும் மல்லுத்தத்திற்குத்தக்கபுயங்களையுடையவனுகிய வரசனுக்கு வயிரம்போன்ற வுடலானது வளர்ந்தது—எ-று. (உஉ)

ஐந்தரு வடிவாமிந்த வரசனை யறியுமாறு......................... *
வந்திடும் விழுதுபோல வடிவெலா நரைகளான .... *
சுந்தர வடிவமெல்லாந் திரங்கின சுருதியாளர்................. *
மந்திர வரிசிதூவப் பொலிந்திடும் வடுக்கள்போல .... *

(இ-ள்.) பஞ்சதாருவின் உருவத்தைப்போலு மிராநின்ற இந்த வரசனை யறியவருவதுபோல வந்திடுகின்ற விழுதுபோல உடலமெல்லாம் நரைகளுண்டாயின சுந்தரமான வவன்வடிவமெல்லாந் திரைகளுண்டாயின வேதத்தையுடைய அந்தணர்கள் மந்திரஞ்சொல்லி யிறைக்கின்ற அட்சதைகள் உடலிலுண்டாகிய வடுக்கள் போலப் பொலிவுபெற்றிருந்தன—எ-று. (உரு)

மூப்பினு லிவ்வாறேய்ந்து முறையினுலுடலை நீத்து.........✻
மாப்பொனு டணைந்தானிந்தச் சுவேதகே தென்னுமன்னன்... ✻
காப்புதா ணணிந்துசெம்பொற் கலசநீர் பலவுமாட்டிச்........✻
சேப்புநீண் மகுடஞ்சூட்டிப் புரந்தனன் றிசைகளெல்லாம்... ✻

(இ-ள்.) சுதன்மனென்னு மரசனுனவன் மூப்பினுலிப்பிரகாரந் தேகந்தளர்ந்து முறையாகவுடலைவிட்டுப் பெருமைபொருந்திய சுவர்க்கலோகத்தை யடைந்தனன் இந்தச்சுவேதகேதென்னு மரசன்கரத்திற் கங்கணமணிந்து செவந்தபொன்னுற்செய்த கலசநீர் பலவினுலு மபிஷேகம் பண்ணப்பட்டுச் செவந்த நீண்ட இரத்தின மகுடஞ்சூடப்பட்டு அட்டதிசைகளையும் ஆண்டிருந்தனன்—எ-று.

தண்டமிழ் புனைவோர்க்கெல்லாந் தனமெழு கிரிபோற்றந்தான்✻
குண்டல மௌலியாதி தூணியுங் கொடுத்தான்கன்னிக் ....✻
கெண்டையங் கருங்கட்செவ்வாய்க் கிளிமொழி யவரையீந்தான் ✻
வண்டினந் தொடருமாவும் வாசியும் யாவுமீந்தான்........... ✻

(இ-ள்.) தன்பேரில் தண்ணிய தமிழ்ப்பாக்களை யணிவோர்க்கெல்லாம் எழுமலைகளைப்போலுந் தனங்களைத் தியாகமாகக்கொடுத்தான் அரசர்களுக்குக் குண்டலங்களுங் கிரீடங்களுந் தனுசும் அம்புறுத்தூணியுங் கொடுத்தான் அந்தணர்களுக்கு இளமையான கெண்டைமீனைப்போலு மழகிய கரியகண்களையுஞ் சிவந்தவாயினையுங் கிளிபோன்றமொழியினையுமுடைய கன்னியர்களைக்கொடுத்தான் அன்றியும் அவர்களுக்கு வண்டினந்தொடருகின்ற யானைகளுங் குதிரைகளுமாகிய விவற்றையுமீந்தான்—எ-று. (உசு)

பாரிலே மறையோர்க்கெல்லாம் பழனமும் பதியுமீந்தான் ...✻
தேரிலே யனந்தமீந்தான் சிவிகையுங் கலையுமீந்தான்..........✻
மூரிலே துலங்குமார்பன் முனமாப் பொழிந்தசெங்கை ......✻
நீரிலே கடல்களேழு நிறைகட லானதன்றே........... ✻

(இ-ள்.) நிலவுலகத்தில் அந்தணர்களுக்கெல்லாம் விளைநிலங்களுங் கிராமங்களுந் தானங்கொடுத்தான் அனந்தந் தேர்களும் பல்லக்குகளும் வஸ்திரங்களுங் கொடுத்தான் மலர்மாலைகளால் விளங்குகின்ற மார்பினையுடையச் சுவேதகேதென்னு மரசனானவன்தானத்துக்காகக் கையாற்பொழிந்த நீரினாலே எழுகடலும் நிறைகடலானது—எ-று. (உகூ)

அன்னமென் பதுவேயன்றி யனைத்துள பொருளுமீந்தான் ... *
செந்நெலுங் கமுகங்காவுஞ் செண்பகக் காவும்யாவுங்............*
கன்னலுந் தெங்குமாவுங் கதலியுங் காடாக்கண்டான்...........*
மன்னுகோ டலையுமாறு மதகுவாய்த் தலையுங்கண்டான் ...... *

(இ-ள்.) அன்னதானமென்ப தொன்றுமொழிய மற்றை யெல்லாப்பொருள்களையுந் தானமாகக்கொடுத்தான் இதுவன்றி செந்நெற்பயிர்களுங் கமுகமரங்களுஞ் - செண்பகமரங்களுங் - கரும்புகளுந் - தெங்கமரங்களும் - மாமரங்களும் - வாழைமரங்களுங் காடாக வுண்டுபண்ணினான் நிலைபெற்ற கரைகளையுடைய அலைகள்பொருந்திய ஆறுகளும் அவ்வாற்றுநீர் விளைநிலங்களிற்செல்லுதற்கு மதகுபொருந் துதலையு முண்டுபண்ணினான்—எ-று. (உஎ)

பற்பக லிவையாளிக்கிப் படியெலாம் புதல்வர்க்கீய்ந்து ...... *
வெற்புகள் பலவுநீங்கி விளாவிலா ருயிர்கள்சோரும்........... *
கற்பிள வினையபாலைக் கடும்பெரு வனத்திலெய்தி .... *
யற்பக லுணவுமின்றி யருந்தவ முடித்தான்பின்னர் .... *

(இ-ள்.) இத்தருமதானங்களாற் பலநாள்களைக்கழித்துப் பின்பு தாளுளும் உலகங்களையெல்லாந் தன்புத்திரர்களுக்குக் கொடுத்துப் பின்னர் அநேகமலைகளைக்கடந்து விளாவிலரிய வுயிர்களெல்லாஞ் சோரத்தக்க கல்லினது பிளவைப்போது நிலப்பிளப்பையுடைய கொடுமையான பெரியபாலை நிலத்திற்சென்று இராப்பகலுணவின்றி யரியதவங்களை முடித்தனன்—எ-று. (உஅ)

தன்னருந் தவங்களெல்லா முடித்தபின் சுவேதகேது .... *
பன்னக வரிபோலிந்தப் படியிலே யுடலைநீத்துப்........... *
பொன்னுல கணைந்தான்முன்னம் புரிந்தநல் வினையினாலே...... *
யந்நெறி யயனுந்தோய்ந்தி யவனுடன் விதிக்கனுற்றார் .... *

(இ-ள்.) சுவேதகேது மகாராஜனானவன் அநேக வரியதவங்களை யெல்லா நிறைவேற்றியபின் பாம்பினதுரியைப்போல இந்தப்பூ மியினிடத் துடலைவிட்டு முன்னஞ்செய்த நல்வினையினாலே சுவர்க்கலோகத்தை யடைந்தனன் அவன் செல்லுநெறியில் பிரமனார்வந்து அந்தச் சுவேதகேதுவோடு சொல்லத்தொடங்கினார்—எ-று.

ஈகையே முதலாந்தான மீகையின் பலத்தினாலே .... *
பாகசா தனனார்பெற்ற பதவியுன் பதவியாக .... *
வோகையாற் களித்துவாழ்வா யோதனம் பகுந்திடாதோ .... *
னுகையா லமுதபான மூனக் கருவருப்பதாமே .... *

(இ-ள்.) பொன்முதலிய தானங்கள் கொடுத்தபலத்தினாலே இந்திரனார்பெற்ற சுவர்க்கபதவி யுன்னுடையபதவியாக நீவிருப்பத்தோடு சந்தோஷித்து வாழ்ந்திருப்பாய் ஒருவருக்கு மன்னம் பகுந்துகொடாதவனாகையால் உனக் கமுதபான மருவருப்புடையதாக விருக்கும்—எ-று. (௬0)

அன்னமும் பகுர்ந்திடாவுன் னாக்கையைக் காக்கைதீண்டா...... *
பின்னொரு கழுகுஞ்சேரா ஞாளியும் பிணங்கிவாரா .... *
வன்னியுங் கலவா தண்டவனத்தது வளராநிற்கு............ *
மன்னது பசிநோய்தீர வருந்தி வானுலகையாள்வாய்........... *

(இ-ள்.) அன்னத்தை யொருவருக்குமிடாமையால் உன்சரீரத்தைக் காக்கைகள் மூக்கினாலுந் தொடுவதில்லை மற்றைக் கழுகுகளு நெருங்குவதில்லை நாய்களு மொன்றோடொன்று பிணங்கி அப்பிணத்திடத்துவாரா நெருப்புமதனைக்கலந்தெரியாது அந்தவுடல்தண்டகவனத்தில் வளர்ந்துகொண்டேயிருக்கும் அந்தப் பிணத்தை உனது பசிநோய்நீங்க வுண்டு வானுலகத்தையாளுவாய்—எ-று.()

வேறு.

கன்னிதான நெடும்புவியுங் கலையுமாவுங் கனப்பரியு .... *
மின்னதான மணித்தேரும் வேண்டும்பணியு மென்பழனச் ... *
சொன்னதான மற்றுமுள சுகிர்தயாக பலன்களெலா......... *
மன்னதான பலத்தைநிக ராமோவாகா தாகாதே.......... *

(இ-ள்.) கன்னிகாதானமும் - நெடியபூமிதானமும் - வஸ்திரதானமும் - கெஜதானமும் - அசுவதானமும் பிரகாசம்பொருந்

திய மணிகள்கட்டிய இரததானமும் வேண்டிய வாபரணதானங்க ளும் விளைநிலதானமும் - சுவர்ன்னதானமும் ஆகிய விவற்றுல்வ ரும்பலன்களும் மற்றுமுண்டாகிய நன்மையைத்தருகின்ற யாக ங்களாலுண்டாகிய பலன்களும் அன்னதானபலத்துக்கு நிகராகு மோ ஆகாதாகாது—எ-று. (௫௨)

போதநல்லறிவு மைந்து புலன்களும் பொறியுஞாநச்........ ✻
சோதியங் கடவுளானாத் தொழுகையு மறத்தின்பேறு .... ✻
மாதரில்லறமு மன்ன மயக்கொடுத் திடுதலாலே .... ✻
யோதன முதவினனே யுயிரையு முதவினனே................ ✻

(இ-ள்.) மிருந்த நல்லறிவும் ஐந்துபுலன்களும் ஐம்பொறிகளு ம் ஞானமயமான சோதியினையுடைய அழகியகடவுளை வணங்குத லும் தருமத்தினுலுண்டாகும் பலனைப்பெறுதலும் மாதரோடு கூடி யில்லறநடத்துதலும் ஆகிய விவைகளை அன்னமயங்கொடு த்திடுதலாலே அன்னங்கொடுத்தவனே தன்னுயிரையு முதவினவ னுவன்—எ-று. (௫௩)

உண்டியுதவுங் கொடைபோலே யுலகிற்சிறந்தகொடைகாணேன் ✻
கொண்டகொழுநற் கிணையாகச் சிறந்தகடவுட் குலங்காணேன் ✻
மண்டுமறத்தின் சிறப்பாய துணையுங்காணேன் மறுமையின்கட் ✻
கண்டவுறுப்பிற் கருவிழிபோற் சிறந்தவுறுப்புங் காணேனே... ✻

(இ-ள்.) ஒருவருக்குணவாகிய அன்னங்கொடுக்குங் கொடை போல வுலகத்தில் சிறப்பையுடைய கொடையைக்கண்டேனில்லை தன்னைமணஞ்செய்த கொழுநனுக்கு ஒப்பாகச் சிறந்த தேவர்கூ ட்டங்களி லொருவரையுங்கண்டேனில்லை நெருங்கிய தருமத்தை விட மறுமைக்குச் சிறப்பாய் துணையையுங்கண்டேனில்லை யான் கண்ட வவயங்களுக்குள் கரியவிழிகளைப்போலச் சிறப்பினையுடை ய வுறுப்பினையுங் கண்டேனில்லை—எ-று. (௫௪)

என்றுபகரா வுன்விதியுபிராமன் வரவா லகவுமென .... ✻
வன்றுமொழித்தே யயன்போனு னவைகாணிவன்றன்வரவென்றுர்
மன்றதுலாவ மணத்துடனே வரிவண்டுலாவ வண்டுடனே...... ✻
தென்றலுலாவு மலயமுநி திருமாற்கதியத் தெளிவித்தான்...... ✻

(இ-ள்.) இப்படியென்றுசொல்லி உனக்குண்டாகிய வ்விதியும் ஸ்ரீராமனது வரவினாலே நீங்கிவிடுமென்று அக்காலத்திற் பிரமன்சொல்லிவிட்டுப்போயினான் அவைகள்தான் இந்தச்சுவேத கேதுவின் வரவென்று மணங்களுலாவ வம்மணத்துடனே வரிபொருந்திய வண்டுகளுலாவ அவ்வண்டுடனே மந்தமாருதமுலாவுகின்ற பொதியமலையை யிடமாகவுடைய அகத்தியமுநிவர் திருமானுக்கறியும்படி தெளிவித்தார்—எ-று. (ருரு)

தெளிவித்ததற்பின் னவனுடனே செல்லாவுனக்குத் தீர்த்த முள, தொளிவித்தகளா யருச்சியென வுரைத்துமறைந்தா னுயர் முநிவ, னளிவித்தியபூந் தொடைமார்ப னசலத்திடைசேர்ந் ததின்பெருமை, கிளிவித்தகமா மொழிச்சீதை கேட்க்கும்படித்தான் கிளத்திடுவான் .... *


(இ-ள்.) மேலாகிய அகத்தியமுநிவர் ஸ்ரீராமனுக்குத் தெளிவித்தபின் அந்தராமனுடனே சென்றுனக்கு இம்மலையில் தீர்த்தமொன்றுண்டாகும் ஒளியினையுடைய பரமசிவத்தைப் பூசிப்பாயென்றுசொல்லி மறைந்துபோனார் அதன்பின்பு அளிகணிறைந்த மலர்மாலைகளையணிந்த மார்பினையுடைய ஸ்ரீராமன் தீர்த்தகிரியையடைந்து அதனதுபெருமையைக் கிளியைப்போலும் பேசுகின்ற ஞானத்தையுடைய மொழியினையுடைய சீதாதேவிகேட்க்கும்படி தான் சொல்லத்தொடங்கினான்—எ-று. (ருசு)

பதின்மூன்றுவது

சுவேதகேதுச்சருக்கம்

முற்றிற்று.

ஆ சருக்கம் - கந - க்கு - செய்யுள் - ருகரு.



சிவமயம்.

தீர்த்தகிரிபுராணம்-மூலமும்-உரையும்.

பதினான்காவது

இராமதீர்த்தச்சருக்கம்.

பாரமுத்தின மருங்குசேர் படிகவெண் பாறை......*
காரடுத்த வானகத்தொளி கலந்துமுன் காண்டல் ... *
வாரடுத்தமா மலையெனு மிளமுலை மடவாய்........*
தாரகைக்குலம் வளைந்தவான் சசியெனத் தகுமால் *

(இ-ள்.) பரியமுத்தினங்கள் பக்கத்திற்சேர்ந்து சூழ்ந்திருக்கும் வெள்ளிய படிகப்பாறையானது மேகங்கள் சஞ்சரிக்கின்ற ஆகாயத்தினதொளிகலந்து எதிராகக்காணுதல் கச்சினைப் பொருந்திய பெரியவிரண்டுமலைகளென்று சொல்லாநின்ற இளமையான முலைகளையுடைய பெண்ணே நக்ஷத்திரகூட்டங்கள் சூழப்பெற்ற பெருமைபொருந்திய பூரணச்சந்திரனென்று சொல்லத்தக்கதாயிருக்கின்றது—எ-று. (௧)

மஞ்சுசூழ்வரைத் தடமெலா மடப்பிணைக் குருதி... *
யஞ்சமாறனைத் தேடிய வயப்புலி யடிக .... *
ளஞ்சதோய்விழி வரையர மடந்தையர் நடந்த ... *
பஞ்சதோயடிச் சுவடென விளங்குதல் பாராய் ... *

(இ-ள்.) மேகங்களாற் சூழப்பட்ட அம்மலையின்மார்க்கங்களெல்லாம் இளமையான பெண்மானைக்கொன்று அதனுதிரத்தை யாவருமஞ்சும்படி தன்காலாலளைந்து சென்ற வலியினையுடைய புலியினுடைய காற்சுவடுகள் விஷம்பொருந்திய விழிகளையுடைய மலையரமாதர்கள் நடந்த செம்பஞ்சுதோய்ந்த பாதச்சுவடென்று சொல்லும்படியாகப் பிரகாசித்தலை நீ பார்ப்பாயாக—எ-று. (உ)

பரவுமிக்கிரி யிடத்திலே பாடலந் தருவுங் .... ✻
குரவுமற்றுள கனிகளு மதுவினீர் கொழித்தல்......✻
கரியகற்றொறுங் கங்கைநீர் பெருகுதல் கண்டு...... ✻
தருவுமப்படி தீர்த்தநீர் சொரிந்திடுந் தகவாம்...... ✻

(இ-ள்.) யாவராலும் வணங்கப்படுகின்ற இந்தத்தீர்த்தகிரியினிடத்தில் பாதிரிமரங்களுங் குராமரங்களும் மற்றுமுள்ள வேங்கைமரங்கண்முதலியனவுந் தேனாகிய நீரைச்சொரிதல் கருமையாகிய கற்கடோறுங் கங்கையாகிய நீர்பெருகுதல் கண்டு விருட்சங்களும் அவ்விதமாகத் தீர்த்தநீரைச் சொரிந்திடுகின்ற தகைமையையொத்திருக்கின்றது—எ-று. (ஙா)

பார்க்குளேயுள கங்கையா திகளெலாம் பார்த்தேம் ✻
கார்க்குலாவிய தீர்த்தமால் வரைக்கிணை காணேம்... ✻
மேற்குலாவுவான் கங்கைநீ ரிணைகொலோவென்று...✻
பார்க்க நீட்டிய தலைகள்போற் கொடுமுடி பாராய் ✻

(இ-ள்.) உலகத்தின்கண்ணுள்ளகங்கைமுதலியநதிகளையெல்லாம் நாம்பார்த்தோம் மேகங்கள்பொருந்திய பெரிய தீர்த்தகிரியின்கண்ணுள்ள தீர்த்தங்களுக்கு ஒப்பான தீர்த்தங்களைக் கண்டோமில்லை அழகுலாவுகின்ற ஆகாயகங்கையி னீரானது இவைகளுக்குச் சமானமாமோவென்று பார்ப்பதற்காக நீட்டியதலைகளைப்போல கொடுமுடியிருக்கின்றதை நீ பார்ப்பாயாக—எ-று. (சு)

செந்தமிழ்க் குறுமுநியுட னுயர்ச்சியாஞ் செருக்கில்✻
விந்தவெற்புமுன் பழித்ததென் றிரங்கிமெய்ந்நடுங்கித்
தந்தலத்தைவிட் டவனடி தொழத்தனித் தனியே... ✻
வந்தவெற்புக ணிகரெனப் பொலிந்தன மதமா ... ✻

(இ-ள்.) குற்றநீங்கிச் செவ்விதாகிய தமிழையுடைய அகத்திய முநிவருடன் விந்தமலையானது மேலான செருக்கோடு முன்பு பேசியழிந்ததென்று இரக்கமுற்றுச் சரீரநடுங்கித் தாமிருந்த விடத்தைவிட் டந்தக்குறுமுநிவன் திருவடியைவணங்கத் தனித்தனியாகவந்த மலைகளுக்கொப்பென்றுசொல்லும்படி மதங்களையுடைய யானைகள் ஆங்காங்குபொலிவுபெற்று நின்றன—எ-று. (௫)

குண்டிகைக்குலங் கொப்புநாழ்கொழுமுகைக்குலமாக்... ※
கண்டிகைத்திரள் வடமெழுங்கரமளிக் கணமாத் ... .※
தண்டளிர்க்குலஞ் செழுந்துவர்ச்சடையதாத்தவஞ்செய் ※
வண்டமிழ்க்கிறை தனயர்போல் விளங்குமவ் வனமே... ※

(இ-ள்.) கொம்பினிடத்துத் தங்காநின்ற கொழுமையான அரும்பினங்களே கமண்டலக்கூட்டமாகவும் அவ்வரும்பினிடத்துநின்று மெழாநின்ற ஒளியினையுடைய வண்டினங்களே திரண்டிராநின்ற மாலையாகிய உருத்திராக்ஷ கண்டிகையாகவும் குளிர்ச்சிபொருந்திய தளிரினங்களே செழிய பவளம்போன்ற சடைகளாகவுந் தவஞ்செய்கின்ற வளப்பம்பொருந்திய தமிழுக்கிறைவனாகிய கும்பமுநிவருடைய குமாரர்களைப்போல அதிலுள்ள வனமானது பிரகாசிக்கும்—எ-று. (௬)

வெள்ளிதாமொரு படிகவான் சிகரத்தின் மிசையோர்
புள்ளிதங்கிய கருங்கலை நிழல்செறி புதுமை......※
யள்ளிவாரிதி குடித்தவ னுதரத்தி லடைந்து.........※
துள்ளிவேதனை புரிந்த வாதாவியிற் றோன்றும்.....※

(இ-ள்.) வெண்மை நிறத்தையுடையதாகிய ஒருசிறந்த படிகச்சிகரத்தினிடத்துப் புள்ளிதங்கிய வொருகரியமானினது நிழலானது செறிந்தபுதுமை கடலையகங் கையாலள்ளிக் குடித்தவனாகிய குறுமுநியின் வயிற்றிலடைந்து துள்ளியுபத்திரவஞ்செய்த வாதாவியைப்போலத் தோன்றும்—எ-று. (௭)

தோய்ந்தரம்பையர் குடைந்திடற் கரியவிச் சுனைமேல்
வாய்த்ததாமரை மலர்தனில் விருந்துறும் வண்டோ
ராய்ந்தவண்டமிழ் முநிவர னருந்தவான் சரத்தி... ※
லேந்துமாழியைக் குடிக்குமா முகிற்கிணை யெனலாம்

(இ-ள்.) தேவரம்பையர்கள் சேர்ந்து குடைந்திடுதற்கு அருமையான விச்சுனையினிடத்துப் பூத்திருக்கின்ற தாமரை மலரினிடத்துவிருந்துசெய்கின்ற வண்டுகளானவை ஒப்பற்றவளப்பம் பொருந்திய தமிழையுடைய அகத்தியமுநிவர் உண்ணும் பொருட்டுக் கையிலேந்துங் கடலைப்பானம்பண்ணும் பெருமைபொருந்திய மேகங்களுக்கு ஒப்பென்று சொல்லலாம்—எ-று. (அ)

கோட்டமுற்றவிவ் வரையதின் மருங்கெலாங் குழுமி*
யீட்டமுற்றவெண் புயலின மருவிய வெழுச்சி ... *
வாட்டுமிந்திரன் படையினு லரிந்தபுண் வாயிற்...... *
போட்டபஞ்சென விளங்கிடும் புவிதரும் பொன்னே

(இ-ள்.) பூமிப்பிராட்டியாராலே தந்த பொன்னை யொப்பாய் குராமரங்கள் பொருந்திய இந்தத்தீர்த்தகிரியின் பக்கங்க ளெல்லாஞ் சேர்ந்து கூட்டமாயிருக்கிற வெள்ளைமேகங்கள் பொருந்தியிருக்குந் தோற்றம் இந்திரனது துன்பத்தைச் செய்கின்ற வச்சிராயுதத்தா லுண்டாகிய புண்ணினது வாயில் போட்டிருக்கின்றபஞ்சைப்போல விளங்காநிற்கும்—எ-று. (கூ)

பார்த்துவந் தருளெனச்சொலி யிராகவன் படிகம் *
வாய்த்தவோர்குகை யுறை குறுமுநிவனை வணங்கி... *
யார்த்த பூங்குழற் றேவியுந் தானுமா யரிய .... *
தீர்த்தமாடினூர் வதிட்டனைத் தியானமுஞ் செய்தார் *

(இ-ள்.) இராகவன் சீதாதேவியைநோக்கி இவைகளையெல்லாம் நீபார்த்துச் சந்தோஷிக்கக்கடவாயென்றுசொல்லிப் படிகக்கல்லினுல்வாய்ந்த ஒருகுகையின்கண் ணிருக்கின்ற அகத்தியமுநிவனை வணங்கிக் கட்டியிருக்கின்ற மலர்கள்பொருந்திய அளகத்தினையுடைய தேவியுந்தானுமாகக் கிடைத்தற்கரிய வதிட்ட தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தாராகி அம்முநிவனையுந் தியானஞ் செய்தார்கள்—எ-று.

வேறு.

விஞ்சுகின்ற வைந்துதீர்த்தம் வீழுதல் லிடத்திலே...*
முஞ்சியைப் படுத்திருந்து பச்சிமத்து முகமதாய் *
நெஞ்சமுக் கறுத்து நீறணிந்தமுத்தி நியமமு...... *
மஞ்சுசுத்தி பண்ணிபீச னர்ச்சனைக்கு ளாயினன்... *

(இ-ள்.) பெருமைபொருந்திய ஐந்துதீர்த்தங்கள் வந்துவிழுகி ன்ற நல்லவிடத்திலே தருப்பைப் புல்லைப்பரப்பி அதில்வீற்றிருந் து மேற்குமுகமாகி மநக்குற்றங்களைநீக்கி விபூதிதரித்து மோட்ச த்தைத் தரத்தக்க யோகத்திலிருந்து பஞ்சசுத்திசெய்து பரமசிவ த்தைப் பூசிக்கத்தொடங்கினார்—எ-று. (கக)

கலசசுத்தி செய்து பின்னர்கௌரிமங்கை கங்கையின்......*
சலமெடுத்து வருகவென்று சனகன்பிள்ளை யேவினான்... *
அலர்முகத்தி கலசமொன்றை யங்கைமீது கொண்டுபோய்*
நிலவொழுக்க மனையநீர் நிரம்பமட்டு நின்றனள் ....*

(இ-ள்.) கலசசுத்திசெய்து பின்புபார்வதி தீர்த்தத்தின் சலமெ டுத்துவரக்கடவாயென்று சனகராசன் புத்திரியாகியசீதாதேவியை யனுப்பினார் தாமரைமலர்போன்ற முகத்தையுடையவளாகிய சீ தாதேவி ஒருகலசத்தைக் கரத்திற்கொண்டுசென்று சந்திரனதுகிர ணங்களையொத்த நீரானது கலசத்தினிரம்புமட்டு நின்றிருந்தனள் என்றவாறு. (கஉ)

ஒருமுகூர்த்த மளவுமந்த வுதகம்வந்தி லாமையால் *
விரைவின்மிக்க கதிபரந்து கங்கை கொண்டுமீளென *
வருள்கடைக்க ணிங்குறிப்பை யநுமனுக்கு நல்கினான்
பரவியச்ச முடனெழுந்து வானினூடு பாறினான்... *

(இ-ள்.) ஒரு முகூர்த்தகாலமளவுஞ் சீதாதேவி கொண்டுவரப் போனஜலம் வாராமையால் சீக்கிரமாக மிகுந்தகதியோடு சென்று கங்காஜலத்தைக் கைக்கொண்டு திரும்பிவரக் கடவாயென்று கிரு பையோடு தனதுகடைக்கண்ணினருளோடுசெய்யுங்குறியை அ நுமாருக்கு ஸ்ரீராகவர்தெரிவித்தார் - அவரும் - அவரைவணங்கி அ ச்சமுடனெழுந்து ஆகாயமார்க்கமாக ஓடினார்—எ-று. (கா)

வே று.

பூவினுயர்சானவியுஞ் சானகியார் கொணர்ந்துவரப்போன நீரு, மேவுதலின்மையினாலே நெடும்போது தியானமுற்று வி ழித்துநோக்கி, யோவரிய கலசமெலாந் தனதுமுன்னே பரப்பி வைக்கு முதலைப்போலக், காவிரியுங் கோதமியுஞ் சிந்துவுநர்மதை யாறுங் கங்கையாறும்.................................. *

(இ-ள்.) அநுமார் கொண்டுவரப்போன பூமியினிடத்துமேலானதாயிருக்குங் காசிகங்கையுஞ் சீதாதேவியார் கொண்டுவரப்போன தீர்த்தநீரும் வாராமையினாலே நெடுநேரம்ஸ்ரீராமர் தியானத்திலிருந்து கண்களைத் திறந்துபார்த்து ஒழிவில்லாத கலசங்களெல்லாந் தனதுமுன்னர்பரப்பி அவற்றினிரப்பிவைத்திருக்கும் நீரைப்போல காவிரியாறுங் கௌதமிநதியுஞ் சித்துநதியும் நர்மதையாறுங் கங்காநதியும்—எ-று. (கசு)

மற்றுமுள்ள நதிபலவு மாநதமுஞ் சோணையொடு மழைத்த காரு, முற்றவெலாம் வருகவென மந்திரித் தாவாகனஞ்செய் துரைத்தான் காந்தம், பற்றவரு மூசிகள்போற் கண்டுமிகப் புனல்களெல்லாம் பலவாய்வெற்பைச்,சுற்றிவளைந் துலகனைத்துஞ் செவிடாகும் படிமுழங்கித் தொனித்தவன்றே...................... *

(இ-ள்.) மற்றுமுண்டாகிய பலநதிகளும் மாநதயாறுஞ் சோணநதியும் மழையைக்கொண்ட மேகங்களும் பொருந்தியஇவையெல்லாம் வரக்கடவனவென்று மந்திரித்துக் கலசங்களில் ஆவாகனஞ்செய்துரைத்தனன் அப்பொழுது மிகுதியான அந்தப்புனல்களெல்லாங்கண்டு காந்தத்தைப்பற்றவரும் ஊசிகள்போலத் தீர்த்தகிரியைச்சூழ்ந்துவளைந்து உலகங்களெல்லாவற்றிலுமுள்ள முயிரிகள்செவிடாகும்படி ஆரவாரித்தொலித்தன—எ-று. (கரு)

காணரியவானிடையே பாற்கடன்முன் வரவுடனே களிந்தையாறும், வாணியும்பின் வருதன்முழு மதிபிடிக்க வருகோளும் வருதல்போலுஞ், சேணிடையே பிறநதிகள்வருந் தோற்ற மரவமகஞ் செய்யும்போதிற், கோணிறைந்த நாகமெலா மழலிடையே குதிக்கவந்த கொள்கைபோலும்...................................*

(இ-ள்.) காணுதற்கரிய ஆகாய மார்க்கமாகத் திருப்பாற்கடல் முன்வர அதன்பின்னே காளிந்திநதியும் வாணிநதியும் வருதல் முழுமதியும் அதனைப்பிடிக்கவரும் ராகுகேதுவென்னும்பாம்புகளும் - வருகின்றனபோலுமிருந்தது - அவ்வாகாயத்தினிடமாக மற்றநதிகள்வருகின்ற தோற்றம் செநமேஜயன் சர்ப்பயாகஞ் செய்யுங்காலத்தில் குற்றநிறைந்த நாகங்களெல்லாம் அந்தயாகாக்கினியிற் குதிக்கவந்த கொள்கைபோலு மிருந்தது—எ-று. (கசா)

தாவிலரும் புனல்வரக்கண் டரனியோக மழியாமற் சைலஞ்
சூழக், காவலராயிருந்தபடைக் கணங்களெலா மெழுந்திதனைக்கரு
திப்ச, னேவலினல வந்தவல்ல விராகவனா ரழைக்கவந்த வென்று
சீறி, மாவலிபானிலமிரந்தநெடியவன்போல்வளர்ந்தெதிரேவளை
த்ததன்றே .... *

(இ-ள்.) அழிவில்லாத வரிய புனல்களெல்லாம் வருதலைக்கண்டு பரமசிவனது யோகமழிந்துபோகாமல் அத்தீர்த்தகிரியைச் சுற்றிலுங் காவலாளராயிருந்த பூதப்படைகளுஞ் சிவகணங்களுமாகிய இவைகளெல்லா மெழுந்து இந்நதிகளி னெழுச்சியைக்கருதி இவைகள் பரமசிவனேவலினல்வந்தனவன்று இராகவனார் அழைக்கவந்தனவென்று அவைகளின்மேற் கோபித்து மாபலிச் சக்கரவர்த்தியினிடத்துப் பூமியையாசித்த நெடியவனைப்போல வளர்ந்து எதிரேவந்து எதிர்த்தது—எ-று. (கஎ)

வேறு.

கிட்டினார் வெருட்டினார் கிளைத்துவந்த போதுமார்............ *
தட்டினார்குதட்டினா ரதட்டினார் தகைந்துமே.................. *
வெட்டினார்கள் முட்டினார்கள் வீசினார்கண் மேவமெய்.........*
யொட்டினார்க ளில்லைவானி லோடிவந்த புனலையே .... *

(இ-ள்.) ஆகாயமார்க்கமாக வோடிவந்த நதிவெள்ளத்தைக் கிட்டினார்கள் பயப்படுத்தினார்கள் - அவைகள்கிளைத்து எதிர்த்துவந்தபோது தங்கள்மார்பைத் தட்டினார்கள் - வாயினில்விட்டுக் குதட்டினார்கள் - அதட்டினார்கள் அவைகளைத்தடுத்து வாளால் வெட்டினார்கள் - தலைகளான் முட்டினார்கள் - கைகளால்வாரி வீசினார்கள்- பொருந்தும்படி உண்மையான சபதஞ்செய்தார்கள் - ஆதலால் அப்புனல்களெல்லா மில்லையாயின—எ-று. (கஅ)

கயமுகங்கள் பெறுகணங்கள் காளவாரி வீசினா.....*
ரயமுகங்க ளடியைவாரி யப்பைவாரி யப்பினர் ... *
சயனிகும்பர் கும்பர்வெய்ய சடையின்மீது தப்பினா*
ரியலமைந்த தடமிளைத்து மேழுமாதர் பருகினார்...*

(இ-ள்.) யானைமுகத்தைப்பெற்ற பூதகணங்கள் மேகங்களைவாரி வீசினார்கள் - குதிரைமுகத்தைப்பெற்ற பூதகணங்கள் வந்தசமு

த்திரமாகிய அவ்வெள்ளத்தையடியோடுவாரி மலையின்மேலப்பினு ரிகள் - ஜயத்தையுடைய நிகும்பனென்பவருங் - கும்பனென்பவருந் தங்களுடைய நெருப்பைப்போலு மிராநின்ற சடையினால் தப்பினார்கள் - இலக்கணமமைந்த தடங்களெல்லாவற்றையுஞ் சத்த மாதர்கள் உண்டுவிட்டார்கள்—எ-று. (க௯)

வீரபத்திரன் கணங்கண் மேகநீ ரருந்தினார்......... ❊
வாரியுப்பு நீர்குடித்த வாயழற்சி மாறினார் .... ❊
நாரமிக்க நதிகடன்னை நாலிரண்டு வடுகர்தங்......... ❊
கோரமுற்ற நுதலினங்கி விழிகள்கொள்ளைகொண்டதே

(இ-ள்.) வீரபத்திரருடையகணங்கள் கடலின்கண்ணுள்ளவுப்பு நீராயுண்டவாயி னழற்சிமாற மேகங்களினுள்ள நீராயுண்டனர் மிகுந்த நீரையுடைய நதிகளை அஷ்டவயிரவர்களுடைய கோரமான நுதலினுள்ள அக்கினிக்கண்கள் கொள்ளையாகக்கொண்டன.

எற்றினா முறுக்கினா ரிறுக்கினா ருறுக்கினார் .... ❊
பற்றினா ருரப்பினார் நிரப்பினார் பரப்பினார்......... ❊
சுற்றினார் நொறுக்கினார் சுருக்கினார்க ளாதலால்...... ❊
வற்றினார்கள் மற்றைவேசி மாதர்காதல் போலவே... ❊

(இ-ள்.) கணங்கள் அந்நதிகளிற் சிலவற்றை எடுத்தெறிந்தார்கள் சிலவற்றைக் கரங்களாலெடுத்து முறுக்கினார்கள் சிலவற்றை இறுக்கினார்கள் சிலவற்றைக் கோபித்தார்கள் சிலவற்றைக் கைகளாற் பற்றினவர்களாகி யதட்டினார்கள் சிலவற்றைப் பாத்திரங்களில் நிரப்பினார்கள் சிலவற்றைப் பூமியின்மீது பரப்பினார்கள் சிலவற்றைக் கைகளாலெடுத்துச் சுற்றினார்கள் சிலவற்றைத்தூளாக நொறுக்கினார்கள் சிலவற்றைச் சுருக்கினார்கள் ஆதலால் வேசிமாதர்கள் நாயகரிடத்துவைத்த ஆசை வற்றுவதுபோல நதிகள்வற்றியது-எ-று.

மகரமீதி லேறிவந்த வருணராசர் பட்டதுஞ் ...... ❊
சிகரமுள் ளடக்கிநின்ற சிந்துராசர் பட்டது ...... ❊
நிகரிலாத முகிலிராசர் நீர்கொணர்ந்து பட்டதும்... ❊
பகர்வதேது தக்கன்வேள்வி பட்டபாடு பட்டதே.. ❊

(இ-ள்.) மகரமச்சத்தின்மீதேறிவந்த - வருணராசன்பட்டதும் அலைகளையுள்ளே யடக்கிக்கொண்டுநின்ற சமுத்திரராசன்பட்டது

ம் ஒப்பில்லாதமேகராசலி நீரைக்கொண்டுவந்துபட்டதுஞ் சொ லக்கூடுமானதன்று தக்ஷப்பிரம்மாவின் யாகமானது வீரபத்திர க்கடவுளால்பட்ட பாடுபட்டது—எ-று. (உஉ)

கடல்குடித்த முநிவனோடு கைகலந்த வாசியோ......*
மிடல்படைத்த கணமுமந்த வினையுண் டுமிழ்ந்ததா*
லுடல்கனைக்கி வற்றியத்தி யுக்குவீழ லாகவே......*
தடைகளிற் புடைத்துதிர்ந்த சங்கமான சங்கமே... *

(இ-ள்.) கட்கயகங்கையி லெடுத்துண்ட அகத்தியமுநிவரோடு சேர்ந்திருந்த மிருதியோ வலியினைப்படைத்த பூதகணங்களும் அந்தச்சமுத்திரத்தை யுண்டுமிழ்ந்த தாதலால் உடல்கனைருங்கிநீ ர்வற்றி யெலும்புகள் உதிர்த்துவிழ்வதாகத் தடுத்தலினாலே யடிப ட்டுக் கூட்டமான சங்கங்களுதிர்ந்தன—எ-று. (உ௩)

புவனமெங்கு மொழிகைகண்ட போதுமோது பூதமோ ...... *
டவனிகொண்கன் முனிவிலாம லரனிடத் தமுழுந்தினன்......... *
சிவனைநின்று துதிசெய்யென்று தெய்வவாணி சொற்றலு...... *
மவனெழுந்து விழியிரண்டு மருவிபாய மொழிகுவான்.........*

(இ-ள்.) வந்தநதிகளெல்லா மெவ்விடங்களிலு மில்லாமல் ஒழி ந்துபோனமையைக் கண்டபோதும் அந்தப்பூதகணங்களோடு பூ தேவியினுடைய ஸ்ரீராமசுவாமி கோபியாமல் பரமசிவனிடத் து மநதமுழுந்தி யிருந்தார் அப்பொழுது தெய்வத்தன்மையை யு டைய ஆகாயவாணி நீ பரமசிவத்தை நிலைபெற்றுத் துதிசெய்யெ ன்றுசொல்லலும் அந்த ஸ்ரீராமர் ஆசனத்திலிருந்தெழுந் திரண்டு கண்களினின்று நீரருவிபெருகத் துதிக்கத்தொடங்கினர்—எ-று. ()

வே று.

காட்டுமிந்திர சாலமானது காணுவாரை மயக்கிடும் .... *
பூட்டியன்னது புரிகுவாரிடைப் புகுந்திடா ததுபோலவே......*
வாட்டுமாயை மலங்களானவை மருவியாவி மயக்கிடு............*
நாட்டுநத் கிர்தாயவுன்னெதிர் நண்ணுமோவருள் பண்ணுமோ

(இ-ள்.) ஸ்ரீராமமூர்த்தியானவர் பரம சிவத்தைநோக்கி ஒருவ ன்காட்டுகின்ற இந்திரஜாலமானது அதைக்காணுகின்றவர்களை மய க்குவிக்கும் அதனைப் பூட்டிச்செய்பவரிடத்துச் சேராததுபோல யாவரையும் வாடச்செய்கின்ற மாயாமலங்களானவை யொருவ

ை மருவி யுயிரைமயக்கிடும் அம்மாயை நாடுதற்கரிதாய உனக்கெதிர்நண்ணுமோ மயக்கத்தை யுண்டுபண்ணுமோ—எ-று. (௨௫)

வேறு.

உயிரினூடொளித் திருப்பை யுரியபாலில் வெண்ணெய் போல் *
தயிரினூடு காணநின்ற தன்மை தாபதற்குநீ .... *
வெயிலினூடு புனல்பரந்து வெயிலினூடு புலர்தல்போல் ...... *
மயலறாத சகமு முன்னிடத்தில் வந்துமாயுமே.................*

(இ-ள்.) உரியவாகிய பாலினிடத்து வெண்ணெய் மறைந்திருப்பதுபோல உயிரினுக்குள்ளே நீமறைந்திருப்பாய் தவத்தையுடைய முநிவர்களுக்குத் தயிரினுக்குள்ளே வெண்ணெயைக்காணும்படி நின்றதன்மைபோலிருப்பாய் வெயிலினிடத்துநின்று புனலானது வெளிப்பட்டுப்பரவி அவ்வெயிலினாலேயேபுலர்வதுபோல மயக்கநீங்காதசகமு முன்னிடத்தில்வந்து மாயும்—எ-று. (௨௬)

வேறு.

பண்புறு விகாரியாகும் படைத்தளித் தழிப்பையாகி..........*
லெண்பெறு முலகின்சேட்டை யுனையலா தியற்றமாட்டார் ... *
மண்குளிர்ந் திருக்கவித்தங் குரித்திடும் வகையே போல........*
நண்பினுன் றிருமுன்னாகத் தொழிலைந்து நடக்குந்தானே...... *

(இ-ள்.) நீயுலகத்தைப்படைத்தளித்து அழிப்பையாகில் குணமுற்ற விகாரியாகுவாய் அன்றியும் எண்ணிக்கையுற்ற உலகத்தின்சேட்டை யுன்னையன்றி யொருவரு நடத்தமாட்டார்கள் பூமியானது குளிர்ச்சியுற்றிருக்க விதையானது முளைத்திடுகின்ற வகையைப்போல நண்போடு உன்சந்நிதானத்தின் முன்பாக பஞ்சகிருத்தியங்களும் நடந்துவரும்—எ-று. (௨௭)

வேறு.

முத்தனே யநாதியாய் முதலு மீறதா...............*
நித்தனே நிமலனே நிர்க்குணத்தனே ....*
யத்தனே சகளனே யகள ரூபனே ....*
சத்தனே யேகனே தருக தீர்த்தமே .... *

(இ-ள்.) யாவருக்கு முத்தியைந்தருகின்றவனே அநாதியாகி முதலுமீறுமாகநின்ற - நித்தியனே - நின்மலனே - நிர்க்குணத்தனே அத்தனே - சகளனேயகளரூபனே ஒலிவடிவாயுள்ளவனே ஒன்றானவனே எனக்குத்தீர்த்தந் தரக்கடவாய்—எ-று. (௨௮)

சத்து வாரிதி தருங் கால கண்டனே.................*
முத்தவா ணிலவெனு மூரல் பங்கனே.................*
தத்துவா தீதனே சகல வேதனே ....*
யத்துவா தீதனே யருள்க தீர்த்தமே ....*

(இ-ள்.) சத்திக்கின்ற கடலினாலே தரப்பட்ட விடத்தையடக்கி ய கண்டத்தை யுடையவனே முத்தினங்களையொத்த விளக்கமான பிரகாசத்தையுடையதென்று சொல்லுகின்ற தந்தவரிசையினை யுடைய பார்வதியை யொருபக்கத்தி லுடையவனே தத்துவங்களுக்கு அதீதமாயிருக்கின்றவனே நான்குவேதங்களுக்கு முதல்வனே அத்துவிதத்துக் கதீதமானவனே தீர்த்தமருளக்கடவாய்—எ-று.

தத்துற்ற வாவியு ளன்மை கோடியா.................*
மெத்திய பலன்களு ளிழுப்பங் கோடியாம் ......*
புத்திர ரொருவனே புகழிற் கோடியாஞ்.............*
சத்திய மொழியெனிற் றருக தீர்த்தமே ....*

(இ-ள்.) தடாகங்களுக்குள் சங்குகள்வாழாநின்ற தடாகம் கோடியங்கு அதிகதன்மையாம் பலன்களுக்குள் உண்மையமைந்த பலன்கள் கோடியங்கு அதிகநன்மையாம் புத்திரர்களுக்குள்ளே புகழமைந்த வொருபுத்திரனே கோடியங் கதிகநன்மையாம் இவை சத்தியவசனமானல் தீர்த்தந்தரக்கடவாய்—எ-று. (௬0)

அரசொரு வடதரு வைந்து தாழைகள் ....*
முருகல ராம்பிர மூன்று கூவிள.......................*
மொருபது புளியுட னுதிப்பித் தோர்க்கொரு......*
நரகமு மில்லையெனி னல்குதீர்த்தமே ....*

(இ-ள்.) ஓரரசமரமும் ஐந்து ஆலமரங்களும் மூன்றுதெங்க மரங்களும் மூன்றுவாசனைவிரித்த மாமரங்களும் பத்துவில்வமரங்களும் பத்துப்புளியமரங்களும்வைத்துநீர்விட்டுவளர்த்தவர்களுக்கு ஒருநரகமு மில்லையென்றுசொல்வது நிச்சயமானல் தீர்த்தந் தரக்கடவாய்—எ-று. (௬க)

ருத்திர ராயினுங் கொடிய ராயினும் ....*
பத்திர மொன்றதின் பத யுகத்திலே ....*
வைத்தவர் கிளையெலா மருவு நன்கதி.............*
சத்திய மொழியெனிற் றருக தீர்த்தமே.............*

(இ-ள்.) வஞ்சகராஞலும் பாபிகளாஞலும் பத்திரமொன்றெ டுத்து நினதிரண்டு திருவடிகளிலும் அருச்சனை செய்தவர்களுடை யசுற்றத்தாரியாவரும் நல்லமோட்சகதியை யடைவார்க ளென்ப து சத்தியவசனமாஞல் தீர்த்தந்தரக்கடவாய்—எ-று. (ருஉ)

சிந்தையி லழுக்கினைப் பிணியின் சேற்றினைக் ......*
கொந் தவிழ் வறுமையைப் பிறவிக் குப்பையை ...*
யைந்தொரு வெழுத்தலா தகற்ற வேறெரு.........*
மந்திர மிலையெனில் வருக தீர்த்தமே............*

(இ-ள்.) உள்ளத்திலுள்ள அஞ்ஞானமாகிய அழுக்கினையும் வி யாதிகளாகிய சேற்றினையும் மிகுதியாகிய வறுமையையும் பிறவி யாகிய குப்பலையும் ஒப்பற்ற பஞ்சாக்ஷரமேயல்லது அவற்றை நீ க்கவல்லது வேறேயொரு மந்திரமில்லையென்று சொல்வது சத்தி யமெனில் தீர்த்தம்வரக்கடவது—எ-று. (ருங)

பலபல விப்படிப் பகரு மெல்லையில்..............*
சிலைகளில் வீழ்தரு தீர்த்த மேலதா...............*
யலையென விரைந் திரைந் தசலமீதினுஞ்...........*
சலமிக வெழுந்தது தாரை யாகவே................*

(இ-ள்.) இராமமூர்த்தி இப்பிரகாரம் பலபலவிதமாகத் துதிக் குஞ் சமயத்தில் பாறைகளின்மீது விழாநின்ற தீர்த்தமானதுமே லதாகி அலைகளைப்போல வேகமாகச்சத்தித்து அம்மலையின்மேலு ம் தீர்த்தசலமானது தாரையாக வெழுந்தது—எ-று. (ருச)

இடரெனும் பிணிகளுக் கிடியி ஞதமோ...........*
தொடர்தரும் பிறவியைத் துரக்கும் வேதமோ ... *
அடியவாமுழுகுதற் கழைக்கும் வாய்மையோ......*
செடியிடைப்புறப்படுந் தீர்த்தவோசையே.........*

(இ-ள்.) செடிகளினிடத்து நின்றும் வெளிப்பட்டு வருகின்ற தீ ர்த்தத்தி ஞேசையானது துன்பமென்று சொல்லாநின்ற நோய்க ளுக்கு இடியையொத்தநாதமோ ஜெநநங்கடோறுந்தொடர்ந்து வருகின்ற பிறவிநோயை நீக்குகின்றவேதமோ அடியவர்களை மு ழுகுதற்கு அழைக்கின்ற வுண்மைவசனமோ—எ-று. (ருரு)

காதணியகரமுங் கருங்கட்காவியு........................ *
மாதளை மணிமுலை யமுத கும்பமு .... *
மேதகு பரேதி வெளிப்பட் டாளெனச்.............. *
சீதையுங் கலசநீர் கொணர்ந்து நின்றனள்.............*

(இ-ள்) காதுகளிலே யணிந்திராநின்ற மகரமச்சம்போன்ற குழைகளும் கரியகண்களாகிய நீலோற்பலமலர்களும் மாதுளம்பழம்போன்ற அழகியமுலைகளாகிய அமுதகும்பங்களுங் கொண்டு மேன்மைபொருந்திய பாரேதியானவள் வெளிப்பட்டு வந்தாள் போலச் சீதாதேவியுங் கலசத்தில் நிரம்பிய நீரைக்கொண்டுவந்து ஸ்ரீராமமூர்த்தியி னெதிராக நின்றனள்—எ-று. (ருசா)

கற்புறு புனலினைக் கலசத் தேற்றனன்....................*
அற்புதன் திருமுடி யைந்தி லாட்டினன் .... *
பற்பல கொடுமுடி படைத்த தோர்மணி.............*
வெற்பிடை யுறைபொழி மேக மென்னவே.........*

(இ-ள்.) கற்பினைப்பொருந்திய சீதாதேவி கொண்டுவந்த புனலினையுடைய கலசத்தை ஸ்ரீராமமூர்த்தி தன்கையிற்கொண்டவனாகி அற்புதத்தை யுடையவனாகிய பரமசிவத்தின் ஐந்து திருமுடிகளினு மபிஷேகம் பண்ணினன் அஃதென்போன் றிருந்ததென்னில் பலபல கொடுமுடிகளைப் படைத்ததாகிய அழகியவோர் மலையினிடத்து மழையைப்பொழியாநின்ற கரியமேகத்தைப்போலு மிருந்தது—எ-று. (ருஎ)

ஆடையுஞ் சந்தமு மார மாலையு........................ *
மேடவி ழலங்கலு மினிதிற் சாத்தினன் .... *
நீடிய வோதன நிவேதித்தான் பினர் .... *
நாடரு நறும்புகை யதனை நல்கினன்................ *

(இ-ள்.) பின்னர் பட்டுவஸ்திரமும் சந்தனமும் முத்தமாலையும் இதழ்விரிந்த மலர்மாலைகளும் இனியவாகச் சாத்துபடி செய்தான் அதன்பின்பு மிகுந்த அன்ன நைவேத்தியஞ்செய்து நாடுதற்கரிய வாசனைப்புகையை நல்கினன்—எ-று. (ருஅ)

அஞ்சலி யமருக் கமுத நல்கினேம் .... *
தஞ்சிவற் களித்தன மென்று நாணியே................*

விஞ்சிய மணியெலா முதவும் வேலைபோற்........ *
செஞ்சிகைப் பலநிரைத் தீபங் காட்டினன்........ *

(இ-ள்.) அஞ்சுதலில்லாமல் தேவர்களுக்கு அமுதத்தைக் கொடுத்தோம் இப்பரமசிவத்துக்கு விஷத்தைக் கொடுத்தோம் என்று நாணங்கொண்டு மிகுதியான மாணிக்கங்களையெல்லாம் இன்றுஉதவுகின்ற சமுத்திரத்தைப்போல் சிவந்த பலசிகைகளையுடைய வரிசையான கருப்பூர தீபங்களைக் காட்டினர்—எ-று. (ருகூ)

பின்னுள செயலையு முடித்துப் பிஞ்ஞகா........ *
வின்னவென் பிழைபொறுத் திடுக வென்றன...... *
னுன்னுமவ் விலிங்க மீதுமையுந் தானுமாய்........ *
முன்னவன் மன்னவன் முன்னிற் றோன்றினன்...... *

(இ-ள்.) பின்னுஞ்செய்யத்தக்க செயலையுஞ் செய்து நிறைவேற்றிக்கடவுளே இத்தன்மையை யுடையவனுன எனது குற்றத்தைப் பொறுத்து ரக்ஷிக்கக்கடவாயென்று துதித்தனன் அப்பொழுது யாவரு நினைக்கத்தக்க அந்தவிலிங்கத்தினின்றும் பார்வதியுந்தானுமாகிப் பரமசிவம் ஸ்ரீராமமூர்த்தியின் முன்பாகத் தோன்றினர் என்றவாறு. (ச0)

பூமழை பொழிந்தனர் புலவ ரார்த்தனர்........... *
மாமகிழ் புயத்தினன் வணங்கிப் போற்றியே...... *
தேமல ரிதழியான் சிவந்த தாளிணைத்........... *
தாமரை புகுந்து சஞ்சரிக மாயினன்........... *

(இ-ள்.) அப்பொழுதுதேவர்கள் மலர்மழையைச்சொரிந்து ஆரவாரித்தனர் இலக்குமி மகிழ்ச்சியோடும் வசித்திராநின்ற புயங்களையுடையவராகிய ஸ்ரீராமமூர்த்தி வணங்கித்துதித்துத் தேன்பொருந்திய கொன்றை மலராற்றொடுத்த மாலைகளை யுடையவனுகிய பரமசிவத்தினது செவந்த இரண்டு திருவடிகளாகிய தாமரையிற் புகுந்து வண்டாயினர்—எ-று. (சக)

திருவுட னிளவலுஞ் சிவனை யேத்தினர்........... *
புரவலன் விழிமழை புவியில் வீழ்ந்தன.......... *
வொருநதி சிவகிரி யுதவு நீர்மைகண்........... *
டிருநதி வந்துவெற் பிறந்த வென்னவே.......... *

(இ-ள்.) சீதாதேவியும் இலட்சுமணப் பெருமாளும் அப்பரமசிவத்தைத் துதித்தார்கள் ஸ்ரீராமமூர்த்தியின் இரண்டுகண்களினின்றுங் கண்ணீர் மழைபோலும் பூமியில்வீழ்ந்தன அஃதென்போ லிருந்ததென்னில் தீர்த்தகிரியானது தீர்த்தமாகிய வொருநதியை யுதவிய தன்மையைக்கண்டு இரண்டுநதிகளானவை வந்து அம்மலையிற் றங்கியிருந்தனபோலு மிருந்தது—எ-று. (௪௨)

வே று.

எடுத்தணைத் திராமனை யிறைவன் செங்கையாற்......*
கொடுத்திட மிகவரங் கூறுவா யென .... *
நடித்தன னிராமனு நவிலு வானினி .... *
யடுத்ததின் கருணையொன் றமைபு மென்றனன்......*

(இ-ள்.) அப்பொழுது பரமசிவமானவர் தமது செவந்தகைகளால் இராமமூர்த்தியைத் தூக்கி மார்போடணைத்து உனக்கு யாமிருநியான வரங்களைக்கொடுக்க வேண்டிய வரங்களைக்கேழ்க்கக்கடவாயென்றுசொல்ல அதையிராமன்கேட்டு ஆநந்தத்தாற் கூத்தாடினவனாகிச் சொல்லத்தொடங்கினான் இப்பொழுது என்னிடத்துப் பொருந்திய நினதுகருணை யொன்றுமே போதுமானதென்றனன்—எ-று. (௪௩)

முற்செநநத்தனின் முயன்ற நன்மையால் .... *
வற்சல வெனக்கெதிர் வந்து தோன்றினை.......... *
பிற்செநநந்தனிற் பெறுவ தேயுன.................... *
தர்ச்சனை யொன்றுமே யரிய பேறென்றான் ...... *

(இ-ள்.) யான் முனஜெநநத்தில் முயன்றுசெய்த நன்மையினாலே காருண்ணியனே நீ யெனக்கெதிராகவந்து தோன்றினை ஆனால் எனக்கு இனிவருஞ் ஜெநநத்தில் பெறவேண்டியது யாதெனில் உன்னை யருச்சனைசெய்த லொன்றுமே எனக்குக் கிடைத்தற்கரிய பேறுமென்றனன்—எ-று. (௪௪)

வரமிக நிஃமுற மகிழ வின்னமுந் .... *
தருகுவ மூகாயெனத் தரணி தாங்கினன் .... *
திருமலை யிடைதரு தீர்த்த மாடுதற்.............. *
கருளுக வரமென வரனு நல்கினன் .... *

(இ-ள்.) நின்னுடைய மநமானது மகிழும்படி இன்னமு மிகுதியாக வரங்கள்தருவோம் சொல்லக்கடவாயென்று கேட்க்க முன்ன மிவ்வுலகத்தைத் தாங்கினவனாகிய ஸ்ரீராமமூர்த்தி இந்தத்தீர்த்தகிரியினிடத்து நீதந்த தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்தற்கு வரங்கொடுக்கவேண்டுமெனப் பரமசிவமும் அவ்வாறுதந்தனர்—எ-று.

நிமலனன் றருளிய நீரிற் கோசலைக்..................*
குமாரனு மிருகரங் குவித்து மூழ்கினு..................*
னமரரொன் சுரநதி யதனைத் தேடியே..................*
யெமுனையாம் பெருநதி யெதிர்ந்த தென்னவே... *

(இ-ள்.) நின்மலனாகிய பரமசிவம் அன்றருளிச்செய்த தீர்த்தத்தில் கௌசலைகுமாரனாகிய ஸ்ரீராமமூர்த்தி இரண்டுகரங்களையுங் குவித்து மூழ்கினார் தேவர்களாற் றுதிக்கப்படுகின்ற ஆகாயகங்கையைத்தேடிவந்து எமுனையாகிய பெரியநதியானது எதிர்கொண்டதுபோல—எ-று. (சகா)

அம்புய மடந்தையு மதனின் மூழ்கினள்..................*
தம்பியும் படிந்தனன் றமருந் தானுமாய் ....*
நம்பனை வலஞ்செய்து நமஸ் கரித்தனர்..................*
சம்புவு மவருடன் சாற்று கின்றனன்..................*

(இ-ள்.) தாமரைப்பூவை யிடமாகவுடைய சீதாதேவியும் அத்தீர்த்தத்தின் மூழ்கினள் இளையபெருமாளும் மூழ்கினர் பின்னர் தம்முடையசுற்றமுந் தானுமாய்ப் பரமசிவத்தை வலமாகவந்து வணங்கினார் அவரும் அவர்களோடு சொல்லத்தொடங்கினர்.(சஎ)

நந்த மேனியி னண்ணு நதியிடை..................*
வந்து மூழ்கி யொன்றுன வளத்தினு ....*
லிந்த வுரு மிசை யணிமுத்தமே..................*
யந்த நாமத்தை யாரணங் கூறுமே..................*

(இ-ள்.) இந்தத் தீர்த்தமானது நமது திருமேனியினின்று முண்டானதாதலால் இத்தீர்த்தத்தில் நீங்கள்வந்து மூழ்கி யொன்றுபட்ட வளப்பத்தினால் இந்தவுரும் புகழினையுடைய அணிமுத்தமாகும் அந்தத் திருநாமத்தை வேதஞ்சொல்லும்—எறு. (சஅ)

நீவிர் மூவரு நீத்தம் படிகையாற் .... *
பாவ நீங்கிப் பராபரத் தொங்குக .... *
யாவ ரேனு மிராமவென் றோதுவார் .... *
தேவர் கோனினுஞ் செல்வமுண் டாவரோ .... *

(இ-ள்.) நீங்கள் மூன்றுபேரும் இந்தத் தீர்த்தத்தின் மூழ்கினமையால் உங்களுடைய பாவங்களெல்லா நீங்கிப் பராபரத்திற் கலந்திருப்பீர்கள் மற்ற யாவராகிலும் இராமவென்று தியானித்து இத்தீர்த்தத்தில் மூழ்குவாராயின் தேவர்களுக் கரசனாகிய இந்திரனைப்பார்க்கினுஞ் செல்வத்தில் சிறந்தவராவர்—எ-று. (சகூ)

தீர்த்த நும்பெய ராகத் தெரிக்கினுந் .... *
தீர்த்த சேகர மாகச் சிறக்கினுந் .... *
தீர்த்த ராஜ திலக மதாயினுந் .... *
தீர்த்த ராஜ சிகாமணி யாமது .... *

(இ-ள்.) இத்தீர்த்தம் உனது பெயருடையதாகத் தெரிவித்தாலும் தீர்த்தங்களுக்கெல்லாஞ் சேகரமாகச் சிறப்புற்றிருப்பினும் தீர்த்தங்களுக்குள் ராஜதிலகம்போன்றதாக இருப்பினும் இத்தீர்த்தம் ராஜசிகாமணியாகும் என்று சொன்னார்—எ-று. (ரு0)

வாய்த்த பூமி மகுட சிகாமணி .... *
யார்த்தமான தருளுஞ் சிந்தாமணி .... *
யேத்து வார்வினை யீரு நவமணி .... *
தீர்த்த ராஜ சிகாமணி யாயது .... *

(இ-ள்.) அன்றியும் இந்தத்தீர்த்தம்பொருந்திய இந்தப்பூமிக்கு மகுடத்திலுள்ள தலைமையான மாணிக்கமாகவும் இதில் மூழ்கினவர்களுக்குப் பொன்னைத்தராநின்றசிந்தாமணியாகவும்இதைத் துதிப்பவர்களது இருவினையையும் அறுக்கின்ற நவரத்தினமாகவும் தீர்த்தங்களுக்கெல்லாம் ராஜசிகாமணியாகவு மிருக்கும்—எ-று.()

ஆடினா ரதி லாகி லவர்கிளை .... *
கோடிபேர் நமைக்கூடி யொன்றுகுவார் .... *
நாடினு மிந்நாமங்களைத் தினம் .... *
பாடி னாரும் பாகதி சேர்வரோ .... *

(இ-ள்.) யாரேனும் இத்தீர்த்தத்தில் மூழ்கினாராகில் அவர்களுடைய கிளைகள் கோடிபேர் நம்மைக்கூடிச் சாயுத்தியத்தை யடை

வார்கள் இதைநாடிவந்தவர்களும் இதனுமங்களை நாடோறுந்துதித்தவர்களும் மேலான மோட்சகதியைச் சேர்வர்—எ-று. (ருஉ)

தன்ம மொன்றித் தலத்திடைச் செய்திடிற் .... *
புன்மை தீரும் புலன்க ளழுக்கறும்.............. *
நன்மை யாயுள யாவையு நல்கிடுஞ்................ *
சென்மங் கோடியிற் றீவினை தீருமே.............. *

(இ-ள்.) இந்தத் தலத்தினிடத்துத் தருமமொன்றுசெய்தால்புன்மையான பாவங்களெல்லாந்தீரும் ஐம்புலன்களினுமுள்ள குற்றங்களெல்லாம் நீங்கும் நன்மையாயிருக்கின்ற எல்லாப்பலன்களையும் தரும் கோடிஜெநநத்தில் செய்த தீவினைகளெல்லாம் நீங்கிவிடும்—எ-று. (ருங)

கன்னி மூழ்கிற் கருதித்தன் கொண்கனை .... *
மன்னி வாழு மலடிகண் மூழ்கினுற் .... *
பொன்னை நேரும் புதல்வரை நல்கிடு............. *
மென்ன வெண்ணினு மெண்ணின வெய்துமே ... *

(இ-ள்.) இத்தீர்த்தத்தில் கன்னியர்கண்மூழ்கினுல் தான்கருதிய கணவனைப் பொருந்திவாழுவர் மலடியாயுள்ளவர் மூழ்கினுல் பொன்னையொத்த புதல்வரை யவர்களுக்குத்தரும் மேலும் அதில் மூழ்கினவர்கள் எவற்றைக்கருதினுலும் எண்ணிய பொருள்கள் கிடைக்கும்—எ-று. (ருச)

பதியிழந்த பனிமொழி மூழ்கினுற்................*
கதிபுகுந்து கணவனைச் சேர்ந்திடும்...............*
வெதிர னூமை விழியிலி மூழ்கினு .... *
லதனை நீங்கி யருங்கதி சேர்வரோ................ *

(இ-ள்.) நாயகனையிழந்த பெண்ணுனவள் அத்தீர்த்தத்தின் மூழ்கினுல் மோக்ஷத்திற்சென்று தன்கணவனைச் சேர்ந்திடுவள் செவிடனும் ஊமையும் கண்ணில்லாதவனுமாகிய இவர்கள் மூழ்கினுல் அந்தச்செவிடுமுதலியவை நீங்கி கிடைத்தற்கரிய மோக்ஷகதியையடைவர்—எ-று. (ருரு)

ஈந்த தானபல மொன் றிரட்டியுஞ்.................*
சாந்தி ராயணந் தந்த பலன்களும்................ *
வாய்ந்த மாசி மகத்தின் பலன்களு................ *
மாய்ந்த யோக பலனு மளிக்குமே.................*

(இ-ள்.) இத்தீர்த்தத்தின்கண்கொடுத்த தானங்களின்பலன்ஒன்று இரண்டாகவும் சாந்திராயணந் தருகின்ற பலன்களும் மாட்சிமை

பொருந்திய மாசிமகத்திற்றருகின்ற பலன்களும் ஆராய்ந்துசொல்லாநின்ற யோகபலன்களையுந்தரும்—எ-று. (ருசு)

ஆக்கமின்ப மழகறி வன்பரு.......................*
ளூக்க மாண்மை யொழுக்க முயர்குலம்...........*
வாக்கருந்தவ மற்றெவையுந் தருஞ்...................*
சாக்கிரத்தி லதிகமுந் தங்குமே......................*

(இ-ள்.) இத்தீர்த்தத்தின் மூழ்கினவர்களுக்குச்செல்வமும் இன்பமும் அழகும் அறிவும் அன்பும் அருளும் தயிரியமும் வல்லமையும் நல்லொழுக்கமும் மேலானகுலமும் செய்யுள் செய்யும்வாக்கும் அரியதவமும் மற்றுமுண்டான யாவையும் தருவதுமன்றிச் சாக்கிரவவத்தையிலும் அதிகமுந்தங்கியிருக்கும்—எ-று. (ருஎ)

காசிமீது கயாபிர யாகையில்.........................*
நாசமானவர் நற்கதி சேருவர்........................*
மாசிமாத மகத்தினின் மூழ்கினற்......................*
பாசநீங்கிப் பரகதி சேர்வரே..........................*

(இ-ள்.) காசித்தலத்திலும் காயாநதியினும் பிரயாகைநதியினும் மரணமடைந்தவர் நல்லமோக்ஷகதியிற் சேருவார்கள் இந்தத்தீர்த்தத்தில் மாசிமாதத்தில்வரும் மகநக்ஷத்திரத்தில் மூழ்கினவர்கள் பந்தபாசங்களினின்று நீங்கி மேலான மோக்ஷகதியைச் சேருவர்.)

பகலிற் பூசை முடித்தவன் பக்கலித்...................*
சகல தீர்த்தமுங் கூடுந் தகைமையா....................*
லிகலி லாமு மிதனிடை யெய்துவோ....................*
மிகவு நன்றந்த வேலையிற் றோய்வதே..................*

(இ-ள்.) பகற்காலையில் இத்தீர்த்தத்தின்மூழ்கிப்பூசைநிறைவேற்றினவன் இடத்தில் சகலதீர்த்தமும்வந்து கூடுகின்ற தகைமையினாலே மாறுபடுதலில்லாத நாமும் அக்காலையில் இத்தீர்த்தத்தினிடத்துப் பொருந்தியிருப்போம் ஆதலால் அந்தச்சமயத்தில் இந்தத்தீர்த்தத்தில்வந்து மூழ்குவது மிகவு நன்மை—எ-று. (ருகூ)

முந்து நீர்கல சத்தின் முகில்கடல்.....................*
சிந்து வானதி மற்றுள தீர்த்தமும்.......................*
வந்து கூடென மந்திரித் தாயவை......................*
யிந்த மால்வரை யெங்கு மடர்ந்தவே....................*

(இ-ள்.) முன்னம் நீரானது கலசங்களினிரம்ப மேகங்களும் கடல்களும் சிந்துநதிமுதலிய நதிகளும் ஆகாயகங்கையும் மற்றுமுண்டான தீர்த்தங்களும் வந்துகூடக் கடவீரென்று மந்திரித்தாய் அவைகளெல்லாம் இந்தத்தீர்த்தகிரி யெங்குநிறைந்தது—எ-று.

கண்டு நம்மலைக் காவல ரானவர் .... *
மண்டு மோவெண வாயின் மடுத்தனர் .... *
கொண்ட லாதி குறைந்தன மெய்ந்நெறித் .... *
தொண்ட ரானவர் தொல்வினை போலவே .... *

(இ-ள்.) நமது மலையின்கண்ணுள்ள காவலாளிகளானவர்கள் அந்நதிகளைக்கண்டு இந்நதிகளெல்லாம் இங்கு நெருங்கக்கூடுமோ வென்று தங்கள்வாயினு லுண்டுவிட்டார்கள் அதனால்மேக முதலாகிய நதிகள் உண்மை நெறியினையுடைய அடியவர்களது பழவினை குறைந்தனபோல குறைந்தன—எ-று. (சூக)

ஈதடுத்த தெனவிறை கூறலுஞ் .... *
சீதரப் பெய ரண்ணலுஞ் செப்புவான் .... *
பூதரத்தி லொளித்த புனலெலா .... *
மேதநீங்க வரவழை யென்றனன் .... *

(இ-ள்.) அந்நதிகளுக் கடுத்த திதுவென்று பரமசிவஞ் சொல்லலும் சீதரனென்னும் பெயரினையுடைய அண்ணலுஞ் சொல்லத் தொடங்கினர் இம்மலையின்கண் மறைந்த அப்புனல்களெல்லாம் துன்பநீங்க வரவழைக்க வேண்டுமென் றுரைத்தார்—எ-று. (சூஉ)

ஐயனீர்க ளனைத்து மழைத் தனன் .... *
மையு மாழியு மற்றுள தீர்த்தமும் .... *
பைய வந்திறை பாதம் பணிந்தன .... *
செய்ய வாய்மலர்ந் தின்னமுஞ் செப்புவான் .... *

(இ-ள்.) பரமசிவமானவர் நதிகளெல்லாவற்றையு மழைத்தனர் அப்பொழுது மேகங்களும் கடலும் மற்றுமுண்டான தீர்த்தங்களும் வணக்கமாகவந்து பரமசிவத்தினது திருவடிகளை வணங்கின ஆண்டவன் தனது செவந்தமலர்போன்ற வாயைத்திறந் தின்னுஞ் சொல்லுவாராயினர்—எ-று. (சூஙு)

வே று.

தீர்த்தராஜர்தஞ் சிகாமணி யாகுமித் தீர்த்த .... *
நீர்த்தடாது நீர்மூழ்கியே பழவினை நீக்கு .... *
மேத்து மேவிய தொழிலெலாம் புரிந்துமீ திதனை .... *
வாய்த்த நம்மினு மதிகமா மதித்திடு மதியால் .... *

(இ-ள்.) தீர்த்தமாகியவரசர்களுக்கெல்லாம்இந்தத்தீர்த்தம்சிகையிற்றரிக்கின்ற மாணிக்கம்போலச்சிறந்ததாகும்ஆதலால் நீவிர்இச்சொல்லைத்தடுக்காமல் இந்தத்தீர்த்தத்தின்மூழ்கி உங்களுடைய பழவினைகளைநீக்கிக்கொள்ளுங்கள்இதனையாவருந் தோத்திரஞ்செய்யுங்கள் விருப்பத்தோடுசெய்யவேண்டிய உபசாரங்களையெல்லாஞ்

செய்து அதற்குமேலு மிதனைமாட்சிமைபொருந்தியஉங்களிலும் மேலானதாகஉம்முடையமதியினால்மதிக்கக்கடவீர்களென்றார்.()

என்று கூறிநம் பதியினுஞ் சிறிதுபோ திருந்து.............*
நன்று சேர்ந்திடு மெனச்சொலி மறைந்தன னதிக...........*
ளொன்று மேல்விழுந் தொன்று சென்றிடம் பெறு தோடிக்...*
குன்றிலாகு மித்தீர்த்த நீர்படிந்து பின்குழுமி............*

(இ-ள்.) இப்படியென்றுசொல்லி நீவிர்சிலநாள் இவ்விடத்திலிருந்து பின்பு நமதுபதியினிடத்து நன்மையாகச்சேர்ந்திடுமென்று சொல்லிப் பரமசிவம் மறைந்தனர் அப்பொழுது இந்நதிகளெல்லாம் ஒன்றின்மேலொன்றாக விழுந்து சென்று இடம்பெறுமல் ஓடியகுன்றினிடத்துண்டாகும் இந்த இராமதீர்த்தத்தில்மூழ்கிப் பின்னர்யாவுமொன்றாகக்கூடி—எ-று. (சுரு)

கமலநாயக மெனுமதை வலஞ் செயக்கங்கை...................*
யெமுனை யாறும்வெண் கவரிக ளசைத்திட விமையோ.........*
ரமுதநாயகர் பணிமணி கொடுத்தடி பணிய ....*
தமரமேகமின் கரமிசை சத்திகை தரிக்க......................*

(இ-ள்.) தீர்த்தங்களுக்கெல்லா நாயகமென்று சொல்லாநின்ற அத்தீர்த்தத்தை வலமாகவந்து கங்காநதியும் யமுனையாறும்வெண்சாமரைகளசைக்கவும் தேவர்களுக்கு அமுதம் போன்ற தலைமையான ஆகாயகங்கையானது ஆபரணங்களையும்மாணிக்கங்களையும் பரிசாகக்கொடுத்து அடிகளைவணங்கவும் ஒலியினையுடையமேகங்களாகிய பெண்கள் தங்கள்கைகளினிடத்து விருதுக்கொடிகளைப்பிடித்துவரவும்—எ-று. (சுசு)

ஆலவட்ட மானது மணிக்கர்ணிகை யசைக்க ....*
நீலவட்ட மாமடுக்கள் காளாஞ்சிகை நீட்ட ....*
கோலமுற்ற பொன்னடப்பை கோதாவரி கொள்ள ....*
நாலுதிக்கிலுங் கன்னியுங் குமரியு நடிக்க......................*

(இ-ள்.) மணிக்கர்ணிகையென்னு நதியானது ஆலவட்டத்தை யசைக்கவும் - நீலம்போன்றநிறத்தினையும் வட்டமான வடிவினையுமுடையமடுக்கள் கைகளில் காளாஞ்சியெடுத்துநீட்டவும்கோதாவரியென்னு நதியானது அழகுபொருந்திய பொன்னாற்செய்த அடைப்பையைத் தாங்கிவரவும் நாலுதிக்குகளிலும் கன்னியுங்குமரியுநர்த்தனஞ்செய்யவும்—எ-று. (சுஎ)

முத்துவாணனைப் பாரதி யதன்புகழ் மொழிய ....*
மெய்த்த காவிரி மலர்கொடு வஞ்சலி செய்ய....................*

சித்தர்சாரண ரிமையவ ரிருடியர் செறியப்.................. *
பத்தியாகவே நிறுத்தினர் வருணனர் பரிந்து..................... *

(இ-ள்.) முத்தங்களைப்போலும் விளக்கமான தந்தபந்தியையுடைய நாமகள் அத்தீர்த்தத்தின் புகழைச்சொல்லவும் உண்மையையுடையகாவிரியாறுனது அநேகமலர்களைக் கைக்கொண்டுஅரிச்சித்துவணங்கவும் சித்தர்களும்சாரணர்களும்தேவர்களும் இருடியர்களும் இருபக்கங்களிலு நெருங்கிவரவும்வரிசைவரிசையாக நிறுத்தினர்அன்போடு வருணராஜனனவர்—எ-று. (சுஅ)

தீர்த்தராஜ மாமணி யரசிருக்கையின் செருக்கைப் .... *
பார்த்துமூவருங் களித்தனர் புனலிடைப் படிந்து .... *
நீத்தவெற்பினை வலம்புரிந் தநுமனை நினைத்தான்............... *
வாய்த்தமாருதி கடிதுவந் திறங்கினன் வரைக்கீழ்............... *

(இ-ள்.) இராஜசிகாமணியாகிய இத்தீர்த்தங் கொலுவிருக்கையின் களிப்பை ஸ்ரீராமமூர்த்திமுதலிய மூவரும்பார்த்துச் சந்தோஷித்தவராகி அத்தீர்த்தத்திற் பின்னுமூழ்கித் தீர்த்தகிரியை வலஞ்செய்து அநுமானைத் தன்மநதின்கண் ணினைத்தார் மாட்சிமையையுடைய அவ்வநுமாரானவர் வேகமாகவந்து அம்மலையினடிவாரத்தில் இறங்கினர்—எ-று. (சுகூ)

அஞ்சிவெய்துயிர்த் தடிதொழு திறைஞ்சிநின் றழுதா .... *
னெஞ்சிலேதமென் விளம்பென வுரைசெய்தானெடியோன்...... *
கஞ்சநாயகன் றலைவனே கஞ்சமாளிகை வாழ்.................. *
வஞ்சிசானகி மகிழ்நனே யனகனே மாலே...................... *

(இ-ள்.) இறங்கி யஞ்சினவனுகிப் பெருமூச்செறிந்து ஸ்ரீராமமூர்த்தியின் திருவடிகளை வணங்கித்தொழுது நின்றுகொண்டு அழுதனன் அப்பொழுது உன் மநதுக்குச் சம்பவித்த துக்கம் யாதுசொல்லுவாயென்று நெடியவனுகிய ஸ்ரீராமமூர்த்தி கேழ்க்க சூரியகுலத் தரசர்களுக்கெல்லாந் தலைவனானவனே தாமரையாகிய மாளிகையில்வாழாநின்ற வஞ்சிக்கொடிபோன்ற சீதாதேவியின் நாயகனே பாவமில்லாதவனே திருமாலே—எ-று. (எ0)

கங்கை தேடினேன் றேடியெவ் விடத்திலுங் காணேன்......... *
திங்கள் சூடினன் பூசையென் பொருட்டினுற் சிதைந்த......... *
துங்கனுயகன் சுரநதி யழைத்தது முணர்ந்து .... *
பங்கமீளவுஞ் சுமந்துநான் பகடுபோ லடைந்தேன்............ *

(இ-ள்.) தங்கள் கட்டளைப்படிசென்று கங்காநதியைத் தேடினேன் அவ்வாறுதேடியும் அக்கங்கையை யெந்தவிடத்திலுங் கண்டேனில்லை ஆதலால் மூன்றும்பிறையைச் சடையிற்றரித்தவனுகிய

பரமசிவத்தின் பூசைக்கு என்னிமித்தமாகத் தவறுவந்ததாதலால் உங்களுயகளுடைய பரமசிவம் ஆகாயகங்கையாகிய தீர்த்தத்தை யழைத்தரு மதித்து மீளவும் பாவத்தைச்சுமந்து எருமைக்கடாவைப்போல வந்தடைந்தேன்—எ-று. (எக)

உன்பதாம்புயத் தடியருள் பணிவிடை யொழிந்தால் .... *
வன்பிணியிலுந் துறப்பர்தம் முயிரென மதியார்................ *
புன்புலாலுட லிருந்துமுன் பணிவிடை புரியேன் .... *
அன்பனேவுனக் கல்லனே யிதனிலை யறிவாய்..................*

(இ-ள்.) உன்னுடைய திருவடித் தாமரைகளுக்கு அடியராயுள்ளார் உனக்குச்செய்யும் பணிவிடை செய்யாமற்றாழிந்தால் பலாத்காரமாகவாறுவும்வுயிர் துறப்பர் தம்முடையவுயிரையொருபொருளெனமதித்திரார் புல்லியபுலாலாகிய வுடலைத்தாங்கியிருந்தும் உனதேவற் பணிவிடையைப் புரிந்தேனில்லை இதனாலேயான் உனக்கன்பனுவனே அல்லனேஅறிவாய்—எ-று. (எஉ)

உதவிசெய்தனன் சடாயுநின் பொருட்டினு வுயிரைப்........ *
பதியுமின்பமுஞ் செல்வமு நல்கினன் பரதன்.....................*
றதிகொள்பூசனைக் கிறுதி நானிழைத்தனன் றருவை............*
யதனைநேரெனப் பிறந்தொன்று முதவில னந்தோ............ *

(இ-ள்.) சடாயுவானவர் நின்பொருட்டால் தன்னுயிரையு முதவிசெய்தனன் பரதாழ்வார் அயோத்தியென்னும் பதியையும்இன்பத்தையும் செல்வத்தையும் உனக்குத்தந்தனன் நான் யாவருடைய அதியையுங் கொள்ளுகின்ற சிவபூசைக்கு அழிவுசெய்தனன் ஆட்டின் அதருக்கொப்பாக யான்பிறந்தும் ஐயோ உனக்கொன்றுமுதவிசெய்யாதவனுயினேன்—எ-று. (எரு)

உரிமையோவென வுரைத்தன னவன்றனக் குரைப்பான் ...... *
விரைவி னீயெமக் கொருபக லுதவிய மேன்மைக் .... *
கிரவியின் குலத்தமெலா நலம்புரிந் திடினும்.....................*
பொருவுமோ வதன்பாதியும் போதுமோ போதா .... *

(இ-ள்.) இதுதானே வெனக்குரிமையென்று அநுமா ருரைத்தனர் அவ்வாறுரைத்த வநுமாருக்கு ஸ்ரீராமமூர்த்தி சொல்லத்தொடங்கினர் ஒருநாணியெமக்கு விரைவிலுதவிசெய்த பெருமைக்குச் சூரியகுலத்திலுள்ள என்சுற்றமெல்லா நன்மையுள்ள உதவியைச் செய்திருப்பினும் ஒப்பாகுமோ அல்லது நீசெய்த வுதவிக்குப் பாதிக்காயினும் போதுமானதா யிருக்குமோ போதாது---எ-று.

தீர்த்தநித்தமெற் குறைபுந் திருவுக்கு திறையுஞ்...................... *
சுத்தமாகிய விளவலுக் குயிருநற் றுணையா .... *

மற்றையோர்கட்கெலா மாண்மையு முதவிய வலியை.......... *
யுற்றுநோக்கினு னுனக்குநான் கொடுக்க வொன்றுண்டோ...... *

(இ-ள்) நாடோறும் எமக்குறுதியையும் சீதாதேவிக்குக் கற்பை யும் பரிசுத்தத்தையுடையவனாகிய இலட்சுமணனுக்கு உயிரையும் நல்லதுணையாயுள்ள மற்றவர்களுக்கெல்லாம் ஆண்மையையும் நீ யுதவிய வல்லமையை ஆராய்ந்துபார்த்தால் உனக்குநான்கொடுக் கத்தக்க பொருளொன்றுண்டோ இல்லை—எ-று. (எரு)

நீவராமையா னீரெலாம் வரும்படி நினைத்தோம்.............. *
பூவிலேயுள புனலெலா மடைந்ததிப் பொருப்பின் .... *
மேவுமவ்விடத் தின்மையா யினவென விளம்பிப்............ *
பாவநீங்கநந் தீர்த்தநீ ரதனிடைப் படிவாய்.................. *

(இ-ள்.) நீ கெங்கைகொண்டு வராமையால் அக்கங்கைமுதலிய நீரெல்லாம் இங்ஙனம் வரும்படிநினைத்தோம் அப்பொழுது பூமி யின்கண்ணுள்ள புனலெல்லாம் இத்தீர்த்தகிரியினிடத்து வந்து சேர்ந்தது ஆதலால் நீசென்ற அவ்விடங்களி லில்லையாயினவென் றுசொல்லி நீசெய்த பாவங்களெல்லாநீங்க நமது தீர்த்தத்தினிட த்து மூழ்குவாய்—எ-று. (எசு)

படித்துதீர்த்த நாயகனையும் பணியெனப் பணித்தா........ *
னடைந்தமாருதி யவையெலா முடித்துவந் தணுகி .... *
யிடைந்து போற்றின னவனுடனிராகவ னிசைப்பான்........ *
றொடர்ந்துநீவரும் பொழுதுநின் விசையினிற் றொடக்கால்... *

(இ-ள்.) நமது தீர்த்தத்தின்மூழ்கி தீர்த்தநாயகனையும் வணங் கக்கடவாயென்றுசொன்னார் அவ்வாறே அங்ஙனமடைந்த மாருதி யானவர் அவையெலாஞ்செய்துமுடித்து ஸ்ரீராமமூர்த்தியின் மு ன்பாகவந்து சேர்ந்து தூரத்தினின்று துதிசெய்தனன் அப்பொ ழுதவருடன் இராகவர் சொல்லத்தொடங்கினர் நீ தொடர்ந்துவ ரும்பொழுது நின்விசையின் றொடக்கத்தால்—எ-று. (எஎ)

இழுக்கம்வந்தது வனமெலா மிமையினை யிமைத்து.......... *
விழிக்குமுன்னமே பெண்ணையா றடைந்ததவ் விரிநீ.......... *
ரொழுகநின்பெயர் தீர்த்தமாய் விளங்குமவ் வொழுக்கின் ... *
முழுக்குறுர்க்குநந் தீர்த்தநற் பலன்கொடா முழுதும்........ *

(இ-ள்.) அதனாலுண்டான வியர்வைநீரானது வந்து இவ்வன மெல்லாம்பரந்து கண்களினிமையை யிமைத்து விழிப்பதற்குமு ன்னமே பெண்ணையாற்றையடைந்தது அந்த விரிந்த நீரின்பெ ருக்கம் நின்பெயராயுடைய தீர்த்தமாகி விளங்காநிற்கும் அந்தத்

தீர்த்தத்தில் முழுகாதவர்க்கு நமது தீர்த்தமானது முழுது நல்ல பலனைக்கொடாது—எ-று. (எஅ)

இத்தடத்தினிற் படிந்துநந் தீர்த்தம தியைந்தாற்................ *
புத்திமுத்தியா மெனச்சொலிப் பொருப்பினைப் போற்றிச் ... *
சத்திமானெனு மருமன்முன் னடந்திடத் தமரோ .... *
டத்தனுரடி நினைந்துபோய்ப் பாசறை யடைந்தான்............*

(இ-ள்.) இந்த வுன்பெயராலமைந்த தீர்த்தத்தின் மூழ்கிப் பின்னர் நமது தீர்த்தத்தின்மூழ்கினால் நல்ல புத்தியுமுத்தியுங் கிடைக்குமென்றுசொல்லி தீர்த்தகிரியைத்துதித்துச்சத்தியவானென்று சொல்லாநின்ற அநுமாரானவர் முன்னாகநடக்கத் தன்தமரோடு பரமசிவத்தின்றிருவடியை நினைந்துகொண்டுபோய்ப் பாசறையையடைந்தார்—எ-று. (எகூ)

வே று.

திங்கண் மும்மழை பெய்யச் செழும்புவி............*
பொங்கிவாழப் புரவல ரோங்குக .... *
நங்கள் சங்கரன் பூசை நலம்பெறச்..................*
சங்கர னடி யார்கள் தழைக்கவே .... *

(இ-ள்.) மாத மும்மாரி பெய்ய அதனால் செழுமை யுள்ள பூமியானது வளங்கண்மிகுந்து அதிலுள்ள உயிர்களெல்லாம்வாழ்ந்திருக்க அதனால் உலகத்தைபாளும் அரசர்களெல்லாம் செல்வமிக்கோங்க அதனால் நம்முடைய பரமசிவத்தின் நித்தியபூசையும் பிரமோச்சவமுதலிய திருவிழாக்களும் நன்மையாக நடக்க அதனால் பரமசிவத்தினடியார்கள் தழைத்திருக்க—எ-று. (அ௦)

பதினான்காவது - இராமதீர்த்தச்சருக்கம் - முற்றிற்று.

ஆக சருக்கம்-கச-இ-கூடிய செய்யுள்-சசரு.

தீர்த்தகிரிபுராணம் - மூலமும் - உரையும்

முற்றிற்று.

செய்யுளகராதி.

செய்யுளகராதி.

முற்றிற்று.

விளம்பரம்.

சேலம் ஜில்லா ஊற்றங்கரை தாலூக்காவைச் சார்ந்த தீர்த்தகிரியென்னும்தலமகாத்மியம் வடமொழியிலிருந்ததனை வித்வ சிரோமணியாகிய சைவ - எல்லப்பநாவலர் முன்தமிழில் மொழிபெயர்த்துப் புராணமாக இயற்றியதைப் புதுவை. க - சுப்பராயமுதலியார் அவர்களால் இயற்றிய உரையுடன் ஷை புராணம் இதனடியில் கண்டிருக்கிறவிடங்களில் விற்பனைசெய்யப்படும்.

சென்னப்பட்டணம் - பெத்துநாயகன்பேட்டை கோவிந்தப்பநாயகன் தெருவுக்கடுத்த சாம்பையர்தெரு வடவண்டை வாடை - ௯௯ - வது. கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும் - சென்னை ஹிந்து வித்தியாநிலய அச்சுக்கூடத்தலைவராகிய - தஞ்சைமாநகரம் - அ - கன்னையசெட்டியாரிடத்திலும். மந்தவெளிவீதியில் - ம-ா-ா-ஸ்ரீ, காஞ்சிபுரம் பச்சையப்பமுதலியார் கல்விச்சாலைக்கு மேலண்டை - ம-ா-ா-ஸ்ரீ, வங்கிபுரம் - இராமகிருஷ்ணமாசாரியாரவர்களது புஸ்தகஷாப்பிலும். பிங்கான்கடைக்கடுத்த பாபம்ஸ் பிராட்வீதியில் மேலண்டை - ௱௮௪ - வது. கதவிலக்கமுள்ள புஸ்தகஷாப்பில் - ம-ா-ா-ஸ்ரீ, அ - வீராசாமிநாயகரிடத்திலும். ஷை பட்டணத்துக்கடுத்த குளக் கடைவீதியில் - ம-ா-ா-ஸ்ரீ, புங்கத்தூர் - ம. சபாபதிமுதலியாரிடத்திலும். சேலம் ஜில்லா கசுபா சேலம் கடைத்தெருவில் - ம-ா-ா-ஸ்ரீ, ஜவுளிக்கடை - வைத்தியா-இராமுடு பாகவதரிடத்திலும். ஷை தெருவில் - ம-ா-ா-ஸ்ரீ, ஷாப்புக்கடை - கா - சேகுமுகியித்தீன் ராவுத்தரிடத்திலும். சேலத்துக்கடுத்த - செவ்வாய்ப்பேட்டையிலிருக்கும் தாலூக்கா முன்சீப் கோர்ட்டு குமாஸ்தா - ம-ா-ா-ஸ்ரீ, வையித்தியலிங்க செட்டியாரிடத்திலும். ஷை. ஜில்லாவைச்சார்ந்த - தருமபுரி தாலூக்காவிலிருக்கும் - ம-ா-ா-ஸ்ரீ, ஜவுளிக்கடை - வீரபத்திர நாயகரிடத்திலும். ஷை தாலூக்கா முன்சிப் கோர்ட்டு வக்கீல் - ம-ா-ா-ஸ்ரீ, தி - ஐபுலுநாயகரிடத்திலும். ஷை. ஜில்லாவைச்சார்ந்த - திருப்பத்தூர் தாலூக்கா முன்சிப் கோர்ட்டு வக்கீல் - ம-ா-ா-ஸ்ரீ, வே. சடகோபராம கவிராஜபண்டிதரிடத்திலும். ஷை யூரில் - ம-ா-ா-ஸ்ரீ, கசுமண்டி - அப்பாசாமிசெட்டியார், சுப்பிரமணிய செட்டியாரவர்களிடத்திலும். விலைகொடுத்துவாங்கிக்கொள்ளலாம்.

கித்தான் பயிண்டுசெய்த புத்தகம் - க - இ - விலை ரூ. கஉ.

காயிதம் பயிண்டுசெய்த புத்தகம் - க - இ - விலை ரூ. கவ.

பத்து புத்தகங்கள் வாங்குகிறவர்களுக்கு ஒரு புத்தகம் அதிகமாய் கொடுக்கப்படும்.

தஞ்சைமாநகரம். அ - கன்னையசெட்டியார்.